கழக வெளியீடு: அகக

# கால்டுவெல் ஒப்பிலக்கணம்

## முதற் பகுதி

க. ஒலி

உ. வேர்ச் சொற்கள்



பதிவு செய்தது

விலை ரூ. 2-8.

# கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[முதற் பகுதி]

# கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[முதற் பகுதி]

க. ஒலி - -

உ. வேர்ச் சொற்கள்

மொழிபெயர்த்தியற்றியவர் :

**திரு. கா. கோவிந்தன்,** எம். ஏ.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Dec., 1955.

# CALDWELL COMPARATIVE GRAMMAR - I

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. C. 1050.

# பதிப்புரை

நம் செந்தமிழ்மொழி இயற்கைச் செப்பம் வாய்ந்தது; பழமையிற் புதுமையும் புதுமையிற் பழமையும் கொண்ட பண்பினது; நாட்டுவழக்கினும் ஏட்டுவழக்கினும் மாறுதியலும் வண்மையுடையது.

ஆயினும் அதிற்கொண்ட பற்றுதல் காரணமாகக் கூறுவது சாலாது. அது, திறமானதெனின், அதனை வெளிநாட்டவரும் போற்றும் செப்பம் திகழ்தல் வேண்டும். அதுவே மொழிமாண்பு, திறம், சிறப்பு, வண்மையென்பது ஒருபாற்கோடாத வாய்மை நெறியுமாகும்.

இவ்வாறு நடுநின்று நம் செந்தமிழ்மொழியின் உண்மை நிலைகண்டுணர்த்திய பெரியாருள், மொழிபெயர் நாட்டினரான ரைட் ரெவரெண்டு ராபர்ட் கால்டுவெல் டி. டி. எல்., எல். டி. என்னும் பேரறிஞரும் ஒருவராவர்.

இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாட்டிலிருந்து நம் தமிழ்நாட்டுக்குப் போந்து கிறித்து சமயத் தொண்டாற்றியவராவர். ஒன்றைக் குறிக்கோளாகக் கோடற்கு மொழி முதற்கருவியாக அமைவது. இதனை நன்குணர்ந்தார் திரு. கால்டுவெல் துரைமகனார். தமிழை ஆர்வத்துடன் கற்றார்; அதில் துறைபோனார். கற்கக் கற்கத் தமிழ்ச்சுவை விஞ்சிற்று; அவ்விருந்தில் திளைத்தார்; மொழியின் அடிப்படையைத் தோண்டினார். அரிய கருத்தைத் துருவிக்கண்டார். தமிழ்மொழியோடு நெருங்கிய உறவுடைய கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் போன்ற ஏனைய திராவிட மொழிகளையும் கற்றுய்ந்தார். இவைகட்கு நிலைக்களனாக இருப்பது தமிழ் என உணர்ந்தார். அவ்வுணர்ந்த ஒன்றையே யாவருக்கும் பயன்படும் பொருட்டு 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்

கணம்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலொன்றை ஆங்கில மொழியில் எழுதி வெளியிட்டார். இவ்வாராய்ச்சி நூல், தமிழ்மொழிக்கு உலகில் வழங்கும் மொழிகளுக்கிடையே இறும்பூது பயக்கத்தக்கதோர் ஏற்றமான நிலையைத் தந்தது. தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பேருதவியீந்தது; தமிழ் நாட்டவர் முற்காலப் பண்பாட்டுக்கும், பெருமைக்கும், நாகரிகத்திற்கும், கலைமாண்பிற்கும் ஏற்ற சான்றாக அமைந்தது.

அருமை பெருமை மிக்க இவ் ஆய்வுநூல், ஆங்கில மொழியான் இயன்ற காரணத்தினால், அதனைத் தமிழ் மக்கள் யாவரும் ஒருங்கே கற்றுப் பயன் பெறற்கில்லை. அதனை நன்முறையில் தமிழில் மொழிபெயர்த்துதவின், தமிழ் ஆய்வாளர்க்கும், கலையறிவுகொள்ளும் மாணவர்க்கும் நற்பயன் எய்துதற்கு வாய்ப்பாகுமெனக் கருதி முன்னர் 1941-ஆம் ஆண்டில் திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி. ஏ. அவர்கள், பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரைப் பிள்ளை, எம். ஏ., எல். டி. அவர்கள் ஆகிய இவ்விருவரைக்கொண்டு அதன் முன்னுரையைமட்டும் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளோம்.

அவ்வாராய்ச்சி நூலை ஆய்ந்து அதன் முற்பகுதியை திரு. கா. கோவிந்தன், எம். ஏ. அவர்களைக்கொண்டு மொழி பெயர்த்து வெளியிட்டுள்ளோம். இதன்கண், ஒலி, வேர்ச் சொற்கள் ஆகிய இருபொருள்கள் குறித்த ஆய்வுகளை மொழிபெயர்த்து, 'கால்டுவெல் ஒப்பிலக்கணம்' முதற்பகுதி எனப் பெயரமைத்துத் தமிழ்கூறு நல்லுலகத்தே இற்றைஞான்று வெளிவருகின்றது.

இதனையும் தமிழ்மக்கள் யாவரும் வாங்கிக் கற்று உண்மையுணர்ந்து நம் தமிழ்மொழி வளத்தை யாங்கணும் பரப்பி நலம்பலபுரிந்து நற்றமிழ் வல்லுநராக இலகுவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை

பக்கம்

I ஒலி 1

க. திராவிட நெடுங்கணக்கு ,,

உ. திராவிட ஒலிமுறை 20

(க) உயிரெழுத்துக்கள் ,,

(உ) மெய்யெழுத்துக்கள் 29

(ங) நாவெழுத்து அல்லது தலைவளி எழுத்தின் பிறப்பிடம் 49

(ச) ஓரினமொழிகளுக்கிடையே உண்டாம் மெய்ம்மாற்றம் 56

(ரு) ஒலிநய மெய்ம்மாற்றம் 85

(சா) மூக்கினம் மிகல் 90

(எ) இடைவெளி தடுப்பு அல்லது உடம்படுமெய் 102

(அ) ஒலிநயம் குறித்து ஓரினப்பட்ட உயிர் வரிசை 118

(கூ) அசை பிரித்தல் 121

(க0) மெய்ந்நிலை மாற்றம் 128

(கக) உயிர்நிலை மாற்றம் 129

(கஉ) சிறப்புமெய்-விலக்கல் 132

(கங) எடுத்தலோசை 134

பக்கம்

## II வேர்ச் சொற்கள்


க. திராவிடவேர்ச்சொற்களைப் பல்வேறு பிரிவுகளாக நிரல்செய்தல் 141

உ. திராவிட வேர்ச்சொற்கள் தொடக்கத்தில் ஓரசை யுடையனவே 149

ந. வேர்ச்சொற்களின் ஒலிநயநீட்சி 152

ச. வேர்ச்சொற்களோ டிணையும் சொல்லாக்க வுருபுகள் 153

ரு. வேர்ச்சொல்லின் ஈற்றுமெய் இரட்டல் 164

சா. சிறப்பளிக்கும் சொல்லுருபுகள் 166

எ. மூலவுயிரிடை உளவாம் மாற்றம் 173

# கால்டுவெல் ஒப்பிலக்கணம்

## I. ஒலி

ஒலி எனும் இத்தலைப்பின்கீழ், திராவிடமொழிகளுக்குரிய ஒலி இயல்புகளை விளக்கிக் கூறுவது என் நோக்கமாம். ஒலி மாறுபாட்டினால், தாம் அடையும் உருமாற்றங்களுக்கிடையேயும், அச்சொற்களின் பண்டை உரு இஃது என அறியத்தக்க வகையில் அவ்வினமொழிகளுக்கிடையே நிகழும் ஒழுங்கான ஒலி மாற்றங்களுக்கும், இந்நூலின் பிற்பகுதியில், மேற்கோளாக, உடனுக்குடன் எடுத்துக் காட்டி விளக்கத்தக்க இன்றியமையாமையுடைய ஒலி மாற்றங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பெறும்.

### க. திராவிட நெடுங்கணக்கு

திராவிட ஒலி பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு முன்னர், அம்மொழிகளின் நெடுங்கணக்கினைப்பற்றி ஒருசில கூறுதல் நன்று.

இன்று, மூன்று வகையான திராவிடநெடுங்கணக்குகள் வழக்கில் உள்ளன; அவை, தமிழ், மலையாளம், தெலுங்கு,-கன்னடம் என்பன. தெலுங்கு வரிவடிவுகளுக்கும், கன்னட வரி வடிவுகளுக்குமிடையே, வேற்றுமையிருப்பது உண்மையேயெனினும், அவ்வேற்றுமை, சிலவும் சிறப்பில்லாதனவுமாம் ஆதலின், அத்தெலுங்கு-கன்னட வரி வடிவுகளை ஒரு நெடுங்கணக்காக வகைசெய்துள்ளேன். இதுகாறும், துளுமொழி, மலையாளஎழுத்துக்களில் எழுதப்பட்டு வந்தது. ஆனால், மங்களூர், ஜெர்மன் மிஷன்

பதிப்பகத்தில் வெளியாகும் அம்மொழி நூல்களில், இப்பொழுது கன்னட வரிவடிவுகள் கையாளப்பெறுகின்றன. பிரைகில் என்பார் எழுதிய துளுமொழி இலக்கண நூலிலும், இவ்வரிவடிவுகளே வழங்கப்பெற்றுள்ளன. இவ்வாராய்ச்சிக்குத் துணையாக, யான் மேற்கொண்ட கூமொழி இலக்கண நூல், ஒரியா வரிவடிவுகளில் அமைந்துள்ளது. கூமொழி யொலிகளை வெளியிடுவதில், தெலுங்கு வரிவடிவுகளினும், ஒரியா வரிவடிவுகள் குறைபாடுடையனவேயாம். இவ்வினத்தைச் சேர்ந்த ஏனைய திருந்தா மொழிகளனைத்தும், தம் ஒலிகளை வெளியிட உரோமன் வரிவடிவுகளையே இன்றுவரை மேற்கொண்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பெற்ற, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னட நெடுங்கணக்குகளும், அவற்றின் வழக்கிறந்துபோன வரிவடிவுகளும், சமஸ்கிருத மொழியை எழுதப் பயன்படும் எழுத்தாகிய கிரந்த எழுத்துக்களும், பழைய தேவநாகரி எழுத்துக்களிலிருந்தோ, அல்லது அவற்றிற்கும் முற்பட்டதும், அசோகன் கல்வெட்டுக்களில் காணப்பெறுவதுமாகிய ஒருவகையெழுத்துக்களிலிருந்தோ பிறந்து, பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதும் தென்னாட்டு வழக்கம் காரணமாய், மாறியும், திருந்தியும் இன்றைய வடிவைப்பெற்றன என்று பலர் கருதுகின்றனர்.

திராவிட வரிவடிவுகள் பெறும் இம்மாறுதல்கள் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்பதைக் கீழே குறிப்பிடப் பெறும், திருவாளர், பீம்ஸ் அவர்களின் குறிப்புக்கள் தெளிவாக எடுத்துக்காட்டும் :—

" ஒரியா மொழியின் இன்றைய வடிவெழுத்துக்கள், அம்மொழியை அடுத்து வழங்கப்பெற்றனவும், சமஸ்கிருதத்தினின்றும் கடன் வாங்கிய நெடுங்கணக்கினைக் கொண்டுள்ளனவுமாய ஆரியரல்லாத இனமொழிகளின் வடிவெழுத்துக்களோடு பெரிதும் ஒத்துள்ளன. ஈண்டு,

ஆரியரல்லாத இனமொழிகள் எனக் குறிப்பிடப்பெறுவன, தெலுங்கு, மலையாளம், தமிழ், சிங்களம், பர்மிய மொழி களாம். மிகப் பழைய இந்திய வடிவெழுத்துக்களைக், குறுக்கும், நெடுக்குமாகப் பல வட்டங்களாகவும், வளைவு களாகவும் மாற்றியமைத்துக் கொண்டுள்ளமையே, இம் மொழி வடிவெழுத்துக்களின் சிறப்பியல்புகளாகும். இவ் வாறு வட்டமாக அமைக்கும் முறை, பர்மிய மொழிகளில் மிகப்பயின்ற வழக்குடையதென்றாலும், அது, இவ்வின மொழிகள் எல்லாவற்றிலும் ஒப்பமிகழும் பெருவழக்காம். பர்மிய வடிவெழுத்துக்கள், முழுதும் வட்டமாகவே அமைந்துவிட்டமையால், அவற்றில், நேர்க்கோடு என்ப தைக் காண்பதே அரிதாம். நேர்க்கோடுகளும், கோணங் களும் உடையவாய், அசோகன் கையாண்ட வடிவெழுத்துக் கள், நர்மதை ஆற்றங்கரையில் அமைந்த, சியோனி என்ற இடத்தில் கண்டெடுத்த கல்வெட்டுக்களில், தம் பண்டைய வடிவங்களில் காணப்பெறுகின்றன; ஆனால் அவ்வெழுத்துக்கள், மேலும் பல வட்டங்களாலும், வளைவு களாலும் அணிசெய்யப்பெற்று, இரஷ்யர், பல்கேரியர், செர்வியர், போலந்துக்காரர், பொகிமியன்கள் ஆகியோர்-அடங்கிய கீழ் ஐரோப்பிய இனமாகிய ஸ்லேவ் இனத்தார் தம் வழிபாட்டு மொழிக்கென, சிரில் அடிகளார் மேற் கொண்ட எழுத்துக்களைப்போலக், குழப்பமும், தெளி வின்மையும் உடையவாக இருக்கின்றன. இவ்வெழுத்துக் களின் அடுத்த மாற்றம், கிருஷ்ணா ஆற்றங்கரைக்கண் உள்ள அமராவதி எனுமிடத்தே காணப்பெறும் கல் வெட்டுக்களில் அமைந்துள்ளன. சதுரங்களாக இருந்த எழுத்துக்கள், ஈண்டு, அரை வட்டங்களாக வளைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறு மாற்றம் பெற்ற இவ்வடிவெழுத் துக்களிலிருந்தே, திராவிட, சிங்களமொழிகளின் நெடுங்கணக்குகள் எழுந்துள்ளன. பர்மா, சயாம் மொழிகளின் வடிவெழுத்துக்களும், கூட்டெழுத்துக் களில், இரண்டாவது எழுத்திற்குத் தனிவடிவம் தரும் **பஸங்கன்** முறையும், உயிர் எழுத்துக்களின் வேறுபாட் டைக் குறிக்க, வேறுபாட்டுக்குறிகளை வழங்கும் **சந்தங்கள்**

முறையும் பெற்று இருப்பதால், ஆரியமொழியின் வழி வந்தனவென உறுதியாகக் கொள்ளப்படும். ஜாவா நாட்டு அழகிய வடிவெழுத்துக்களும் இவ்வாறே தோன்றின என்று கொள்க.

" எழுதும் ஆற்றலை, ஒரியர்கள், வங்காளத்திலிருந்து பெற்றனரா, அல்லது, மத்திய இந்தியாவிலிருந்து பெற்றனரா என்பதே இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. அவ்வாற்றலை, அவர்கள், வடக்கேயிருந்து பெற்றனர் என்பதினும், மத்திய இந்தியாவிலிருந்தே பெற்றனர் என்று கொண்டு, அம்மொழி வடிவெழுத்துக்கள், வட்டமாகவும், வளைவாகவும் அமைந்ததன் காரணத்தைக் காணமுயல்வோமாக. மேற்குறித்த மொழிகளில் உள்ளவாறே, ஒரியா மொழியிலும், எழுத்துக்கள் அவ்வாறு அமைந்ததன் காரணம், அவர்கள் எழுதமேற்கொள்ளும் கருவிகளினாலேயேயாம். ஒரியர்களும், வங்காளக்கரையோரப் பகுதியில் வாழும் பிறமொழியாளரும், தாலிப்பனை, விசிறிப்பனை, பனை இவற்றின் ஓலைகளில் எழுதுகின்றனர். இம்மரங்களின் இலைகள் ஒவ்வொன்றும், ஒருபெரிய விசிறி போல் அமைந்து, இலைகளின் பெருமை, சிறுமைகளுக்கேற்ப, இரண்டு அங்குலமும, அதற்குக் குறைந்தனுமான அகலமுடைய, நீண்ட பல சிறு துண்டுகளாகப் பிளவுபட்டிருக்கும். அச்சிறு துண்டுகள் ஒவ்வொன்றும், இயற்கையாய் அமைந்த அவ்வோலையின் மடிப்புக்களாகும். வேண்டுமளவு துண்டிக்கப்பெற்ற உலர்ந்த இவ்விலைகள் மீது, கூரிய முனையையுடைய எழுத்தாணிகொண்டு எழுதுவர். பனையோலைகளின் நரம்புகள், அடியில் தொடங்கி, நுனிவரையிலும் நேராக நீண்டு அமைந்துள்ளமையால், நீண்ட நேர்க்கோடுகளாலாகிய தேவநாகரி எழுத்துக்கள், இப்பனையோலையில் எழுதப்பெறின், எழுத்தாணி, அவ்வோலையைப் பிளந்துவிடும். மேலும், எழுத்தாணி, வலதுகையிலும், ஓலை, இடதுகையிலும் கிடக்க, இடதுகைப் பெருவிரல், எழுத்தாணியின் அசைவிற்குக் காரணமாய் அமைவதால், எழுத்துக்களுக்கு வட்டவடிவை அளிக்

கிறது. இவ்விளக்கம், ஐரோப்பிய ஆசிரியர்களுக்குப் பொருத்தம் உடையதாக—நிறைவுடையதாகத் தோன்றுதெனினும், பனையோலையையும், எழுத்தாணியையும் கையிற்கொண்டு, ஒரியர்கள் எழுதுவதைக் காணும் எவரும், இவ்விளக்கம் பற்றி ஐயம் கொள்ளார். இவ்விளக்கம், பெரும்பயனளிக்காதெனினும், ஈண்டு இதைக் குறிப்பிட்டது, தங்கள் வடிவெழுத்துக்களின் தோற்றம் குறித்து, உள்நாட்டு மக்கள் கூறும் விளக்கமும் இதோடு ஒத்துளது என்பதற்கேயாம்.....ஒரிய எழுத்துக்கள், தங்கட்கு அண்மையில் உள்ளாராய தெலுங்கர்தம் எழுத்துக்களினும், சிறிதளவே, தம் பண்டை வடிவங்களினின்றும் மாறுபட்டுள்ளன....ஒரிய மொழியின் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துக்கள் அனைத்தினையும் தனித்தனியே நோக்காது, அம்மொழி வடிவெழுத்துக்கள், மத்திய இந்தியாவில் வழங்கும் குடில மொழி வடிவெழுத்துக்களினின்றும் தோன்றின என்றும், அம்மொழிக்கும், அதன் அண்டைமொழிகளுக்கும் பொதுவியல்பாகிய வட்டத்தன்மை, பனையோலையில் எழுத்தாணிகொண்டு எழுதுவதால் உண்டாயிற்றென்றும் கூறுவது அமைவுடைத்தாகும்."[1]

பிராம்ணர்கள், தமிழ்நாட்டில் குடியேறுவதற்கு முன்னரே, பண்டைத்தமிழர்கள், எழுத்துக்கலையினை அறிந்திருந்தனர் என்றும், தமிழ்நாடு போந்த அப்பிராம்ணர்கள், தாங்கள் வந்தகாலை, ஆங்கு வழக்காற்றிலிருந்த தமிழ் வடிவெழுத்துக்களோடு, தங்கள் மொழியாகிய சமஸ்கிருதத்திற்குரிய ஒலிகளை வெளியிடும் ஆற்றல்வாய்ந்த சில வடிவெழுத்துக்களையும் சேர்த்துத், தமிழ் வடிவெழுத்துக்களைத் திருத்தி அமைத்தனர் என்றும், கிரந்தலிபி அல்லது நூல் எழுத்துக்கள் என்று அவர்களால் அழைக்கப்பெற்ற அவ்விணைப்பு எழுத்துக்களினின்றே, தமிழில், இன்று வழங்கும் வடிவெழுத்துக்கள் தோற்றுவிக்கப்பட்டன என்றும் திருவாளர் எல்லிஸ் என்பார் கருதுவர். அக்

1. comparative Grammar of the Modern Aryan Languages of India, Introduction, Page, 62 - 66.

கருத்து, பலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் உளது. தமிழ் வடிவெழுத்துக்களுள் சில, இன்று வழக்கத்தில் உள்ள கிரந்த எழுத்துக்களோடும், சில, பழைய கிரந்த எழுத்துக்களோடும் ஒத்து இருப்பதால், தமிழ் வடிவெழுத்துக் களைக் கிரந்த எழுத்துக்களினின்றும் பிறந்தனவாகக் கொள்வதில் ஐயம் தோன்றுவதற்கில்லை; ஆனால், கிரந்த எழுத்துக்கள் தோன்றுவதற்கே பிறப்பிடமாகியவை என்று கருதப்படும்—சமஸ்கிருதத்திற்கு முந்திய—தமிழ் வடிவெழுத்துக்கள் இருந்தன என்பது குறித்து ஐயப் பாடுளது. தமிழ்மொழியில், எழுத்தையும், நூலையும் குறிக்க வழங்கும் தனித்தமிழ்ச் சொற்கள் உள்ளன என் பது உண்மையே யெனினும், பிராம்ணர்கள், இந்நாட்டில் முதன்முதலாகக் குடியேறியதற்கு முற்பட்ட காலத்தில், தமிழில் வடிவெழுததுக்கள் இருந்தன என்பதைக்காட்ட வல்ல அகச்சான்றுகள் கிடைத்தில. ஹளகன்னடம் அல்லது பழைய கன்னடம் என வழங்கப்பெறும் வடிவெழுத்துக் களும், பழைய காலத்துக் கல்வெட்டுக்களில் தமிழ் மொழியை வழங்க மேற்கொண்ட பல்வேறுவகை வடி வெழுத்துக்களும், தொடக்கத்தில், சமஸ்கிருத எழுத்துக் களை வழங்க மேற்கொண்ட நெடுங்கணக்கு முறையின் அடிப்படைமீது யமைந்துள்ளனவாகவே தோன்றுகிறது.

திருவாளர் எல்லிஸ் அவர்களின் கருத்தோடு ஒத்த கருத்து அல்லவாயினும், அவர் கருத்தோடு தொடர் புடைய கருத்து ஒன்றைத் திருவாளர் எட்வர்டு தாமஸ் என்பார் வெளியிட்டுள்ளனர்.[1] அசோகன் கல்வெட் டுக்களில் வழங்கப்பெற்றனவும், சமஸ்கிருதம் அல்லது பிராகிருத மொழிகளை வழங்க மேற்கொள்ளப் பெற் றனவுமாகிய, மிகப்பழைய வடிவெழுத்துக்கள், திரா விட இனப்பிறப்பை அடிப்படையாகக்கொண்டன என் றும், அவை, துரேனியர் (திராவிடர்) மொழிகளின் தேவைகளுக்காகவே தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பட்

1. Recent Pehlvi Decipherments, in the Jour. R. A. S. for 1871.

டன என்றும், வடமொழி ஹகரவொலிகளை ஒலிக்கமேற்கொள்ளப்பட்டனவாய பிராகிருத அல்லது லாட் நெடுங்கணக்குகளாகப் பழைய திராவிட வடிவெழுத்துக்கள், மாற்றியமைக்கப்பட்ட காலத்தில்தான் அவற்றின் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டது என்றும் அவர் கூறுவர். லாட் மொழியில், ஏகாரத்தைக் குறிக்க வழங்கும் வடிவெழுத்தே ஐகாரத்தைக் குறிக்கவும் வழங்கப்பெறுகிறது என்றாலும், அந்நெடுங்கணக்கில், எகர, ஏகார ஒலிகளைக் குறிக்கவரும் வடிவெழுத்துக்களிடையே வேறுபாடுளது எனத் தாமஸ் அவர்கள் கருதுகின்றனர். ஆனால், பேராசிரியர் பர்னல் என்பார் கண்டு வெளியிட்ட "மிகப் பழைய திராவிட நெடுங்கணக்கு," எகர, ஏகார ஒலிகளை அறிவிக்கும் வடிவெழுத்துக்களிடையே எவ்வித வேற்றுமையும் மேற்கொள்வதில்லை என்ற உண்மை, அந்நெடுங்கணக்கு, அசோகன் கல்வெட்டில் காணப்பெறும் சமஸ்கிருத நெடுங்கணக்கினின்றும் தோன்றியது என்பதற்கு ஆதாரமாகக் காட்டப்பெறும் பல்வேறு சான்றுகளுள் ஒன்றாம்.

கொச்சியில் வாழும் யூதர்களிடத்தும், மலபார் கடற்கரையில் வாழும் சிரியன் கிறித்தவர்களிடத்தும் உள்ள அரசப் பரிசுகள் அடங்கிய பட்டயங்கள் போலும் பழைய தமிழ்க் கல்வெட்டுக்களில் காணப்பெறும் தமிழ் வடிவெழுத்துக்கள் தனியாக ஆராயத்தக்க தகுதியுடையவாம். அக்கல்வெட்டுக்கள், பல ஆண்டுகட்கு முன்னரே, "சென்னை இலக்கியக் கழக வெளியீட்டில்"[1] வெளியிடப் பெற்று ஆராயப்பட்டுள்ளன. அவற்றில் மலையாள வாடை சிறிது வீசுகிறது எனினும், அவை தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்களில் காணப்பெறும் வடிவெழுத்துக்கள், சென்னை மாநில அரசியல் அலுவலில் இருந்த, பேராசிரியர் பர்னல் என்பவரால், பம்பாயினின்றும் வெளியாகும் இந்தியன் ஆன்டிகுவரி எனும் வெளியீட்டின், 1872-ஆம் ஆண்டு வெளியீட்டில் அச்சிடப்பெற்றுள்ளன.

1. Journal of the Madras Literary Society.

அவ்வடிவெழுத்துக்கள், கொச்சியைச் சேர்ந்த யூதர்களும், கிறித்தவர்களும் வைத்திருந்த செப்புப் பட்டயங்களி லிருந்து பெயர்த்தெடுத்த படிகளிலிருந்து எடுக்கப்பட்டன ஆகும். அப்பட்டயங்களில் காணப்பெறும் வானநூல் பற்றிய செய்திகளைக்கொண்டு, அப்பட்டயங்களுள் ஒன்று கி. பி. 774-ஆம் ஆண்டைச் சேர்ந்ததெனமுடிவு செய்யப் பட்டுள்ளது. "தென்னாட்டில் கண்டு பிடிக்கப்பெற்ற பழைய கல்வெட்டுக்கள், இப்பட்டயங்களே யாதலாலும், தமிழ் வடிவெழுத்துக்களின் தொன்மை வடிவம் இஃது எனத் தெரிவிப்பன அவையே ஆதலாலும், அப்பட்டயங் கள் வடிவெழுத்தாராய்வார்க்குப் பெரும்பயன் அளிப்ப வாகும். இவ்வடிவெழுத்துக்கள், தமிழ் நாட்டில், கி. பி. பத்தாம் நூற்றாண்டிலேயே வழக்கிறந்துவிட்டன. ஆனால், மலபார் நாட்டில், பொதுவாகப் பதினேழாம் நூற்றாண்டு முடிய வழக்கில் நிலவிவந்துள்ளன. மலபாரில் எழுதப் பெறும் ஆவணங்களில், அவை, இன்றும் ஓரோ வழி ஆளப்பெறுகின்றன. இக்காலத்திற்கேற்றவாறு, புதிய முறையில், பெரிதும் மாறுபட்ட வடிவங்களில், இப் பட்டய எழுத்துக்களையே, வடமலபாரிலும், மேலைக்கடற் கரையை ஒட்டிய தீவுகளிலும் வாழும் மாப்பிள்ளைமார்கள் கையாளுகின்றனர்" என இப்பட்டயங்கள் குறித்துப் பேராசிரியர் பர்னல் அவர்கள் கூறியுள்ளார்கள். பல்லாண்டு கட்கு முன்னரே, இவ்வடிவெழுத்துக்களைக்கொண்ட ஒரு நெடுங்கணக்கினை நானே அமைத்தேன். அவை, திரு நெல்வேலியில் காணப்பெற்ற கல்வெட்டுக்களில், பன்னி ரண்டாம் நூற்றாண்டு வரை கையாளப்பட்டுள்ளன என் பதையும் கண்டேன். ஆனால், இன்றைய தமிழ்வடி வெழுத்துக்களின் தொன்மை வகைகளைச் சேர்ந்த எழுத்துக்களும் அன்றே கையாளப்பட்டிருந்தன. பிற் கூறிய வடிவெழுத்துக்கள், சோழ அரசர் தனியரசு செலுத்திய காலத்தே, திருநெல்வேலியிலும், திருவாங் கூர்த் தென்கோடியிலும் நுழைக்கப்பட்டிருத்தல்வேண்டும். ஆகவே, இவ்வெழுத்துக்களைச் "சோழ வடிவெழுத்துக் கள்" எனப் பெயரிட்டழைக்க விரும்புகின்றேன். பதினே

ராம் நூற்றுண்டைச் சேர்ந்த இராஜேந்திரசோழன் கல்வெட்டுக்கள், இவ்வெழுத்துக்களாலேயே ஆக்கப்பட்டுள்ளன. சோழ பாண்டியன் என்றழைக்கப்பெறும், சுந்தர பாண்டியன் காலத்திய கல்வெட்டுக்கள், ஈண்டுக்குறிப்பிட்ட இருவகை எழுத்துக்களாலும் ஆக்கப்பட்டுள்ளன. சுந்தர பாண்டியன் காலம் இஃதெனத் துணிந்து கூறுதற்கியலாதெனினும், அவனுடைய காலத்தை, இராஜேந்திரசோழன் காலத்திற்குப் பின் பல தலைமுறை கழித்து அமைக்க நான் சிறிதும் தயங்கவில்லை. யூதர்களிடத்தும், சிரியன் கிறித்தவர்களிடத்தும் கிடைக்கும் பட்டயங்களில் காணப்பெறும் தமிழ், மலையாள வடிவெழுத்துக்களே அசோகன் கல்வெட்டுக்களில் காணப்பெறும் எழுத்துக்களின் பிறப்பிடமாம் என்று முடிவு செய்வதோடு, "தென்னுட்டுக் கல்வெட்டுக்களில் காணப்பெறும் வடிவெழுத்துக்கள், பொய்னீஷ்யாவிலிருந்து செங்கடல் வழியாக வந்த வாணிப மக்களால் கொண்டுவரப்பட்டன ஆதலின், அவை, எகிப்துமொழி யெழுத்துக்களை அடிப்படையாகக்கொண்டன என்றும், பழைய தமிழ் நெடுங்கணக்கு யேமன் எனுமிடத்தே கண்டுபிடிக்கப்பெற்ற கல்வெட்டுக்களில் காணப்பெறும், தென்கிழக்கு - அரேபிய மொழியாகிய ஹிம்யாரிடிக் மொழிநெடுங்கணக்கோடு ஒத்துளது என்றும், மெய்யெழுத்துக்களின் வடிவம், உயிர் எழுத்துக்களின் சேர்க்கைக்கேற்ப மாற்றப்படும் இயல்பால, தமிழ் நெடுங்கணக்கு, ஒருவகையில் அவ் ஹிம்யாரிடிக் மொழியோடு பெரிதும் மாறுபட்டு, அபிசீனியாவில் வழங்கும் செமிடிக் இனமொழிகளுள் ஒன்றாய எதோபிய மொழியின் நெடுங்கணக்கோடு ஒற்றுமை கொண்டுளது" என்றும் நினைப்பர் பேராசிரியர் பர்னல் அவர்கள்.

இம்முடிவுகள், மேலும் ஆராய்ந்து நோக்கத்தக்க சிறப்பு வாயந்தனவே எனினும், அவர் கூறுவன, நாமறிந்த இந்தியப் பண்பாட்டுவரலாற்றினை யறிவிக்கும் நிகழ்ச்சிகளோடு தொடர்பற்றனவாகத் தோன்றுகின்றன. ஆரியர்கள் தோன்றிய இடத்திலேயே தானும் தோன்றி, தென்கோடி

வரை பரவி வளர்ந்த இலக்கியவளத்தைப் போன்றே, கி.மு. மூன்றும் நூற்றாண்டில் வழங்கிய அசோகன் கல்வெட்டிற் காணப்பெறும் வடிவெழுத்துக்களே, பல நூற்றாண்டுக் காலமாகச் சிறிது சிறிதாக மாற்றம்பெற்று, முன்னர்க்கூறியவாறு, கி. பி. 774-இல் வழக்கில் இருந்ததாக அறியப்பட்ட, தமிழ்-மலையாள எழுத்துக்களாக மாறின என்ற கொள்கை, அவ்வசோகன் கல்வெட்டெழுத்துக்கள், தமிழ் - மலையாள வடிவெழுத்துக்களினின்றும் தோன்றியனவேயல்லால், வேறில்லை என்ற கொள்கையினும் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. தமிழ்-மலையாள வடிவெழுத்துக்கள், இப்பொழுதுள்ள வடிவினும் வேறுபட்ட வடிவங்களைப் பண்டுபெற்றிருந்தன என்பதையொப்புக்கொள்வாமெனினும், அவற்றை நிலைநாட்டும் சான்று எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

"பழைமையுடையவாக அறியப்பட்ட தென்னிந்திய நெடுங்கணக்குகள்," அகர, ஆகார, இகர, ஈகார, உகர, ஊகாரம் இவற்றின் குறில், நெடில்களைக் குறிக்கத் தனித்தனி வடிவெழுத்துக்களைப் பெற்றிருக்கவும், சமஸ்கிருதம், இன்றைய மலையாளம் ஆகிய மொழிகளைப் போல, எகர, ஏகாரங்கள், ஒகர, ஓகாரங்கள் இவற்றின் குறில், நெடில்களைக் குறிக்க, தனித்தனி வடிவெழுத்துக்களைப் பெறாது, இரு ஒலிகளையும் குறிக்க ஒரே வடிவெழுத்தைப் பெற்றிருப்பதை நோக்க, அந்நெடுங்கணக்கு, சமஸ்கிருத ஒலிகளை அறிவிக்கத் தோற்றுவிக்கப்பட்டனவேயல்லால், திராவிடமொழியொலிகளைக் குறிக்கத் தோன்றின அல்ல என்றே தோன்றுகிறது. இதற்குமாறாக, "அசோகன் நெடுங்கணக்கில்" பல், இடமாகப் பிறக்கும் 'த'வையும், நா இடமாகப் பிறக்கும் 'டா'வையும் ஒலிக்கத் தனித்தனி வடிவெழுத்துக்கள் வழங்கப்பெற்றிருப்பதால், அந்நெடுங்கணக்கு, எம்மக்கள் வழங்கும் மொழியில், அவ்விரு ஒலிகளுக்கிடையே, வேற்றுமை நிகழ்தற்காம் காரணம், சமஸ்கிருதமொழியில், அவ்விரு ஒலிகளுக்கிடையே வேற்றுமை நிகழ்தற்காம் காரணத்தினும், இன்றியமையாச்

சிறப்புடையவாகத் தோன்றுகிறதோ, அம்மொழி நெடுங் கணக்கையே, அவ்வசோகன் நெடுங்கணக்கு, தன் அடிப் படையாகக் கொண்டுளது எனக் கூறுதல் கூடுமன்றோ? அவ்விரு ஒலிகளுக்கிடையே உண்டாம் வேற்றுமை, தமிழிலும், ஏனைய திராவிட மொழிகளிலும், சிறு கருத்துக்களையும், இன்றியமையாப் பெருங் கருத்துக்களை யும், நுண்மையாக வேறுபடுத்திக்காட்டும் சிறந்த அடிப் படையுடையதாகக் காணப்படவும், சமஸ்கிருதமொழியில் காணப்படும் அவ்வேற்றுமை இயற்கையானதன்று; காலப் போக்கில், சிறிது சிறிதாகப்பெற்ற வளர்ச்சியே எனக் கொள்ளத்தக்கதாக உளது. இவ்வுண்மை, "நாவெ ழுத்து அல்லது தலைவளியெழுத்தின் பிறப்பிடம்" என்ற தலைப்பின்கீழ் விளங்க உரைக்கப்படும். சுருங்கச் சொன்னால், இந்திய வடிவெழுத்துக்களின் தோற்றம்—அஃதாவது, அசோகன் நெடுங்கணக்கு, திராவிட நெடுங் கணக்கினின்றும் தோன்றிற்றோ? அல்லது, திராவிட நெடுங்கணக்கு, அசோகன் நெடுங்கணக்கினின்றும் தோன் றிற்றோ என்பது—இன்னமும் முடிவாக உறுதி செய்யப் படவில்லை என்பதே என்கருத்து. என்றாலும், இப்போ துள்ள நிலையில், திருவாளர் பீம்ஸ் அவர்கள் கொள்கை யோடு இணைந்து, பின் முடிவை யேற்றுக்கொள்ளவே நான் விரும்புகின்றேன்.

இவ்வாறு எழுதிமுடித்த பின்னர், 1874-இல் இலண் டன்மாநகரில் கூடிய "கீழ்த்திசை மொழிவல்லுநரின் உலகமாநாட்டில்," பேராசிரியர் எக்லிங் என்பார் படித்த "சேர அரச இனம்" என்ற கட்டுரையில், மேற்கோளாக எடுத்தாளப்பட்ட சில கல்வெட்டுக்களைக் கண்டேன். யூதர் களும், சிரியன்களும் வைத்துள்ள பட்டயங்களினும், காலத்தால் முற்பட்டனவும், கி. பி. 247-ஆம் ஆண்டைச் சேர்ந்தனவுமாய அக்கல்வெட்டுக்களை நோக்கிய எனக்கு, அதில் ஆளப்பட்டுள்ள வடிவெழுத்துக்கள், பேராசிரியர் பர்னல் அவர்கள் அறிவித்த வடிவெழுத்துக்களோடு ஒத்து இராமல், அக்காலத்தில், வடஇந்தியாவில் சமஸ்கிருத ஒலி

களை ஆளப்பட்ட வடிவெழுத்துக்களோடு பெரிதும் ஒத் துள்ளன என்பதை யான் அறிந்துகொண்டேன். அவ் வெழுத்துக்களை "ஹளகன்னட" எழுத்துக்களின் வழக் கிறந்த வடிவங்களாகக் கொள்வதே நலம்.

திருவாளர் எட்வர்டுதாமஸ் என்பார் வெளியிட்ட "இந்தியப் பழமை பற்றி பிரின்செப் என்பார் எழுதிய கட்டுரைகள்" என்ற நூலில், இந்திய நெடுங்கணக்குப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. தென்னிந்திய நெடுங்கணக்குகளின் தோற்றம் பற்றிய ஆராய்ச்சி, தொடர்ந்து செய்யவேண்டுவதும், பெரும்பயன் அளிப்பது மாகிய ஒரு பெரும் பணியாகும். பழையனவும், புதியனவு மாய்த் தென்னாட்டு நெடுங்கணக்குகள் பலவும், தம்முள் ளேயே ஒவ்வொன்றோடும் ஒப்பிடப்பெறுதலோடு, வட இந்திய, மத்திய இந்திய நெடுங்கணக்குகளோடும், பர்மிய நெடுங்கணக்கோடும், சிறப்பாக இலங்கைக் கல்வெட்டுக் களில் காணும் எழுத்துக்களோடும் ஒப்பிடப்பெறுதல் வேண்டும். திருவாளர் ஜம்புலுஸ் என்பார், இலங்கையில் வழங்குவதாகக் கண்டுபிடித்த நெடுங்கணக்கு, வழக்கில் உள்ள எந்த நெடுங்கணக்கோடும் முழுதும் ஒத்திருப் பதாகத் தோன்றவில்லை. அவை, அம்மொழியாளர்தம் உள்ளுணர்ச்சியின் விளைவாய்த் தோன்றி வளர்ந்தன என் பதே என் கருத்து.

தமிழ் வடிவெழுத்துக்கள், தேவநாகரி எழுத்துக்க ளோடு எத்துணை வேற்றுமையுடையவாக வுள்ளனவோ, அதனினும் பன்மடங்கு அதிகமாக இன்றைய தெலுங்கு-கன்னட வடிவெழுத்துக்கள், இன்றைத் தமிழ் வடிவெழுத் துக்களோடு பெரிதும் வேற்றுமையுடையவாக உள்ளன. ஆனால், தெலுங்கு - கன்னட எழுத்துக்களுக்கும், கொச் சிப் பட்டயங்களில் காணப்பெறும் எழுத்துக்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க ஒற்றுமை நிலவுகின்றது. இன் றைய மலையாள வடிவெழுத்துக்கள், தமிழ்க்கிரந்த எழுத் துக்களிலிருந்து தோற்றுவிக்கப்பட்டன என்பது உறுதி செய்யப்பெற்ற உண்மையாம்.

சமஸ்கிருத மொழியை எழுத முதன்முதலாகக் கையாளப்பெற்ற ஒருவகை நெடுங்கணக்கையே, தமக்குரிய பிறப்பிடமாக, இன்றைய வட இந்திய நெடுங்கணக்குகள் அனைத்தும் மேற்கொண்டிருப்பதைப் போன்றே, தென்னிந்தியாவில் அறியப்பட்டனவும், இன்று வழக்கில் உள்ளனவுமாய நெடுங்கணக்குகளும், அந்நெடுங் கணக்கையே தமக்கும் பிறப்பிடமாகக் கொண்டுள்ளனவா, அன்று என்பது அறுதியாக உறுதிசெய்யப்பெறுதெனினும், அவையனைத்தும் யாதோவொரு நெடுங்கணக்கொன்றையே தம் பிறப்பிடமாகக் கொண்டுள்ளன என்று கொள்வதற்குரிய சான்றுகள் நிறைய உள்ளன. தென்னிந்திய நெடுங்கணக்குகளுக்கும், இன்றைய வடஇந்திய நெடுங்கணக்குகளுக்குமிடையே, மிகப்பெரிய வேற்றுமை நிலவுவதற்குத், தென்னிந்திய மொழிகள், வடஇந்திய மொழிகளைவிட மிகப்பழைய காலத்திலேயே இலக்கிய வளர்ச்சிபெற்றுவிட்டமையே காரணமாம். தென்னிந்திய மொழிகள், "குகைவடிவெழுத்துக்கள்" வழக்கிலிருந்த அம்மிகப் பழைய காலத்திலேயே இலக்கிய வளர்ச்சிபெறத் தொடங்கிவிட்டன. ஆனால், அக் "குகை வடிவெழுத்துக்கள்" வழக்கிறந்து, அதனிடத்தைத் தேவநாகரி எழுத்துக்கள் மேற்கொண்ட காலத்திலாவது, வடஇந்திய மொழிகளில் இலக்கிய வளர்ச்சி தோன்றிற்று என்பதே ஐயமாம். தெலுங்கு, கன்னட நெடுங்கணக்குகள், தேவநாகரி முறையில் வரிசைப்பட்டுள்ளன; அல்லது, அமைப்புமுறை, தன்மை ஆய இவ்விரண்டில் மட்டும், அவை அவற்றோடு ஒத்துள்ளன எனல் பொருந்தும். சமஸ்கிருத மொழி அறியாத குறில் "எ", குறில் "ஒ" வல்லின "ற" எழுத்துக்களையும், வேதகால சமஸ்கிருதத்தில் வழக்கிலிருந்து, இன்றைய சமஸ்கிருதத்தில் வழக்கிறந்துபோன "ள" எழுத்தையும், அம்மொழிகள் பெற்றிருப்பதே, அவ்விரு இனமொழிகளுக்கும் உள்ள வேற்றுமையாம். தமிழ், மலையாள மொழிகளுக்கே உரிய "ழ" எழுத்தைப் பழங்கன்னடமும் பெற்றுள்ளது. பிறவகையில், தெலுங்கு - கன்னட நெடுங்கணக்குகளின் எழுத்துக்கள், தேவநாகரி எழுத்துக்

களாக மாறத்தகும் ஒப்புடையனவேயாம். மலையாள நெடுங்கணக்கு, பொதுவாகத் தெலுங்கு நெடுங்கணக் கோடும் புதுக்கன்னட நெடுங்கணக்கோடும் ஒத்து நிற்கும். மேலே குறிப்பிட்ட பிற ஒலிகளோடு, தமிழ் மொழிக்கே உரிய "ழ" கரத்தைப் பெற்றிருப்பதும், எகர, ஏகாரங் களைக் குறிக்க ஒரே வடிவெழுத்தையும், ஒகர, ஓகாரங்களைக் குறிக்க ஒரே வடிவெழுத்தையும் பெற்றிருப்பதையும், மலையாளம், அவ்விரு மொழிகளோடும் கொண்டுள்ள வேற்றுமையாம். அந்நெடுங்கணக்குகள் பலவும், தாம் பெற்றிருக்கும் சமஸ்கிருத இஸ் ஒலி எழுத்துக்களையும், ஹகர வொலி எழுத்துக்களையும், சமஸ்கிருதத்திலிருந்து கடன் வாங்கிய சொற்களை யொலிக்கும்போதும், எழுதும்போது மல்லால் பிற இடங்களில் இடம்பெறுவதில்லை. சமஸ்கிருத ஆதிக்க வளர்ச்சியால் சிற்சில இடங்களில் சமஸ்கிருதச் சொற்களல்லாத பிறசொற்களை ஒலிக்கும்போதும், அவ் வெழுத்துக்கள் இடம்பெறத் தொடங்கிவிட்டன என்றா லும், திராவிட ஒலிகளை வெளியிட அவை தேவையற்ற னவே. தெலுங்கில் "ச்", "ஜ்" என்ற ஒலிகள், சிற்சில இடங்களில், "த்ஸ்", "த்ஜ்" என முறையே ஒலிக்கப் பெறுமென்றாலும், அவ்வேற்று ஒலிகளை அறிவிக்கத் தனி வடிவெழுத்துக்கள் வழங்கப் பெறுவதில்லை.

தேவநாகரி எழுத்துக்களோடு, மலையாள நெடுங் கணக்கும், தெலுங்கு - கன்னட நெடுங்கணக்கும் வேறு படுவதைக் காட்டினும், மிக அதிகமாக தமிழ் நெடுங் கணக்கு, தேவநாகரி எழுத்துக்களோடு மாறுபடுகிறது. தமிழ் இலக்கணம், சமஸ்கிருதத் துணையில்லாமலே முழு தும் ஒழுங்கு செய்யப்பெற்று, பண்படுத்தப் பெற்றுவிட் டமையாலும், சமஸ்கிருத ஒலிப்புமுறை, தமிழர் அறியாத ஒன்று; தமிழில் இடம்பெறாத ஒன்று ஆதலாலும், தமிழ் ஒலிப்புமுறை, தமிழ் நெடுங்கணக்கொன்றின் மூலமாகவே மிகவும் சிறப்பாக அமைந்துவிட்டது. அந்நெடுங்கணக்கு எழுத மேற்கொண்ட பொருள்கள், தோற்றத்தில் சமஸ் கிருதம் போன்றிருப்பினும், அவற்றை எழுதியமுறை யனைத்தும் தமிழ்த்தன்மையுடையனவே.

கீழே குறிப்பிடப்படுவன தமிழ் நெடுங்கணக்கின் சிறப்பியல்புகளாம்: 1. தெலுங்கு, கன்னட நெடுங் கணக்குகளைப்போன்றே, தமிழும் எகரத்தின் குறில் நெடில்களைக் குறிக்கவும், ஒகரத்தின் குறில் நெடில்களைக் குறிக்கவும், தனித்தனி வடிவெழுத்துக்களைப் பெற்றுளது. இவ்விரு உயிர் எழுத்துக்களின் குறில் நெடில்களைக் குறிக்க, பண்டு ஒரு வடிவெழுத்தையே பெற்றிருந்தது. இவ்விரு குறிலெழுத்துக்களினின்றும், அவற்றின் நெட்டெழுத்துக்களைப் பிரித்துக் காட்டும் குறிகள், முதன்முதலாகப் பெச்சி பாதிரியாரால் இணைக்கப்பட்டன என்று நம்பப்படுகிறது. 2. சமஸ்கிருத இலக்கண ஆசிரியர்களால், உயிரெழுத்துக்களின் இனமாகக்கொள்ளப்படும் "ழ்இ", "ல்ழ்இ" என்ற ஒழுகிய அரை உயிர்களைக் குறிக்கும் ஒலிகளையொத்த ஒலிகளைக்குறிக்கும் வடிவெழுத்துக்கள் தமிழில் இல்லை. சமஸ்கிருத "அனுஸ்வார" ஒலிகளையும் தமிழ் நெடுங்கணக்கு மேற்கொள்வதில்லை. 3. தமிழில் மூக்கெழுத்துக்கள் மிகப்பயின்ற வழக்குடையனவாம். அவ்வெழுத்துக்கள் உறுதியானவை; தனித்தியங்கும் ஒலிகளையுடையன. அம்மொழி இலக்கண ஆசிரியர்களால் அவை மெய்யெழுத்து வரிசையுள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் மூக்கெழுத்துக்களில், இயற்கையொலியாயது, மகர ஒலி ஒன்றே. இவ்வொலி, சொல்லின் ஈற்றினும், இதழ் எழுத்துக்களின் முன்னும் நிலைபெற்றொலிக்கும். மகரத்தைத் தொடர்ந்து, மிடற்றெழுத்தாகிய "க" வரின் மகரம், ககர இன மெல்லின மெய்யாகிய "ங" வாக மாறும். அவ்வாறே, மகரத்தைத் தொடர்ந்து, அண்ண எழுத்தாகிய "ச"வும், நாவெழுத்தாகிய "ட"வும், பல்லெழுத்தாகிய "த"வும் வந்தால், அம்மகரம் முறையே, "ஞ" வாகவும், "ண"வாகவும், "ந"வாகவும் மாறும். 4. தெலுங்கு மொழிக்கே உரிய "அரை அனுஸ்வார" எழுத்தையொக்கும் எழுத்தெதுவும் தமிழில் இல்லை. வல்லின மெய்களின்முன், அவற்றிற்கினமான மெல்லின மெய்களையமைத்து, அவ்வல்லின மெய்யொலிகளின் வன்மையைக் குறைத்து இனிய ஒலியாக மாற்றுவதன் கண்ணதே

"அரை அனுஸ்வார" ஒலித் தோற்றம். அம்முறை தமிழில் பெரிதும் மேற்கொள்ளப்படுகிறது.

வலிந்து ஒலிக்கும் எழுத்துக்களைத் தமிழ் யாண்டும் மேற்கொள்வதில்லை; அது சமஸ்கிருதத்தில் காணப் பெறும் வலிய ஒலிகளுள் எதையும் கடன் வாங்கியதும் கிடையாது; தனித்தியங்கும் இயல்புடைய ஹகர ஒலியையும் அது ஏற்றுக்கொள்வதில்லை. சமஸ்கிருத "விஸர்க்க"த்தையொத்த, அரை உயிரும், அரை மெய்யுமாகக் கருதப்படும் ஆய்தம் என்ற ஓர் எழுத்தை, அது விரும்பி மேற்கொண்டுளது. சமஸ்கிருத மிடற்றுவலி, ஹகரம் போல ஒலிக்கப்பெறும்; அது, பெரும்பாலும் செய்யுட்களிலேயே இடம்பெறும்; அது புலவர்களின் புலமை நலம் காரணமாகப் பயனின்றித் தோற்றுவிக்கப்பட்ட ஓர் எழுத்து என்று கருதப்படும்.

சமஸ்கிருதம், தன் மெய்யெழுத்துக்களை வகைப் படுத்தி வரிசைசெய்ய மேற்கொண்ட தேவநாகரி வர்க்க முறையையே, தமிழும் தன் மெய்யெழுத்துக்களை வரிசைப்படுத்த மேற்கொண்டுளது. ஆனால், அஃது அவ் வர்க்க எழுத்துக்களுள், ஒவ்வொரு வரிசையிலும் இடையில் உள்ள எல்லா எழுத்துக்களையும் அறவே நீக்கிவிட்டு முதற்கடை எழுத்துக்கள் இரண்டை மட்டுமே மேற் கொண்டுளது. முதல் வரிசையாகிய மிடற்றெழுத்துக் களில், தமிழ்நெடுங்கணக்கு 'க'வையும், அதற்கு இன மூக் கெழுத்தாய 'ங' வையும் மேற்கொண்டு, இடையில் உள்ள 'கஹ', 'க', 'கஹ' என்ற எழுத்துக்களை நீக்கிவிட்டது. இரண்டாம் வரிசையாகிய அண்ணவெழுத்துக்களில், 'ச' வையும், அவற்கு இன மூக்கெழுத்தாய 'ஞ'வையும் மேற் கொண்டு, 'சஹ', 'ஜ', 'ஜஹ' எழுத்துக்களை நீக்கிவிட்டது. மூன்றாது வரிசையாகிய தலைவளி எழுத்துக்களில் 'ட'வை யும், அதற்கின மூக்கெழுத்தாய'ண'வையும் மேற்கொண்டு, 'டஹ', 'ட', 'டஹ' எழுத்துக்களை நீக்கிவிட்டது. நான்காவது வரிசையாகிய வல்லெழுத்துக்களில் 'த' வையும், அதற் கின மூக்கெழுத்தாய 'ந'வையும் மேற்கொண்டு, 'தஹ',

'த', 'தஹ' எழுத்துக்களை நீக்கிவிட்டது. ஐந்தாவது வரிசையாகிய இதழ் எழுத்துக்களில், 'ப'வையும், அதற்கின மூக்கெழுத்தாய 'ம'வையும் மேற்கொண்டு, 'பஹ', 'ப' 'பஹ' எழுத்துக்களை நீக்கிவிட்டது.

இவ்வாறு, தமிழ், தேவநாகரியின் ஹகரவொலி மெய்யெழுத்துக்களை அறவே நீக்கிவிட்டதோடு, அந்நெடுங்கணக்கின் மெல்லொலி மெய்யெழுத்துக்களையும் நீக்கி விட்டுளது. தேவநாகரி மெல்லொலி மெய்யெழுத்துக்களினின்றும் வெளியாம் மெல்லொலிகள், சமஸ்கிருதத்தில் உள்ளவாறே தமிழிலும் சாதாரணமாக ஒலிக்கப்பெறுகின்றன என்றாலும், வடிவெழுத்தொன்றே, ஓர் இடத்தில் வல்லொலியுடையதாகவும், பிறிதோரிடத்தில் மெல்லொலியுடையதாகவும் ஒலிக்கும் - தமிழிற்கே உரிய - ஓர் ஒலி முறைப்படி, ஒரு வடிவெழுத்தே, இவ்விரு வொலிகளையும் குறிக்க மேற்கொள்ளப்படும். தமிழில், அவ்விரு ஒலிகளையும் குறிக்க மேற்கொள்ளப்படும் வடிவெழுத்து, தேவநாகரி வர்க்கத்தின் முதல் எழுத்தாகிய வல்லொலியெழுத்தேயாம்.

அரை உயிர் என அழைக்கப்பெறும் இடையின வர்க்கத்தில், தமிழ், தேவநாகரி முறையை மேற்கொள்கிறது. ஆனால், அஃது அத் தேவநாகரி எழுத்துக்களோடு, அதில் காணப்பெறாத வேறு நான்கு எழுத்துக்களை உடன் சேர்த்துக்கொள்கிறது. அவை இடையின 'ழ', வல்லின 'ற', லகரரகரவொலிக்கலவையெனக் கருதப்படும் இடையின 'ள', மெல்லின'ன' என்பனவாம். இந்த 'ன'கரம், பெரும்பாலும் ஈற்றெழுத்தாகவும், 'ற'கரத்தோடிணைந்து 'ன்த்ர்' என்றெழும் கலவை யொலியைத் தரவும் ஆளப்பெறும்.

'இஸ்' என்ற வொலியைத் தரும் சமஸ்கிருத எழுத்துக்கள் எவையும், தமிழ் நெடுங்கணக்கில் இடம்பெறவில்லை. சமஸ்கிருதச் சொற்களை யொலிக்கும்போதும், எழுதும்போதும், தமிழ், 'ஷ', 'ஸ' என்ற இவ்விரு ஒலி

களையும் மேற்கொள்கிறது என்றாலும், இவ்வெழுத்துக்கள் பழந்தமிழ் இலக்கணத்திலோ, இலக்கியத்திலோ இடம் பெறாமையோடு, அவ்வொலிகளை வெளியிடும் எழுத்துக்கள் எவையும், தமிழ் நெடுங்கணக்கிலும் இடம் பெறவில்லை. அவ்வொலியுடைச் சொற்கள், தமிழில் வந்து வழங்கும் போது, அவ்வொலிகளைத் தெரிவிக்க, கிரந்தவெழுத்துக் களினின்றும் சில எழுத்துக்களை மேற்கொள்கிறது. சமஸ் கிருத 'ஶ' என்ற எழுத்து, தமிழில் என்றும் இடம் பெற்ற தில்லை. சமஸ்கிருத 'ச' என்ற ஒலியோடொத்த ஒலியை யுடையதும், தனித்து எழுதினால், 'ஸ' எனவும், இணைத்து எழுதினால், 'ச' எனவும் ஒலிக்கப்பெறுவதுமாய 'ச'கரமே அதற்குப் பதிலாக ஆளப்படுகிறது.

அடுத்த பக்கத்தில் காட்டப்பெறும் தேவநாகரி, தமிழ் நெடுங்கணக்குகளின் ஒப்பீடு, அவ்விரு இனங்களுக் கிடையேயுள்ள தொடர்பினை விளக்கிக்காட்டும்.

## உயிர்

| | |
|---|---|
| சமஸ்கிருதம் : | அ, ஆ; இ, ஈ; உ, ஊ; ழி, ழீ; ல்ழீ; ஏ, ஐ; ஓ; ஔ; அம், ஹ்க். |
| தமிழ் : | அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ; ஒ, ஓ; ஔ; ஃ. |

## மெய்

| | | |
|---|---|---|
| மிடற்றினம் : | சமஸ்கிருதம் : | க, கஹ; க, கஹ, ங. |
| | தமிழ் : | க, ங. |
| அண்ணஇனம் : | சமஸ்கிருதம் : | ச, சஹ, ச, சஹ, ஞ. |
| | தமிழ் : | ச, ஞ. |
| நாவினம் : | சமஸ்கிருதம் : | ட, டஹ, ட, டஹ, ண. |
| | தமிழ் : | ட, ண. |
| பல்லினம் : | சமஸ்கிருதம் : | த, தஹ, த, தஹ, ந. |
| | தமிழ் : | த, ந. |
| இதழினம் : | சமஸ்கிருதம் : | ப, பஹ, ப, பஹ, ம. |
| | தமிழ் : | ப, ம. |
| அரைஉயிர் (இடையினம்): | சமஸ்கிருதம் : | ய, ர, ல, வ. |
| | தமிழ் : | ய, ர, ல, வ, ழ, ள, (ற) |
| இஸ்ஒலியும், ஹகரஒலியும் : | சமஸ்கிருதம் : | ஸ, ஷ, ஸ, ஹ. |
| | தமிழ் : | |

## உ. திராவிட ஒலிமுறை

இனி, திராவிட வடிவெழுத்துக்களின் ஒலிகள், அவ்வின மொழிகளின் ஒலிமுறை இவை பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்வோமாக. அவ்வாறு ஆராயுங்கால், தேவநாகரி நெடுங்கணக்கு, மேற்கொண்டுள்ள வரிசை, அமைப்பு முறைகளை மேற்கோடல், நம் ஆராய்ச்சிக்குப் பெருந்துணை புரிவதாகும். திராவிட எழுத்துக்களின், ஒவ்வொரு எழுத்தின் ஒலிப்பு முறைபற்றியும் விரிவாக ஆராய்வது, என் நோக்கம் அல்ல. ஒன்றன்பின் ஒன்றாக, உயிர் எழுத்துக்களையும், மெய்யெழுத்துக்களையும் ஆராய்ந்து நோக்குங்கால், திராவிட ஒலி முறையியல்புகளையும், கொள்கைகளையும் வெளியிடத் துணைபுரியும், ஆராய்ச்சிமட்டுமே ஈண்டு, மேற்கொள்ளப்படும். தமிழிலக்கண ஆசிரியர்கள், வாய் திறந்தொலிக்கும் ஒலிகளாலாய எழுத்துக்களை, உயிரெழுத்துக்களென்றும், உயிரொலிகள் தடையுறப் பிறக்கும் ஒலிகளாலாய எழுத்துக்களை மெய்யெழுத்துக்களென்றும், இவ்விரு ஒலிகளும் இணைந்து ஒலிப்பதால் எழும் எழுத்துக்களை, உயிர் மெய்யெழுத்துக்களென்றும் பொருள் நிறைந்த சொற்களால் பெயரிட்டழைப்பர்.

### க. உயிரெழுத்துக்கள்

(1) அ, ஆ :— 'அ'வை, 'ஒ'வென ஒலிக்கும் வங்காளம் நீங்கிய இந்தியாவின் எல்லாப் பகுதியிலும், சமஸ்கிருத 'அ', ஒலிப்பதைப் போன்றே, திராவிடமொழிகளில், இவ்விரு எழுத்துக்களும் ஒலிக்கின்றன. தமிழில் உள்ள தனி உயிர்களனைத்தினும், 'அ'கரவொலியே, கடிய ஒலியாம். அதனால், அது, பெரும் பெரும் மாற்றங்களுக்கு உள்ளாகிறது. சிற்சில இடங்களில், அது, 'எ' என மாறும்; சமஸ்கிருத 'பலம்', தமிழில் 'பெலம்' எனவும், 'ஜபம்', 'செபம்' எனவும் ஆதலை ஒப்பிட்டுணர்க. ஏனைய மொழிகளில், அது, தன் இடத்தை உறுதியாகப் பெற்றுள்ளது. அம்மொழிகளிலும், ஈற்று 'அ', ஒரோவழி, 'உ'கரவுயிரின் சேர்க்கையால் அரண் செய்யப்படுகிறது; 'அ'கரத்திற்குப்பின், 'உ'க

ரம்வர, அவ்விரண்டற்குமிடையில், 'வ'கரவுடம்படு மெய் பெற்று நிற்கும். பெயர்ச்சொற்களின் ஈற்றில் நிற்கும் 'அ', அடியோடு மறைந்து போக, அவ்விடங்களை 'உ'கரமோ அல்லது ஐகாரமோ மேற்கொள்ள வேண்டியதாகிவிட்டது. ஈற்று 'அ'கரம், தமிழில் 'ஐ'காரமாக மாறுகிறது என்றால், கன்னடத்தில், அது, பொதுவாக 'எ'கரமாக மாறுவதும், ஒரோவழி, 'வு'கரச் சேர்க்கையால் அரண் செய்யப்படுவதும் நிகழ்கிறது. தெலுங்கிலும், சிறப்பாக மலையாளத்திலும், இவ்வுயிர், மாற்றம்பெறுவது குறைந்தே காணப்படுகிறது. அஃறிணைப் பொதுப்பெயர், அஃறிணைச் சுட்டுப் பெயர் இவற்றின் ஈறாக எல்லா மொழிகளிலும் பண்டு இருந்ததும், மலையாளத்தில் இன்றும் இருப்பதும் ஆகிய 'அ'கரம், வழக்குத் தமிழில் பெரும்பாலும், 'ஐ'காரமாகவும், தெலுங்கில் 'இ'கரமாகவும் கன்னடத்தில் 'உ'கரமாகவும் மாறியுளது. அப்பொருள்கள் எனப் பொருள்படும், 'அவ' எனும் சுட்டு, தமிழில், 'அவை' எனவும், தெலுங்கில், 'அவி' எனவும், கன்னடத்தில் 'அவு' எனவும் வர, மலையாளத்தில் மட்டும் 'அவ' என்றே வருதல் காண்க.

குறில் 'அ' இரண்டு இணைவதால் தோன்றிய, தமிழ் நெடில் 'ஆ', செய்யுட்களில், 'ஓ' என மாறும்: (விண் + அ + வ் + அர் = விண்ணவர்—விண்ணோர்). கன்னடத்தில், குறில் 'அ'கரமும், ஒரோவழி, 'ஒ'கரமாக மாறும். சமஸ்கிருத உயர்திணைப் பெண்மையைக் , குறிக்கவரும் ஈற்று 'ஆ', தமிழில், 'ஐ' என மாறும். விருப்பம் எனப் பொருளபடும் சமஸ்கிருத 'ஆஸா', தமிழில் 'ஆசை' எனவும், திங்கள் ஒன்றின் பெயராக வரும சமஸ்கிருத 'சித்ரா' தமிழில் 'சித்திரை' எனவும் ஆதலறிக. அதே 'ஆ', கன்னடத்தில் 'எ' என மாறும். சமஸ்கிருத 'கங்கா', தமிழில் 'கங்கை'யென ஆம். கன்னடத்தில், அது 'கங்கெ' அல்லது 'கங்கெயு' என்றே ஆம்.

ஈற்று 'அ'கர, 'ஆ'கார ஒலிகள் மறைவதால், தமிழ்ச் சொற்களில், அவ்விடங்களை நிரப்பவரும் ஈருயிர் இணையொலியெழுத்தாகிய 'ஐ'காரம், 'அஇ' யென ஒலிக்கப்

பெறுவதினும், 'எஇ' யென ஒலிக்கப்பெறுதலே பொருந்தும். ஆனல், தமிழ் 'ஐ'காரம், 'அ'கரத்தினின்றே தோன்றியுள்ளமையும், அவ் 'ஐ'காரம், சமஸ்கிருதத்தில் 'அஇ' யென்றே ஒலிக்கப்படும் ஒற்றுமையுண்மையும், தமிழில் வரும் ஈருயிர் இணையொலி எழுத்தாய இவ் 'ஐ'காரத்தை, 'எஇ'க்களின் இணையாகக்கொள்வதினும், 'அஇ'க்களின் இணையாகக் கொள்வதற்கே துணைபுரிகின்றன. இவ் 'ஐ'கார ஒலி, 'அ'கர உயிரினின்றே தோன்றியிருப்பவும், ஒலிக்கும்பொழுது, அவ் 'அ'காரவொலி, அடியோடு மறைந்துபோதல் வியப்பாகவேயுளது. கிரந்த, மலையாள நெடுங்கணக்குகளில், இவ்வொலி, 'எஎ' என இருஇணை 'எ'கர எழுத்துக்களாலும், தெலுங்கு—கன்னட நெடுங்கணக்கில், 'எ', 'இ' என்ற இரு ஒலிகளின் கூட்டொலியை அறிவிக்கும் எழுத்து ஒன்றாலும் எழுதப்படுகிறது; துருக்கி மொழியின், 'ஏ' அல்லது 'எய்' என்ற ஒலியோடும், அது சிறிது ஒப்புடையதாக உளது. இரண்டாம் வேற்றுமையுருபு, மலையாளத்தில் 'எ' என இருக்க, அது தமிழில் 'ஐ' ஆக இருப்பதும், பெயர், தொழிற்பெயர்களின் இறுதி, கன்னடத்தில் 'எ' என இருக்க, அது, தமிழில் 'ஐ'யென இருப்பதும் ஆராயத்தக்கனவாம். 'நடை' என்ற தமிழ்ச்சொல்லைச் சமஸ்கிருத எழுத்துக்களில் எழுதுங்கால், குமாரில பட்டர் 'நட்அஇ' என்று எழுதாமல், 'நட்எ' என்று எழுதியதும் ஈண்டுக் குறிப்பிடல் தகும்; அதனல், 'ஐ' என்ற தமிழ் ஒலி, 'அஇ' ஒலியினும் 'எ' ஒலிக்கே அண்மையுடைத்து என்றே அவர் கருதியுள்ளார் எனத் தோன்றுகிறது. ஆகவே, ஈர்உயிரிணையொலி எழுத்தாகிய தமிழ் 'ஐ'காரம், 'எஇ' என்ற இவ்விரு எழுத்துக்களின் ஒலிகள் இணைவதால் தோன்றியது என்றே நானும் கருதுகின்றேன்.

(2) இ, ஈ :—இவை குறித்துக் கூறத்தக்கன ஒன்றுமில்லை.

(3) உ, ஊ :—இந்தோ - ஐரோப்பிய மொழிகளிலும், செமிடிக்கின மொழிகளிலும் வரும் 'உ'கர, 'ஊ' கார

உயிர்கள், ஒலிநயம் குறித்து மற்ற எழுத்துக்களோடு இணைவதோ, பிறிதோர் உயிர் எழுத்தாக மாறுவதோ பெறுமல், நிலைத்த, மாற்றமுடியாத எழுத்துக்களாக உள்ளன. திராவிடமொழிகளில், 'ஊ'காரம், நிலைத்து நிற்கும் ஆற்றல் வாய்ந்ததே; ஆனல், குறில் 'உ', உயிரெழுத்துக்கள் எல்லாவற்றினும், மிகமிக மென்மையானதும், எளிமையுடையதுமாதலின், அது, ஒலித்துணை, ஒலிநயம் காரணமாகப் பெரும்பாலான சொற்களில், சிறப்பாக அச்சொற்களின் ஈற்றில் மேற்கொள்ளப்படுகிறது.

தெலுங்கிலக்கண நடையில், ஒவ்வொரு சொல்லும், உயிர் ஈறுகவே முடிதல்வேண்டும். யாதானும் ஒரு சொல், இயல்பாக உயிரீறுடையதன்ருயின், அச்சொல்லின் ஈற்று மெய்யெழுத்தின்பின், உகரம் இணைக்கப்பெறும். இம்முறை, சமஸ்கிருதத்தினின்றும் வந்து வழங்கும் சொற்களிடத்தும் கையாளப்படும். மகர ஈற்றுச் சமஸ்கிருத அஃறிணைப் பண்புப்பெயர்கள், தெலுங்கில் வருங்கால், 'மு' என்றே முடியும். இவ்வுகாம், எழுதுங்கால் தவருது எழுதப்படுகிறது என்ருலும், ஒலிக்கும்பொழுது, பெரும்பாலும் ஒலிக்கப்படுவதில்லை. புதுக் கன்னடத்தில், 'அ'கர ஈறுகமுடியும் சொற்களுக்கீற்றிலும், 'உ'காம் சேர்க்கப்படல்வேண்டும் என்ற மேலும் ஒருபடி முன்னேற்றத்தோடு, இம்முறை, கையாளப்படுகிறது; 'சில', 'பல' என்ற தமிழ்ச்சொற்கள், கன்னடத்தில் 'கெலவு', 'பலவு' என வருதல் காண்க. மெய்யீற்றுச் சொற்களின் பின், 'உ'கரத்தை யிணைத்தலாகிய தமிழ்முறை, பழங்கன்னட முறையோடு ஒத்துளது. க், ச், ட், த், ப், ற் என்ற வல்லின மெய்களை ஈறுகவுடைய சொற்களுக்குப்பின், 'உ'கரம் வருதல்வேண்டும் என்பதே, அம்முறையாம். தமிழ் மக்களின் ஒலியுறுப்புக்கள், அவ்வல்லின மெய்யொலிகளை, அவற்றைத்தொடர்ந்துவரும் உயிர் ஒலிகளின் துணையில்லாமல் ஒலிக்கும் ஆற்றல் அற்றிருப்பதே இம்முறைக்குக் காரணமாம். இவ்வாறு இணைக்கப்படும் 'உ'காம், குறில் ஒலி அளவுதானும் இராது, மேலும் குறைந்திருப்பதால்,

அதன் ஒலி அளவை, நெட்டெழுத்தின் ஒலி அளவில் காற்கூறுடையதாகவே இலக்கண ஆசிரியர் வரையறுத்துள்ளனர். தமிழ்மொழியில் இக்குறில் 'உ'கரம் நிற்கும் இடங்களை மலையாளமொழியில், ஒரோவழி, குறில் 'அ'கரம் மேற்கொள்கிறது. இச்சிறப்பியல்பு, கொச்சிமலையாளத்திற்கும், சிரியன் கிறித்தவர் வழங்கும் மலையாளத்திற்குமே உரித்து என்பர் பேராசிரியர் குண்டர்ட். மலையாளமொழியைக் கற்கும் தங்கட்குத் துணையாக, ஒலிப்பு முறையைக் கொள்ளாது, எழுத்துமுறையை மேற்கொள்ளும் கடல் கடந்துவந்து வாழும் பிறமொழியாளர், குறை 'உ'கர ஒலியைக் குறிக்கவரும் இவ் 'அ'கரத்தை, இயல்பான 'அ'கரம் என்வே கொள்கின்றனர் என்று, குண்டர்ட் அவர்களே கூறுகின்றனர். தமிழின், இக்குறை 'உ'கரம், வட மலையாளமொழிகளில், மேலும் குறைக்கப்பட்டுளது. அங்கெல்லாம், இவ் 'உ'கரம் எழுதப்பெறுமல், அதற்கு ஈடாக, அவ்வொலியைக் குறிக்க, ஈற்றெழுத்தின்மீது ஒரு சிறு அரை வட்டம், அல்லது ஒரு புள்ளி அமைக்கப்படும். 'கிழக்கு' என்ற தமிழ்ச்சொல், மலையாளத்தில் 'கிழக்க' எனவே எழுதப்படும். இம்முறை, துளுமொழியில், மேலும் விரிவாக ஆளப்படுகிறது. 'ஊ', 'ஓ' இவ்விரு உயிர்கள் நீங்கிய ஏனைய உயிர்கள் எல்லாவற்றின் பின்னரும் ஒலிகளை அறிவது, அம்மொழியில் அரிதாகும். அவ்வொலிகள் ஒலித்துணையாக ஆக்கப்பட்டவிடத்து, அவ் 'வு'கரம், ஜெர்மன் மொழியில் காணப்பெறும் குறுகிய 'உ'காரத்தை யொத்துளது. இல்லை எனப் பொருள்தரும் 'இலது' என்ற தமிழ்ச்சொல், 'லேது' என மாறும் மாற்றமும், அதுபோலும் வேறு பிற மாற்றங்களும் ஈற்றுயிர்களைக் குறைப்பதைப்போன்றே, மொழிமுதல் உயிர்களைக் குறைப்பதால் உண்டான விளைவுகளாம்.

தன்னையடுத்துக் குறை உகரமோ, அன்றி 'அ'கரமோ இணைக்கப்பட்ட ஈற்று வல்லினமெய்கள், அவ்வாறு இணைக்கப்பட்ட உயிர்களின் பற்றுக்கோடாக இரட்டிக்கப்படும்; சொல் எனப்பொருள்படும், சமஸ்கிருத 'வாக்',

தமிழில் 'வாக்கு' என்றும், நீர் எனப்பொருள்படும் சமஸ்கிருத 'அப்', தமிழில் 'அப்பு' என்றும் வருதல் காண்க. இம்முறை, சொல்லீற்றில் வரும் வல்லினமெய்களுக்கேயல்லாமல், சொல்லுறுப்பாய அசைகளின் ஈற்றில் வரும் வல்லினமெய்களுக்கும் மேற்கொள்ளப்படும். ஒரு சொல்லின் இடையில் வரும் ஓர் அசை, மேற்கூறிய வல்லின மெய்யெழுத்துக்களுள் ஒன்றை, ஈற்றில் கொண்டு நிற்க, அதையடுத்துவரும் அசையின் மொழிமுதல் மெய்யெழுத்து, நின்ற அசையின் ஈற்றெழுத்தோடு இணைய இயலாத ஒன்றாயின், நின்ற அசையின் ஈற்றில் வரும அவ்வல்லினமெய் இரட்டிக்கப்பெற்று, அதன் ஈற்றில், இக்குறை 'உ'கரம் இணைக்கப்படும். சமஸ்கிருதம் 'அத்வைதம்', தமிழில் 'அத்துவைதம்' எனவருதல் காண்க. ஈண்டு, 'த' இரட்டிக்கப்பெற்ற வழி 'து' என மாறுவதன் காரணம் பின்னர் விளக்கப்பெறும். இன்று வழங்கும் பேச்சு நடைத்தமிழில், ஈற்றெழுத்து வல்லினமாக இல்லாமல், மெல்லின, இடையினங்களாக இருப்பினும், இவ் 'உ'கரம் இணைந்தே ஒலிக்கப்பெறும். லகர ஈற்றுச்சொற்களின் பின், இலக்கியத் தமிழிலும், இவ் 'உ'கரம், ஒரோவழி இணைக்கப்படும். 'சொல்', 'சொல்லு' என வருதல் காண்க. உகரத்தை, இவ்வாறு கையாளும் முறையும், அது ஆளுவதன் பயனும், இந்தோ—ஐரோப்பிய மொழிகளில் காணப்பெறா. இம்முறை, சமஸ்கிருத மொழியினின்றும் மேற்கொள்ளப்பட்டதன்று. இது, அம்மொழி முறைக்கே முரண்பட்டதும் ஆம். இவ்வுகரம், "ஒலித்துணை உகரம்" என அழைக்கப்பெற்று, எழுதும்போது, இடையில் ஒரு சிறு கோடிட்டுப் பிரித்தே காட்டப்படும்.

(4) எ, ஏ; ஒ, ஓ :—திராவிட மொழிகள், 'எ'கர, 'ஒ'கரக்குற்றுயிர் ஒலிகளைப்பெற்றுப் பெரும் அளவில் மேற்கொள்கின்றன. அவற்றுள் பெரும்பாலான மொழிகள், 'எ'கர, 'ஒ'கரங்களின் நெடில்களாய, 'ஏ'கார, 'ஓ'கார ஒலிகளினின்றும், அக்குற்றுயிர் ஒலிகளைப் பிரித்து வேறறிய அவற்றிற்கெனத் தனி வடிவெழுத்துக்களைப் பெற்றுள்ளன.

'எ'கர, 'ஒ'கரக்குறில்கள், சமஸ்கிருதத்தில் கிடையா. ஒலி பற்றிய ஒழுங்கு முறைகளில், நுண்ணிய விதிகளையும் தவறாது பின்பற்றும் சமஸ்கிருதம் போன்ற மொழிகளில், இவ்விரு ஒலிகளும் இடம் பெறாதிருப்பது, எதிர்பாரா நிகழ்ச்சியன்று. சமஸ்கிருதமொழியில் அறவே இடம் பெறாத இவ்விரு ஒலிகளும், திராவிடமொழிகளில் பெற்றிருக்கும் இன்றியமையாப் பெருநிலை, திராவிடமொழிகள், சமஸ்கிருதமொழியின் தொடர்பற்ற தனிமொழிகளாகும் என்ற உண்மையை உறுதிசெய்யத் துணை புரிவதாகும். திராவிடமொழிகள் எல்லாவற்றிலும், சில இடங்களில், அதவும், 'அ', 'இ' போன்ற சுட்டடிப்படையாக வரும் இடத்தும், 'எ' போன்ற வினவடிப்படையாக வரும் இடத்தும், அக்குறில் உயிர்கள், அச்சொற்பொருளை வற்புறுத்தும் காரணம் குறித்து, நெடிலாக மாற்றப்படும். இவ்வாறு வருவனவும், விதிவிலக்காகவும், அருகியுமே வரும். 'எ'கர, 'ஒ'கரக் குறில்கள் வருமிடங்களில், அவற்றிற்கீடாக, 'ஏ'கார, 'ஓ'கார நெடில்கள் அமைந்த சொற்கள் வந்தால், அவ்விரு சொற்களுக்கும் இடையே தோன்றும் வேற்றுமை, ஒலி நயம் குறித்து வந்ததாக இல்லாமல், அச்சொற்களின் அடிப்படையையே—அச்சொற்களின் பொருளையே மாற்றியமைக்க வந்ததாகவேயுளது. 'தெள்' என்பது தெளிவைக் குறிக்க வந்தால், நெட்டெழுத்து வந்த 'தேள்', ஓர் உயிரைக் குறிக்க வரும்; 'கல்' என்பது, மண்ணிற்கு இனமான ஒரு பொருளைக் குறிக்க வந்தால், நெட்டெழுத்து வந்த 'கால்', உடல் உறுப்புக்களுள் ஒன்றைக்குறிக்க வரும்.

(5) ஐ:—சமஸ்கிருத ஈருயிர் இணையொலி எழுத்து, 'அ', 'இ'க்களின் இணைவால் தோன்றுவதைப் போலல்லாமல், இவ் 'ஐ'காரம், 'எ','இ'க்களின் இணைவால் தோன்றியதாம். பழைய திராவிட ஒலி 'அ'கர ஒலி, 'எ'கரமாக மாறி, அது மறுவலும், 'ஐ'காரமாக மாறும். தலையெனப் பொருள்படும் சொல், தெலுங்கு, மலையாளங்களில் 'தல' என்றும், கன்னடத்தில் 'தால' என்றும், தமிழில் 'தலை'

என்றும் வருதல் காண்க. பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் கொள்கைப்படி, மலையாளத்தில் வரும் இவ் 'அ'காரம், இயற்கையானதன்று; 'எஇ'க்களின் திரிபே. ஆகவே தான், மலையாள இரண்டாம் வேற்றுமை உருபாக, 'அ'காரம் வாராமல், 'எ'காரம் வருகிறது. தமிழில் ஒரு 'ஐ'காரத்தைத் தொடர்ந்து, மற்றோர் 'ஐ'காரம்வர, அவ் விரு 'ஐ'காரங்களுக்கிடையே, தனிமெய் வரின், முதல் 'ஐ', இயல்பாகவே நெடிலாகவும், குறுகிய வொன்றாகக் கொண்டு அவ்வாறே ஒலிக்கவும்படும். 'உடைமை' என்ற சொல்லில் வரும் 'டை' என்பதில் உள்ள 'ஐ', செய்யுட் களில் அலகிடுங்கால், குறுகிய ஒலியுடையதாகவே மதிப் பிடப்பெறும். இதுபோன்ற இடங்களில் வரும் 'ஐ'காரம், தன் பழைய ஒலியாகிய 'அ'கரம், அல்லது 'எ'கரத்தைப் போன்றே ஒலிக்கப்படும். 'உடைமை' என்பது சாதாரண மாக 'உடெமை' என்றும், 'உடமை' என்றும் ஒலிக்கப்படு தலை யுணர்க.

(6) ஔ:—இந்த ஈருயிர் இணையொலி எழுத்து, தமிழிலும் இடம் பெற்றுளது. ஆனால், இது, திராவிட இனத்தின் எம்மொழிக்கும் ஓர் உறுப்பாக இருந்ததில்லை; சமஸ்கிருத நெடுங்கணக்கைப் பார்த்து மேற்கொண்டதே யாம். பெரும்பாலும், தமிழில் வந்து வழங்கும் சமஸ் கிருதச் சொற்களை ஒலிக்கவே இது கையாளப்படுகிறது. அவ்வாறு வந்த அச் சமஸ்கிருதச் சொற்களும், இவ்வெழுத் தின் துணையில்லாமலே ஒலிக்கவும் கூடும். இவ்வொலியைத் தோற்றுவிக்கத் துணை புரியும் 'அ', 'உ' என்ற ஒலிகள் இரண்டும் தனித்தனியே பிரிந்து ஒலிக்க, அவ்விரு உயிர் ஒலிகளுக்கிடையே 'வ'கர உடம்படுமெய் வந்து நிற்க ஒலிக் கவும் பெறும்: சமஸ்கிருத 'சௌக்யம்', தமிழில் 'சவுக்கியம்' என ஒலிக்கப்பெறுதல் காண்க.

'அ'கரம் அல்லது அகரத்தொடு தொடர்புடைய 'ஐ'கார உயிர் தொடரவந்த சில மெய்யெழுத்துக்களின் முன்வரும் இ, ஈ, எ, ஏ, உ என்ற உயிரெழுத்துக்கள், அவை தனித்து வந்தக்கால் பெறும் ஒலியினும், வேறு

பட்ட ஒருவகைக் கூட்டொலியைப் பெறுகின்றன. இப் பண்பு, பிற திராவிட இனமொழி ஒன்றினும் காணப் பெறாத, தமிழிற்கே உரிய தனிப்பண்பாகும். 'அ'கரம் அல்லது 'ஐ'காரம் தொடரவந்த 'ட், ண், ர், ழ், ற், ல், ள்' இவற்றின் முன்வரும் 'இ'கரம், 'எ'கரவொலியோடொத்த ஓர் ஒலியைப் பெறுகின்றது. அவ்வாறே, 'அ'கரம் அல்லது 'ஐ'காரம் தொடரவந்த 'ட், ண், ழ், ள், ற்' என்ற மெய்யெழுத்துக்களின்முன் 'ஈ'காரம் வந்தால், அது, 'ஊ'காரவொலியோடொத்த ஓர் ஒலியைப்பெறும். 'ஊ' காரம் மட்டும் மாறாமலே நிற்கும். ஆனால், 'உ'கரம், 'இ, உ, எ' என்ற எழுத்துக்களுள் எதுவும் தன்னைத் தொடராதவழி, மேற்கூறிய ஏழு மெய்யெழுத்துக்கள் முன்னரே யல்லால், தனிமெய்கள் எல்லாவற்றின் முன் னும், 'ஒ'கரவொலி போன்று ஒலிக்கும். தெலுங்கில், அத்தகைய சொற்களை எழுதும்போது, பொதுவாக, ஒகரம் கையாளப்படுகிறது. 'டகர ணகரங்'களின் முன் வந்த 'எ'கரம், தனக்கே உரிய தன் ஒலியை இழந்து, தனக்குப் பின்வரும் மெய்யெழுத்து இரட்டிக்கப்பட்டால், அந்நிலையில் எவ்வாறு ஒலிக்கப்பெறுமோ, அவ்வாறு ஒலிக்கப்படும். அதுபோலும் இடங்களில், 'ஏ'காரமும், 'ஓ'கார ஒலிபோன்ற ஓர் ஒலியைப்பெறும். 'எ'கரம், 'ஒ'கரமாக மாறும் இப்பண்பு, துளுமொழியின் தனிச் சிறப்பாகும். 'வேண்டும்', 'வெள்ளி' என்ற தமிழ்ச் சொற்கள், துளுமொழியில் முறையே 'போட்', 'பொள்ளி' என ஆதலறிக. திராவிடமொழியில், குறிப் பிட்ட சில இடங்களில், உயிரெழுத்துக்கள் சிலவற்றின் ஒலி, இவ்வாறு மாறுவது, அவ்வுயிரெழுத்துக்களை யடுத்து வரும் மெய்யெழுத்துக்களின் ஆற்றலினால் ஆவதன்று. இம்மாற்றம், திராவிடமொழியின் ஓர் உயிர், மற்றோர் உயிரைத் தனக்கு இனமாக மாற்றிக்கொள்ளும் ஆற்ற லையே விளக்குவதாகும். ஈண்டுக் காட்டிய எல்லா மாற்றங் களிலும், 'அ'கரமும், அதற்கு இனமான 'ஐ'காரமும் தமக்குமுன் நிற்கும் அசைகளிலும் தாம் புகுந்து தம் ஆற் றலை நிலைநிறுத்துவதையே நாம் கண்டோம். 'இ, உ, எ'

என்ற குறில் உயிர்களைத் தொடர்ந்து, முறையே, 'இ, உ, எ' என்ற உயிர்களே வந்தவிடத்தும், அவ் 'இ, உ, எ'க்கள் தம் இயற்கையொலியையே பெற்றிருப்பது, சிறப்பாகக் குறிப்பிடத்தக்க பெருநிகழ்ச்சியாகும். வந்து அடைய என்ற பொருளில், 'உற' என எழுதப்படும் எச்சச்சொல், 'ஒற' என்று ஒலிக்கப்படும். ஆனால், 'உறு' என எழுதப்படும் ஏவற்பொருள் தரும் சொல், ஒலிப்புழியும், 'உறு' என்றே ஒலிக்கப்படும். இம்முறை, சமஸ்கிருத மொழியில் காணக்கூடிய எம்முறையோடும் ஒத்துவாராத ஒரு தனிமுறையாகும். இது 'ஓரின மாக்கல்' என்ற சித்திய மொழி முறையோடு ஓர் அளவு ஒத்துளது.

ன், ண், ர், ழ், ல், ள் இவற்றை ஈறாகவுடைய சொற்களின் ஈற்றசையில் நிற்கும் 'அ'காரவுயிர், 'எ'கரம் போன்று ஒலிக்கவும்பெறும். 'அவர்' எனும் தமிழ்ச்சொல், 'அவெர்' என ஒலிக்கப்படுதல் காண்க. இம்மாற்றம், சமஸ்கிருத இனமொழிகள் சிலவற்றுள் காணப்படும் ஒரு சொல்லின் ஈற்றசையிலும், ஈற்றிற்கு முன்னிற்கும் அசையிலும் வரும் கன உயிர் ஒலிகளை மென்மையவாக்கும் மாற்றத்தோடு ஒத்துளது.

## உ. மெய்யெழுத்துக்கள்

தமிழிலக்கண ஆசிரியர்கள், மெய்யெழுத்துக்களை மூன்று வகையாகப் பிரிப்பர். க், ச், ட், த், ப், ற் ஆகிய வல்லொலி யெழுத்துக்களை வல்லினம் எனவும், ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய மூக்கெழுத்துக்களை மெல்லினம் எனவும், ய், ர், ல், வ், ழ், ள் ஆகிய அரையுயிர் எழுத்துக்களை இடையினம் எனவும் பெயரிட்டழைப்பர்.

இம் முறைவைப்பில், முன்னே குறிப்பிட்டவாறு, வல்லொலி யெழுத்துக்களோடு தொடர்புடைய மெல்லொலி யெழுத்துக்கள் அறவே கைவிடப்பட்டுள்ளன. கவின் மெல்லொலி க; சவின் மெல்லொலி ச; டவின் மெல்லொலி ட; தவின் மெல்லொலி த; பவின் மெல்

லொலி ப. வடக்கே வாழும் திராவிடமொழிகள், தேவநாகரி நெடுங்கணக்கைப் பார்த்து, தாமும், வல்லொலி-மெய், மெல்லொலிமெய்களை அறிவிக்க, தனித்தனி எழுத்துக்களை மேற்கொண்டுள்ளன. ஆனால், தமிழிலும், மலையாளத்திலும் அம்மொழிகளில் நிலவும், வல்லொலி வல்லெழுத்து, மெல்லொலி வல்லெழுத்தாகவும், மெல் லொலி வல்லெழுத்து, வல்லொலி வல்லெழுத்தாகவும் மாற்றப்படும் ஓர் அரிய ஒலி முறைப்படி, அவ்விரு ஒலிகளை யும் குறிக்க, ஒரேவகையான மெய்யெழுத்துக்களே கையாளப்படும். அவ்விருவகை எழுத்துக்களின் வேற் றுமை, ஒலிக்கும்பொழுதுமட்டுமே வெளியாம். மெய் யெழுத்துக்கள் பற்றிய ஆராய்ச்சியினைத் தொடர்ந்து மேற் கொள்வதன்முன், வல்லொலி மெல்லொலியாகவும், மெல் லொலி வல்லொலியாகவும் மாறும் அம்முறைபற்றிய ஆராய்ச்சியை ஈண்டு மேற்கோடல் நன்று.

வல்லொலிவல்லின, மெல்லொலிவல்லின மாற்றங்கள் :—

தமிழ் நெடுங்கணக்கு, தேவநாகரி மெய்யெழுத்து வரிசையாகிய வர்க்கம் ஒவ்வொன்றிலும் முதற்கண் உள்ள, ஹகரவொலியிணையா வல்லொலி யெழுத்தையும், ஈற்றில் உள்ள மூக்கெழுத்தையுமே பெற்றுளது என்பதை முன்னரே கண்டோம். வல்லொலி வல்லெழுத்தையும், மெல்லொலி வல்லெழுத்தையும் குறிக்க, தமிழ், தனித்தனி வடிவெழுத்துக்களைப் பெறாது, அவ்விரு எழுத்துக்களையும் குறிக்க, ஒரே வடிவெழுத்தையே பெற்றுளது என்பதை யும் முன்னரே கண்டோம். இம்முறை, அம்மொழியின் வடிவெழுத்தைமட்டும் பற்றியதன்று ; இஃது, அம்மொழி யுடன் பிறந்த, அம்மொழிக்கே உரிய ஓர் ஒலிமுறையாகும்.

இம்முறை, எல்லாத் திராவிடமொழிகளிலும் உளது என்பதை அறிவிக்கும் சுவடுகள், அம்மொழி ஒவ்வொன் றிலும் உள என்றாலும், இம்முறை, முறையாகவும், முழு வளர்ச்சிபெற்றும் இருப்பது, தமிழிலும், மலையாளத் திலுமேயாம். அவ் விருமொழிகளிலும் வழங்கும் அம்

முறையாமாறு :—முதல், மூன்று, நான்கு, ஐந்து ஆகிய வர்க்கங்களில், முதற்கண் நிற்கும் க், ட், த், ப் என்ற ஹகர வொலி இணையாவல்லெழுத்துக்கள் நான்கும், சொற்களின் மொழி முதல் எழுத்துக்களாக வந்தவிடத்தும், இரட்டித்து வந்தவிடத்தும் க், ட், த், ப் என வல்லொலி வல்லெழுத்துக்களாகவே ஒலிக்கப்பெறும். அதே மெய்யெழுத்துக்கள், சொற்களின் இடையே தனித்துவரின், 'க், ட், த், ப்' என மெல்லொலி வல்லெழுத்துக்களாக ஒலிக்கப்பெறும். மெல்லொலி வல்லெழுத்து, மொழிமுதல் எழுத்தாக என்றும் வாராது. அவ்வாறே, வல்லொலி வல்லெழுத்து, சொல்லின் இடையே இரட்டித்தன்றித் தனியாக வாராது. இம்முறை மாற்றவொண்ணா முறையாக விளங்குவதாலும், தவறாது உறுதியோடு பின்பற்றப்படுவதாலும், இம்முறைக்கு, முற்றும் முரணானமுறை நிலவும் சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளினின்றும் சொற்கள் கடன்வாங்கப் பெற்றால், அச்சொற்களில் உள்ள வல்லொலிவல்லெழுத்து, மெல்லொலிவல்லெழுத்தாகவும், மெல்லொலிவல்லெழுத்து, வல்லொலிவல்லெழுத்தாகவும், அவை நிற்கும் இடங்களுக்கேற்ப மாற்றியே ஒலிக்கப்பெறும் சமஸ்கிருத 'தந்த', தமிழில் 'தந்தம்' எனவும், சமஸ்கிருத 'பாக்ய', தமிழில் 'பாக்கியம்' எனவும் வருதல் காண்க. இம்முறை, தனிச் சொற்களிடையேமட்டுமல்லாமல், இருசொற்கள் புணர்ந்த தொகைச்சொற்களிடத்தும் மேற்கொள்ளப்படும். இருசொற்கள் புணர்ந்தவழி, வருமொழி முதற்கண் நிற்கும் மெய்யெழுத்து, அச்சொல் புணராது தனித்து நிற்புழி, வல்லொலி வல்லெழுத்தாக இருப்பினும், நிலைமொழியோடு புணர்ந்து இடையெழுத்தாம் தன்மையுற்றுவிடவே, மெல்லொலி வல்லெழுத்தாக மாற்றி ஒலிக்கப்பெறும். தெலுங்கில் இவ்வேறுபாடு, வேறு வடிவெழுத்துக்கொடுத்து எழுதுவதன்மூலமாகவே காட்டப்படுகிறது. அண்ணனும், தம்பியும் என்ற பொருளில் 'அன்னதம்முலு' என வர வேண்டியசொல், புணர்மொழிக்கண், 'அன்னதம்முலு' என்றே எழுதப்படும். அவ்வாறே, அடிபட என்ற பொருளில், 'கொட்டபடு' என வரவேண்டியசொல், 'கொட்டபடு'

என்றே வரும். ஆனால், தமிழிலும், பொதுவாக மலையாளத்திலும், இவ்வேறுபாடு, அச்சொற்களை ஒலிக்கும்போது மட்டுமே காணப்படும். இம்முறை, தெலுங்குமொழி எல்லாப் புணர்ச்சியிலும் கொள்ளப்படும். ஆனால், தமிழ்மொழிக்கண், வேற்றுமைப்பொருள்தோன்றப் புணரும் இருசொற் புணர்ச்சிக்கண், வருமொழி முதலில் வரும் வல்லொலி வல்லெழுத்து, மெல்லொலி வல்லெழுத்தாக மாறுவதற்குப் பதிலாக இரட்டிக்கப்படும். கோட்ட, படு என்ற இவ் விருசொற்புணர்ச்சி, தெலுங்கில் 'கோட்ட படு' என வருமெனின், தமிழில், 'கோட்டப்படு' என இரட்டிக்கப்படுதல் காண்க. எண்ணுப்பொருட்கண் வரும் இரு சொற்கள், இடையில் எண்ணும்மைபெறுமல், 'கபிலபரணர்' என்பதுபோல எண்ணப்பட்டு, இருசொற்களுக்கும் ஒத்த பன்மை விகுதிகொண்டு முடியும். உம்மைத் தொகைக்கண் மட்டும், தமிழ், தெலுங்கோடு ஒத்துநிற்கும்.

இரண்டாம் வர்க்கத்தின் முதலெழுத்தாகிய 'ச'விற்கும் இதுபோன்ற ஒருமுறை மேற்கொள்ளப்படும். அவ்வெழுத்து, தனித்து வந்துழி, மிகவும் மென்மையதாக்கப் பெற்று, 'ஷ, ச்' இவ்விரு எழுத்துக்களின் ஒலிகளுக்கும் இடைப்பட்ட ஓர் ஒலியுடையதாக ஒலிக்கப்பெறும். அவ்வொலி, அவ்வெழுத்து, சொல்லுக்கிடையே வந்துழியும், தனித்து நிற்புழியும் மாறுவதில்லை. ஆனால், அதுவே இரட்டிக்கப்பட்டால் 'ச்' என்றே ஒலிக்கப்பெறும். இவ்வெழுத்துப்பற்றிய ஒலிமுறையும், முன்னர்க் கூறிய முறை போன்றதே யெனினும், செயற்படுங்கால், சிறு மாறுபாடு நிகழ்கிறது. இவ்வெழுத்து, சொல்லின் முதற்கண் நிற்பினும், அன்றி இடையில்நிற்பினும் மெல்லொலி வல்லெழுத்தைப் போன்று, 'ச' என ஒலிக்கப்பெறுவதே அம் மாறுபாடாம். முறைப்படி, அவ்வெழுத்து, மொழிமுதல் எழுத்தாக வரின், வல்லொலி வல்லெழுத்தாக, 'ச' என ஒலிக்கப்படல் வேண்டும். நாட்டுப்புறத்தார் வழங்கும் கொச்சைத் தமிழில், சொல்லின் முதற்கண்வரும் இவ்வெழுத்து, 'ச' என்றே இன்றும் ஒலிக்கப்படுதல் குறிப்பிடத்தக்கதாம்.

மலையாளத்திலும், தெலுங்கிலும், அது 'ச' என்றே, எழுதவும், ஒலிக்கவும்படும். இதுபோன்ற ஒருமுறை, 'ற'கரம் பற்றியும் நிலவுகிறது. அது, தனித்துவந்தால் 'ற்' எனவும், இரண்டாக இணைந்துவந்தால் 'த்த்ர்' எனவும் ஒலிக்கப் படும்.

ஒரே வடிவெழுத்து, ஓரிடத்தில் 'க' வாகவும், மற்றோரிடத்தில் 'க' வாகவும் (ஓரிடத்தில் 'ட' வாகவும், மற்றோரிடத்தில் 'ட' வாகவும்; ஓரிடத்தில் 'த' வாகவும், மற்றோரிடத்தில் 'த' வாகவும்; ஓரிடத்தில் 'ப' வாகவும், மற்றோரிடத்தில் 'ப' வாகவும்) ஒலித்தலை விரும்பும் இத் தமிழ் முறை, அம்மொழியில் அருகிக்காணும் சிறப்பியல்புமன்று; சூழ்நிலைக்கேற்பச் சிறிது சிறிதாகத் தோன்றி வளர்ந்தது மன்று; அம்மொழி யிலக்கண ஆசிரியர்களால், மொழிப் பண்பாட்டிற்கெனப் பிற்காலத்தே மேற்கொள்ளப்பட்டது மன்று; அஃது, அம்மொழி தோன்றியகாலத்தே உடன் தோன்றி அம்மொழியினின்றும் பிரிக்க இயலாவாறு ஒன்றிநிற்கும் ஒரு சிறப்பியல்பாம்.

கிறிஸ்து ஆண்டுத் தோற்றத்திற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னர், முதன்முதலாகப் பார்ப்பனர்கள், இங்குக் குடியேறிய காலத்தில், தமிழர்கள், அவர்கள் மொழியாகிய பழைய சமஸ்கிருதத்தினின்றும், வடிவெழுத்துக்களைக் கடனாகப்பெற்றுத் தம்மொழியை எழுத்துவடிவில் அமைத்தனர் என நான் கருதுகின்றேன்; எனினும், வல்லொலி வல்லெழுத்தும், மெல்லொலி வல்லெழுத்தும் ஒன்று பிறிதாக மாறும் இத் திராவிட ஒலிமுறை யமையும்வகையில், தமிழ்நெடுங்கணக்கு வரிசை செய்யப்பட்டது அப் பழங் காலத்திலேயே நிகழ்ந்துவிட்டது. தமிழ்நெடுங்கணக்கு, ஒரே வடிவெழுத்து, இவ் விருவகை வல்லொலிகளையும் ஒலிக்கப் போதும் என்று கருதி, சமஸ்கிருத மெல்லொலி வல்லெழுத்துக்களை மேற்கொள்ளாது, அதன் வல்லொலி வல்லெழுத்துக்களைமட்டுமே மேற்கொண்டுளது. திராவிட மொழிகளுள் மிகப்பழைய மொழியாகிய தமிழ்மொழி வாயிலாக வெளிப்பட்டுத் தோன்றும் இத் திராவிட ஒலி-

முறைகள், மிகப் பழையகாலத்திலிருந்தே, சமஸ்கிருத ஒலி முறையோடு பெரிதும் மாறுபட்டு வந்துளது என்ற உண்மையை, இந்நிகழ்ச்சிகள் நன்கு நிலைநாட்டுகின்றன.

'க், த், ப்' என்ற இம் மெய்யெழுத்துக்கள் குறித்துத் தமிழ்மொழி மேற்கொள்ளும் முறைபோன்ற ஒருமுறை, ஏப்ரு மொழியிலும் உளது என, அம்மொழி, மொழி நூலாசிரியர்கள் கூறுவராயினும், இந்தோ-ஐரோப்பிய மொழி எதிலும், வல்லொலி வல்லெழுத்தும், மெல்லொலி வல்லெழுத்தும் ஒன்று பிறிதாக மாறுதல் அடைவதை நாம் கண்டதில்லை. ஏப்ருமொழி மெய்யெழுத்துகள், 'பெகத்', 'கெப்ஹத்' என அவை நிற்கும் இடத்திற்கேற்ப இருவகையாக ஒலிக்கப்பெறும் அம் மெய்யெழுத்துக்களுள் யாதேனும் ஒன்று, ஒரு சொல்லின் முதலிலோ, அல்லது ஓர் அசையின் முதலிலோ வந்தால், அது வல்லொலி வல்லெழுத்துப் போலவே ஒலிக்கப்பெறும். அவ்வெழுத்து ஹகர வொலியிணைந்த எழுத்தாயின், அது, தான் இயற்கையாகப் பெற்றுள்ள அவ் ஹகரவொலியை இழந்தே ஒலிக்கப் பெறும். இதைக்குறிக்க, அவ்வெழுத்தினுள் தகேஷ் என வழங்கப்பெறும் ஒரு சிறுபுள்ளி பொறிக்கப்படும். அம் மெய்யெழுத்துக்கள், ஏனையிடங்களில் வந்தால், அவ்விடங்களில், அவையெல்லாம், மெல்லொலி வல்லெழுத்துக்கள் போன்றே ஒலிக்கப்பெறும். அவற்றுள் இரண்டுமட்டும், ஹகரவொலி இணைய, 'ப்ஹ' எனவும், 'த்ஹ' எனவும் ஒலிக்கப்பெறும். இம்முறை சிற்சிலவகையில் தமிழ்முறையோடு ஒத்துளது. ஆனல், தமிழ்முறைக்கும், சித்திய இனமொழிகள் சிலவற்றில் வழங்கும் முறைக்குமிடையே நிலவுவதாகத் தோன்றும் ஒப்புமைகள், ஒருதன்மைய வென எடுத்துக்காட்டத்தக்கனவாம். பின்னிஷ், லாப்பிஷ் மொழிகளில், வல்லொலி வல்லெழுத்திற்கும், மெல்லொலி வல்லெழுத்திற்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடுளது. இவ் விருமொழிகளிலும், மொழி முதலாகவோ, அசை முதலாகவோ, மெல்லொலி வல்லெழுத்து என்றும் வாராது. ஆனல், மறைந்து மாண்புற்ற மிகப்பழைய சித்திய

மொழிகளில் - பெகிஸ்டன் இடத்துக் கல்வெட்டுக்களில் கண்ட சித்தியமொழிகளில் - தமிழில் இருப்பதுபோன்ற, வல்லொலி வல்லெழுத்தும், மெல்லொலி வல்லெழுத்தும் ஒன்று பிறிதாக மாறும்முறைகள் இருப்பதாகத் திருவாளர் நோரிஸ் என்பார் உறுதி கூறுகின்றார், (Journal of the Royal Asiatic Society, For 1853.) அம்மொழியில், சொல்லின் இடையில்நிற்கும் ஒரே மெய்யெழுத்து, தனித்துநின்றால் மெல்லொலி வல்லெழுத்தாகவும், இரட்டிக்கப்பெற்றால் வல்லொலி வல்லெழுத்தாகவும் ஒலிக்கப் பெறும் என அவர் கூறுகின்றார்.

திராவிட மெய்யெழுத்துக்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியினை இனி மேற்கொள்வோமாக.

(1) மிடற்றெழுத்தும் அதற்கின மூக்கினமும் க், க்: ங்:—

இம்மெய்யெழுத்துக்கள், சமஸ்கிருதத்தில் ஒலிக்கப் படுவதுபோன்றே, திராவிடமொழிகளிலும் ஒலிக்கப்பெறு கின்றன. ஒரே வடிவெழுத்தால் குறிப்பிடப்பெறும் 'ந'வின் மெல்லொலியாகிய 'க', தமிழ், மலையாள மொழி களில், அம்மொழிக்கே உரிய ஒருவகை மென்மைப் பண்போடு ஒலிக்கப்படும். இதன் ஒலி, ஐரிஷ்மொழியில் வரும் 'க்ஹ'வின் ஒலிபோன்றதாகும். பெரும்பாலும், இது, பிறமொழிகளில் வரும் 'ஹ'கரவொலியை வெளி யிடவே பயன்படுத்தப்பெறும். 'மஹா' என்ற சமஸ்கிருத அடைமொழி, தமிழில், 'மகா' என்று எழுதப்படுதல் காண்க. 'ஹ'கரவொலி, அதற்குரிய பெருமூச்சு சிறிது குறைய ஒலிக்கப்பெறின், எத்தகைய ஒலியைப்பெறுமோ அவ்வொலியோடொத்தது எனக் கருதப்படுமளவு இக் 'க'வின் ஒலி மென்மையுடையதாகும்.

(2) அண்ண எழுத்தும், அதற்கின மூக்கினமும்: ச், ஜ், ஞ்:—

சமஸ்கிருத மொழியில் வரும் 'ஸ்', 'ஷ்' போன்ற இஸ்ஸொலி யெழுத்துக்களைத் தமிழ் மொழி ஏற்றுக்கொள் வதில்லை யென்பது முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றிற்குப் பதிலாக, 'ச' என்ற எழுத்தைத் தமிழ் மொழி பெற்றுளது. இவ்வெழுத்து 'ஸிவன்' என்ற சொல்லில் வரும 'ஸ' போலவும், இஸ்ஸொலியும், ஹகர வொலியும் எவ்வளவு குறைந்தொலிக்க இயலுமோ அவ் வளவு குறைந்தொலிக்க ஒலிக்கும் 'ஷ' போலவும் ஒலிக்கப் பெறும். உண்மையில், இவ்வெழுத்தை அண்ண எழுத் தாகக் கொள்ளலாமே யல்லால், இஸ்ஸொலி எழுத்தாகக் கொள்ளுதல் பொருந்தாது. அவ்வெழுத்து இரட்டிக்கப் பட்டால், எது என்ற பொருளில் வரும் 'வுச்' என்ற ஆங் கிலச் சொல்லின் ஈற்றில் வரும் ஒலியோடொத்து, சமஸ் கிருத அண்ண எழுத்தாகிய 'ச' கரவொலியைத் தட்டாது பெறுகிறது. தெலுங்கு மொழியில், தனித்து நிற்பினும், இரட்டிப்பினும், அவ்வெழுத்து ச என்ற ஒலியுடையதா கவே ஒலிக்கப்பெறும். இத்தகைய ஒலிப்பு முறை, தமிழ் மொழிக்கண்ணும், கல்லாதார் வழங்கும் கொச்சைத் தமிழில் காணப்படுகிறது. அவர்கள், 'செய்' என ஒலிக்க வேண்டிய சொல்லைத் தெலுங்கில் ஒலிப்பதுபோல், 'ட்செய்' என ஒலிப்பது காண்க. கல்லாத தாழ் வகுப்புத் தமிழ ரிடைக் கேட்கப்படும் இவ்வொலியே, அவ்வெழுத்து பண்டு பெற்றிருந்த ஒலியேயாதல் வேண்டும். அவ்வெழுத்து, இன்று பெற்றிருக்கும் 'ச' என்ற மென்மையொலி, உயர் வகுப்பு மக்கள் மேற்கொண்ட திருந்திய நாகரிக ஒலியா தல் வேண்டும். தமிழ் நெடுங்கணக்கு வரிசை செய்யப் பெற்று, 'ச' கரவொலி, 'ச' கரவொலியோடொத்த வொலி யாக ஏற்றுக்கொள்ளப்பட்ட காலத்திலும், அதற்கும் பிற் பட்ட காலமாகிய, 'சோழ மண்டலம்' என்பதைச் 'சோர மண்டல்' எனப் போர்த்துகீஸியரும், 'சூத்ர' என்பதைத் 'துஸூத்திர' என ஸைகென்பால்க் பாதிரியாரும் எழுதிய காலமாகிய, ஐரோப்பியர்கள் இந்தியாவிற்கு வந்த காலத் திற்கும் பிற்பட்ட காலத்திலும், வலிந்து ஒலிக்கப்பெற்ற ஒலியே, அண்ண எழுத்தின் ஒலியாக வழங்கி வந்துளது. இவ்வொலியைக் குறிக்கவரும் வடிவெழுத்து, தெலுங்கு மொழியில் உள்ளவாறு 'ச' என்றே எழுதப்பெறல் வேண்டும். எனினும், அவ்வெழுத்துத் தனித்துழி, 'ச'

என்றே ஒலிக்கப்படுவதால், அதைச் 'ச' என்று எழுதினல், அது, தமிழ் கற்பார்க்குக் குழப்பத்தை அளிக்குமாகவே, இனிவரும் பதிப்புக்களில் அவ்வெழுத்தை 'ச' என்று குறிப்பதையே நான் விரும்புகின்றேன்.

இவ்வரிசையில், இரண்டாவதாக நிற்கும் ஹகர வொலியிணையா 'ஜ' என்ற மெய்யெழுத்து, செந்தமிழ் நடையில் வழங்காது. ஆனல், தெலுங்கில், அவ்வெழுத்து எழுதவும், ஒலிக்கவும் படுகிறது. கொச்சைத் தமிழிலும், ஒரோவழி, 'ச', 'ஜ'வென ஒலிக்கப்பெறும். 'ஜ' வொலியைக்கொண்ட சமஸ்கிருதச் சொற்கள், தமிழில் வந்தால், அவ்விடங்களில், அவ்வொலி ஏற்றுக்கொள்ளவும்படும். எனினும், அவ்வொலிக்கு ஈடாக, 'ச' அல்லது 'ச' என்ற தமிழ் ஒலியே பொதுவாகக் கையாளப்பெறும்.

இம் மெய்யெழுத்துக்களின் இனமூக்கெழுத்தாய 'ஞ' கரம், சமஸ்கிருதத்தில் ஒலிப்பது போன்றே, எல்லாத் திராவிடமொழிகளிலும் ஒலிக்கப்பெறும். இவ்வொலியைக் குறிக்கும் எழுத்து ஆங்கிலத்தில் 'ñ, nj, ñy' எனப் பல வாறு எழுதப்படும். அவ்வாறு எழுதப்படும அவை இணையெழுத்தாகவும், மயக்கம்தருவனவாகவும் இருத்தலின், இவ்வொலியைக் குறிக்க, 'ñ' என்ற குறியைக்கொள்வதே நலம் என நான் எண்ணுகின்றேன். நாவெழுத்தாகிய 'ண' கரம் 'ṇ' எனவும், பல்லெழுத்தாகிய நகரம், வேற்றுமைக் குறிகள் ஒன்றும் இன்றி, 'n' எனவும் எழுதப்பெறும். தமிழ், மொழிமுதலாக 'ந'கரத்தை மேற்கொள்ளும் இடங்களிலெல்லாம், மலையாளம், 'ஞ'கரத்தை மேற்கொள்வதைப் பல இடங்களிலும் காண்கிருேம. தமிழ் 'நான்', மலையாளத்தில் 'ஞான்' என ஆம். தமிழ் 'ந'கரமும், மலையாள 'ஞ'கரமும, பழைய 'ய'கரத்தினின்றும் பிறந்தனவே என்பது, 'நான்', 'ஞான்' என்ற தன்மை ஒருமைப் பெயர்கள், 'யான்' என்ற சொல்லினின்றும் பிறந்தனவே என்பதை விளக்கிக்காட்டும் 'இடப்பெயர்கள்' என்ற தலைப்பின்கீழ் விளக்கப்படும். தமிழ் 'நண்டு', மலையாளத்தில்

'ஞண்டு' எனவும், கன்னடத்தில், 'யண்ட்ரி' எனவும் வருதல், ஈண்டு நோக்கத்தக்கதாம்.

சமஸ்கிருதத்திலோ, அல்லது வடஇந்திய மொழிகளிலோ காணக்கூடாததும், தெலுங்கு, மராட்டி மொழிகளில் மட்டுமே காணக்கூடியதுமாகிய 'ச'வும், 'ஜ'வும் மிக மிக நுண்ணிய ஒலியாக ஒலிக்கப்பெறும் ஒருமுறை தெலுங்கு மொழியில் நிலவுவது, ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். 'இ, ஈ, எ, ஏ, ஐ' இவ்வெழுத்துக்கள் நீங்க உள்ள எல்லா உயிரெழுத்துக்கள் முன்னும், 'ச', 'த்ஸ்' என்றும், 'ஜ', 'த்ஸ்ஸ்' என்றும் ஒலிக்கப்பெறும். விலக்கப்பட்ட பிற உயிரெழுத்துக்களின்முன், அவ்வெழுத்துக்களின் இயற்கையொலியாகிய 'ச', 'ஜ' என்பனவே நிலைத்து நிற்கும். இவ்வேற்று ஒலிகள் மராத்தி மொழியினின்றும், தெலுங்கில் வந்து புகுந்ததா, அல்லது, தெலுங்கினின்றும் மராத்தி ஏற்றுக்கொண்டதா என்பதைப் பற்றி முடிவுகூற மிகவும் தயங்குகின்றேன். இவ்விருமொழிகளும், ஒன்றுபட்டு நிற்பது, இவ்வொரு தன்மையில் மட்டுமன்று. சிறப்பாக 'ர'கர, 'ல'கர, எழுத்துக்கள் பற்றிய வரையில் 'ஸ்ஸ்ஹ' என்ற ஓர் ஒலி, துதமொழியில் பெருவழக்குடைத்து.

(3) நாவெழுத்தும் அதற்கின மூக்கினமும்: ட், ட், ண்:—

இம்மெய்யெழுத்துக்கள், திராவிடமொழியில் ஒலிக்கும் முறை, சமஸ்கிருத மொழியில், அவ்வெழுத்துக்கள் ஒலிக்கும் முறையினின்றும் பெரும் அளவில் மாறுபடவில்லை. நாவெழுததுக்களுள், டகரம் வல்லொலி வல்லெழுத்தாயினும், ஏனைய வல்லொலி வல்லெழுத்துக்கள், மொழி முதல் ஆதல்போன்று, இது, மொழிமுதற்கண் இடம்பெறுதல் இல்லை. ஆகவே, இவ்வெழுத்தை முதலாகவுடைய சமஸ்கிருதச் சொற்கள் தமிழில் வந்து வழங்கினால், அம்மொழி முதல் 'ட'கரத்திற்குமுன், ஒலித்துணையாக 'இ'கர உயிர் ஒன்று இணைக்கப்பெறும். இவ்வாறு 'ட'கரம், ஓர் எழுத்தைத் தனக்கு முன்னே பெற்றுவிடுவதால், அது மொழி முதல் எழுத்தாந் தன்மையை இழந்துவிடுகிறது; மொழி

முதலாம் தன்மையை இழந்துவிடவே, அது வல்லொலி வல்லெழுத்தாகவும் ஒலிப்பதில்லை. அதனால், அது, அவ் விடங்களில், தமிழ் ஒலிமுறைப்படி, மெல்லொலி வல்லெழுத்தாகி, 'ட'வெனும் ஒலியுடையதாகிறது. ஆகவே, அவ் வெழுத்தின் வல்லொலி, 'ட்'காரம், இரட்டிக்கப்பட்டுழி யல்லால், பிற யாண்டும் கேட்கப்படுவதில்லை. ஏனைய திராவிட மொழிகளில், சமஸ்கிருதத்தில் உள்ளவாறு, டகர ஒலி, அவ்வெழுத்துத் தனியாக வந்துழியும் ஒலிக்கப் படுகிறது. 'ட'கர ஒலியை, 'ண'கர ஒலியோடு இணைக்க மறுப்பதினாலும், 'ண'கர ஒலி இணைய வந்துழி, 'ட'கர ஒலியை, 'ட'கர ஒலியாக மாற்றிவிடுவதினாலும், தமிழ், தன் இன ஏனைய மொழிகளோடு பெரிதும் மாறுபடுகிறது. மூக்கெழுத்துக்கள், மெல்லொலி வல்லெழுத்துக்களோடு இணைதலல்லது, வல்லொலி வல்லெழுத்துக்களோடு இணை தல் இயலாது என்ற தமிழ் ஒலி முறைப்படியே, இச்சிறப் பியல்பு அமைந்துளது. இவ்வொலி முறையின் விளைவாக, தெலுங்கு கன்னடமொழிகளில் ஏற்புடையவாகத் தோன் றும் 'ண்ட்', 'ந்த்', 'ம்ப்' என்ற, மெல்லினமும், வல்லொலி வல்லினமும் இணைந்த இணைகள் தமிழில் ஏலாதனவாம. இவ்விணைகளுக்குப் பதிலாக, தமிழ், 'ண்ட்', 'ந்த்', 'ம்ப்' என்ற மெல்லினமும், மெல்லொலி வல்லினமும் இணைந்த இணைகளை மேற்கொள்கிறது. இம்முறை, 'க'கர, 'ச'கரங் களுக்கும் கொள்ளப்படும். அவையும், தம் இன மூக் கெழுத்துக்களோடு இணையும்பொழுது முறையே, 'க'கர மாகவும், 'ஜ'கரமாகவும் மாற்றப்படும். சமஸ்கிருத 'மண்டப', தமிழில் 'மண்டபம்' எனவும், இறுதி என்ற பொருள்தரும் 'அந்த' என்ற சமஸ்கிருதச்சொல், தமிழில் 'அந்தம்' எனவும் மாற்றப்படும். தமிழிற்கும், ஏனைய திராவிடமொழிகளுக்கும் உள்ள இவ்வேற்றுமை, தமிழ், ஏனைய திராவிடமொழிகளைப் போலல்லாமல், சமஸ்கிருத ஆட்சிக்கு அடங்கிக் கட்டுப்படாமல், பெரிதும் விலகி நின்று, தனித்து வளர்ந்ததன் விளைவால் வந்ததாம். மெல் லொலி வல்லெழுத்துக்களோடேயே மூக்கெழுத்து இணை யும் என்ற இம்முறை, பின்னிஷ்முறைகளிலும் உளது.

பின்னிஷ்காரர்களும், தமிழர்களும் பெற்றிருக்கும் ஒலி யுறுப்புக்களின் மென்மையே இம்முறைக்குக் காரணம் போலும்.

(4) பல்லெழுத்தும் அதற்கின மூக்கினமும்: த், த், ந்:—

இவ்வின எழுத்துக்கள், சமஸ்கிருதத்தில் பெற்றிருக்கும் ஒலியைப் போன்றே, திராவிடமொழிகளிலும் பெற்றிருக்கின்றன. தமிழ், மலையாள மொழிகளில் 'த'கரம், இரண்டு உயிரொலிகளுக்கிடையில் வந்துழி, ஒருவகை நுண்ணிய மெல்லிய ஒலியைப் பெறுவதொன்றே, சமஸ்கிருத மொழிக்கும், இவ்வின மொழிகளுக்கும் இடையில் நிற்கும் குறிப்பிடத்தக்க மாறுபாடாம். இரு உயிர்களுக்கிடையே வரும் 'த'கரம், 'த'கரம் என ஒலிக்கப்பெறுது, ஆங்கிலத்தில், அந்த என்ற சுட்டுப் பொருளில் வரும் 'தட்' என்ற சொல்லில் வரும் 'த'கரவொலியைப் பெறுகிறது. தமிழில், 'த'கரம், தன் இன மூக்கெழுத்தோடு இணைந்த வழியே, 'த'கரத்தின் மெல்லொலி வல்லெழுத்தாய 'த'கரம் என ஒலிக்கப்பெறும். ஈருயிரிடை வரும் 'த'கரவொலியினும், இவ்வாறு தன் இன மூக்கெழுத்தோடு இணைந்த வழி வரும் 'த'கரவொலியே இயற்கையும், எளிமையுமுடைத்து இப்புதுமை யொலியாகிய, ஈருயிரிடை வரும் 'த'கரவொலி, தமிழிலும், அத்தமிழினின்றும் தோன்றியதும், அதன் மகள் எனக் கருதப்படுவதுமாகிய மலையாளத்திலுமே காணப்படுவதால், அவ்வொலியைத் 'த'கரத்தின் மெல்லொலி வல்லெழுத்தின் இயற்கை ஒலியெனக் கொள்வதா, அல்லது, அதன் மெல்லொலி வல்லெழுத்தெனக் கருதப்படும் தகரம், மேலும் மென்மையதாக்கப்பெற்றுத் திருந்திய ஒலியெனக்கொள்வதா என்பது ஐயமாகவே உளது. முடிவாக நோக்கின், மெல்லொலி வல்லெழுத்தாய 'த'கரம், மேலும் மென்மையதாக்கப்பெற்றுத் திருந்திய ஒலியே, ஈருயிர்க்கிடைதோன்றும் 'த'கரவொலியாம் எனக் கொள்வதே ஏற்புடைத்தாகத் தோன்றுகிறது. தமிழில் இடம்பெறும் அவ்வொலி, தெலுங்கிலும், பிறமொழிகளிலும் காணப்படும் 'த'கரவொலியோடு இடத்தானும், இயல்

பானும் ஒத்திருப்பதால், தமிழில் மொழிமுதல் எழுத்தாக வருகின்ற காரணத்தால் வல்லொலியுடையதாகின்ற இடங்களில் மட்டும், அவ்வொலியைத் 'ந'வென எழுதி, ஏனைய இடங்களில் எல்லாம் அதைத் 'த' என எழுதுவதையே மேற்கொள்வல்.

சமஸ்கிருத 'ந'கரம், மலையாளத்தில் சிற்சில இடங்களில் 'ல'கரமாக ஒலிக்கப்பெறும். இம்முறை பல்லெழுத்துக்கள், சமஸ்கிருதமொழியில் ஒலிக்கப்பெறுதலைப் போன்றே திராவிடமொழிகளிலும் ஒலிக்கப்பெறும் என்ற பொது முறையொடு மாறுபடும் மற்றொருமுறையாம். உயிர் என்ற பொருளில், தமிழில் 'ஆத்துமா' என வழங்கும் 'ஆத்மா' என்ற சமஸ்கிருதச்சொல், மலையாளத்தில், 'ஆத்த் மாவ்' என்று வாராமல், 'ஆல்ந் மாவ்' என வருதலும், 'மலபார் வரலாறு' என்ற தலைப்பினைக் குறிக்கும் 'கேரலோத் பத்தி' என்ற சொல், கேர லோல் பத்தி' என வழங்கப் பெறுவதும் சான்றுகளாம்.

மெல்லிய அல்லது நுண்ணிய என்ற பொருளுடைய 'தின்' என்ற ஆங்கிலச் சொல்லில் வரும் 'த'கரவொலி போன்ற வலிய ஒலியை, துதமொழி, தனக்கே உரிய ஒலிகளுள் ஒன்றாகப்பெற்றுளது. அவன், அவள், அவை என்ற பொருளுடைய 'அதம்' என்ற சொல்லில் வரும் 'த'கரம், மேற்கூறிய 'த'கரம் போன்றே ஒலித்தல் வேண்டும்.

(5) இதழ் எழுத்தும், அதற்கின மூக்கினமும்: ப், ப், ம்:—

'ப'கர, 'ப'கரங்களின் ஒலி குறித்து ஒன்றும் குறிப்பிடத் தேவையில்லை. 'எப்' என்ற ஆங்கில எழுத்தின் ஒலி, துதமொழியில் இருப்பது, அம்மொழியிற் காணப்படும் தனிச்சிறப்புக்களுள் ஒன்றாம்; புழு, பூச்சி போலும் ஓர் உயிர் என்ற பொருளில் வரும் அம்மொழிச் சொல் 'பூப்'. 'எப்' என்ற ஆங்கில வொலியைக் குறிக்கும் தனி வடிவெழுத்து, ஏனைய திராவிட மொழிகளில் இல்லை. 'எப்' என்ற அவ்வொலியைக் கொண்ட ஆங்கிலச் சொற்களை

எழுதுங்கால், அம்மொழிகள், அவ்வொலியைக் குறிக்க 'ப'கரத்தையே மேற்கொள்ளும். 'ம'கரம், மற்ற எழுத்துக்களோடு இணைதலைக் குறித்த ஆராய்ச்சியில், அது, தன்னைத் தொடர்ந்து மிடற்றெழுத்தும், அண்ண எழுத்தும், நாவெழுத்தும், பல்லெழுத்தும் வரின், முறையே அது 'ங'-வாகவும், 'ஞ'-வாகவும், 'ண'-வாகவும், 'ந'-வாகவும் மாறும் என்றாலும், அதைச் சமஸ்கிருத நெடுங்கணக்கின் அனுஸ்வார எழுத்தோடு ஒற்றுமையுடையதாகக் கொண்டு பயன்குதல் கூடாது என்பதை மனதிற் கொள்ளுதல் வேண்டும். 'ய், ர், ல், வ்' என்ற அரை உயிர்களென வழங்கப்பெறும் இடையின மெய்யெழுத்துக்கள், இஸ்ஸொலி எழுத்துக்கள், ஹகரவொலியெழுத்து ஆக இவற்றின்முன், சமஸ்கிருத 'ம'கரம் பெறும் ஒலியாகிய உண்மை யனுஸ்வார ஒலி, திராவிட மொழிகள் காணாத ஓர் ஒலியாகும். அனுஸ்வார எழுத்து என்ற பெயருடையதும், இயல்பால், சமஸ்கிருத அனுஸ்வார எழுத்தொடு மாறுபடுவதுமான ஓர் எழுத்து, தெலுங்கு, கன்னட மொழி வழக்கில் உளது. ஆனால், அவ்வெழுத்து ஒலி நயம் கருதி இணைக்கப்பெறும் 'ம'கரத்திற்கீடாகவும், ஈற்றெழுத்தாகவும் மேற்கொள்ளப்படுகிறது. அரையனுஸ்வாரமாகிய, மெல்லொலி மூக்கெழுத்தொன்றும் தெலுங்கில் உளது. அவ்வெழுத்து, ஒலி நயம் குறித்தே ஆளப்படும் என்றாலும், அது, சமஸ்கிருத அனுஸ்வாரத்தோடு நெருங்கிய ஒப்புடையதாகவே தோன்றுகிறது.

(6) இன்னொலி மெய்கள் அல்லது அரைஉயிர்கள் :

ய், ர், ல், வ், ழ், ள், ற் :—

இலக்கிய நடைத் தமிழில், 'ர'கரமோ அல்லது 'ல'கரமோ மொழி முதலாக வாராது. அவை ஒவ்வொன்றும், தமக்கு முன்னே ஒலிநயம் கருதி, உயிர்த்துணை பெறுதலை விரும்பும். 'ர'கரம், 'இ'கரம் அல்லது 'அ'கரத்தையும், 'ல'கரம், 'உ'கரத்தையும் பெறும். இம்முறை, சமஸ்கிருதச் சொற்களைத் தமிழில் வழங்கும்போது தெளிவாகத் தோன்றும்; அத்தகைய இடங்களில், அச்சொற்

களின் உண்மை வடிவம் இஃது என உள்ளவாறு உணர வும்படும். சமஸ்கிருத 'ராஜா', தமிழில் 'இராசன்' அல்லது 'இராயன்' எனவும், 'அரசன்' அல்லது 'அரயன்' எனவும் வரும். உடுவொன்றின் பெயராய சமஸ்கிருத 'ரேவதி', தமிழில், 'இரவதி' எனவும், சமஸ்கிருத 'ரக்த' தமிழில் 'இரத்தம்' அல்லது 'அரத்தம்' எனவும், ஒலி எனப் பொருள்படும் சமஸ்கிருத 'ரவ', தமிழில் 'அரவம்' எனவும் வரும். இறுதியில் காட்டிய சொல், 'இரவம்' என என்றும் வாராது. சமஸ்கிருத 'லோக', தமிழில் 'உலோகம்' எனவும், தமிழின் குறிலுயிர் விருப்பம் காரணமாக 'உலகம்' எனவும், மேலும் திருந்தி, 'உலகு' எனவும் வரும். திராவிட மொழிகளுக்கே தனியுடைமையானவையும், தமக்கு முன் உயிர்த்துணை பெற்றன்றி இயங்காதனவுமாய 'ழ், ள், ற்' என்ற இவ்வெழுத்துக்களுக்கும், இம்முறை பொருந்தும்.

திராவிட மொழிகளுக்கே உரிய இம்மெய்யெழுத்துக்களுள், 'ழ'கரம், தமிழில் மிகப் பெருமளவில் மேற்கொள்ளப்படுகிறது. மலையாளத்திலும் இவை இடம்பெற்றுளது. புதுக் கன்னடத்தினின்றும், பழங்கன்னடத்தைப் பிரித்துணரும் சிறப்பியல்பாக, இது பழங்கன்னடத்தில் வழங்குகிறது. அது, விளைநிலம் என்ற பொருளுடைய 'பார்ம' என்ற ஆங்கிலச் சொல்லில், நெடில் உயிருக்குப்பின் வரும் ஆங்கில 'ர'கர எழுத்தின் ஒலி போன்ற ஒலியுடையதாகும். இது, உள்வாயின் அடிப்பகுதியிலேயே தோன்றி, மிகமிக நுண்ணிதாக ஒலிக்கப்பெறும். இவ்வெழுத்து இவ்வாறு ஒலிக்கப்படுதல், தமிழ் நாட்டின் வடமாவட்டங்களுக்கே உரிய ஓர் ஒலி முறையாகும். இவ்வெழுத்தின் ஒலி, பல்வேறு வேறுபாடுகளுக்குள்ளாகி, மொழி கற்பாரை மயங்கவைக்கும் இயல்புடைத்து. திராவிட மெய்யெழுத்துக்களில், 'ழ'கரம் ஒன்றே, மாவட்டந்தோறும் வேறுபட்டு ஒலிக்கும் மெய்யெழுத்தாம். தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் வாழும் பெரும்பாலான மக்களால், 'ழ'கரம், இவ்வெழுத்திற்குப் பதிலாகப் புதுக்கன்னடம்

மேற்கொள்ளும் 'ள'கரத்தைப்போல ஒலிக்கப்பெறும். தஞ்சைக்கும் பாண்டிக்கும் இடையில் அது 'ர்ஸ்ஹ' அல்லது 'ஸ்ஹ' என மெலிவிக்கப்பட்டுளது; சென்னையி லும், அதைச் சூழவுள்ள பகுதியிலும் வழங்கும் கொச்சைத் தமிழில், 'ழ'கரம், 'ய'கரமாகவோ அல்லது ஒலியற்ற தாகவோ ஆக்கப்பட்டுளது. 'ழ'கரம், செந்தமிழ் நடையி லும், சிற்சில இடங்களில் மறைந்துவிடுகிறது. 'பொழுது' 'போது' என ஆகும். மலையாளத்தில், இது, சில இடங் களில், 'ய'கரமாக மாறும். சென்னையிலிருந்து வடக்கே இரண்டு நாள் வழித்தொலைவில் வழங்கும் தெலுங்கு, இவ் வெழுத்தை அறவே துறந்துளது. கன்னடம், 'ழ'கரத் திற்குப் பதிலாக, 'ள'கரத்தை மேற்கொள்வதேபோல், தெலுங்கு, 'ட'கரத்தை மேற்கொள்கிறது. ஒரோவழி, சென்னையில் வழங்கும் கொச்சைத் தமிழ், அவ்வெழுத்தை அறவே விட்டுவிடுவதைப்போல், தெலுங்கும் அவ்வெழுத் தைத் துறந்துவிடுதலும் உண்டு. 'கீழ்ந்த' என்ற தமிழ்ச் சொல், தெலுங்கில் 'கிந்த' எனவும், 'விழுங்கு என்ற தமிழ்ச் சொல், தெலுங்கில் 'மிங்கு' எனவும் வருதலை நோக்கின், தமிழைப் போன்று, தெலுங்கும் இவ்வெழுத் தைப் பண்டு பெற்றிருந்தது என்றும், சென்னைக் கொச் சைத் தமிழ், 'கீழே' என்ற சொல்லைக் 'கீஎ' என மாற்றி வழங்குவதைப் போன்றே, தெலுங்கும் காலம் செல்லச் செல்ல, ஒலிநயம் கருதி, அவ்வெழுத்தை இழந்துவிட்டது என்றும் கொள்வதல்லது வேறாகக் கொள்வதற்கில்லை. பொதுவாக, 'ழ'கரம், கன்னடத்தில், 'ள'கரமாக மாறு கிறது என்றாலும், அது சில இடங்களில், 'ர'கரமாக மாறு தலும் உண்டு. 'அழுது' என்ற தமிழ்ச்சொல், கன்னடத் தில், 'அர்து' என ஆம். சில இடங்களில், அவ்வெழுத்து ஓரினமாக மாற்றப்படுதலும் உண்டு. 'பொழுது' என்ற தமிழ்ச் சொல், பழங்கன்னடத்தில் 'பொத்து' (பொழுது- பொழ்து - பொத்து - பொத்து) எனவும், புதுக்கன்னடத்தில் 'ஹொத்து' எனவும் ஆதலறிக. 'ழ'கரம், 'ர'கரமாக மாறு தல், துளுமொழியில் இயல்பாக நிகழ்கிறது.

திராவிட மொழிகள் எல்லாவற்றிலும் இடம்பெறும் 'ள'கரம், 'ழ'கரத்தோடு கூடிய 'ல'கர ஒலியே ஆம். இதைத் தலைவளிலகரம் என்று அழைத்தலும் பொருந்தும். தலைவளி மெய்யெழுத்துக்களாகிய 'ட், ட், ண்' மூன்றும், எந்த மூலத்திலிருந்து தோன்றினவோ, அந்த மூலத்திலிருந்தே இதுவும் தோன்றியிருத்தல் வேண்டும். இதுபோன்ற 'ள'கரம், வேதகால சமஸ்கிருத மொழியிலும், வடஇந்திய மொழிகள் பலவற்றிலும் காணக்கிடக்கிறது.

திராவிடமொழியின் வல்லின 'ற'கரம், சமஸ்கிருதத்தில் காணப்பெறாததோடு, அச் சமஸ்கிருதமொழியினின்றும் வந்த சொற்களை வழங்கவும் வருவதில்லை. தெலுங்குச் செய்யுட்களிலும், அதன் திருந்திய உரைநடைகளிலும், இது காணப்படுகிறது. அம்மொழியில், இது வழங்கப் பெறவேண்டுவதன் இன்றியமையாமையினை அம்மொழியிலக்கண ஆசிரியர்கள் வற்புறுத்தியுள்ளனர்; ஆனல், இன்றைய தெலுங்குமொழியில், இவ்வெழுத்து மேற்கொள்ளப்படுவதில்லை. கன்னடத்தில், இதன் ஆட்சி, செய்யுள், பழங்கன்னடம் ஆக இவ்விரண்டோடே நின்றுவிட்டது. தனக்குரிய இடத்தை அன்றும் இன்றும் மிக உறுதியாகப் பெற்றிருக்கும் தமிழ், மலையாளங்களில் தவிர, ஏனைய திராவிடமொழிகளில், அம்மொழிகள் சமஸ்கிருத ஆட்சிக்கு அடிபணிந்துவிட்ட காரணத்தால், 'ற'கரம் கையாளப்படுதல், அறவே அற்றுவிட்டது என்றாலும், தொடக்கத்தில், இவ்வெழுத்து எல்லாத் திராவிடமொழிகளிலும் இடம்பெற்றிருந்ததென்பது உறுதி. சில பழந்தமிழ்நெடுங்கணக்குகளில், இவ் வல்லின 'ற'கரம், இருஇடையின 'ர'கரங்களாக எழுதப்பட்டிருந்ததை நான் கண்டுளேன். தமிழில், 'ற'கரத்தைக் கையாளுவதில் குறிப்பிடத்தக்க இரு சிறப்பியல்புகள் காணப்படுகின்றன. அவையாவன:—

(I) 'ற'கரம், இரட்டித்தவழி 'ற்ற்' என எழுதப்படினும் 'த்த்ர்' என்றே ஒலிக்கப்பெறும். இக் கலப்பொலியில் காணப்பெறும் 'த்'கரம், பல்லெழுத்துக்களுள் மெல்லொலி வல்லெழுத்தாய 'த'கரம், தலைவளியெழுத்தாகிய

டகரம் ஆக இவ்விருவொலிகளினும் மாறுபட்டுளது. இத் 'த்'கரவொலி எழுதப்படுவதில்லையென்றாலும், ஒலிக்கும்போது, யாண்டும், எக்காலத்தும் கைவிடப்படுவதில்லை. சமஸ்கிருதமொழியில் காணப்படாதனவும், அம்மொழியினின்றும் வாராதனவும், திராவிடத்திற்கே உரிய சிறப்பு வாய்ந்தனவுமாய ஒலிகளுள் இதுவும் ஒன்றாகும். தமிழ்மொழியில் வரும், இவ்விணை 'றற'கரவொலி, தெலுங்கில் சில இடங்களில் தனி 'ட'கரமாகவும், கன்னடத்தில் 'த'கரமாகவும் மெலிவிக்கப்படும். விடை என்ற பொருளில் வரும் 'மாற்று' என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் 'மாட' எனவும், கன்னடத்தில் 'மாது' எனவும் வருதல் காண்க. இந்த 'ட'கரம், தெலுங்கில் சில இடங்களில் இரட்டிக்கப் பெறுதலும் உண்டு; பிடித்துக்கொள் என்ற பொருளில் வரும் 'பற்று' என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் 'பட்டு' எனவும், கன்னடத்தில், 'பட்டு', 'பத்து' அல்லது 'ஹந்து' என்ற இருவடிவிலும் வரும். பழங்கன்னடத்திலும், இதுபோன்ற மாற்றம், பெரும்பாலான இடங்களில் நிகழ்வதுண்டு.

(II) தெலுங்குமொழியில் இல்லாத, தமிழ்மொழியின் ஈற்று 'ன'கரம், வல்லின 'ற'கரத்தின் முன்னர், ஒலிநயம் கருதி இணைக்கப்பெறும். அவ்வாறு இணைந்தவழிப் பிறக்கும் இணையொலி, 'ன்த்ர்' என ஒலிக்கப்பெறும். மடகாஸ்கர் மொழியைப்போன்றே, தமிழ்மொழியும், இவ்விணையொலிப்பால் பெருவிருப்பம் உடைத்து. இவ்வொலி, துளுமொழியில் மேலும் மென்மையதாக்கப்பெற்று 'ஞ்ஜ்' என ஒலிக்கப்பெறும். கன்றுக்குட்டி என்ற பொருளில் 'கன்று' எனவரும் தமிழ்ச்சொல், துளுமொழியில் 'கஞ்ஜி' எனவரும். சில சொற்களில், 'ற'கரத்தின் முன்வரும் 'ன'கரம், அடிப்படையொலியுடையதாம்; அது, விதிப்படி, தன்னைத் தொடர்ந்து 'த'கரம் வருதலைவேண்டி நிற்கும். ('ன'கரவீற்று வேர்ச்சொலடியாகப் பிறந்த இறந்தகால வினைச்சொற்களில் வருவதுபோல.) ஆனால், 'ன'கரத்தைத், 'த'கரத்திற்குப் பதிலாக, 'ற'கரமே தொடர்

கிறது. இதன் விளைவால், 'ன்த்' என்ற ஒலிக்குப்பதிலாக 'ன்த்ர்' என்ற ஒலியே எழுகிறது.

கன்னடமொழியில் வழங்குவதும், அச்சொல்லின் பண்டைய வடிவும் ஆகிய 'மூரு' என்ற சொல்லிற்கு ஈடாக வரும் தமிழ் 'மூன்று' என்ற எண்ணுப் பெயர்ச்சொல்லி லும், தமிழ் 'ஒரு' என்ற சொல்லிற்கு ஈடாகவரும் அம் மொழி 'ஒன்று' என்ற சொல்லிலும்வரும் 'ற'காம், அடிப் படையொலியாம்; 'ன'காம், ஒலிநயம் கருதி, முன் இணைய வந்ததாம் என நான் கருதுகின்றேன். பின்வரும் சொற் களில், 'ன'கரத்தை அடிப்படையொலியாகவும், 'ற'கரத் தைத், 'த'காத்திற்குப் பதிலாக ஒலிநயம் கருதிவந்ததாக வும் கருதுகின்றேன். 'என்று', 'சென்று' என்ற சொற்கள் முறையே, 'என்து', 'சென்து' என்ற சொற்களுக்குப் பதிலாக வந்துள்ளனவாம். கொச்சைத்தமிழிலும், மலையா ளத்திலும் 'ன்த்ர்' என்ற இக் கலப்பொலி, 'ன்ன்' அல்லது 'ண்ண்' என மாற்றப்பட்டுளது. தெலுங்கிலும், கன்னடத் திலும் 'ன்த்ர்' என்ற ஒலிக்குப்பதிலாக, 'ன்த்' ஒலியே மேற்கொள்ளப்பட்டுளது. (எண் என்ற தலைப்பின்கீழ் 1, 3 பகுதிகளைக் காண்க)

(7) இஸ்ஸொலி எழுத்துக்களும், ஹகரவொலி எழுத்தும் : ஸ், ஷ், ஸ்ரீ, ஹ :—

தமிழ், இஸ்ஸொலி எழுத்துக்கள் அற்றது என்பது முன்னரே அறிவிக்கப்பட்டுளது. ஏனைய திராவிடமொழி கள், சமஸ்கிருதச்சொற்களை ஒலிப்பதிலும், எழுதுவதிலும், இஸ்ஸொலிகளையும், ஹகரவொலிகளையும் தடையின்றிக் கையாளுகின்றன; மேலும், சமஸ்கிருத ஆதிக்கவளர்ச்சி யால், கலப்பற்ற திராவிடச்சொற்களை ஒலிக்கும்போதும் அவ்வொலிகளைக் கையாளுகின்றன. தமிழில், சமஸ்கிருதச் சொற்களில் இடம்பெறும் 'ஶிவன்' என்ற சொல்லில்வரும் 'ஸ'கர ஒலிக்கு ஈடாக, சமஸ்கிருதச் 'ச'கர வொலியோ டொத்ததும், தனித்து வந்துழி 'ஸ'கரவொலிபோன்று ஒலிப்பதுமாய அண்ணஎழுத்து இடம்பெறுகிறது. ஏனைய

இஸ்ஸொலிகள், செந்தமிழ்நடையில் அறவே கைவிடப் படும். ஆனால், பிற்காலத் தமிழ்நூல்களிலும், கற்ற தமிழ் மக்கள் இன்று கையாளும் பேச்சிலும், எழுத்திலும், சமஸ் கிருதச் சொற்களை வழங்கும்போது, அவ்விஸ்ஸொலிகள் தடையின்றி மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விடங்களில், கிரந்தநெடுங்கணக்கினின்றும் பெற்ற வடிவெழுத்துக்களே, அவ்வொலிகளைக் குறிக்கவந்து வழங்குகின்றன. ஆனால், மக்களில் பெரும்பகுதியினரால், அவ்வொலிகள் சரியாக ஒலிக்கப்பெறுவதேயில்லை. உள்நாட்டு மாவட்ட மக்கள் வழங்கும் கொச்சைத்தமிழில், பழந்தமிழ் இலக்கணங் களால், அம் மொழிமரபு கெடாவண்ணம் விதிக்கப்பெற் றனவும், தமிழ் இலக்கியங்களில் வந்து வழங்கும் சமஸ் கிருதச் சொற்களில் இடம் பெறலாமென ஏற்றுக்கொள் ளப்பட்டனவுமாய எழுத்துக்களே, அச்சமஸ்கிருத எழுத் துக்களுக்கு மாருகக் கையாளப்படுகின்றன. அவ்வாறு வந்து வழங்கும் அவ்வெழுத்துக்களாவன :—சமஸ்கிருத நாவிட இஸ்ஸொலியாகிய 'ஷ'காரத்திற்குப் பதிலாக பொதுவாகத் தமிழ் நாவெழுத்தாகிய 'ட'காரமும், சிற்சில இடங்களில் 'ழ'கர இடையின மெய்யும், ஒரோ வழி, பல் லெழுத்தாய 'ந'கரம் அல்லது 'த'கரமும் வந்து ஒலிக்கும். சமஸ்கிருத இஸ்ஸொலிகளில் நுண்மையுடையதாய 'ஸ'காரத்திற்குப் பதிலாகச் சில இடங்களில் 'ந'கரம் அல்லது 'த'கரம் வந்து ஒலிப்பதும், சில இடங்களில் அவ் வொலி அடியோடு விடப்படுவதும், மற்றும் சில இடங் களில் 'ச'கரமாக மாறுவதும் உண்டு. இவ்வெழுத்து, சமஸ்கிருதச் சொல்லின் முதலெழுத்தாக வந்து, அச் சொல், இன்றைய வழக்கப்படி, தமிழ்ப்படுத்தப்பெருமல், சமஸ்கிருதச் சொல்லாகவே வழங்கவேண்டிவரின், அவ் வெழுத்தின் முன்னர், தமிழ் ஒலிக்கரணங்களால், சமஸ் கிருத ஒலிகளைத் தன் துணை பெற்றன்றி ஒலிக்க இயலாத தாகிய 'இ'கரவுயிர் இணைக்கப்பெறும். இம்முறை எழு தும்போது மேற்கொள்ளப்படாது போயினும், ஒலிக்கும் போது உறுதியாக மேற்கொள்ளப்படும். பெண் என்ற பொருளில் வரும் சமஸ்கிருத 'ஸ்த்ரீ', தமிழில் 'இஸ்திரி' என ஒலிக்கப்பெறுதல் காண்க.

தமிழும், மலையாளமும், 'ஹ'கரவொலியற்றனவாம். இவ்வொலி திராவிடமொழிகள் அறியாத வேற்றொலி யென்றும் அது, சமஸ்கிருத ஆதிக்கத்தின் விளைவாகத் தெலுங்கிலும், கன்னடத்திலும் மெல்ல மெல்ல நுழைந்து விட்டது என்றும் நான் எண்ணுகிறேன். தமிழ், இவ் 'ஹ'கரவொலியை ஏற்றுக்கொள்ள மறுப்பதினால் மட்டு மல்லாமல், சமஸ்கிருத மொழியினின்றும் தான்பெற்று வழங்கும் சொற்களில் வரும் 'ஹ'கரவொலி, மெய்யெழுத் துக்களை ஒலிக்கவும், எழுதவும் மறுப்பதினாலும், அத் தமிழ், மிகப் பழமையானது என்பது நிலைநாட்டப் பெறு தாயினும், அது தனித்தியலும் தகுதி வாய்ந்தது என்பது உறுதி செய்யப்படுகிறது. பேராசிரியர் ட்ரம்ப் என்பார், தம்முடைய "ஸிந்திமொழி இலக்கண நூலில்," பிராக் கிருத மொழிகள், இவ்'ஹ'கரவொலிகள்பால் காட்டும் வெறுப்புணர்ச்சியைக் குறித்துவிட்டு, "தென்னாட்டில் வழங்கும் திராவிட மொழிகள், 'ஹ'கரவொலிகளை அறவே அற்றிருப்பதை நோக்க, அவ்வெறுப்புணர்ச்சி, அந்நாட்டுப் பொதுமக்களிடையே தார்த்தாரி மொழித்தன்மை நிலைபெற்றிருப்பதை உணர்த்துவதாகத் தோன்றுகிறது" என்று எழுதுகிறார். புதுக்கன்னடமொழி, மராத்தி மொழியில் சிற்சில இடங்களில் காண்பதைப் போல், 'ப'கரத்திற்குப் பதிலாக 'ஹ'கரத்தை மேற்கொள்கிறது. ஆனால், பழங்கன்னடம், இத்துறையில் தமிழ்மொழியோ டொத்துளது.

## ௩. நாவெழுத்து அல்லது தலைவளி எழுத்தின் பிறப்பிடம்

உள்வாயின் மிக ஆழத்தே தோன்றி, ஒருவகைக் கடிய ஒலியோடு வெளிப்படும் காரணத்தால், தலைவளி எழுத்துக்கள் என இந்தியமொழி நூலாசிரியர்களால் பெயரிடப்பெறும்'ட'கரம், 'ட'கரம், இவற்றின் ஹகர வொலிகள், 'ண'கரம் ஆகிய இவ்வெழுத்துக்கள், இந்திய மொழிகள் அனைத்திலும், அவை, ஆரிய இனத்தன

வாயினும், திராவிட இனத்தனவாயினும், பெரும் அளவில் கையாளப்படுகின்றன. ஒன்றோடொன்று பெரிதும் மாறுபடும் இருமொழிகளாகிய திராவிடமொழியிலும், சமஸ்கிருத மொழியிலும் இவ்வொலிகள் இடம் பெற்றிருப்பது பற்றிய ஆராய்ச்சியை ஈண்டு நான் மேற்கொள்கின்றேன்.

இவ்விரு மொழிகளுள், ஒன்று, மற்றொன்றிலிருந்தே இவ்வொலிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்று நினைப்பது இயல்பே; ஆனால், இவ்விருமொழிகளுள், இவ்வொலிகளைக் கடனாகத் தந்தது எம்மொழி, அவற்றைக் கடனாகப் பெற்றது எம்மொழி என்பது இன்னமும் உறுதி செய்யப்படாமலேயுளது. சமஸ்கிருதமொழியின் கிளைமொழிகளாகிய, இந்தி, வங்காளம், ஏனைய வடஇந்தியமொழிகள் எல்லாம், அம்மெய்யெழுத்துக்களைத் தாம் தோன்றிய சமஸ்கிருதத்தினின்றே பெற்றன என்பது உண்மை; ஆனால், அதே முறையில், திராவிட மொழிகளும், அவ்வெழுத்துக்களைச் சமஸ்கிருதத்தினின்றே கடன்வாங்கின என்று கொள்ளுதல் இயலாது. அதற்குமாறாக, சமஸ்கிருதமொழி வழங்கும் மக்கள், இந்தியாவிற்கு வந்த பின்னர், சமஸ்கிருதம், அம்மெய்யெழுத்துக்களைத் திராவிடமொழியினின்றும் மேற்கொண்டுளது என்பதே என்னுடைய நீண்டகாலக் கொள்கையாகும். அம்முடிவினைக் கொள்ளுமாறு செய்யவல்ல காரணங்களாவன:

1. நாவெழுத்துக்கள், திராவிடமொழிக்கண், அம்மொழிவேர்ச்சொற்கள் பெரும்பாலனவற்றில், இன்றியமையாத, பிரிக்கமுடியாத உறுப்பாகவும், சிறப்பாகத் தமிழ்மொழிக்கண், அம்மொழிவேர்ச்சொற்களை, ஒன்றினின்றும் மற்றொன்றை வேறு பிரித்துணர்தற்கு இன்றியமையாதனவாகவும் விளங்குகின்றன. ஆனால், சமஸ்கிருத மொழியில், இத்தலைவளியெழுத்துக்கள், பல்லெழுத்துக்களுக்குப் பதிலாகவும், குறிப்பாகத் தலைவளி மெய்யாகிய 'ண'கரம், பல்லெழுத்தாகிய 'ந'கரத்திற்குப் பதிலாகவும் வருவது ஒலிநயம் கருதியதாகவே யுளது.

2. சமஸ்கிருதத்தோடு இனத்தொடர்புடைய பழம் பெரும் மொழிகள் எதிலும், இந்நாவெழுத்துக்கள் எதுவும் காணப்பெறவில்லை. கிரீக், அல்லது இலத்தீன் மொழியிலோ, கோதிக் அல்லது கெல்டிக்மொழியிலோ, லித்துவேனியன் அல்லது ஸ்லாவோனியன் மொழியிலோ, அல்லது இன்றைய பர்ஷ்ய மொழியிலோ காணப் பெறவில்லை. சமஸ்கிருதமொழி, சிந்து நதியைக் கடந்து, ஆரிய-வர்த்தத்தில் குடிபுகுமுன், தான் கடைசியாகக் கைகுலுக்கிவிட்டுப் பிரிந்த தன் உடன்பிறந்த மொழிகளாகிய, அம்புத்தலை வட்டெழுத்துக்கள் கொண்ட பர்ஷியா, அல்லது இரான் நாட்டுப் பழைய மொழியாகிய ஸெண்ட்மொழியிலும் அவ்வெழுத்துக்கள் காணப்பெற வில்லை. இதற்குமாறாக, ஆரியர் வருகைக்கு முன்னர், இந்திய நாடு முழுவதும் வழங்கியதும், சமஸ்கிருத மொழி யோடு முற்றிலும் வேறுபட்ட பிறப்பியல்பைக் கொண்ட தும் ஆகிய திராவிடமொழிகள் அனைத்தும், இந்நாவெழுத் துக்களை இன்றும் பெற்றிருப்பதோடு, பண்டும் பெற்றிருந் தன என்பது விளங்குகிறது. பிராஹுிமொழியிலும் அவை காணப்படுகின்றன. சிந்துநதிக்கு மேற்கண் வழங்கும் ஆரியமொழிகள் எதிலும், இவ்வொலிகள் ஒருகாலத்தே இருந்தன என்பதைக் காட்டும் அடிச்சுவடுதானும் இல்லை. ஆனால், அவ்வாரிய இனத்தாருள் யாரேனும் ஓர் இனத்தார், சிந்துநதியைக் கடந்து, திராவிடர்களும், அவர்களோடு உறவுடைய பிற இனத்தவரும் வாழும் தென்னாட்டில் அடி வைத்தவுடனே, அவ் வினமக்கள் வழங்கும் மொழிகளில், இந்நாவெழுத்துக்கள் இடம்பெற்றுவிடும். இந்நாவெழுத் துக்களை சமஸ்கிருதத்தினின்றும் கிளைத்த மிகப்பழைய உள்நாட்டு மொழியாகிய பிராகிருதம், சமஸ்கிருதத்தை விட மிகுதியாக, மேற்கொள்வது ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாம்.

3. தமிழ்மொழி, சமஸ்கிருதத்தினின்றும் பெற்ற மெய்யெழுத்துக்களைத், தன் மொழியின் ஒலிமுறைக் கும், தமிழர்தம் செவிப்புல நுண்மைக்கும் எற்ப, பெரிதும்

மாற்றியே ஏற்றுக்கொண்டுள்ளது. அம்முறையையொட்டி, சமஸ்கிருதச் சொற்களை ஒலிக்குமிடத்தும், தமிழ், அம்மொழி ஹகரவொலியெழுத்துக்களை அறவே நீக்கிவிடுகிறது; இஸ்ஸொலியெழுத்துக்களை, ஒன்று, ஒழித்துவிடுகிறது; அல்லது தன்மொழி முறைக்கேற்பத் திருத்திவிடுகிறது. அம்மொழிக் கடினவொலிகள் அனைத்தையும் தவறாது மென்மையவாக்கிக்கொள்கிறது. சமஸ்கிருத நாவழி இஸ்ஸொலி எழுத்தாகிய 'ஷ'கரமும், தமிழ் ஒலிக் கரணங்களால் ஒலிக்கப்படுவதில்லை. இவ்வாறாகவும், தலைவளியெழுத்துக்களாய 'ட'கரம், 'ட'கரம், 'ண'கரம் போன்ற முரட்டு ஒலிகள், ஒருசிறிதும் மென்மைய வாக்கப் பெறாமலே, சமஸ்கிருதத்தினின்றும், தமிழ் மொழியால் கடன் வாங்கப்பெற்று, சமஸ்கிருதச் சொற்களை ஒலிப்பதற்கே யல்லாமல், திராவிடமொழியின் இன்றியமையா வேர்ச்சொற்கள் பலவற்றை ஒலிக்கவும் கையாளப்படுகின்றன என்று கொள்வது சிறிதும் பொருந்தாது.

4. சமஸ்கிருதமொழியின் ஆதிக்கத்திற்குத், தமிழ் மொழியினும், தெலுங்கு மொழியே, பெரும் அளவு அடிபணிந்திருப்பவும், இவ்வொலிகள், தெலுங்குமொழியினும், தமிழ்மொழிக்கண்ணேயே மிகுதியாகக் கையாளப்படுகிறது. இந்நிகழ்ச்சி, இவ்வொலிகள், சமஸ்கிருதத்தினின்றே திராவிடமொழிக்கண் நுழைந்துள்ளன என்ற கொள்கையோடு பெரிதும் மாறுபடுவதாகும்.

இவற்றை யெல்லாம் ஒன்றுகூட்டி, உற்றுநோக்கிய வழி, நாவெழுத்துக்களைத் திராவிடமொழியே, சமஸ்கிருதத்தினின்றும் கைக்கொண்டது என்று கொள்வதினும், சமஸ்கிருதமே, அவ்வொலிகளைத் திராவிடத்தினின்றும் கடன் வாங்கிற்று என்று கொள்வதே பொருந்துவதாக எனக்குப் புலனாகிறது. பின்னால் காட்டப்பட்டுள்ள "சொற்களின் ஒப்பீடு" என்ற பகுதியால், சொற்களையும், ஒலிகளையும் திராவிடத்தினின்றும் கடன் வாங்குவதைச், சமஸ்கிருதம் இழிவாகக் கருதியதில்லை என்பது தெளிவாம்.

இவ்வாராய்ச்சியை எழுதிமுடித்த பின்னர், பெகிஸ்டன் என்னுமிடத்தில் கண்ட, "சித்தியமொழிக் கல்வெட்டுகள்" என்பது பற்றித் திருவாளர் நாரிஸ் என்பார் எழுதிய கட்டுரைகளைக் கண்டேன். திராவிடமே, சமஸ்கிருதத் தலைவளியெழுத்துக்களின் தோன்றுமிடமாம் என்ற கொள்கையோடொத்த கருத்து, அதிலும் வெளியிடப் பட்டிருந்தது: "தலைவளியென்ற ஒலிகள், தார்த்தாரி அல்லது பின்னிஷ் மொழிகளுக்கே உரிய ஒலிகளாம்; உண்மையான இந்தியமொழிகள் அனைத்தும், தார்த்தாரி மொழியையே தமக்குப் பிறபிடமாகக்கொண்டுள்ளன; அவற்றின் எழுத்து, இலக்கணம் ஆகியவற்றிற்கிடையே நிலவும் ஒருமைப்பாடுகள், தார்த்தாரித்தன்மை வாய்ந் தனவே, ஸ்காண்டிநேவியர், தங்களுக்கு அண்மையில் வாழும் லாப்ஸ் என்ற தார்த்தாரி யினமொழியினின்றும், இது போன்ற ஒலியைப் பெற்றிருப்பதைப் போன்றே, சமஸ்கிருதமொழியும், இந்தியாவில் தன்னையடுத்து வழங் கும் மொழிகளினின்றே, இவ்வொலிகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்ற கருத்தை ஈண்டு வெளியிட விரும்பு கின்றேன். பழைய ஸ்காண்டிநேவியமொழிகளை இன்றும் வழங்கும் பனிநாட்டு மக்களாய ஐஸ்லாந்துக்காரர், 'பத்ல' என்றும், 'புத்லர்' என்றும் எழுதப்பட்டிருப்பவும், அச்சொற்களைப் 'பல்ல' என்றும் 'புல்லர்' என்றுமே ஒலிப்பர்" என்று திரு. நாரிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

தமிழில், இவ்விருவகை மெய்யெழுத்துக்களின் இடையே உள்ள வேற்றுமையாலேயே, பழமையையும், இன்றியமையாக் கருத்துக்களையும் குறிக்கும் பெரும் பாலான வினைவேர்ச்சொற்கள், ஏனைய வேர்ச்சொற்களி னின்றும் வேறுபிரித்துக் காட்டப்படுகின்றன. கீழே வரும் தமிழ்ச்சொற்களின் எடுத்துக்காட்டு, அதை விளக்கும்:—குதி - குடி; புதை - புடை; கத்து - கட்டு; கொத்து - கொட்டு; அரி - அறி - அழி; என் - எண்; மனை - மணை; அரு - அறு - அழு; கொல் - கொள்; தலை - தளை.

நாவெழுத்துக்களை மிகுதியாகப் பெற்றிருப்பதும், அதனால், திராவிடமொழியின் உண்மைப் பிரதிநிதியாக விளங்குவதுமாகிய தமிழ்மொழிக்கண், இத்தகைய இன்றி யமையா இடங்களில் வரும், இம்மெய்யெழுத்துக்களின் ஆட்சியைச், சமஸ்கிருதமொழிக்கண், அவ்வெழுத்துக்கள் பெற்றுள்ள ஆட்சியோடு ஒப்பிட்டு நோக்கின், திராவிட மொழிகளில், இந்நாவெழுத்துக்கள் பெற்றுள்ள இடம், சமஸ்கிருதத்திலும், அதன் கிளைமொழிகளிலும், அம் மெய்யெழுத்துக்கள் பெற்றுள்ள இடத்தோடு முற்றிலும் மாறுபடுகிறது என்பது தெளிவாகத் தோன்றும். தமிழ் மொழிக்கண், அவ்வெழுத்துக்கள், ஒலிகளின் வளர்ச்சி யையோ, அல்லது ஒலிநயத்தையோ குறித்து நில்லாமல், அம்மொழி வேர்ச்சொற்களின் அமைப்பு, பொருள், ஒலிமுறை ஆகியவற்றைக் குறித்தே நிற்கும். அவ்வெழுத் துக்கள், மொழிவரலாற்றில் நம்மால் மேலும் செல்ல இயலாத ஒருநிலைக்கு நம்மை அழைத்துச் செல்கின்றன. சமஸ்கிருதம, தன் கருத்துக்களையும், எண்ணங்களையும், இப்போது வெளியிடுவதைப்போல், இந்நாவெழுத்துக்களை இழந்து விடுவதால், வெளியிடுதல் இயலாதுபோம் என்று கூறுதல் பொருந்தாது. ஆனல், தமிழ், அந் நாவெழுத் துக்களை இழந்துவிடின், இன்றியமையா அடிப்படைக் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலையும் அடியோடு இழந்து விடுவதுடன், மொழி என வழங்குதற்கேற்ற தகுதியற்ற தாகியும் விடும்.

சமஸ்கிருதத்திலும், திராவிடத்திலும், இந் நாவெழுத் துக்கள் பெற்றுநிற்கும் இடத்தின் இயல்பினை நன்கு அறிந்து கொண்ட நாம், இனி, எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியை நோக்குவாம். இவ்வொலிகள், சமஸ்கிருத மொழியில், தொடக்கத்தில் இடம் பெற்றது எவ்வாறு? பொதுவாகக் கூறினல், இவ்வொலிகள், இந்தியாவிற்கே உரிய ஒலிகளாம். மூவாயிரம் ஆண்டுகளாக அடுத்தடுத்து வாழ்ந்து, ஒன்றோடொன்று கலந்து வழங்கிவந்த திராவிட, சமஸ்கிருத இனமொழிகள் இரண்டிலும் அவ்வொலிகள்

காணப்படுகின்றன. சமஸ்கிருத மொழி வழங்கும் மக்கள், இந்தியாவிற்குள் நுழைந்து, திராவிடர்களுடைய இடங்களைக் கைப்பற்றிய காலத்திலேயே யல்லாமல், அதற்கும் முற்பட்டதான, அவர்கள், பிராஹுி மொழி வழங்கும் நாட்டுவழியாக வந்து, சிந்துநதியைக் கடப்பதற்கும் முந்திய, அந்தக்காலம் எந்தக்காலம் என்று அறுதியிட்டுக் கூறமாட்டா அப் பழம்பெருங் காலத்திலேயே, அவர்கள், திராவிட, அல்லது திராவிடஇனத் தொடர்புடைய மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர் என்று நம்புதற்குரிய காரணங்கள் உள்ளன. அவ்வாறு யின், இந்தியாவிற்கே உரிய இந் நாவெழுத்துக்கள், சமஸ்கிருதம், திராவிடம் ஆகிய இவ்விரு மொழிகளிலும், தனித் தனியே ஒன்றிற்கொன்று எத்தகைய தொடர்பும் இன்றி, இயல்பாகவே தோன்றி வழங்கின என்பதா? அல்லது, அவை, ஒரே பிறப்பிடத்தைக்கொண்டு, ஓரின மொழிகளில் நன்கு வளர்ந்து, பின்னர், அவற்றினின்றும், மற்றோர் இன மொழிக்குச் சென்றன என்பதா? இவற்றுள் எது பொருந்தும்? என் கருத்து இரண்டாவதைச் சார்ந்தே நிற்கும். அவற்றின் பிறப்பிடம் ஒன்றே, என்ற இரண்டாம் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பெறின், இவ்வொலிகள் முதற்கண் திராவிடப் பழங்குடிமக்கள்மொழியிலேயே தோன்றின. பின்னர், திராவிட ஆதிக்க விளைவால் தோன்றிய இவ்வொலி பற்றிய ஆசை, இந்தோ - ஆரிய இன மக்களிடையேயும், இவ்வொலிகளைத் தோற்றுவித்தது என்ற நம் கொள்கை அரண் செய்யப்படுகிறது. "திராவிட மொழியின் நாவெழுத்துக்கள், சமஸ்கிருதத்தினின்றும் தோன்றவில்லை" என்ற கருத்து, பேராசிரியர் புஹ்லர் என்பாராலும் தெளிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, அவ்விரு வொலிகளின் பிறப்பிடமும் ஒன்றே என்ற கொள்கையை யொட்டி, சமஸ்கிருதமே, அவ்வொலிகளைத் திராவிட மொழியினின்றும் பெற்றிருத்தல் வேண்டும் என்ற கொள்கை பெறப்படுமன்றோ?

## சு. ஓரின மொழிகளுக்கிடையே உண்டாம் மெய்ம் மாற்றம்.

இலக்கண ஆசிரியர்கள், ஒலிநயம்கருதி எண்ணி ஆக்கிய மாறுபாடுகளை ஆராயாமல், திராவிட இனமொழிகளை ஒன்றோடொன்று ஒப்பு நோக்கியவழிப் புலனாகுவனவும் முன் கூட்டி எண்ணி ஆக்கப்பெறாதனவுமாய இயல்பான மாறுதல்களையே இத் தலைப்பின்கீழ் ஆராய எண்ணியுள்ளேன். மொழிகளுக்கிடையே உண்டாம் மெய்ம் மாற்றங் குறித்த இவ்வாய்வுரை, உண்மையில் ஒன்றேயாய், ஒரு பொருளையே குறிப்பனவாயினும், நோக்குதற்கு, ஒன்றோடொன்று தொடர்பற்றன போல் தோன்றும் சொற்களையும், சாரியைகளையும் அவற்றின் உண்மை இயல்பு உணர நன்கு விளக்குவதோடு, திராவிடமொழிகளின் ஒலிமுறை யாது என்பதைத் தெளிய உணரவும் துணை புரியும்.

முன்போலவே, கூடுமான அளவு, தேவநாகரி நெடுங் கணக்கு முறையையே பின்பற்றி, திராவிட மொழியின் மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றும், அவ்வினமொழிகளில் பெறும் மாறுதல்களைக் குறிப்பிடத் தொடங்குகின்றேன். ஹகரவொலி எழுத்துக்கள், திராவிட மொழிக்குரிய அல்ல ஆதலின் அவற்றை நீக்கிவிட்டேன்.

*1. மிடற்றெழுத்து: க். க். ங்:—*

‘க’ கரம், ‘க’ கரத்தின் மெல்லொலிவல்லெழுத்தே யாதலின், ஈண்டு மேற்கொள்ளும் மாறுதல்களுள் ‘க’கரம், ‘க’கரம் இரண்டையும் ஒன்றாகவே மதித்துள்ளேன்.

(i) ‘க’ கரம், ‘க’கரமென மெல்லொலிவல்லெழுத்தாக ஒலிக்கும் இடங்களில், அது, ‘வ’கரமாக மாறும். தமிழில் ‘க’கரம் வரும் இடங்களில், தெலுங்கில் ‘வ’கரம் வரக் காண்கிறோம். ‘ஆகு’ என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் ‘அவு’ என வருதல் காண்க; இவ்வினையின் எச்ச வினைச் சொல்லாகிய ‘ஆக’ என்ற தமிழ்ச் சொல்லோடொத்த, தெலுங்கு வினைச்சொல்லாகிய ‘கா’ என்பதில்,

அப் பழைய 'க'கரம், மீண்டும் தோன்றும். மெல்லொலி வல்லெழுத்தாக, சொற்களுக்கிடையில் வந்துழியே, இவ் வெழுத்து 'வ'கரமாக மாறும். தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் வாழும் கல்லா மக்கள் வழங்கும் மொழியில் இம்மாற்றம் நிலைபெற்ற வழக்காகக் காணப்படுகிறது. புலவர் பாடும் பாக்களிலும் இம்மாற்றம் ஒரோவழி, இடம் பெற்றுளது. 'நோக' என்ற சொல், 'நோவ' என வருதல் காண்க. சொற்களுக்கிடையில் வரும் 'க'கரம், 'வ'கரமாக மென்மையாதலே யல்லால், ஒரோவழி அறவே மறைந்து போதலும் உண்டு. 'பகுதி' என்ற சொல் 'பாதி' எனவும், வண்டி என்ற பொருளுடைய 'சகடு' என்ற தமிழ்ச் சொல் 'சாடு' எனவும் மாறுவது காண்க.

தெலுங்கில், 'க'கரத்திற்குப் பதிலாக வரும் 'வ'கரம், ஒலிப்பதோடு, எழுதவும்படும். பவழம் என்றபொருளுடைய 'பகடமு' என்ற சொல் 'பவடமு' எனச் சிதைந்துளது காண்க. இவற்றோடு, ஒளி என்று பொருள்படும் 'லக்ஹு' என்ற சமஸ்கிருதச் சொல், இலத்தீன் மொழியில் 'லெவிஸ்' என மாறுவதையும் ஒப்பிடுக. இம்முறைக்கு மாறாக, ஒரோவழி, 'வ'கரம், 'க'கரமாக மாறுவதும் தெலுங்கில் நிகழும். இம்மாற்றம், சிற்சில இடங்களில், மலையாளத்திலும் நிகழும். தமிழில் 'சிவந்த' எனவரும் 'சுவன்ன' என்ற மலையாளச் சொல், 'சுகன்ன' என வருதலும் காண்க.

(ii) 'க'கரம், 'ஸ'கரம் அல்லது 'ச'கரம் என மாறும். 'ச'கரம் இரட்டித்தால் 'ஸ'கரமென மாறுவதோடு, தமிழ் நெடுங்கணக்கில், தேவநாகரி 'ஸ'கரத்தை யொத்த ஒரு வடிவெழுத்தால் எழுதவும் பெறும் ஆதலின், 'க'கரம், 'ஸ'கரமாக மாறுவதும், 'க'கரம், 'ச'கரமாக மாறுவதும் ஒன்றே. 'க'கரம், 'ச'கரமாக மாறுதல் தெலுங்கிலும், அது, 'ச'கரமாக மாறுதல் தமிழிலும் நிகழும். கிரீக், இலத்தீன் மொழிகளில் வரும் 'க'கரம், சமஸ்கிருத மொழியில் 'ச'கரமாக மாறுவதையும் ஈண்டு ஒப்பிடுக. பத்து

என்ற எண்ணுப் பொருளில் வரும் அம்மொழிச் சொற்களாகிய, 'டெக', 'டெகம்' என்பன, சமஸ்கிருதத்தில் 'தசன்' எனவந்துள்ளமை காண்க.

இம் மெய்யெழுத்தின் மிகப் பழைய ஒலியாகிய 'க'கர வொலியைக், கன்னடம் விடாதுபெற்றுளது. கன்னடத்தில் 'க'கரம் வரும் இடங்களில், தெலுங்கில் 'ச'கரமும், தமிழில் 'ச'கரமும் வரக்காண்கிறோம். சிறிது என்று பொருள்படும் சொல், கன்னடத்தில் 'கின்ன' எனவும், தெலுங்கில் 'சின்ன' எனவும், தமிழில் 'சின்ன' எனவும் வரும். காது என்ற ஓர் உறுப்பின் பெயர், கன்னடத்தில் 'கிவி'; தெலுங்கில் 'செவி'; தமிழில் 'செவி'. செய் என்ற ஏவற்பொருள்படு சொல், கன்னடத்தில் 'கெய்'; தெலுங்கில் 'செய்'; தமிழில் மட்டும் 'செய்'. சில இடங்களில், பழைய 'க'கர ஒலி, கன்னடத்தைப்போன்றே, தமிழிலும் நிலைபெற்று நிற்க, மெலிவு, தெலுங்கில் மட்டுமே காணப்படும். அழி என்ற ஏவற்பொருள்படு சொல், தமிழிலும், கன்னடத்திலும் 'கெடு' எனவும், தெலுங்கில் 'செடு' அல்லது 'செறு' எனவும் வரும். கை என்ற ஓர் உறுப்பின் பெயர், தமிழில் 'கை'; கன்னடத்தில் 'கையி'; தெலுங்கில் 'கை' அல்லது 'கேலு'. இப்பொருளைக் குறிக்க, தெலுங்கில், வேறு ஒரு சொல்லும் உளது. அது, 'சே' அல்லது 'செய்யி' என்பது. இது, 'கை' அல்லது 'கே' என்பதன் மெலிவும், அம்மொழி மூன்றும் வேற்றுமை யுருபுமாகும். இது போன்றே 'க'கரம், 'ச'கரமாக மாறும் மாற்றம் சமஸ்கிருதத்திலும் நிகழும். பேச்சு, என்று பொருள்படும் 'வாக்' என்ற சொல்லோடு, அதே பொருள்படும் 'வாச்' என்ற அம்மொழிச் சொல்லை ஒப்பிட்டுக் காண்க.

(iii) இரட்டைக் 'க'கரம், தவறாது இரட்டைச் 'ச'கரமாக மாறும். இம்மாற்றம், தென் மாவட்டத் தமிழருள் கல்லாதாரிடையே, ஒழுங்கான ஒலிப்புமுறையாகவே கருதப்படும். தமிழ்நாட்டின் வடபகுதியிலும், இலக்கண நெறி பிறழாத் தமிழிலும் இம்மாற்றம் அருகியே காணப்படும். ஆனால், தமிழகத்தின் வடவெல்லையை அடுத்துள்ள

தெலுங்கு நாட்டில், இம்மாற்றம் மறுவலும் தோன்று கிறது. தெலுங்கு மொழியில் வரும், பெரும்பாலான சொற்களில், குறிப்பாக, அம்மொழி வினைச்சொல்லாக்க உருபுகளில், தமிழ் இரட்டைக்'க'கரம் தவறாமல் இரட்டைச் 'ச'கரமாக மாறுகிறது. கீழ்வரும் எடுத்துக்காட்டால், இம் மாற்றம், இலக்கணத் தமிழிலும் வரக் காண்கிறோம். சூடேற்று என்ற பொருளில், விதிப்படி 'காய்க்கு' என வரவேண்டிய சொல், 'காய்ச்சு' என வந்துள்ளமை காண்க. அவ்வாறே, நிலத்திற்கு நீர்விடு என்ற பொருளில், 'பாய்க்கு' என வரவேண்டிய சொல், 'பாய்ச்சு' என வருத லும் காண்க. இரட்டைக் 'க'கரத்திற்குப் பதிலாக, இரட் டைச் 'ச'கரத்தை மேற்கொள்வதில், தென்கோடித் தமிழ் மக்கள் வழங்கும் கொச்சைத் தமிழும், இலக்கணவழி அமைந்த தெலுங்கும், முழுதும் ஒத்துள்ளன என்பதை ஒரேயொரு எடுத்துக்காட்டே விளக்கிவிடும்: 'வைக்க' என்ற தமிழ் எச்சவினைச் சொல், தென் கோடித் தமிழ் மாவட்டங்களில் வாழும் எழுத்தறிவில்லா மக்களால் 'வைச்ச' என ஒலிக்கப் பெறுகிறது. இலக்கண மரபொட்டிய தெலுங்கில், இதே சொல், 'வைச்ச' என்றே எழுதவும், ஒலிக்கவும் படும்.

(iv) 'க'கரம் சில இடங்களில், 'த'கரமாகத் திரிகிறது. இம்மாற்றத்தை விளக்கத்தக்க நல்ல எடுத்துக்காட்டுக் களைத் திராவிட மொழிகளினின்றும் காட்ட என்னால் இயலவில்லை. ஆனால், கோண்டுமொழியில் வரும் வினை முற்று விகுதிகள் சிலவற்றில் காணப்படும் 'த'கரம், தமிழ்க் 'க'கரத்தினின்று வந்தது தாமோ என நான் ஐயுறுகின் றேன். வீட்டில் நுழையும் வழி என்று பொருள்படும் 'வாயில்' என்ற சொல், தெலுங்கில் 'வாகிலி' என்று வருவ தையும், மலையாளத்தில், 'வாதில்' அல்லது 'வாதில்' என்று வருவதையும் ஒப்பிட்டுணர்க. இப்பொருள் குறிக்கும் தமிழ்ச்சொல், 'வாசல்' என்றும், இலக்கிய நெறிப்படி, 'வாயில்' என்றும் வருவதை நோக்க, இவ்வெடுத்துக் காட்டுக்கள் ஏற்புடையன ஆமோ என நான் ஐயுறுகின்

றேன். பிறஇனமொழிகளிலும் 'க'கர, 'த'காங்கள் தம்முள் மாறிக்கொள்வது இயல்பாக நிகழ்கிறது. கிரேக்க நாட்டுப் பழங்குடிமக்கள் வழங்கிய மொழியாகிய டோரிக் மொழியில், அவன் என்று பொருள்படும் சொல், 'எ-கைனோஸ்' என வருவதற்குப் பதிலாக, 'தனோஸ்' என்ற சொல் வருவதறிக.

2. அண்ண எழுத்து: ச், ச், ஜ், ஞ்:—

திராவிட மொழிகளில், 'ச'கரம், 'ச'கரம், 'ஜ'கரம் ஆகிய எழுத்துக்கள் மூன்றும் உண்மையில் ஒன்றேயாதலின், இவற்றின் மாறுதல்களையும் ஒன்றாகவே கொள்கின்றேன். 'ச'கரம் அல்லது, 'ஜ'கரம் பெறும் ஒரே மாற்றம், அது 'ய'கரமாக மெலிதலேயாம். தமிழில் வந்து வழங்கும் சமஸ்கிருதச் சொற்களில் வரும் 'ச'கரத்திற்குப் பதிலாகப், பெரும்பாலும் 'ஜ'காத்திற்குப் பதிலாக, 'ய'கரம் மேற்கொள்ளப்படும். தமிழில், ஆண்பால் விகுதி பெற்று, 'ராசன்' என வரவேண்டிய, 'ராஜா' என்ற சமஸ்கிருதச் சொல், 'ராயன்' என வருகிறது. தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில், 'ச'கரம், 'ய'கரமாக மாறுதல், அந்நாட்டுக் கல்லாமக்கள் வழங்கும் கொச்சைத்தமிழின் சிறப்பியல்பாம். ஆங்கு, இம்மெய்யெழுத்து வழங்கும் எல்லாச் சொற்களிலும், - அவை திராவிடச் சொல்லேயாயினும், அல்லது சமஸ்கிருதச் சொல்லேயாயினும்,-'ச'கரம், 'ய'கரமாக மாற்றப்படுகிறது. அவர்கள் 'அரிசி'யை 'அரியி' என்றே ஒலிப்பர். மலையாளத்தில் இச் சொல், 'அரி' என்றாகும். பெயர் என்ற பொருளுடைய 'புதர்' என்ற துளுமொழிச் சொல்லில் வரும் 'த'கரத்தை, அதே பொருளுடைய 'பெசர்' என்ற கன்னடச் சொல்லில் வரும் 'ச'காத்தின் திரிபு எனக் கொள்வர் பேராசிரியர் குண்டர்ட். அஃது உண்மையாயின், 'ச'கரம், 'த'கரமாக மாறும் மற்றொரு மாற்றம் புலனாம்.

கன்னடச் சொற்களைத் தமிழ்ச்சொற்களோடு ஒப்பிட்டு நோக்கியவிடத்து, 'ய'கரத்தை எதிர்பார்க்கும் இடங்

களிலெல்லாம், 'ச'கரம் இருக்கக் காணலாம். தமிழ்ப் 'பெயர்', கன்னடத்தில் 'ஹெசர்' என வழங்குகிறது. இது, 'பெசர்' என்பதன் திரிபாம். இவ்வாறு வரும் இடங்களில், 'ய'கரத்தைப் பழமையானது எனவும், 'ச'காத்தை அதன் திரிபு எனவும் கொள்வது பொருந்தாது. ஈண்டுச் 'ச'கரமே பழமையானதாகவும், 'ய'கரம் அதன் திரிபாகவுமே தோன்றுகிறது. ஆகவே, தமிழ்ப் 'பெயர்', கன்னட 'ஹெசர்,' துளு 'புதர்' இவற்றினின்றும் மெலிவிக்கப்பட்ட வடிவேயாம். தமிழ்ப் 'பெயர்,' பேர்' என மேலும்திரிதல், இம்முடிவை உறுதிசெய்தல் காண்க. மலையாளத்தைப் போன்றே, செந்தமிழ்நடையிலும், இவ்வாறு மெலிந்த வடிவங்களையே, திருந்திய வழக்குடையனவாகப் புலவர்கள் மேற்கொள்வர். அதனால், அவ்வாறு மெலிந்துதோன்றும் அவ்வடிவங்களே மிகப் பழமையானவை என்பதும் பெறப் படும். இவ்விருமொழிகளிலும், 'பசும்' என்ற சொல்லி னும், 'பைம்' என்பதே செய்யுள் நடைக்கு ஏற்ற வடிவாதல் அறிக. ஆக, இவ்வாராய்ச்சியால் காணப்பட்ட முடிவு, 'ச'காமும், 'ய'கரமும் தம்முள் அடிக்கடி மாறுகின்றன என்பதே. சிறப்பாகத் தென் மாவட்டங்களில் பயிலவழங் கும், 'ச'கரம், 'ய'கரமாக மாறும் ஒரு மாற்றமும் உண்டு என்ற உண்மை, அம்மொழியில் வந்து வழங்கும் சமஸ்கிரு தச் சொற்கள் அடையும் திருத்தங்களால் உறுதிசெய்யப் படும்.

3. நாவெழுத்துக்கள் அல்லது தலைவளி எழுத்துக்கள்- ட், ட, ண் :—

(i) 'ட'கரம், 'ட'கரமென மெல்லொலி வல்லெழுத் தாக வருவழித், தமிழில், சில இடங்களில், 'ழ'கரமாக மாறும். அளவுகருவியைக் குறிக்கும் 'நாடி' என்ற சமஸ் கிருதச் சொல், தமிழில் 'நாழி' என்றே எழுதவும், ஒலிக் கவும் படுதல் உணர்க. தமிழகத்தின் தென்கோடியில், 'ழ'கரம், 'ள'கரமாக மேலும் திருத்தப்பெற்று, 'நாளி' என ஒலிக்கப்பெறும். தமிழில் உள்ளவாறே, பழங்கன் னடத்திலும், சமஸ்கிருத 'ட'கரம், 'ழ'கரமாக மாறும்.

'ர'கர, 'ற'கரங்களைப் போலவும், 'ல'கர, 'ள'கரங்களைப் போலவும், இவ்வெழுத்துக்கள் ஓரினமாகக் கருதப்படு கின்றன. துதமொழியில், 'ட'கரம், 'ர'கரமாக மாறும். 'நாடு' என்ற இடப்பெயர், அம்மொழியில் 'நார்' என வரும். இம்முறைக்கு நேர்மாறாக, 'ழ'கரம், 'ட'கரமாக மாறுவது, திராவிடமொழிகளில், இதனினும் பெருவழக்காம். ('ழ'கரம் பற்றிய தலைப்பில் காண்க.) தெலுங்கில் 'ட'கரம் வல்லின 'ற'கரமாக மாறும் இடங்கள் சிலவுள. ஒன்றை அழி என்ற பொருளில், தமிழ், கன்னடங்களில், 'கெடு' என வரும் சொல், தெலுங்கில் 'செடு' எனவரும்; அச்சொல் பிறவினைப் பொருளில் வந்துழி, தமிழில் 'கெடுக்கு' என வருதல் போன்றே, தெலுங்கிலும் 'செடுச்சு' என வருதல் வேண்டும். ஆனால், அது 'செறுசு' என வந்துளது.

(ii) நாவிடமூக்கெழுத்தாய 'ண'கரம், தெலுங்கில் மிகப்பல இடங்களில், பல்லிடமூக்கெழுத்தாகிய 'ந'கரமெனத் திரிகிறது. திராவிட மொழிகளின் உரிமை பெற்ற பிரதிநிதியாகிய தமிழ், ஏனைய தலைவளி எழுத்துக்களைப் போன்றே, 'ண'கரத்தையும் பெரும்அளவில் கையாள்கிறது. பேச்சுத் தமிழ், இலக்கண வரம்பையும் கடந்து, 'ந'கரத்திற்குப் பதிலாக, 'ண'கரத்தையே மேற்கொள்ள விரும்புகிறது. ஆனால், தெலுங்கு, ஏனைய தலைவளி யெழுத்துக்களைப் பெரும்அளவில் கையாளுகிறது என்றாலும், 'ண'கரத்திற்குப் பதிலாக, 'ன'கரத்தையே விரும்புகிறது. திராவிட இனத்தின் மிகப்பழைய மொழியாகிய தமிழ்க் 'கண்,' 'விண்,' 'மண்,' என்ற சொற்கள், தெலுங்கில், 'கன்னு,' 'வின்னு,' 'மன்னு,' எனத் திரிகின்றன. சமஸ்கிருதத்தினின்றும் பெற்ற சொற்கள் சிலவற்றையும், தெலுங்கு, இவ்வாறே திருத்தி வழங்குகிறது; 'குணமு' என்ற தத்சமச் சொல்லோடு, 'கொணமு' என்ற தத்பவச் சொல்லையும் பெற்றுளது காண்க. மலையாளம், சில இடங்களில், 'ன'கரத்திற்குப் பதிலாக, 'ண'கரத்தை மேற்கொள்கிறது. உனக்கு என்ற பொருளில், 'நினக்கு' என்ற சொல்லை மேற்கொள்வதோடு, சில இடங்களில் அதற்

குப் பதிலாக, 'கிணக்கு' என்ற சொல்லேயும் கையாளுகிறது. இதற்கு மாருகத், தெலுங்கைப் போலவே, அது, 'ண'கரத்தை, 'ன'கரமாக மாற்றுவதும் உண்டு. 'துணிவு' என்ற தமிழ்ச் சொற்குப்பதிலாக, மலேயாளம்'துனியு'என்ற சொல்லேக் கொண்டுளது. எண்பது என்ற தமிழ் எண்ணுப் பெயர், மலேயாளத்தில், 'எம்பது' எனவருதலும் காண்க. தமிழ், 'ண'கரத்தை அதன்பின்வரும் மெய்யாக மாற்றுவதில்லை. 'பெண்' என்ற சொல்லில் வரும் 'ண'கரம், எவ்விதமாற்றமும் பெருமல், 'பெண்டு' என்பதிலும் வருதல் காண்க. ஆனல், 'பெட்டை' என்ற சொல்லில் அதே 'ண'கரம், தன் பின்வரும் மெய்யெழுத்தாக மாற்றப்பட்டுழி, வல்லொலி வல்லெழுத்தாக மாற்றப்பட்டுளது. மிகப் பழைய வடிவமாகிய ('எண்டு' என்ற) கன்னட எண்ணுப் பெயர் தமிழில், 'எட்டு' என வருதல் காண்க. 'பெட்டை' என்ற சொல்லிற்குப் பதிலாக வரும் 'பெடை' என்ற தமிழ்ச் சொல்லில், 'ண'கரம் முற்றிலும் மறைந்துவிட்டுளது.

4. பல்லெழுத்துக்கள்: த், த், ந்:—

(i) இரண்டு உயிர்களுக்கிடையில் வரும் 'த'கரம் அல்லது 'த'கரம், தமிழில் 'ர'கரமாக மாறும். தலேவளியெழுத்தாய 'ட'காமும், 'ழ'காமும் ஒன்றுபிறிதாக மாறும்மாற்றத்தின்கண், சில இடங்களில், 'ழ'கரம் தொன்மை யுடையதாகவும், 'ட'கரம் அதன் திரிபாகவும் தோன்றும். ஆனல்' ஈண்டு, 'த'கரமே தொன்மை வாய்ந்ததாகவும், அதுவே, 'ர'கரமாகத் திரிந்ததாகவும் காணப்படும். 'த'கரம், 'ர'கரமெனத் திரிந்தவழி, திரிந்த ரகரம், பல்லெழுத்தைப் போன்று ஒலிக்கப்பெறும் ஆதலாலும், 'த'கரவொலியோடு பெரிதும் ஒத்துளது ஆதலாலுமே, இம்மாற்றம் இடம் பெற்றுளது. தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில், முன்னும் பின்னும் உயிரடுத்துவர வரும் 'த'கரம், 'ர'கரம் அல்லது 'ற'கரமாகத்திரிதல், எழுத்தறிவில்லா ஏழை மக்கள் மொழியிலேயே காணப்படும். ஒரோவழி, எழுத்து நடையிலும், இம்மாற்றம், இடம்பெற்றுவிடுகிறது. 'விதை' என்ற சொல்லிற்குப் பதிலாக, 'விரை'

என்பது வருதல் காண்க. ஒருசில ஒருமைப் பெயர்களைச் சார்ந்து, எழுவாய் ஒழிந்த ஏனைய வேற்றுமையுருபுகளை ஏற்க நிற்கும் சாரியையாகிய 'அத்' என்பது, கன்னடத்தில், சில இடங்களில் 'அர்' என மாறும். "இது என்ற சொல், ஆறும்வேற்றுமை உருபேற்றவழி 'இதர' (இத் + அர் + அ) என வருதலை மரம் என்ற சொல், அதே வேற்றுமையுருபேற்ற வழி, 'மரத' (மர் + அத் + அ) என வருதலோடு ஒப்பிட்டுணர்க. ஈண்டு, 'த்'கரம், 'ர்'கரமாகவோ, அல்லது அதற்கீடான பிறிதொன்றாகவோ திரிதல், ஒலி நயம் குறித்தே வந்துளது. 'இதத' என்ற ஒலி, கேட்கப் பொறாக் கடின ஒலியாதல் உணர்க; 'மரர்' என ஒலிப்பதும், அக் குறைபாட்டிற் குறையாமை உணர்க. கன்னடச் சொல் 'இதர' என்பதில் வரும் 'அர்' தமிழ்ச்சொல் 'இதன்' என்பதில் வரும் 'அன்' சாரியையோடு ஒப்புடையதாகக் கருதுவர் பேராசிரியர் குண்டர்ட். அஃது அங்ஙனமே யாயினும், தமிழில், குறிப்பாகத் தென்பகுதியில், 'த்'கரம், 'ர்'கரமாகத்திரிதல், ஐயத்திற்கிடனில்லா தொன்ற முடிபாம். 'த்'கரம், 'ர்'கரமாக மாறும் இம்மாற்றம், வட இந்தியமொழிகள் அறியாதவொன்றன்று. அவ்வின மொழிகளில், 'த்'கரம், 'ர்'கரமெனத் திரிதலோடு நில்லாது, அதே 'ர்'கரம், 'ல்'கரமென மேலும் திரிதலும் நிகழ்கிறது. இந்துஸ்தானியிலும், பெங்காலியிலும் அதுபோலும் நிகழ்ச்சிகள் சில நிகழ்கின்றன. பத்து எனப் பொருள் படும் 'தெஸ்' என்ற சொல், தொடரெண்களில் 'ரஹ்' என்றாகும்; 'பா-ரஹ்' = பன்னிரண்டு, பதினாறு என்ற தொடரெண்ணில், 'ர்'கரம், 'ல்'கரமாகத்திரிதல் நிகழ்ந்துளது; அச்சொல், 'ஸோ-ரஹ்' என வருதற்குப் பதிலாக 'ஸோ-லஹ்' என வருதல் காண்க. பிராகிருதமொழியும், 'த்'கரத்தை, 'ர்'கரமென மாற்றுகிறது. பத்து என்று பொருள் படும் அம்மொழிச் சொல், சமஸ்கிருத 'தஸ' என்ற சொல்லின் மெலிந்த வடிவமாகிய 'தஹ' என்பதாகும். 'தஹ' என்ற அச்சொல், அம்மொழித் தொடரெண்ணுப் பெயர்களில் 'ரஹ' என வருதல் காண்க. இந்நிகழ்ச்சிகளிலும், வங்காளம், மராத்தி ஆகிய மொழிகள், இறந்தகாலச் செயப்

பாட்டுவினை காட்டும் குறியாக, 'ந'கரம் அல்லது 'த'காரத்திற்குப் பதிலாக, 'ல'கரத்தை மேற்கொள்வதிலும், திராவிட மொழியாட்சி, வடஇந்தியா முழுதும் பண்டு நிலவியிருந்தது என்ற உண்மையை நாட்டவல்ல நல்ல சான்றுகள் உள என எனக்குத் தோன்றுகிறது. அம்ப்ரியன் மொழியும், 'த'கரத்தை, 'ர'கரமென மாற்றுவதை முறையாக மேற்கொண்டுளது. 'செதெஸ்' என்பது, அம்மொழியில் 'செரெஸ்' என எழுதப்பட்டுளது. இம் மாற்றம், தமிழில் உள்ளவாறு, ஈருயிரிடையிலேயே நிகழ்கிறது.

(ii) 'ந'கரம் அல்லது 'த'கரம் மலேயாளத்தில் 'ல'கரமென மாறும். இச்சிறப்பியல்பு, சமஸ்கிருத மொழியினின்றும் கடன் வாங்கிய சொற்களிலேயே காணப்படும். தாமரை எனப் பொருள்படும் சமஸ்கிருத 'பத்ம' 'பல்த்மம்' என வரும். திருவாங்கூரில் கோயில் கொண்டிருக்கும் திருமாலின் பெயராகிய 'பத்ம-நாப' என்ற சொல், 'பல்த்ம-நாப' எனவும், கொச்சைமொழியில் 'பல்பு-நாப, எனவும் வரும். உள்ளக்கருத்து என்று பொருள்படும் 'தாத்பர்ய' என்ற சமஸ்கிருதச் சொல், 'தால்பர்யம்' என ஆகும். 'தான்' எனும்சாரியை, வேற்றுமை உருபேற்க நெடுமுதல் குறுகி வந்த வடிவாய 'தன்' என்பதன் திரிபும், 'தந்' என ஒலிக்கப் பெறுவதுமாய 'தற்' என்பது, சிற்சில இடங்களில் 'தல்' எனவும் ஒலிக்கப்பெறும்.

(iii) 'த'கரம் அல்லது 'த'காரம், சில இடங்களில் 'ச'கரம் என மாறும். பெயரின் சொல்லாக்க உருபுகளில் 'த'கரத்திற்குப் பதிலாக, 'ச'கரத்தை மேற்கொள்ளும் மாற்றம், தமிழ்மொழியில் நிகழ்கிறது. நேரிய வடிவாய 'பெரிது' என்பதற்குப் பதிலாகப் 'பெரிசு' என்ற சொல் ஆளப்படுதல் காண்க. கொச்சைத் தமிழில், ஆண்டு நிறையளவைக் குறிக்க வழங்கும் 'வயசு' என்ற சொல், சமஸ்கிருத 'வயஸ்' என்பதினின்றும் நேரே பெறப்பட்டதன்று. 'வயஸ்' என்ற சமஸ்கிருதச் சொல்லோடு ஒத்த வழக்காறுடைய 'வயது' என்ற தமிழ்ச்சொல்லினின்றே அது

தோன்றியதாகும். இம்மாறுதலைத் 'த'கரம், தெலுங்கு மொழியிலும் பெரும்அளவில் பெறுகிறது. மலையாளத்தில், குறிப்பாக அதன் கொச்சைமொழியில், 'த'காரமும், 'ச'காரமும் தம்முள் மாறிக்கொள்கின்றன. இம்மாறுதல் பற்றிய நகைப்பூட்டும் சான்றொன்றைப் பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் குறிப்பிடுவர் அந்நாட்டுக் கல்லாமக்கள், கடவுளை வணங்க என்ற பொருளில், 'தை வத்ரெசேவிக்க' என்பதற்குப் பதிலாக,'சைவத்தெ தேவிக்க என்று வழங்குவதாக அவர் கூறுவர். திராவிட மொழிகளில், பெயரைக் குறிப்பிடும் சொல்லில், 'த'கரம், 'ச'காரமாக மெலிய, அந்த 'ச'காரமும், மறுவலும் 'ய'காரமாக மெலிய, இறுதியில் அந்த 'ய'காரம் அடியோடு மறைந்துபோகும் அரிய நிகழ்ச்சியொன்றை முன்னரே கண்டோம். அச்சொல், துளுமொழியில் 'புதர்' எனவும், பழங்கன்னடத்தில் 'பெசர்' எனவும், செந்தமிழ் நடையில் பெயர் எனவும் வந்து இறுதியில் இன்றைய தமிழில் 'பேர்' என ஆம். துதமொழியில் 'த'கரம், சில இடங்களில் 'த்ஷ்' என்ற ஒலியுடையதாகும்; ஐந்து என்று பொருள்படும் கன்னட 'ஐது,' அம்மொழியில் 'உத்ஷ்' என ஆதல் அறிக.

(iv) 'ந்த்' எனும் இணையொலி, தமிழில் 'ஞ்ச்' எனும் ஒலியதா மாறும். தன் முன்னே மூக்கினம்வரின், 'ச'கரம், 'ஜ'கரமென ஒலிக்கப் பெறுமாதலின், 'ஜ'காரம், 'ச'கரத்தோடொத்ததாகவே கொள்ளப்படும். ஆகவே, 'ஜ'கரத்தின் ஒலி, 'ச'காரத்தின் ஒலியைக் குறிக்கவரும் வடிவெழுத்தாலேயே எழுதிக்காட்டப்பெறும். 'ந்த்' எனும் இவ்விணையொலியில் வரும் பல்லெழுத்தாகிய 'ந'கரம், அண்ண இடமூக்கெழுத்தாகிய 'ஞ'காரமெனத்திரியும். 'ந்த்' எனும் இவ்விணையொலி, 'ஞ்ச்' எனும் ஒலியதாத்திரியும் இத்திரிபு, 'இ'கர 'ஐ'கார உயிர்களுக்குப்பின் வந்துழியே நிகழும். பொதுவாக, இது, கொச்சைத் தமிழிலேயே ஒலிக்கப்பெறும். ஒரோவழி, இலக்கண நடையிலும் இடம் பெறும். 'ஐந்து' என்ற தமிழ் எண்ணுப்பெயர், 'ஐஞ்சு' என ஆதல் காண்க. அதுவே, மறுவலும் 'அஞ்சு' எனத்

திரியும்; 'அஞ்சு' எனும் இச்சொல் தமிழிலக்கியங்களினும் இடம் பெற்றுளது. 'ந்த்' என்னும் ஒலி, 'ஞ்ச்' எனும் ஒலியாகத் திரிதல் மலையாள மொழிக்கண், இலக்கிய நடையொடு பொருந்திய திரிபு என ஏற்றுக்கொண்ட திரிபாம். (எண்ணுப்பெயர் என்ற தலைப்பில், ஐந்து என்ற உள்தலைப்பில் காண்க.)

(v) 'இ'கர, 'ஐ'கார உயிர்களுக்குப் பின் வரும் இரட்டைத் 'ந்'கரம், தமிழில், இரட்டைச் 'ச'கரமாக மாறும். தமிழ் வடிவெழுத்துக்களை நோக்கின், இத்திரிபு, இரட்டைத்'த'கரம், இரட்டைச்'ச'கரமாகத் திரிந்ததாகவே தோன்றும். ஆனால், மெல்லொலி வல்லெழுத்துக்கள், இரட்டிக்கப்பெறின், வல்லொலி வல்லெழுத்தாக மாறும் என்பது முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இரட்டைத் 'த'கரமாகவும், இரட்டைச் 'ச'கரமாகவும் எழுதப்படினும், அவை முறையே இரட்டைத் 'ந்'கரமாகவும், இரட்டைச் 'ச'கரமாகவுமே ஒலிக்கப்பெறும்; அவ்வாறு அவை இணைந்தவழி, அவைபெறும் ஒலி அதுவேயாதலின், இரட்டைத் 'ந்'கரம், இரட்டைச் 'ச'கரமாகத் திரிதல், எளிமையும், இயற்கையோடியைந்ததுமாகும். இலக்கிய நடையின் வேறுபட்ட பேச்சுத்தமிழில், மக்கள் எல்லாரானும், இரட்டைத் 'ந்'கரம், இரட்டைச் 'ச'கரமாகவே, பெரும்பாலும் ஒலிக்கப்படுமெனினும், வினையடிப் பெயர்களைத் தோற்றுவிப்புழி, அதுவும், 'ர'கர 'ழ'கர மெய்களுக்குப் பின்னரல்லது, இலக்கணத் தமிழின் ஏனைய இடங்களில் தோன்றுவது அரிது. விதிப்படி 'உணர்ந்தி' என்பதே வரவேண்டியிருப்பவும், தமிழில், 'உணர்ச்சி' என்பதே வந்துளது. இரட்டைத் 'ந்'கரம் திரிந்து, 'ச'கரமாக மாறுதல், மலையாளத்தில், பேச்சு மொழியில் இடம்பெறுதலோடு 'இ'கர, 'எ'கர உயிர்களுக்குப் பின், இலக்கண நடையிலும் இடம்பெறுகிறது. 'ச'கரம் ஒலிக்கப்படுவதோடு, எழுதவும்படுகிறது. 'சிரிச்ச' என வரும் அம்மொழிச் சொல்லைச், 'சிரித்த' என்ற தமிழ்ச் சொல்லோடு ஒப்பிட்டுணர்க.

(vi) 'ந'கரம், 'ம'கரமெனத் திரியும்; இம் மாற்றம் மிகமிக அருகியே தோன்றும். நீங்கள் என்று பொருள் படும் 'மீரு' என்ற தெலுங்குச் சொல், 'நீர்' என்ற தமிழ்ச் சொல்லோடு ஒப்புடையதாகக் காணப்படுவதும், அஃதோடொத்த, அல்லது இனமான தெலுங்குச் சொற்களை நோக்க எதிர்பார்க்கப்படுவதுமாய 'நீரு' என்ற சொல்லின் திரிபாகக் காணப்படுகிறது. (சுட்டுப் பெயர் என்ற தலைப்பினைக் காண்க.)

5. இதழ் எழுத்துக்கள்: ப், ப், ம்:—

(i) 'ப'கரம் கன்னடத்தில், 'ஹ'கரமெனத்திரியும். இவ்விதி, இன்றைய கன்னடத்தில் வழங்கும் திராவிடச் சொற்கள், சமஸ்கிருதச் சொற்கள் ஆய எல்லாச் சொற்களிலும் மொழிமுதல் எழுத்தாகவரும் 'ப'காரத்திற்குப் பொருந்தும். தெலுங்கில் 'பதி' எனவும், தமிழில் 'பத்து' எனவும் வரும் எண்ணுப்பெயர் கன்னடத்தில் 'ஹத்து' என ஆம். இதைப் போன்றே, செல்வம் என்ற பொருளுடையதும், சமஸ்கிருதத்தினின்றும் வந்து வழங்குவதுமாய 'பண' என்ற சொல், இன்றைய கன்னடத்தில் 'ஹண' என வரும். 'ப'கரம், 'ஹ'கரமாகத்திரியும் இத்திரிபு, மிகமிக அண்மைக் காலத்தே தோன்றியதாகவே தோன்றுகிறது. பழங்கன்னடத்திலும், நீலகிரியில் வாழும் படகர் மொழியிலும், 'ப'கரம், தன் இடத்தை விடாமல் பற்றிக்கொண்டுளது. கன்னடத்தையடுத்து வடக்கே வாழும் மொழியாகிய மராத்தியிலும், இதுபோன்ற மாறுதல் ஒரோவழி நிகழ்கிறது. இருந்த அவன் என்ற பொருள்படவரும் 'ப்ஹூதஸ்' என்ற சமஸ்கிருத எச்சம், மராட்டியில் 'ஹோதோ' என மாறியுளது; 'ஹோதோன்' நான் இருந்தேன். நான் இருந்தேன் எனப் பொருள் படும் 'ப்ஹூதே - ஸ்மி' என்ற சமஸ்கிருதச் சொல், பிராகிருதமொழியில் 'ஹோ-மி' எனத் திரிவதையும் இத்துடன் ஒப்பிட்டுக் காண்க. 'ப'கரம், 'ஹ'கரமெனத் திரிதல், அர்மீனிய மொழியிலும் காணப்படுகிறது. அம்மொழியில் அடி என்ற பொருளில்வரும் 'பெத்' என்ற சொல்லிற்குப்

பதிலாக, ஹெறந்' என்பதும், தந்தை என்ற பொருளில் வரும் 'பய்ர்' என்ற சொல்லிற்குப் பதிலாக 'ஹெய்ர்' என்ற சொல்லும் வழக்காற்றில் உள்ளன.

இதே திரிபு கீழ்க்கோடி நாடுகளிலும் காணப்பெறுவது வியப்பிற்குரியதே. சீனமொழியில் 'ப'கரம் என வருதல், ஜப்பான் மொழியில் முதற்கண் 'எப்' என ஆகிப் பின்னர் 'ஹ'கரம் என மாறுகிறது.

(ii) 'ப'கரத்தின் மெல்லொலி வல்லெழுத்தாகிய 'ப'கரம், சில இடங்களில் மகரம் எனத் திரியும். தமிழ், தெலுங்குச் சொற்களை நோக்க, 'தொம்-பதி' என வர வேண்டிய ஒன்பது எனும் பொருள்கொண்ட தெலுங்குச் சொல், 'தொம்-மிதி' என உளது. இதில், பத்து எனப் பொருள்படும் தெலுங்குப்'பதி', 'மிதி' எனத் திரிந்துளது என்று அவர்கள் கூறுவர் எனப் பொருள்படும். 'என்பர் என்ற தமிழ்ச்சொல், செய்யுட்கண் 'என்மர்' எனத்திரியும். 'உண்' எனும் வினையடியாகப் பிறந்து, உண்ணுவதற்காக என்ற பொருள் தோன்றவரும் எதிர்கால வினையெச்சமாகிய தமிழ், 'உண்பான்' மலையாளத்தில் 'உண்மான்' என்றாகும், கொச்சைத் தமிழில் 'ம'கரத்தின் பின் ஒலி நயம் கருதி, 'ப'கரம் இணைக்கப்படும். தெலுங்கில் 'பாமு' எனவரும் 'பாம்பு' என்ற தமிழ்ச்சொல்லில் உள்ள 'பகர உகரம், பெயர்ச்சொல்லாக்க உருபாக, ஆண்டுவரும் 'ம'கரமே, ஒலிநயம் கருதி வந்துள்ளமையான், 'ம'கரத்தின்பின் ஒலிநயம் கருதிப் 'ப'கரம் இணைந்ததற்கான எடுத்துக்காட்டாக இச்சொல்லைக் கொண்டிலேன். இப்பொருள் குறிக்கும் 'ஹாவு' என்ற கன்னடச் சொல்லையும் நோக்குக. 'ம'கரம் மூல ஒலியாகப் 'ப'கரமே ஒலிநயம் கருதியதாக அமைந்த எடுத்துக்காட்டுக்கள், பேச்சுத் தமிழில் பல உள்ளன. 'கோத்ஹும' என்ற சமஸ்கிருதச் சொல்லினின்றும் பிறந்த 'கோதுமை' என்ற சொல் பொதுவாக 'கோதும்பை' என ஒலிக்கப்படுதல் காண்க.

(iii) தமிழில், 'ப'கரம், பெரும்பாலும் 'வ'கரமாகத் திரியும். பெரும்பாலான பிறவினைச் சொற்கள், தமிழில் 'ப'கரம் அல்லது இரட்டைப் 'ப'கரத்தால் எதிர்காலம் உணர்த்துகின்றன. அதே சொற்கள் தன்வினைச் சொற்களாய் நின்று, எதிர்காலம் உணர்த்த வந்துழி, எதிர்காலம் உணர்த்தும் இடைநிலையாகப் 'ப'கரத்தின் மெல்லொலி வல்லெழுத்தாய 'ப'கரமேவர எதிர்நோக்கு வோம். வேர்ச்சொற்கள் மூக்கின மெய்யீறாக வந்தவழி, இப் 'ப'கரம் தோன்றுகிறது; ஆனால், அவ்வேர்ச்சொல், உயிர் ஈறாக முடிந்தவழி, 'ப'கரம், பொதுவாக 'வ'கரமாகத் திரிகிறது. (வினைச்சொல் எனும் பகுதியைக் காண்க.) தமிழ்ச்செய்யுட்களில், 'ப'கரம்' 'வ'கரமாகத் திரியாது, முன்கூறிய ஒலிமுறையையொட்டி, ஒரோவழி 'ம'கர மாகத் திரிகிறது.

(iv) 'ம'கரம், 'ன'கரமாகத் திரியும். தமிழில், இம் மாற்றம், பெரும்பாலும் எழுவாய்க்கண் வரும் அஃறிணைப் பெயர்ச் சொற்களிலேயே காணப்படும். அச்சொற்கள், பொதுவாக 'ம'கர ஈறாகமுடியும். ஆனால், ஒரோவழி 'ன'கர ஈறாக முடிதலும் உண்டு. ஆக்கம் என்ற பொரு ளில் வரும் 'பல' என்ற சமஸ்கிருதச் சொல்லினின்றும் தோன்றிய தமிழ்ச்சொல்லாகிய 'பலம்' என்பதினும், 'பலன்' என்ற சொல்லே பெருவழக்குடைத்தாதல் உணர்க. 'கொலனு' என்ற தெலுங்குச்சொல், 'குளம்' என்ற தமிழ்ச் சொல்லோடு ஒன்றுதலும் உணர்க.

(v) 'ம'கரம், 'வ'கரமாகவும் மாறும். 'மாமன்', 'மாமி' என்ற தமிழ்ச்சொற்கள், கூர்க்மொழியில் 'மாவு', மாவி' எனத் திரிந்துள்ளன. 'நாம்', 'நீம்' எனவரும் பழங் 'கன்னடச்சொற்கள், இன்றைய பேச்சுவழக்கில், 'நாவு', 'நீவு' என மாற்றப்பட்டுள்ளன.

6. அரை உயிரெழுத்துக்கள் அல்லது இன்னொலி மெய்கள் : ய், ர், ல், வ், ழ், ள், ற் :—

(i) 'ய'கரம், 'ஞ'கரமாகவும், 'ந'கரமாகவும் மாறும். 'ய'கரமும், 'ந'கரமும் ஒன்று பிறிதாகத் தம்முள் மாறிக்

கோடல் உண்மையாயினும், சில இடங்களில், அவ்விரண்டனுள் மிகமிகத் தொன்மை வாய்ந்தது எது? என்பதை உறுதியாகக் கூறல் இயலாது. திராவிடமொழியின் தன்மையிடப்பெயர்கள், 'நான்', 'ஞான்', 'யான்', 'ஆன்' எனப் பல வடிவுடைத்து. இவற்றுள், 'நான்' என்பதினின்றும், 'ஞான்' என்பது தோன்ற, அதினின்றும் 'யான்' என்பது தோன்றிற்று என்றும் கொள்ளலாம். இதற்கு மாறாக, 'யான்' என்பதினின்றும் 'ஞான்' என்பது தோன்ற, அதினின்றும் 'நான்' என்பது தோன்றிற்று என்றும் கொள்ளலாம். சமஸ்கிருதத்தினின்றும் வந்து வழங்கும் சொற்களை ஆராய்ந்தவழி, சில இடங்களில், 'ய'கரமே தொன்மை வாய்ந்ததாக, 'ந'கரம் அதினின்றும் பிறந்ததாகச் சிறிதும் ஐயத்திற்கிடனின்றித் தோன்றும். நுகத்தடி என்று பொருள்படும் 'யுக' என்ற சமஸ்கிருதச் சொல், தமிழில் 'நுகம்' என வரும்; காலன் என்று பொருள்படும் 'யம' என்ற சமஸ்கிருதச்சொல், தமிழில் 'யமன்' என்றும் 'நமன்' என்றும் வரும். இப்பொருளில், வியப்பூட்டும் பல்வேறு வடிவுடைய சொற்கள் தமிழில் வந்து வழங்குகின்றன; அச்சொற்களாவன: 'யமன்', 'எமன்', 'ஞமன்', 'நமன்'. 'ஆங்கர்' என்ற ஐரோப்பியச் சொல், தமிழில் 'நங்கூரம்', 'நங்கூரம்' என வருதலையும் ஈண்டு உணர்க. 'யுக', 'யம' என்ற சொற்களில் வரும் 'ய'கரமே, 'ந'கரமாகத் திரிந்தது என்பது தமிழிலக்கண ஆசிரியர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்ப் பெயரெச்ச விகுதியாகிய 'ய'கரம், 'ன'கரமாக மாறுவதிலும் இதேமுறை நிலவக்காண்கிறோம். 'சொல்லிய' என்பது 'சொல்லின' என்றும், 'சொன்ன' என்றும் வரும்.

(ii) கன்னடத்திலும், துளுவிலும் 'ய'கரம், ஒரோவழி 'த'கரமாகத் திரியும். யார், எது, என்ன என்ற வினப்பொருளில் 'யாவ' என்று வரவேண்டிய கன்னடச் சொல், 'தாவ' என வருகிறது. அவ்வாறே, என்ன பொருள் என்ற பொருளில் 'யாவது' என்று வரவேண்டியசொல், 'தாவது' எனவும் வருகிறது. பின்னர்க் குறித்தசொல், துளுமொழியில் 'தாதவு' என்பதாம்.

(iii) 'ய'கரம், 'ச'கரமென மாறும். 'ச'கரம், 'ச'கரம், 'ஜ'கரம் இவையெல்லாம் தமிழில் 'ய'கரமெனத் திரியும் என்பது முன்னரே காட்டப்பட்டுளது. அஃது அவ்வாறு கவும், பேச்சுத் தமிழில், குறிப்பாகத் தென் மாவட்டங் களில், அதற்கு நேர்மாறாக, 'ய'கரம், 'ச'கரமெனக் கடின மாக்கப்பட்டுளது. எங்கே 'ச'கரம் இருக்கவேண்டுமோ, அங்கே 'ய'கரமும், எங்கே 'ய'கரம் இருக்கவேண்டுமோ, அங்கே 'ச'கரமும் ஒலிக்கப்படுகின்றன. 'பசி' கொச்சைத் தமிழில் 'பயி' எனத் தவறாக ஒலிக்கப்படுகிறது. அதே போன்று, 'வயறு', 'வசறு' என ஒலிக்கப்படும் 'ய'கரம், 'ச'கரமாகத் திரிந்து ஒலித்தல், தென்னாட்டில் மிகுதியாகக் காணப்படினும், அஃது அவ்விடத்திற்கு மட்டுமே உரிய தன்று. சென்னையில், சிறுவர் எனப்பொருள்படும் 'பய்யன் கள்' என்பது, 'பசங்கள்' என ஒலிக்கப்பெறும். அண்மை யென்று பொருள்படும் 'அயல்' என்ற சொல், 'அசல்' என ஒலிக்கவும், எழுதவும் படுகிறது. ஓரிடத்தில் 'ய'கரம், 'ச'கரமெனவும், மற்றோரிடத்தில் அதற்குமாறாக, 'ச'கரம், 'ய'கரமெனவும் மாறுவது யாதோ ஒருவகைத் தடுமாற்றத் தின் விளைவாகத் தோன்றுகிறதெனினும், ஒவ்வொரு முறைக்கும் யாதேனும் ஒரு காரணம் இருத்தல்வேண்டும் என்பது உறுதி. ஆகவே, அவ்விரு எழுத்துக்களுள், எது தொன்மையானது, எது அதன் திரிபு என்று கூறுவது எளிதன்று. ஈருயிர்கட்கிடையே உண்டாம் இடைவெளியை நிறைக்கும் உடம்படுமெய்யாக வரும் 'ய'கரம், 'ச'கரமாகத் திரிவதில்லை.

"இந்தி, பஞ்சாபி, பெங்காலி, ஒரியாமொழிகளில் முறையாகவும், மராத்தி, குஜராத்தி, சிந்திமொழிகளில் சிறிது குறைந்த அளவிலும் 'ய'கரம், 'ஜ'கரமெனத் திரி கிறது. பிற்கூறப்பட்ட மொழிகள் மூன்றிலும் 'ய'கரம், தன் இயற்கையொலியாகிய இன்னொலியை இழக்காமல் பெற்றுளது. வரருச்சி அவர்கள், இம்மாற்றத்தை மொழி முதல் 'ய'கரத்திற்கே கொள்வர். சொல்லின் இடைவரும் மெய்யெழுத்திலும், மொழிமுதல் மெய்யெழுத்திற்கே

அழுத்தமும் ஆற்றலுமதிகமாமாதலின், இடையில் வரும் 'ய'கரத்தினும், மொழிமுதல் 'ய'கரமே பெரும்பாலான சொற்களில் 'ஜ'கரமெனத் திரியும்" என்று கூறுவர் திருவாளர் பீம்ஸ் அவர்கள். (Beams: p. 249.)

(iv) 'ர'கரம், 'ற'கரமாக மாறும். இம்மாற்றம், அனைவரானும் எதிர்பார்க்கப்படுதல் போல், இயற்கையானதும், பெரும்பான்மையானதுமாகும். ஒருமொழியில், 'ர'கரம் வரும் இடத்தில், மற்றொருமொழியில் 'ற'கரம் வரும். மாறி வருவதுமுண்டு. நிறத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல் 'கரு' என்றும் வரும்; 'கறு' என்றும் வருமென்பது, ஒரே மொழியில் இவ்விரு எழுத்துக்களும் மாறி மாறி வருவதற்கு ஓர் உதாரணமாம். இவ்விரு சொற்களும், ஒன்றின் ஒன்று வேறுபட்டு தனித்தனிப் பொருளுடையவாய்த் தோன்றினும், பண்டு, அவையிரண்டும் ஓர் இயல்புடையனவே என்பது உறுதி.

(v) 'ர'கரம், 'ல'கரமாகத் திரியும் பல்வேறு இனத்தைச் சேர்ந்த மொழிகள் பலவற்றிலும், 'ர'கரமும், 'ல'கரமும் தம்முள் ஒன்று பிறிதாக மாறுதல் இயல்பாகும். ஸெட்ஷுவான் மொழிகளைப்பற்றிக் கூறும்பொழுது, பேராசிரியர் பிளீக் என்பார், "இம்மொழிகளில் வரும் 'ர'கரம், ஒருவகையான நிலையற்ற ஒலியுடையது. நிலைத்த ஒலியுடையது என்பதினும், 'ல'கர, 'ர'கர ஒலிகளுக்கிடைப்பட்ட ஒலியுடையது என்று கொள்வதில் உண்மையுளது." என்று குறிப்பிடுவர். திராவிட மொழிகளில், 'ர'கர 'ல'கரங்கள் தம்முள் மாறுவது ஒரு சாதாரண நிகழ்ச்சியாம். சில இடங்களில், 'ல'கரமே, 'ர'கரமாகத் திரிந்திருக்கும். ஆனால், பெரும்பாலான இடங்களில், 'ர'கரம் தொன்மையொலியாகவும், 'ல'கரமே அதன் திரிபாகவும் தோன்றும். திராவிட மொழிக்கேயுரிய 'ழ'கரமும், 'ள'கரமும் ஒன்று பிறிதாகத் திரியும் திரிபுகளில், 'ழ'கரம், 'ள'கரமாகத் திரிதலே இயல்பாகும். ஆனால், 'ர'கரம், 'ல'கரமெனத் திரிதல், எங்கும் நிகழக் கூடியதல்ல வாயினும், அத்திரிபு பெரும்பான்மையானதும், பேச்சுத்

தமிழிற்கே உரியதுமாகும். இத்திரிபு, மலையாளத்திலும், இயல்பாகக் காணப்படும். தமிழில், இது, மொழிமுதல் எழுத்துக்களிலேயே பெரும்பாலும் நிகழும். இத்திரிபு, திராவிடத்திற்கே உரிய வேர்ச்சொற்களில் எவ்வளவு மிகுதியாக நிகழ்கிறதோ, அவ்வளவு மிகுதியாகச் சமஸ்கிருத வேர்ச்சொற்களிலும் நிகழும். 'ரக்ஷ' என்பதினின்றும் பிறந்து, காப்பாற்று என்ற பொருள்கொண்டு நிற்கும் 'ரக்ஷி' என்ற சமஸ்கிருதச் சொல், கொச்சைத் தமிழில் 'லக்ஷி' அல்லது 'லட்சி' என ஒலிக்கப்பெறும். மொழிகளுக்கிடையில் வரும் 'ர'கரம், 'ல'கரமெனத் திரிதல் குறைந்தே காணப்படும். எனினும், தமிழில், 'ர'கரம் வருமிடங்களில், தெலுங்கில் 'ல'கரம் வரக் காண்கிறோம். பிறர் காணத் தோன்று என்று பொருள்படும் 'தெரி' என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் 'தெலியு' என வரும்; இச்சொல், 'தெளி' என்ற தமிழ்ச்சொல்லோடு ஒப்புடைத்துமாம். ஆனல், 'தெரி', 'தெளி' என்ற இவ்விரு தமிழ்ச்சொற்களும், ஒரே வேர்ச்சொல்லினின்றும் தோன்றிய இருவேறு சொற்களாம் என்றே நான் எண்ணுகின்றேன். இதைப்போலவே, தமிழ் 'ர'கரம், மலையாளத்தில், சொற்களுக்கிடையில் 'ல'கரமாக மாறுகிறது. கேடயம் என்று பொருள்படும் 'பரிசை' என்ற தமிழ்ச்சொல் மலையாளததில், 'பலிச' என வருதல் அறிக.

திராவிட மொழிகளில், சிறப்பாகத் தமிழ்மொழிக்கண், 'ர'கரம், 'ல'கரமாக மாறும் நிகழ்ச்சி, இன்றும் நின்று நிகழ்வதைக் காணின், 'ர'கர 'ல'கரங்கள் தம்முள் மாறும் இயல்பைப் பெற்றுள்ள பல்வேறு இனமொழிகளுக்கெல்லாம், பொதுப்பொருளாகிய, பழைய வேர்ச்சொற்களில், 'ர'கர ஒலியே மிக்த் தொன்மையான ஒலியாகும்; 'ல'கரம், அதினின்றும் தோன்றிய திரிபு ஒலியாம் என முடிவு செய்யப்பெறும். கருப்பு என்று பொருள்படும் திராவிட வேர்ச்சொல்லாகிய 'கரு' அல்லது 'கார்', அதே பொருள்படும் சமஸ்கிருத வேர்ச்சொல்லாகிய 'காால' என்பதோடு தொடர்புடையதாகக் கொள்ளின், சமஸ்கிருத

வேர்ச்சொல், திராவிட வேர்ச்சொல்லினும் காலத்தால் பிற்பட்டது என முடிவு செய்யப்படும். சித்திய இனமொழி கள் பலவற்றிலும் 'கர்' என்ற வேர்ச்சொல் காணப்பெறுவ தாலும், இம் முடிவு மேலும் உறுதி செய்யப்படும். 'க்ரிஷ்ன' என்ற சமஸ்கிருதச் சொல்லில், கருப்பு என்று பொருள்படும் 'க்ரி' என்ற வேர்ச்சொல் வருவதையும் இத்துடன் ஒப்பிட்டுக் காண்க.

'ர'கர, 'ல'கரங்கள் (இரண்டனுள் எது பழமையானது என்பதை எண்ணிப் பாராமலே) ஒன்று மற்றொன்றாக மாறுவது பெரும்அளவில் நிகழ்கிறது என்ற உண்மை, ஒன்றோடொன்று தொடர்பற்றனவாக இன்று தோன்றும் திராவிட வேர்ச்சொற்கள் பலவும், பண்டு தொடர்புற் றிருந்தனவே போலும் என நம்மை ஐயுறச் செய்கிறது. சிறுமை என்பதன் வேர்ச்சொல்லாகிய சிற் என்பதைச், சில என்பதன் வேர்ச்சொல்லாகிய 'சில்' என்பதோடும் பெருமை என்பதன் மற்றொரு வடிவமாகிய பருமை என்பதன் வேர்ச்சொல்லாகிய 'பர்' என்பதைப் பல என்பதன் வேர்ச்சொல்லாகிய 'பல்' என்பதோடும் ஒப்பிடுக. 'சிற்' என்ற வேர்ச்சொல்லின் மற்றொரு வடிவம் 'சின்' என்பதாம்.

(vi) 'ல'கரம், 'ர'கரமெனத்திரியும். 'ர'கரம், 'ல'கர மாகத் திரிதலே எங்கும் காணப்படுவதாகவும், 'ல'கரம், 'ர'கரமெனத்திரிதல், துளுமொழிக்கே உரிய சிறப்பியல் பாக ஒரோவழி காணப்படுகிறது. துளுமொழி, ஏனைய திராவிட மொழிகளின் ஈற்று 'ல'கரத்தை, 'ர'கரமென மாற்றுகிறது. தமிழில் 'வில்' எனவும், கன்னடத்தில் 'பில்லு' எனவும் வரும் சொல், துளுவில் 'பிர்' என்றே வரும். சிந்துநதிக்கு மேற்கில் வழங்கும் பிராஹுிமொழியி லும் இச்சொல் 'பில்ல' என்றே காணப்படுவதால், ஈண்டுக் காட்டிய சொற்களில், வரும் 'ல'கரமே தொன்மையான தாம் என்பதில் ஐயம்இல்லை. 'ல'கரம், 'ர'கரமாக மாறுவது மத்திய ஆசியாவிலும் நிகழ்கிறது. மஞ்சுமொழியின் 'ல'கரம், மங்கோலிய மொழியில் 'ர'கரமாகக் காணப்படும்.

(vii) 'ல'கரம், சில இடங்களில் வல்லின 'ற'கரமாகத் திரியும். 'நில்' என்ற தமிழ்ச்சொல்லை 'நிறுத்து' என்ற சொல்லோடு ஒப்பிட்டுணர்க.

ஈரான் நாட்டுப் பழைய மொழியாகிய ஸெண்ட் மொழியிலும், பழைய பர்ஷிய மொழியிலும் 'ல'கரம் வழங்குவதில்லை. அதற்குரிய இடத்தை 'ர'கரமே முறையாக மேற் கொண்டுளது. தெலுங்குப்பெயர்ச்சொற்களின் பன்மைவிகுதியாய 'லு', ஒரோவழி, 'ரு' எனத் திரியும். 'ல'கரம், 'ர'கரமாகத் திரியும் இத்திரிபு, துளு மொழியில் முறையாக நிகழ்வது போலன்றித் தெலுங்கில் ஒரோவழியே நிகழும். தமிழில் வல்லின மெய்களுக்கு முன்வரும் 'ல'கரம் ஒலிநயம் கருதி மாற்றப்பெறின், அது 'ர'கரமாக மாறுமல், 'ற'கரமாகவே மாறும். 'பல்பல', 'பற்பல' என ஆதலறிக. இந் நிகழ்ச்சி, 'ல'கரம், 'ர'கரமெனத் திரிதல் தமிழின் ஒலி முறையோடு மாறுபடுவதன்று என்பதை விளக்குகிறது.

(viii). கூமொழியில், 'ல'கரம், 'ட'கரமாகத் திரிகிறது; 'ட'கரம், 'ள'கரமாகத் திரிதல் பொதுவான நிகழ்ச்சி. ஆனல், 'ல'கரம், 'ட'கரமென முறையாகத் திரிதல் இம் மொழியின் சிறப்பியல்பாகும். தெலுங்குச் சொற்களாய 'பாலு', 'இல்லு' என்பன கூமொழியில் முறையே 'பாடு', 'இட்டு' எனவரும், வடஇந்திய மொழிகளில், சமஸ்கிருத 'ல'கரம், 'ட'கரமாகத் திரிவதையும் இத்துடன் ஒப்பிடுக. பனைமரத்துக்கள் என்று பொருள்படும் 'தாலி' என்ற சமஸ்கிருதச் சொல், அம்மொழிகளில் 'தாடீ' என ஆம். தாடீ என்ற இச் சொல்லிலிருந்தே 'டாடி' என்ற ஆங்கிலச் சொல் வந்துளது. அம்மரத்தைக் குறிக்கும் தெலுங்குச் சொல் 'தாடு' என்பது. அது இந்தியில் 'தாட்' அல்லது 'தாழ்' என்ற சொல்லோடொக்கும்.

(ix) ஏனைய திராவிடமொழிகளில் வரும், 'ர'கரமும், 'ழ'கரமும், 'ல'கரமும், 'ள'கரமும், துதவர் மொழியில் 'ர்ஷ்', 'ர்ஸ்', 'ர்ஸ்ஷ்' என்ற ஒலியுடையவாத் திரியும்.

(x) கன்னடத்தில் மொழிமுதல் 'வ'கரம், 'ப'கரமாக வன்மை பெறும். 'வாழ்' என்ற தமிழ்ச்சொல் கன்னடத்தில் 'பாள்' என்றாகும். கன்னடத்தில் மொழியிடை 'வ'கரம், 'ப'கரமெனத் திரியாது, ஒருவகை 'வ'கர ஒலியாக மெலியும். இம்மெலிந்தவொலி, தமிழர்களிடையே கல்லாதார் ஒலிப்பு முறையிலும் ஒரோவழி காணப்படும். மலையாளத்தில், இவ்'வ'கரத்தின் ஒலி, ஆங்கில 'V' ஒலிக்கும், 'W' ஒலிக்கும் இடைப்பட்ட ஒலியாக ஒலிக்கிறது. இம்மெல்லிய ஒலி, பெரும் அளவு கொச்சைத் தமிழிலும் காணப்படுகிறது.

(xi) ஒலிநயம் குறித்து வரும் தமிழ் 'வ'கரம், தெலுங்கில் 'க'கரமாகத் திரியும். 'ய'காரமும், 'வ'காரமும் தமிழில் இரு உயிர்களுக்கிடையே வரும் உடம்படுமெய்யாக மேற்கொள்ளப்படும். ஆகவே, தெலுங்கில், 'வ'கரம் வரும் இடங்களிலேயேயல்லாமல், 'ய'கரம் வரும் இடங்களிலும், 'க'கரம் மேற்கொள்ளப்படுகிறது. தமிழ் 'அறுவர்' என்ற சொல்லை, அதே பொருள்தரும் தெலுங்கு 'ஆறுகுரு' என்ற சொல்லோடும், உயர்வுகுறித்து வரும் ஒருமைப் பன்மை விகுதியாகிய 'காரு' என்பதை, அச்சொல்லினும் பரந்த வழக்காறுள்ள 'வாரு' என்பதோடும் ஒப்பிடுக. செந்தமிழ் நடையின் சில இடங்களில், எதிர்கால இடை நிலையாக, 'வ'கரத்திற்குப் பதிலாக, 'க'கரம் மேற்கொள்ளப்படுவதன் காரணத்தை இந் நிகழ்ச்சி விளக்குவதாகும். 'செய்வேன்' என்பதற்குப் பதிலாகச் 'செய்கேன்' என்பது வருதல் காண்க.

(xii) 'வ'கரம், மலையாளத்தில், 'ம'கரமாகத் திரியும். தமிழில் 'ப'கரம் வருமிடங்களில், மலையாளத்தில் 'ம'கரம் வரும் என்பது முன்னரே அறிவிக்கப்பட்டுளது. தமிழ் 'உண்பான்', மலையாளத்தில் 'உண்மான்' என வருதல் காண்க. ஆனால், இம்மாற்றம், 'வ'கரம், 'ம'கரமாகத் திரிவதன் விளைவாகத் தோன்றியதாகக் கோடல் கூடுங்கொல் எனும் ஐயப்பாடும் உடைத்து. பார்த்தற்பொருட்டு எனும் பொருளுடைய தமிழ் எதிர்கால வினையெச்சமாகிய

'காண்பான்', மலையாளத்தில் 'காணுவான்' அல்லது 'காண்மான்' என வரும். 'வாழ்வவன்' அல்லது 'வாழ்பவன்' என்ற தமிழ்ச்சொல், மலையாளத்தில் 'வாழ்வவன்' அல்லது 'வாழுமவன்' என வரும். 'மலையாளத்தைப் பொறுத்த மட்டில், 'ப'கரம் அடியோடு மறைந்துவிட, திரிதல் 'வ'கர, 'ம'கரங்களுக்கிடையிலேயேயுளது. 'வ'கர, 'மகரங்கள் தம் முள் மாறுதல் பின்னிஷ்-உக்ரேயன் மொழியிலும் நிகழக் கண்டேன்; பின்னிஷ்மொழியில், 'ம'கரம் வருமிடங் களில், அங்கேரிய மொழியில் 'வ'கரம் வரும்.

(xiii) 'ழ'கரம், ஐந்து மெய்யெழுத்துக்களாகத் திரிகிறது. சில இடங்களில், அது 'ண'கரமாகத்திரியும். தமிழ் 'முழுகு', தெலுங்கில், 'முணுகு' என்றும், தமிழ் 'சூழி', கன்னடத்தில் 'சூணி' என்றும் ஆம். பொதுவாக 'ழ'கரம், தெலுங்கில் 'ட'கரமாகத் திரியும். தெலுங்கோ அல்லது இன்றைய கன்னடமோ, 'ழ'கர வொலியைப் பெற்றிருக்கவில்லை. என்றாலும், பழங்கன்னடத்தில், அது தெளிவாகக் காணப்படுகிறது. ஒருசில இடங்களில், 'ழ'கரத் திற்குப் பதிலாக, தெலுங்கு 'ண'கரம் அல்லது 'ள'கரத்தை மேற்கொள்கிறது. ஒருசில இடங்களில், 'ழ'கரத்திற்குப் பதிலாக, வேறுமெய்யெழுத்தெதையும் பெறாமல், அவ் வெழுத்தை அறவே துறந்தும் விடுகிறது. ஆனால் பெரும் பாலான இடங்களில், அது 'ழ'கரத்தை, 'ட'கரமாக மாற்று கிறது. கன்னடத்தில், 'ழ'கரம், பொதுவாக 'ளகரமாகத் திரிகிறது. இத்திரிபொலி, தமிழ்நாட்டின் தென்மாவட்ட மக்கள் பேசும் மொழியிலும் காணப்படும். மலையாளத்தில், 'ழ'கரம், ஒரோவழி, 'ள'கரமாக மாறும். ஆனால், அது பெரும்பாலும், 'ய'கரமாகவே மாறுகிறது. மலையாளநாடு எனப்பொருள்படும் 'மலையாழ்ம' என்றசொல், 'மலயாய்ம' என்றே எழுதவும், ஒலிக்கவும்படுகிறது. துளுமொழியில் 'ழ'கரம், 'ர'கரமாக மாறுகிறது. 'பொழுது' என்ற தமிழ்ச் சொல், துளுவில் 'பொர்து' என ஆம்; கன்னடத்தில் இந்த 'ர'கரம், பின்வரும் மெய்யெழுத்தாக மாற்றப்படுகிறது. 'பொர்து' என்ற துளுமொழிச்சொல், கன்னடத்தில்

'ஹொத்து' என ஆதல் அறிக. இச்சொல்லுடன் 'பொத்து' என்ற தெலுங்குச் சொல்லையும் ஒப்பிடுக. ஆக, 'ழ'கரம், 'ண்', 'ட்', 'ள்', 'ய்', 'ர்' என்ற ஐந்து மெய்யெழுத்துக்களாகத் திரிதலோடு, தனக்குப் பின்வரும் மெய்யெழுத்தாகத் திரிந்தும்விடும் என்பது காணப்பட்டது.

'ழ'கரம், 'ள'கரமாக மாறுவதும், 'ழ'கரம், 'ட'கரமாக மாறுவதும் ஓரினமொழிகட்கிடையே காணப்படும் ஒலி முறையின் இன்றியமையாப் பகுதிகளாம். தமிழில் 'ழ'கரம் வரும் இடங்களில், தெலுங்கில் பொதுவாக 'ட'கரம் வரும்; கன்னடத்தில் எங்கும் 'ள'கரம் வரும்என்பதே அவ்வொலி முறையாம். தமிழ், 'கோழி' தெலுங்கில் 'கோடி' எனவும், கன்னடத்தில், 'கோளி' எனவும் வருதல் காண்க. தமிழில் 'ஏழு' எனவரும் எண்ணுப்பெயர், தெலுங்கில் 'ஏடு' எனவும், கன்னடத்தில் 'ஏளு' எனவும் வரும். எழ்நூறு என்ற தொடரெண்ணுப்பெயரைக் குறிக்கவரும் 'ஏள்நூறு' என்ற தெலுங்குச்சொல்லில், ஏழ் 'ஏழு' என்பதைக் குறிக்கவரும் 'ஏடு', கன்னட 'ஏளு' ஆக மாறியுளது. அப்பொழுது, இப்பொழுது எனச் சுட்டுப்பெயர்களோடு இணைந்து காலம் எனும் பொருள் குறித்துவரும் 'பொழுது' என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் பண்டு 'பொத்து' எனவும் ('இப்பொத்து'), பின்னர், 'புடு' எனவும் ('இப்புடு') மலையாளத்தில் 'போள்' எனவும் ('இப்போள்') வரும். ஆயினும், சொற்களின் ஈற்றில் வரும் 'ழ'கரத்தையே, மலையாளம், 'ள'கரமாக மாற்றும். இம்மெய்யெழுத்தைத் தொடர்ந்து உயிரெழுத்துவரின், 'ழ'கரமே கொள்ளப்படும். இன்றும் அன்றும் எனப் பொருள்படவரும் மலையாளச்சொல் 'இப்போழும் அப்போழும்' எனவருதல் காண்க. 'ட'கரமும், 'ழ'கரமும் எவ்வளவு நெருங்கிய உறவுடையவோ, அவ்வளவு நெருங்கிய உறவுடையவாம் 'ள'கரமும், 'ட'கரமும் என்பது இதனால் பெறப்படும். திராவிட மொழிகளிலும், வடஇந்திய மொழிகளிலும் இருப்பதைப் போன்றே, உக்ரேயன் இனமொழிகளிலும் 'த'கர, 'ல'கரத் திரிபு, ஒரு சிறப்பியல்பாகக் காணப்படுவதால், மொழிகளை இனவாரி

யாகப் பிரித்தற்கண், இம்மாற்றம் சிறந்தவோர் அளவுகோலாக மேற்கொள்ளப்படும். ஒஸ்டியாக் மொழியில் ஒரு சொல் 'ந'கரம் அல்லது 'த'கரத்தைக் கொண்டு எழுதப் பெறின், மாகியர், பின்னிஷ்மொழிகளில், அச்சொல் 'ல'கரத்தைக் கொண்டு எழுதப்படுகிறது.

இதையொத்த மாற்றம், இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் ஒரோவழி காணப்படுகிறது. கண்ணீர் என்று பொருள்படும் 'தக்ர்ய்ம' என்ற சொல்லை, அதே பொருள் படும் 'லச்ர்ய்ம' என்ற சொல்லோடு ஒப்பிடுக. இன்றைய உரோமானிய இனமொழிகள் பலவற்றிலும், இதுபோன்ற மாறுதல் இருப்பதாகக் கருதப்படும். ஆனால், சித்திய இனத்தைச் சேர்ந்த பல்வேறு மொழிகளிலும், இம்மாற்றம் அம்மொழிகளின் சிறப்பியல்பாய் அமைய, மேற்குறித்த மொழிகளில் இம்மாற்றம் அருகியே காணப்படும்.

(xiv) தமிழ் வல்லின 'ற'கரம், துளுமொழியில், பெரும்பாலும், 'ஜ'கரமாக மாறுகிறது. 'மூன்று' என்ற தமிழ்ச்சொல்லின் பண்டை உருவாகிய 'மூறு', துளுவில் 'மூஜி' என்றாகும். தமிழ் 'ஆறு', 'ஆஜி' என்றாகும். துளுவில் 'ற'கரம், 'த'கரமாகவும் மாறும். தமிழ் 'நூறு', 'நூது' என ஆதல் அறிக. மேலும் அது இடையின 'ர'கரமாகவும் மாறும். ஆக, இம்மெய்யெழுத்தின் வல்லொலியைக் கூடு மானவரை மெல்லொலி ஆக்குவதே துளுமொழியின் இயல்பு என்பது இதனாற் புலனும். 'ச'கரத்தோடு ஒப்புடையதாய 'ஜ'கரமாக, 'ர'கரம் மாறும் இம்மாற்றம், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் வரும் 'ச'கரம், 'ர'கரமாக மாறும் மாற்றத்தோடு முற்றிலும் மாறுபட்டதாம்.

(xv) வல்லின 'ற'கரம், தமிழில் ஒரோவழி 'ன'கரமாகத் திரியும். 'பிறகு' என்ற சொல்லில் வரும் 'பிற்', 'பின்' என்ற சொல்லோடு ஒப்புடைத்தாதல் உணர்க. அவ்வாறே, 'சிறு' என்பதும், 'சின்ன' என்பதோடு ஒப்புடைத்தாம்.

(xvi) துளுமொழியில், 'ள'கரம், 'ண'கரமெனத் திரியும். தமிழ், 'கேள்', துளுவில் 'கேண்' என ஆம். பற்றிக்

கொள் என்ற பொருளில், தமிழிலும், கன்னடத்திலும் 'கோள்' எனவரும் சொல், துளுவில் 'கோண்' என்றாகும். இச்சொல் தெலுங்கில் 'கொனு' என வரும். தமிழிலும் 'கொள்' என்பதில்வரும் 'ள'கரம், ஒலிநயம் கருதி, 'ண'கரம் எனத் திரியும்: கொண்டு என்ற சொல்லில், 'ள'கரம், 'ண'கரமாகத் திரிந்துளது காண்க.

(xvii) 'ள'கரம், மலையாளத்தில் 'ழ'கரமாகவும், அது மீண்டும் 'ய'கரமாகவும் மாறும். அந்நாட்டையும், அந்நாட்டுமொழியையும் குறிக்கவரும் சொல்லே இதற்குப் போதிய எடுத்துக்காட்டாம். 'ஆள்' என்ற சொல்லடியாகப் பிறந்த, 'ஆள்ம' என்பதற்குப் பதிலாக (இதுவே, ஒலிநயம் கருதி, தமிழில் 'ஆண்மை' என வரும்.) 'ஆழ்ம' என்பது வரும். 'மலயாழ்ம' என்பது 'மலயாய்ம' என மாறும் என்பது முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது.

7. இஸ்ஸொலி எழுத்துக்கள்: ஷ், ஸ்:—

திராவிட மெய்யெழுத்துக்கள், தம் இனமொழிகளில் பெறும் மாறுதல் பற்றிய ஆராய்ச்சி முடிந்துவிட்டதாக. இனி, சமஸ்கிருதத்தினின்றும், தமிழ் கடன்வாங்கிய சொற்களில் வரும் சமஸ்கிருதஇஸ்ஸொலியெழுத்துக்கள் பெறும் மாறுதல் பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்வாம்.

(i) சமஸ்கிருத வல்லின நாவழி இஸ்ஸொலியாகிய 'ஷ'கரம், செந்தமிழ்மொழி நடை யறியா வோர் ஒலியாம். அது ஒரோவழி, 'ச'கரமெனத்திரியும். இத்திரிபொலியே, தமிழகத்தின் தென் மாவட்டத்து மக்கள் பெரும்பாலோரால், இன்று மேற்கொள்ளப்படும் ஒலியாம். ஒருசில இடங்களில், மிகமிக அருகி, அது 'ழ'கரமென மாற்றப்படும். இத்தகைய மாற்றம் குறித்த எடுத்துக்காட்டுக்கள் சில பழைய மலையாளமொழியில் இடம்பெற்றிருப்பதைப் பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் எனக்கு அறிவித்துள்ளார்கள். இழப்பு என்று பொருள்படும் 'க்ஷய'

என்ற சமஸ்கிருதச்சொல், மலையாளத்தில் 'கிழயம்' என்றும், சமஸ்கிருத 'லக்ஷ்மணன்', மலையாளமொழியின் பழைய இராமாயண ஏடுகளில் 'இலழ்க்கணன்' என்றும் எழுதப்பட்டுள்ளன. 'ழ்க்' என்ற மலையாள ஒலி, 'க்ஷ்' என்ற சமஸ்கிருத ஒலிக்குப் பதிலாக நிற்கிறது. 'ஷ'கரம், ஒரோவழி, தனக்குப் பின்வரும் 'ண'கரமாகத் திரிதலும் உண்டு. சமஸ்கிருத 'விஷ்ணு', தமிழ்ச் செய்யுள் நடையிலும், மலையாளத்திலும் 'விண்ணு' என ஆகும். இதே சொல், தமிழ்ச் செய்யுட்கண், திருமால், காற்று என்ற இருபொருள்தரும் 'விண்டு' எனவும் ஆம். பேரொளி காட்டு என்று பொருள்படும் 'விள்' என்ற வேர்ச்சொல்லோடு தொடர்புடைய - வானம் என்று பொருள்படும் 'விண்' என்ற நல்ல தமிழ்ச் சொல்லும், 'விண்ணு' என்ற சொல்லில் காணப்படும் 'விண்' என்பதும் ஒன்றே எனக் கூறுவர் பேராசிரியர் குண்டர்ட். 'விஷ்ணு' என்ற சொல், 'விள்', 'விண்' இவற்றினடியாகத் தோன்றியதே எனக் கோடல் விரும்பத்தக்கதாகத் தோன்றினும், சமஸ்கிருதச் சொல்லாராய்ச்சியாளர், அவ்விருப்பத்திற் குடன்படார் என்றே நான் அஞ்சுகின்றேன். 'ஷ'கரம், தமிழில், சாதாரணமாக, 'ட'கரமாக மாறும். இந்த 'ட'கரம் சில இடங்களில், பல்லெழுத்தாய 'த'கரமாக மெலியும். சமஸ்கிருத 'மனுஷ்ய,' இலக்கியத் தமிழில் 'மானிடன்' எனவும், அதுவே பின்னர் 'மனிதன்' எனவும் மாறும். சமஸ்கிருத 'ஷ'கரம், தமிழில் 'ட'கரமாகத் திரிதற்கு மிகப் பழைய சான்றொன்றைக் காட்டுதலும் கூடும். திங்கள் ஒன்றின் பெயரைக் குறிக்கும் 'ஆஷாட' என்ற சமஸ்கிருதச்சொல், தமிழில் 'ஆடி' என ஆம் இம்மாற்றம், தமிழிலக்கியம் வளம் பெறத்தொடங்கிய பழம் பெருங்காலத்திலேயே உண்டானதாகத் தோன்றுகிறது. மற்றொரு திங்களின் பெயரைக் குறிக்கும் 'தைஷ' என்ற சமஸ்கிருதச்சொல்லின், 'ஷ'கரவொலி, தமிழில் அறவே கைவிடப்பட்டுளது. தமிழிலக்கியத்தால் உணரலாகும் மிகப் பழைய காலத்திலிருந்தே, இத்திங்களைக் குறிக்கும் தமிழ்ப் பெயர், 'தை' என்பதேயாதல் அறிக.

(ii) 'ஸ'கரம் என்ற சமஸ்கிருத இஸ்ஸொலி யெழுத்து, தமிழில், 'ந'கரத்தின் மெல்லொலி வல்லெழுத் தாய 'த'கரமாக மாற்றப்படும். சமஸ்கிருத 'மாஸம்', தமிழில் 'மாதம்' எனவும், உள்ளம் என்று பொருள் படும் சமஸ்கிருத 'மனஸ்', தமிழில் 'மனது' எனவும் வரும். சமஸ்கிருத 'ஸ'கரம், தமிழில் 'த'கரமாக மாறும் இம்மாற்றத்தில், பல்லெழுத்து இஸ்ஸொலி எழுத்தாக மாறும் என, முன்னர் அறிவிக்கப்பெற்ற மாற்றத்தொடு, முற்றிலும் முரண்பட்ட, இஸ்ஸொலி எழுத்து பல்லெழுத் தாக மாறும் மாற்றம், நிலவக் காண்கிறோம்.

"நோக்கியபொழுது முற்றிலும் முரண்பட்டனவாகத் தோன்றும் இரண்டு ஒலிகளுக்கிடையே உறவுமுறை யுண்டாதல் கூடும் என்பதை, 'ஸ'கரத்திற்குப் பதிலாக, 'ந'காரத்தை மேற்கோடல் பிறமொழிகளிலும் நிலவுவதைச் சான்று காட்டி விளக்கமுடியும். பழைய கிரீக்மொழியில், 'மெலிஸ', 'தலஸ' என்ற சொற்களுக்குப் பதிலாக 'மெலித்த', 'தலத்த' என்ற சொற்கள் ஆளப்படும். புத்துலக மொழிகளுள், ஸ்பானிஷ்மொழியில், அண்ணமிடமாகப் பிறக்கும் உயிரெழுத்துக்களாய 'எகர', 'இ'கரங்களின் முன் வரும் 'ஸ'கரம், 'ந'காரமாக ஒலிக்கப்பெறும் என்பதையும் சான்று காட்டுதல் பொருந்தும். ஆங்கில மொழியாளர், இஸ்ஸொலியெழுத்துக்களையும், அண்ண எழுத்துக்களையும் ஒலிக்கமாட்டாது, அவற்றை அரையொலி அழிந்த நாவெழுத்துக்களாக ஒலித்துப் பிழைபட்ட ஒலிப்பு முறையை மேற்கொள்வதற்குக் காரணமாயது, இந்த ஸ்பானிஷ்ஒலிப்பு முறையே யாம். இங்கிலாந்தில், இக் குறைபடுமுறை குறிப்பிட்ட சிலரிடமே காணப்படுவதா கவும், ஸ்பெயின்நாட்டில், அந்நாட்டு ஒலிமுறையாகவே, இது மேற்கொள்ளப்படும். மாட்ரிட் நகரத்து மக்கள் அனைவரும், இஸ்ஸொலி எழுத்துக்கள் அனைத்தினையும் பிழைபடவே ஒலிக்கின்றனர். காலத்தாலும் நாட்டாலும் வேறுபட்டமொழிகளிலும் இப்பிழையொலிமுறை இடம் பெற்றிருப்பதைக் காணலாம். மூன்று என்று பொருள்

படும் 'ஷாலொஷ்' என்ற எப்ரூமொழிச்சொல்லை, சால்டியன்கள் 'தெலத்' என்றும், சிரியன்கள் 'த்லொத்' என்றும் ஒலிப்பதால், அவர்கள் செமிடிக்மொழியின் 'ஷ'கர ஒலியைப் பிழைபட ஒலிப்பது காணலாம்.":—(பீம்ஸ்: பக்கம்: 216). 'ஸ'கரம், 'த'கரமாகத் திரிதற்குரிய நிலையை மேலும் பல காரண காரியங்களைக் காட்டி முறையாக விளக்கவும், திரு. பீம்ஸ் அவர்கள் முன்வந்துள்ளனர்.

தமிழில் வந்துவழங்கும் சமஸ்கிருதச் சொற்களில், மொழிமுதலாக வரும் 'ஸ'கரம், சில இடங்களில், முற்றிலும் கைவிடப்படும். மாலைக்காலம் என்று பொருள்படும் சமஸ்கிருத 'சந்த்யா' தமிழில் 'அந்தி' எனவும், இடம் என்று பொருள்படும் சமஸ்கிருத 'ஸ்தானம்', தமிழில், 'தானம்' எனவும் வருதல் காண்க. இன்றைய தமிழில், ஒலிநயம் குறித்த 'இ'கரவுயிரை முன்னே இணைத்து, 'ஸ'கரத்தை ஒலிக்கும்முறை பெரும்அளவில் மேற்கொள்ளப்படுகிறது. சமஸ்கிருத 'ஸ்த்ரீ' தமிழில், 'இஸ்திரி' என வரும். சமஸ்கிருதமொழியின் மெல்லின இஸ்ஸொலியும் சில இடங்களில், இதைப் போன்ற மாறுதலை மேற்கொள்கிறது. பொதுவாக, அது, திராவிடமொழியின், 'ச'கரம் அல்லது 'ச'கர ஒலியோடு ஒத்துளது. ஆனால், அது சில இடங்களில், வல்லொலி 'ஸ'கரத்தைப் போன்றே, 'த'கரமாக மாற்றப்படுகிறது. சமஸ்கிருத 'ஸ்ரீ' தமிழில், மிகப் பழைய காலத்திலேயே 'திரு' என மாற்றப்பட்டுளது காண்க. சில இடங்களில், குறிப்பாக, 'ர'கரத்தொடு இணைந்து நின்றுழி, அஃது அறவே நீக்கவும்படும். திங்கள் ஒன்றின் பெயரைக் குறிக்கும் 'ஸ்ராவண' என்ற சமஸ்கிருதச்சொல், தமிழில் 'ஆவணி' என ஆகும். இதே ஸ்ராவணத்திங்களில் வந்து, அத்திங்களால் பெயர்பெறும் மலையாள விழாவின் பெயராகிய 'ஓணம்' என்ற சொல், இம்மாற்றத்தை மேலும் சற்று மிகுதியாக மேற்கொண்டுளது.

—

சமஸ்கிருத இஸ்ஸொலி, தமிழில், என்றும் 'ர'கரமெனத்திரிதல் இல்லை. இத்திரிபு, இந்தோ-ஐரோப்பிய

மொழிகளில் பெருவழக்காயினும், திராவிடமொழிகளில் ஓரோவழி காணப்படுவதுண்டாயின், மிகமிக அருகியே காணப்படும். திராவிடமொழிகளில் அத்தகைய திரிபு இருப்பதாக எண்ணலாமே யல்லால், சான்றுகாட்டி உறுதி செய்தல் இயலாது. இருத்தல் என்ற சொல்லின், தமிழ் - கன்னட வேர்ச்சொல்லாகிய 'இர்' என்பதை, சமஸ்கிருதத் தில்காணப்படும் 'அஸ்' போன்ற இந்தோ-ஐரோப்பிய வினைச்சொல்லோடு ஒற்றுமை உடையதாகக் கொள்ளுதல் கூடும். தமிழ் உயர்திணைப் பலர் பால் விகுதியாகிய 'அர்' சமஸ்கிருதப் பன்மையாகிய 'அஸ்' என்பதோடு தொடர் புடையதாகத்தோன்றும். இரும்பு என்ற தமிழ்ச்சொல் லின் வேர்ச்சொல்லாகிய 'இரு' என்பதை, அப்பொருள் படும் சமஸ்கிருத 'அயஸ்' என்ற சொல்லோடும், 'ஸ'கரம், 'ர'கரமாகமாறி, 'அயரன்' என வரும் ஆங்கிலச் சொல் லோடும் தொடர்புடையதாகக் கொள்வர் சிலர். ஆனால், அம்முடிவு, இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. 'இரும்பு' என்ற அச்சொல்லை, கருப்பு என்று பொருள்படும் 'இர்' என்ற தமிழ் வேர்ச்சொல்லோடு தொடர்புபடுத்துவதையே நான் விரும்புகின்றேன்.

## ரு. ஒலிநய மெய்ம்மாற்றம்

ஒரு மொழியின் ஒலிமுறைகளை விளக்குவதில், அவ் வினமொழிகளுக்கிடையே தோன்றும் மெய்ம்மாற்றத் தினும், ஒலிநயம் கருதிவரும் மெய்ம்மாற்றம் அத்துணைச் சிறப்புடைத்து அல்லவாயினும், குறிப்பிடத்தக்க சில உண்மைகள் அவற்றாலும் பெறப்படும். திராவிட இலக்க ணப் பேராசிரியர்கள், மொழியிலக்கணத்தின் எப்பொருள் குறித்தும் செலுத்தாத அவ்வளவு காலத்தையும் கருத்தை யும் ஒலிநயம் கருதிய இம்மெய் மாற்றத்திற்கு அளித்துள் ளனர். தமிழிலக்கண ஆசிரியர்கள் மேற்கொள்ளும் இம் மெய்ம்மாற்றம், சமஸ்கிருதமொழியில் உள்ளதைப் போன்று இருமடங்கு எண்ணிக்கையுடையது. தமிழ் மொழியைக் கற்கத்தொடங்கும் மாணவர்க்குச் சமஸ்கிருத

மொழியின் மெய்ம்மாற்றம், அம்மொழி மாணவர்க்கு அளிக்கும் மயக்கத்தையும், குழப்பத்தையும் போல் இரு மடங்கிற்கு மேலும் அளிக்கவல்லது. திராவிடமொழிகளுள் சிறப்புடையவாகிய தமிழ், தெலுங்கு, கன்னடமொழிகளின் இலக்கணங்களில் கூறப்படும் மெய்ம்மாற்றங்களை ஆராய்ந்துநோக்கின், அவற்றுள் பெரும்பகுதி, சமஸ்கிருத மொழியில் காணப்படும் மெய்ம்மாற்றங்களைப் பின்பற்றி எழுந்தனவே என்பது புலனும். சமஸ்கிருதமொழியில் காணப்படும் ஒலிநய மெய்ம்மாற்றத்தோடு ஒப்புடையதாகாது, அவற்றினும் சிறந்த மெய்ம்மாற்றமுறையொன்று இம்மொழிகளில் உளது. அதை இலக்கண வரம்புடையது என்று கொள்வதினும், செய்யுள் நடையுடையது என்று கொள்வதே பொருந்துவதாம். ஈண்டுக் கூறிய மெய்ம்மாற்ற வகைகள் அனைத்தையும் நீக்கிவிடின், இம்மொழிகளுக்கே உரியனவும், இவற்றின் ஒலிமுறைகளை அடிப்படையாகக் கொண்டனவும், அம்முறைகளை விளங்க உணர்த்துவனவும் ஆய சில ஒலிநய மெய்ம்மாற்றங்கள் இருக்கக்காணலாம். இம்மெய்ம்மாற்றங்கள் பற்றிய பொருள் மிகமிக விரிந்தும், அதே காலத்தில், அத்துணைச் சிறந்தன அல்லனவாகவும் இருப்பதால், அவை பற்றிய விரிவான ஆராய்ச்சியினை மேற்கொள்ளாது அவற்றுள் ஒரு சில குறித்து ஈண்டு நோக்குவாம்.

1. எண்ணுப் பொருளில் வரும் பெயர்கள், இடையில் உம்மை கொடுத்து எண்ணப்பெறாமல், உம்மைதொக எண்ணப்பெற்றுப், பன்மை விகுதிகொண்டு முடியும் உம்மைத்தொகைகளில், வருமொழி முதல் எழுத்து, 'க'கர, 'ச'கர, 'ட'கர, 'த'கர, 'ப'கரங்களாகிய வல்லொலி வல்லெழுத்துக்களுள் யாதேனும் ஒன்றாயின், புணர்ந்த வழி, அது, தன் மெல்லொலி வல்லெழுத்தாகமாறும். திராவிடமொழிகளில், சமஸ்கிருத நெடுங்கணக்குமுறையினை மேற்கொண்டு செல்லும் தெலுங்கு, கன்னட மொழிகளில், வல்லொலி வல்லெழுத்து, மெல்லொலி வல்லெழுத்தாகமாறி ஒலிப்பதோடு, அவ்விரு ஒலிகளை

யும் குறிக்கத் தனித்தனி வடிவெழுத்துக்களும் வழங்கப்பெறும். வல்லொலி வல்லெழுத்தினையும், மெல்லொலி வல்லெழுத்தினையும் குறிக்க, ஒரே வடிவெழுத்தை மேற்கொள்ளும் தமிழில், அம்மெல்லொலி வல்லெழுத்தைக் குறிக்கத் தனிவடிவெழுத்து மேற்கொள்ளப்படுவதில்லை. அம்மெல்லொலி. ஒலிப்புழியே தோன்றிவிளங்கும். இவ்விதி, மொழி முதற்கண், வல்லொலி வல்லெழுத்தாக வரும் ஒருமெய், மொழியிடைப்படின், மெல்லொலி - வல்லெழுத்தாம் என்ற திராவிட ஒலிமுறையினின்றும் தோன்றியதாகும். வருமொழி முதல்மெய், அவ்வருமொழி, நிலைமொழியோடு புணர்ந்து தொகைச் சொல்லாயவழி, இடைப்பட்டுவிடுவதால், அவ்வெழுத்து, மொழியிடை மெய்யாகிவிடுகிறது. சமஸ்கிருத ஆதிக்கத்திற்குப் பெரிதும் பணிந்துவிட்ட தெலுங்கு, கன்னடங்களிலும் இவ்விதி காணப்படுவதால், வல்லொலி வல்லெழுத்து, மெல்லொலி வல்லெழுத்தாகவும், மெல்லொலி வல்லெழுத்து வல்லொலி வல்லெழுத்தாகவும் மாறும் இம்மாற்றம் தமிழ்மொழி ஒன்றிற்கே உரியதன்று என்பதை உறுதி செய்வதாகும்.

உம்மைத்தொகைக்கண், வருமொழி முதலில் வரும் வல்லொலி வல்லெழுத்தை மெல்லொலி வல்லெழுத்தாக மாற்றுவதில், எல்லாத் திராவிடமொழிகளும் ஒத்துள்ளன. ஆனல், சொற்கள், இவ்வாறு உம்மைத்தொகையாகப் புணராது, வேற்றுமைத் தொகையாக - பண்பும், பண்புடைப் பொருளும் என்ற முறையிலோ, அல்லது வினையெச்சமும், அதுகொண்டு முடியும் வினையும் என்ற முறையிலோ, புணர்ந்தவழி, தமிழ்முறையோடு மாறுபட்ட ஒரு முறையைத் தெலுங்கு மேற்கொள்கிறது. த்ருத இனச் சொற்களுக்குப்பின், வல்லொலி வல்லெழுத்துக்களை முதலாகவுடைய சொற்கள்வரின், அம்மெய்யெழுத்துக்கள், உம்மைத்தொகைக்கண் நிகழ்ந்ததுபோன்றே, மெல்லொலி வல்லெழுத்தாக மாறும் என்பதே அத்தெலுங்கு முறையாம். இம்முறையில், தெலுங்குமொழி, லாப்பிஷ் மொழி

யோடும், அதனினும் மிகுதியாக வேல்ஷ் மொழியோடும் ஒத்துளது. வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் வழங்கிய பின்னிஷ் மொழியாட்சியின் விளைவால், இந்தோ ஐரோப்பிய மொழிகள் எல்லாவற்றினும், வேல்ஷ் மொழியே சித்திய மொழித் தன்மைவாய்ந்துளது.

மேலே குறித்த தொகைபோலும் தொகைகளில், தமிழ், வருமொழி முதற்கண் வரும் அவ்வல்லொலி வல்லெழுத்தை, மெல்லொலி வல்லெழுத்தாக மாற்றுதற்கு மாறாக, இரட்டித்து மேலும் வன்மையுடையதாக ஆக்குவது வியத்தற்குரிய நிகழ்ச்சியாம். இம்முறை, 'அ'கரவீற்று எச்சவினைகளுக்குப்பின் முறையாக மேற்கொள்ளப்படும், வேற்றுமைத்தொகைகளில் வரும், வருமொழி மெய்ம் முதல்மெய்யெழுத்தையும் தமிழ்இரட்டித்து வல்லொலிவல்லெழுத்தாக மாற்றுகிறது. தமிழ், தெலுங்கு மொழிகளைப் போல, ஒலிநயம் குறித்துப் பெருங்கவலை கொள்ளாத கன்னட மொழியும், இத்தகைய தொகைகளில், வருமொழி முதற்கண் வரும் வல்லொலி வல்லெழுத்தை மெல்லொலி வல்லெழுத்தாக மாற்றவே விரும்புகிறது. புலியின் தோல் என்று பொருள்படவரும் 'ஹுலி+தொகலு' என்ற தொகைச்சொல்லை 'ஹுலிதொகலு' என்றே ஒலிக்க விரும்புகிறது. ஆனால், தமிழ், இவ்வகைத் தொகைகளில் வரும் வருமொழி முதலெழுத்தை இரட்டித்து வலிக்கவே விரும்புகிறது. 'புலி+தோல்' என்ற அதே தொகைச்சொல், 'புலிதோல்' என்று ஆகாமல், 'புலித்தோல்' என்றே எழுதவும், ஒலிக்கவும் பெறும். வருமொழி முதல்மெய் யெழுத்தை இவ்வாறு இரட்டித்து, வல்லொலியாக மாற்றுவது, நிலைமொழிக்கண் நிற்கும் பொருட் சிறப்பை வருமொழிக்கு மாற்றுவதன் அறிகுறியேயாம். இம்முறை, தமிழ்மொழிக்கண் விரிவாக மேற்கொள்ளப்படும் என்பது, மேலே செல்லச் செல்லத் தெளிவாம்.

தொகைச் சொற்களுள், நிலைமொழி, பெயராகவோ, அல்லது பெயரடையாகவோ வாராது, வினையாகவோ, அல்லது பெயரெச்சமாகவோ வரின், வருமொழி முதற்கண்

வரும் வல்லொலி வல்லெழுத்து, தெலுங்கில் ஆவதைப் போன்றே, தமிழிலும். மெல்லொலி வல்லெழுத்தாக மாறும். வினைத்தொகைப் பொருள்பட, 'காய்கொம்பு' என வரும் தொகைச் சொல்லைக், காயையுடைய கொம்பு என்ற வேற்றுமைப் பொருள்பட, 'காய்க்கொம்பு' எனவரும் தொகைச் சொல்லோடு ஒப்பிட்டுக் காண்க.

2. அடுத்துவரும் மெய்யெழுத்தைத் தன்னினமாக்குவது, அல்லது, ஒலிநயம் கருதி மாற்றுவதாய தமிழ்முறை, பல்லாற்றானும் சமஸ்கிருத மொழிக்கண் காணப்படும் முறையோடொத்ததாகவும், அம்முறையினைப் பின்பற்றி மேற்கொண்டதாகவும் காணப்படுமென்றாலும், திராவிட ஒலிமுறையினை அடிப்படையாக் கொண்டனவும், திராவிட மொழிக்கே உரியனவுமாய சில முறைகளும் உள. எதிர்பாரா இடங்களில், 'ல'கரம், 'ன'கரமாகத் திரிதல் அவற்றுள் ஒன்று. இத்தகு மாற்றத்தின் விளைவாகவே, 'போல்+த' என்பது, 'போன்த', 'போன்ற' என்றும், 'கொள்+த' என்பது 'கொண்ட' என்றும் வந்தன. பின்னதில் வந்த மெய்ம்மாற்றம், தெலுங்கில், அம்மொழி வேர்ச்சொல்லிலேயே இடம் பெற்றுளது. விலைக்குவாங்கு என்று பொருள் படும் பழஞ்சொல்லாய, தமிழ் 'கொள்', தெலுங்கில் 'கொனு' என ஆம். துளுமொழியிலும் 'கோண்' எனவரும். 'கு'கரத்திற்கு முன்வரும 'ல'கரம், சில இடங்களில் 'ன'கரமாகத் திரிதலைத் தமிழிலக்கண ஆசிரியர்களும் உணர்ந்திருந்தாராகத் தோன்றவில்லை. 'நான்கு' என ஒலிக்கப்படும் 'நான்கு' என்ற சொல், அச்சொல்லின் தொன்மை வடிவாய 'நால்கு' என்பதினின்றும் வந்ததே. திங்கள் ஒன்றின் பெயராக வரும் தமிழ் 'பங்குனி', சமஸ்கிருத 'பஹல்குன' என்பதன் திரிபேயாம். 'ட'காத்திற்கு முன் வரும் 'ல'கரத்தை, 'ண'கரமாக மாற்றும், இதையொத்த மாற்றம் ஒன்று, தெலுங்கில் இடம்பெறக் காண்கிறோம். வீடு என்று பொருள்படும் 'இல்டி' என்ற சொல், 'இண்டி' என மாறிவருதல் காண்க. ஈண்டுக்கூறிய எல்லாவற்றினும், 'ல'கரமே தொன்மை வாய்ந்ததாம். 'ன'கரத்தினும், 'ல'

கரமே பழமையானது என்பதை உறுதி செய்யும் இச் சான்றுகள், இலத்தீன் மொழிச் சொல்லாய 'அலிஉஸ்' என்பது, சமஸ்கிருதச் சொல்லாய 'அன்யஸ்' என்பதினும் பழமையானது போலும் என்ற ஐயத்தை உறுதியாக்க உறுதுணை புரியும்.

ஒலிநயம் குறித்து வரும் துதமொழி விதியொன்றை ஈண்டு நோக்குவாம். அம்மொழியில், 'ல'கர, 'க'கரங்களுக் கிடையிலும், 'ர'கர, 'க'கரங்களுக்கிடையிலும், முறையே 'த்', 'ஷ்' என்ற ஒலிகள், ஒலிநயம் கருதி நுழைக்கப்பெறும். நான் நிற்கிறேன், நான் இருக்கிறேன் என்ற பொருள்பட வரும் சொற்கள் முறையே 'நில்கென்', 'எர்கென்' என வரவேண்டியிருக்க, அவற்றிற்குப் பதிலாக, முறையே 'நில்த்கென்', 'எர்ஷ்கென்' என்ற சொற்கள் வரக்காண் கிறோம்.

## கூ. மூக்கினம் மிகல்

திராவிட மொழிகளில், சிறப்பாகத், தமிழிலும் தெலுங்கிலும், வல்லொலி வல்லெழுத்துக்களின் வல்லொலி ஆற்றலைக் குறைத்தற்பொருட்டு 'ங, ஞ, ண, ந, ம' என்ற இம்மூக்கின ஒலிகள் பெரும் அளவில் மேற்கொள்ளப்படு கின்றன. ஈண்டுக் கூறப்பட்ட எல்லா மூக்கெழுத்துக்களும், 'ம'கரவொலியின் திரிபே எனக்கொள்வர், அம்மொழி இலக்கணப் பேராசிரியர்கள். தன்னைப் பின் தொடர்ந்து வரும் மெய்யெழுத்துக்களுக்கேற்ப, 'ம'கரம் திரிந்து, மேலே குறித்த மெல்லின மெய்களாக மாறும்முறை யொவ் வொன்றும், தெளிவாக வரையறுக்கப்பட்டுளது. சமஸ் கிருத மொழியில் உள்ளது போன்றே, தமிழ் மொழி யிலும், இவ்வாறு மாறும் ஒலிகள், வர்க்க எழுத்துக்கள் ஐந்தின் ஈற்றிலும் முறையே இடம் பெறும் மூக்கெழுத்துக் களாலேயே எழுதிக் காட்டப்பெறும். தெலுங்கிலும், கன்னடத்திலும், ஈண்டுக்குறித்த மூக்கொலிகளைக் குறிக்க, அனுஸ்வார என்ற பெயருடையதும், சமஸ்கிருத அனுஸ் வார ஒலியினும், மிக்க ஆட்சியை உடையதும் ஆகிய ஒரே

வடிவெழுத்துக் கையாளப்படுகிறது. எனினும், தமிழ் மொழியில் உள்ளவாறே, தனக்குப் பின்வரும் வல்லின மெய்யொலிகளோடு இணைதற்கேற்ப, இம்மெல்லினத்தின் ஒலி வேறுபட்டே தோன்றுகிறது.

திராவிடமொழிகளில் வரும் மூக்கெழுத்துக்களின் தோற்றம் மூவகைப்படும்:—

1. அவற்றுள் முதல்வகை, திராவிடமொழிகள் அனைத்தினும், தமிழிலேயே மிகுதியாக ஆளப்படுகிறது. பெரும்பாலான, பெயர், வினைகளின் சொல்லாக்க உருபுகட்கு முன்னர், மெல்லெழுத்து அல்லது மூக்கெழுத்தொன்றை இணைத்தல் அம்முதல் வரிசையைச் சேர்ந்ததாம். பெயர்மூலம், வினைமூலங்களோடு, சொல்லாக்க உருபுகள் இணைக்கப் பெற்று, அவ் வேர்ச்சொற்களை, வேற்றுமை காட்டாப் பெயராகவும், காலம் காட்டா வினையாகவும் மாற்றும்; பின்னர், அவ்வாறு மாற்றப்பெற்ற பெயர் வினைகளோடு முறையே, வேற்றுமை உருபுகளும், காலம் காட்டும் இடைநிலைகளும் இணைக்கப் பெறும். தமிழில், வினைச்சொல், தன்வினையாகவும், பெயர்ச்சொல், தனிநிலைப் பெயராகவும், அஃதாவது, எழுவாய் வேற்றுமைப் பெயராகவும் வந்துழி, மூக்கொலிபெற்ற சொல்லாக்க உருபுகள் ஆளப்பெறும். அவ்வினைச் சொல், பிறவினையாகவும், அப்பெயர்சொல், பிறிதொரு பெயர்ச்சொல்லைச் சிறப்பிக்க வரும் பெயரடையாகவும், எழுவாய் நீங்கிய வேற்றுமைப் பொருளேற்ற பெயராகவும் மாற்றப் பெற்றுழி, அச்சொல்லாக்க உருபுகளில் வரும் மூக்கொலி மறைய, அம்மூக்கெழுத்து எந்த வல்லெழுத்தின் முன் இணைக்கப்பெற்றிருந்ததோ, அந்த வல்லெழுத்து, இரட்டிக்கப்பெற்று, மேலும் வல்லொலியுடையதா ஆக்கப்பெறும். சொல்லாக்க உருபுகளின் முன்னிற்கும் வல்லெழுத்திற்கேற்ப, இம்மூக்கெழுத்துக்களும் வேறுபடும்; அது 'க்'கர, 'க'கரங்களின் முன் 'ங'கரமாகும்: 'ச்'கர, 'ச'கரங்களின் முன் 'ஞ'கரமாகும்; 'ட்'கர, 'ட'கரங்களின் முன், 'ண'கரமாகும்; 'த்'கர'த'கரங்களின் முன் 'ந'கரமாகும்;

'ப'கர 'ப'கரங்களின் முன், 'ம'கரமாகும். தெலுங்கு, வேறுபட்ட இவ்வொலிகள் அனைத்தையும் குறிக்கப் பொதுவாக எல்லா இடங்களிலும் அனுஸ்வார ஒலியையும், ஒருசில இடங்களில் அரையனுஸ்வார ஒலியையும் மேற்கொள்ளும்.

(i) 'ஞ்' அல்லது 'கு' என்ற சொல்லாக்க உருபை, பொருட்சிறப்பும், ஒலிநயமும் உடையதாக மாற்ற, 'ங'கர மெல்லெழுத்தை மேற்கொள்ளும் முறைக்குத், தமிழில் நிறையச் சான்றுகள் உள்ளன. எடுத்துக்காட்ட ஒருவினையும், ஒருபெயரும் சாலும். 'அட' என்ற வேர்ச்சொல்லோடு, 'கு' என்ற தன்வினைச் சொல்லாக்கவுருபை இணைத்து, அவ்விரண்டிற்கும் இடையில், 'ங'கர மெல்லெழுத்தை நுழைப்பதால், 'அடங்கு' என்ற வினைச்சொல் தோன்றிற்று. எரி என்று பொருள்படும் 'கா' அல்லது 'காய்' என்ற வேர்ச்சொல்லோடு, 'ங்கை' என ஒலிநயமுடையதா ஆக்கப்பெற்ற 'கை' என்ற சொல்லாக்கவுருபு இணைந்ததால், வெப்பம் என்று பொருள்படும் 'காங்கை' என்ற பெயர்ச்சொல் தோன்றிற்று. வேர்ச்சொல்லோடு இணைக்கப்பெறும் சொல்லாக்கவுருபுகளில் வரும் ஈற்றுக் 'க'கரமே யல்லாமல், அவ்வேர்ச்சொல்லின் மூலத்தோடு பிரிக்க இயலாவாறு இணைந்து நிற்கும் மூலஎழுத்தாகிய 'க'கரமும், மெல்லினம் பெறும். பிள என்று பொருள்படும் 'பகு' என்ற வேர்ச்சொல்லிலிருந்து 'பங்கு' என்ற பெயர்ச்சொல் தோன்றுவது காண்க. தமிழில் மெய்யெழுத்தின் முன் மூக்கினம் நுழைப்பதன் இயல்பு, அம்மொழி, சமஸ்கிருதச் சொல்லொன்றைத் தமிழாக்கும் முறையால், நன்கு விளக்கப்படும். நாய் என்று பொருள்படும் 'சுனக' என்ற சமஸ்கிருதச்சொல், தமிழில் ஆண்பால் விகுதிபெற்று, 'சுனகன்' என்றாகிப் பின்னர், 'சுணங்கன்' என்று மாறி, மறுவலும், 'அ'கரவுயிர் தொடரவரும் 'உ'கரம், 'ஒ'கரமாகமாறும் என்ற முறைப்படி, 'சோணங்கி' என ஆதல் அறிக.

தமிழில், வினையடையாகவரும் சுட்டிடப் பெயர்களாகிய 'அங்கு' 'இங்கு' என்பனவும், வினையடையாகவரும்

வினவிடப் பெயராகிய 'எங்கு' என்பதும் தோன்று வதற்குக், 'ங'கரம் அல்லது 'க'கரத்தின்முன், மூக்கெழுத் தொன்றை நுழைப்பதே காரணமாதலும் கூடும். சுட்டடி களாக வரும் 'அ'கர, 'இ'கரங்களும், வினவடியாக வரும் 'எ'கரமும், தமிழில் நான்காம் வேற்றுமையுருபாக வரும் 'கு' அல்லது 'கு' இணைய, 'அகு', 'இகு', 'எகு' என்றாகி, மீண்டும் மூக்கினம் பெற்று 'அங்கு', 'இங்கு', 'எங்கு' என்றாகும். இவ்விடப் பெயர்கள் மூன்றும் முறையே, 'அம்', 'இம்' எனப் பெயரடையாக வரும் சுட்டுப்பெயர் களிலிருந்தும், 'என்', 'ஏன்' என்ற வடிவங்களில் தமிழி லும், 'ஏமி' என்று வடிவில் தெலுங்கிலும் இன்றும் வழங்கி வரும் 'எம்' என்ற பெயரடையாக வரும் வினப்பெயரி லிருந்தும் தோன்றியனவாக் கொள்வர் பேராசிரியர் குண்டர்ட். ஈண்டுக்கூறிய 'அம்' முதலிய பெயர்களோடு 'கு' என்ற சொல்லாக்கஉருபு இணைய, அவை, இயல்பாகவே 'அங்கு' முதலிய சொற்களாம். பெயர்ச்சொல்லாக்கவுருபு களிலும், சாரியைகளிலும், வேற்றுமையுருபுகளிலும், 'அம்' அல்லது 'அன்', 'இம்' அல்லது 'இன்' என்ற இவற்றின் அடிச்சுவடுகள் தெளிவாகத் தோன்றுவதை யானும் ஒப்புக் கொள்கிறேன். அவை, அப்பொருள் கொண்ட தலைப்புக் களில் மேற்கொள்ளும் ஆராய்ச்சியால் நன்கு விளங்கும். 'அங்கு', 'இங்கு', 'எங்கு' என்பனவற்றின் செய்யுள்நடைச் சொற்களாய 'அம்பர்' 'இம்பர்' 'எம்பர்' என்ற சொற்களின் மூலங்கள், 'அம்', 'இம்', 'எம்' என்பனவே யாதலும்கூடும். என்றாலும், 'அங்கு' முதலிய சொற்களில், 'அம்' முதலிய இடச்சொற்கள் இடம்பெற்றுள்ளன என்பதை யான் ஐயுறுகின்றேன். 'எங்கு' என்ற சொல்லின் செய்யுள் நடைச் சொல்லாகிய 'யாங்கு' என்பதை, 'யா' என்ற வின மூலத்தோடு 'ண்டு' என மெல்லினப்பட்ட 'டு' என்ற சொல்லாக்க உருபு இணைய, 'யாண்டு' எனவரும், இடமும் காலமும் கருதிய வினைச்சொல்லோடொப்பிட்டு நோக்கின், 'யாங்கு' என்பதும், அவ்வாறே, 'யா' என்ற வினமூலத் தோடு, 'ங்கு' என மெல்லினப்பட்ட 'கு' என்ற சொல் லாக்கவுருபு இணையத் தோன்றியதாகவே கொள்ளுதல்

வேண்டும்; 'யாங்கு' என்பதை அவ்வாறு வந்ததாகக் கொள்ளின், செய்யுள் நடைவாய்ந்த 'ஆங்கு', 'ஈங்கு' என்பனவும், 'அங்கு', 'இங்கு', 'எங்கு' என்பனவும் அவ்வாறு வந்தனவேயாதல் வேண்டும். நிற்க இத்தமிழ்ச் சொற்களை, 'அக' (=அங்கு), 'இக' (=இங்கு), 'இங்க' (=இப்போது), 'ஹகெ' (=இங்கே), 'ஹொகெ' (=அங்கே) என்ற கோண்டு மொழிச் சொற்களோடும், 'ஆக', 'ஆகலு' (=அப்போது), 'ஈக' (=இப்போது), 'யாவாக' (=எப்போது), 'ஹாகெ', 'ஹாங்கெ' (=அவ்வாறு), 'ஹீகெ', 'ஹீங்கெ' (=இவ்வாறு), என்ற கன்னடச் சொற்களோடும், 'அக்க' (=அப்போது), 'இக்க' (=இப்போது), 'எக்க' (=எப்போது) என்ற கூர்க் மொழிச் சொற்களோடும் ஒப்பிட்டு நோக்கின், 'அங்கு' என்ற தமிழ்ச்சொல்லும், அதன் இனமாய பிறசொற்களும், பண்டு 'அகு' முதலாயவடிவிலேயே வழங்கின; மெல்லினப்படுத்துவதில் தமிழ்மொழி பெற்றிருக்கும் விழைவின் விளைவாகவே, 'அங்கு' முதலாய சொற்கள் தோன்றின என்ற முடிவையே ஏற்றுக்கொள்ளவேண்டி வரும் என யான் எண்ணுகின்றேன்.

(ii) 'ஞ'கரத்தை, ஒலிநயம் கருதி, சொற்களினிடையே வழங்குதல், தமிழைக் காட்டினும், தெலுங்கிலேயே மிகுதியாகும். பங்கிடுசெய் எனப் பொருள்படும் 'பஞ்சு' என்ற தெலுங்குச் சொல், பகு' என்ற தமிழ்ச் சொல்லினின்றும் தோன்றிப், 'பசு' என மாறி மெல்லினப் பட்டுப் 'பஞ்சு' என்றாகி, அதே வேர்ச்சொல்லினின்றும் தோன்றிய 'பங்கு' என்ற தமிழ்ச்சொல்லோடு பொருள் ஒற்றுமை உடைத்தாதலும் காண்க. மெல்லினம், இவ்வாறு பிறவினைச் சொற்களில் வருதற்கு, இரட்டி அல்லது இரட்டிக்கப்பண்ணு என்று பொருள்படும் 'ரெட்டிஞ்சு' என்ற தெலுங்குச் சொல், ஓர் எடுத்துக்காட்டாம்; தெலுங்கில் அல்லது, பிறமொழிகளில், பிறவினைச்சொற்களில் மெல்லினம் தோன்றுதல் இல்லை.

(iii) சில வினைவேர்ச் சொற்கள், தலைவளியெழுத்துக்களாய 'ட'கர 'ட'கரங்களால் முடிகின்றன என்றாலும்,

அவ்வெழுத்துக்கள், வினைச்சொல்லாக்க வுருபுகளில் வருவதில்லை; ஆனால், அஃறிணைப் பெயர்விகுதிகளாக, அவை பெரும் அளவில் மேற்கொள்ளப்பெறும். இரண்டு எனப் பொருள்படும் 'எரடு' என்ற கன்னடச்சொல்லோடு ஒப்புடையதும், தமிழில் பண்டு வழக்காற்றில் இருந்ததுமாகிய 'இரடு' என்ற சொல்லே, ஒலிநயம்கருதி 'இரண்டு' எனத் திருந்தியதாதல்வேண்டும். தமிழில், வினையடைகளாக வரும் 'ஆண்டு,' 'ஈண்டு' என்ற சுட்டிடப் பெயர்களும், 'யாண்டு'என்ற வினு இடப்பெயரும், 'ஆ,' 'ஈ' என்ற சுட்டடியினும், 'யா' என்றவினு அடியினும் தோன்றி, 'ண்டு' என மெல்லினம்பெற்ற அஃறிணை விகுதியாகிய 'டு' இணையத் தோன்றியனவேயாம். எங்கே, எப்போது எனப் பொருள்படும் 'யாண்டு' என்ற சொல், ஆண்டைக் குறிக்கும் சொற்களுள் ஒன்றாகவும்வரும். அச்சொல்லின் பிறிதொரு வடிவம் 'யாண்டை' என்பது. இவற்றுள், மக்களிடையே பொதுவாக வழங்கும் சொல் 'ஆண்டு' என்பதே. ஆனால், கல்வெட்டுக்களில் 'யாண்டு' என்பதையே பெரும்பாலும் கண்டேன். அண்மையில் வழக்காறுபெற்ற 'ஆண்டு,' அல்லது அச்சொல்லின் வழக்கிறந்த வடிவமாகிய 'ஆண்டை' என்ற சொல்லே, பெயரடையாகவரும் 'ஆட்டை' என்ற சொல்லின் பிறப்பிடமாம். தமிழ், மலையாள மொழிகளில், ஆண்டுவிழா என்ற பொருள்தர, 'ஆட்டைக்கர்மம்' என்ற சொல் வருதல் காண்க. 'ஆட்டை' என்ற சொல்லில் 'ண' கர மெல்லெழுத்து இடம் பெறாமை, அம்மெல்லெழுத்து, ஒலிநயம் ஒன்றையே காரணமாகக்கொண்டு தோன்றி, சொல்லாக்கவுருபின் ஒருபகுதியாய் அமைபுமேயல்லால், வேர்ச்சொற்பகுதியாதல் இல்லை என்பதை விளக்கி நிற்கிறது. ஒரு பெயர்ச்சொல், மற்றொரு பெயர்ச்சொல்லை விசேடிக்கும் பெயரடையாக வந்துழியும், வேற்றுமையுருபுகளை ஏற்கவருவுழியும் பெறும் வடிவே, அச்சொல்லின் தொன்மை வடிவாம் என்பது பொதுவிதி 'இரண்டு' என்ற சொல்லடியாகப் பிறந்த, 'இரட்டை' என்ற தமிழ்ச் சொல்லை, இரண்டு என்ற அதே பொருளுடைய 'எரடு' என்ற கன்னடச் சொல்லோடு ஒப்பிட்டுக் காண்க. ஆகவே

நாம் ஆராய மேற்கொண்ட, இடம் அல்லது காலத்தைத் குறிக்கும் பெயர்ச்சொல்லின் தொன்மை வடிவம், 'ஆண்டு' என்பதன்று; 'ஆடு' என்பதே என்பதைக் கண்டோம். தெலுங்கில், இச்சொற்களில், வரும் 'ட'கரம் எழுத்துவடிவில் 'ண்ட்' என மூக்கினம் படாமல், ஒலிக்கும்பொழுது மட்டும், அம்மூக்கினவொலி சிறிதுதோன்ற ஒலிக்கப்படுதல், நாம்கொண்ட முடிவையே ஐயமற உறுதிசெய்தல் காண்க. அவ்வாறுவரும் தெலுங்குமொழிச் சொற்கள் 'ஆட' (=அங்கு), 'ஈட' (=இங்கு), 'ஏட' (=எங்கு), என்பனவாம். இவற்றுள் இறுதியில் நிற்கும் 'ஏட', 'ஏடு'வெனத் திருந்தி, அச்சொற்பொருளோடொத்த பொருளுடைய 'யாண்டு' என்ற தமிழ்ச்சொல்லைப்போன்றே வருஷம் என்ற பொருள்படவரும். ('யா', தமிழில், அதனினும் மெல்லிய உருவாகிய 'எ' எனவும், தெலுங்கில் 'ஏ' எனவும் வரும் என்பது, வினைப்பெயர் என்ற தலைப்பின்கீழ் விளக்கப்படும்.) இச்சுட்டுப் பெயர்களின் மூக்கினங்கலவாத்தொன்மை வடிவங்கள், 'அடெ' (=அங்கே), 'இடெ' (=இங்கே), 'ஒடெ' (=எங்கே) என்ற துளுமொழிச் சொற்களிலும் விளங்கக் காணலாம். தெலுங்கில் ஆண்பால் விகுதியாக வரும் 'டு', பெரும்பாலான இடங்களில் 'ண'கரத்தின் மிக மெல்லிய வொலியைப்பெறும். அவை, அல்லது அவர்கள் எனப் பொருள்படும் 'வாடு' அல்லது 'வாட்லு' என்ற சொல், பொதுவாக 'வாண்ட்லு' என்றே ஒலிக்கப்பெறும். 'கூண்டி' என்ற தமிழ்ச்சொல்லை, அதேபொருள்படும் 'கரிடெ' என்ற தெலுங்குச் சொல்லோடொப்பிட்டு நோக்கின், ஒரே இனத்தைச்சேர்ந்த மொழிகளுள், ஒன்று மூக்கினம் ஏற்பதை மேற்கொள்வுழி, மற்றொருமொழி, அதை மேற்கொள்வதில்லை என்ற உண்மை புலனும்.

(iv) 'து' என்ற சொல்லாக்க வுருபு, மூக்கினம் பெற்று 'ந்து' என ஆகித் 'திரு' என்ற வேர்ச்சொல்லோடிணைய, 'திருந்து' எனவந்த தன்வினைச்சொல்லில், பல்லெழுத்தின் இனமாகிய மெல்லின 'ங'கரம், ஒலிநயம்கருதி வந்துளது காண்க. இச்சொல்லின் பிறவினைச் சொல்,

'திருந்து' என்பதாகும். நறுமணம் எனப் பொருள்படும் 'மரு' என்ற வேர்ச்சொல்லோடு, 'ந்து' என மூக்கினம் கலந்துவந்த 'து' என்ற சொல்லாக்கவுருபு இணைய, 'மருந்து' என்ற சொல் தோன்றுவதும் காண்க. இதுவே பொருளாகப் பழங்கன்னடம், துளு ஆகிய மொழிகளில் 'மர்து' எனவும், புதுக்கன்னடத்தில் 'மத்து' எனவும், வரும் சொற்களை 'மருந்து' என்ற இச்சொல்லோடு ஒப்பிடுக. ஒலிநயம்கருதி, மூக்கினம் தோன்றல், 'அந்த', 'இந்த' என்ற சுட்டுப்பெயர்களிலும், 'எந்த' என்ற வினைப் பெயரிலும் இடம்பெற்றிருத்தலைக் காணலாம் என நான் எண்ணுகின்றேன். 'அது', 'இது' என்ற அஃறிணைச் சுட்டுக்களோடும், 'எது' என்ற அஃறிணை வினாவோடும், பெயரெச்ச விகுதியாகிய 'அ'கரம் இணைய, இடையே ஒலி நயம்கருதிய மூக்கினம் தோன்ற, 'அந்த', 'இந்த', 'எந்த' என்ற பெயரடைகள் பிறந்தனவாகக் காணப்படுகின்றன. (பெயரடைகள் என்ற தலைப்பினைக் காண்க.) 'அது' முதலாய சொற்கள், இத்தகைய எளிய முறையால், 'அந்த' முதலாய சொற்களாக மாறுகின்றன. பேராசிரியர் குண்டர்ட், 'அம்', 'இம்' என்ற சுட்டுக்களோடும், 'எம்' என்ற வினாவோடும் 'த' என்ற பெயரெச்சவிகுதி இணைய, 'அந்த', 'இந்த' என்ற பெயரடைச்சுட்டுக்களும், 'எந்த' என்ற பெயரடைவினாவும் தோன்றின எனக் கூறுவர். ஆனால், பெயரெச்சவிகுதி, அவர் கருதியவாறு, 'த' என்பதன்று; 'அ' என்பதே. அவர் கூறுவதை ஏற்றுக்கொள்வதாயின், 'அம்' என்ற சுட்டோடு 'து' என்ற அஃறிணைச் சொல்லாக்கம் இணைய, 'அந்து' என்ற சொல் பிறக்கும்; அச்சொல்லோடு, பெயரெச்ச விகுதியாகிய 'அ'கரம் இணைய, 'அந்த' என்ற சொல் பிறக்கும் எனக் கோடல்வேண்டும். தெலுங்கில் ஏழாம் வேற்றுமை உருபாகவும், அங்கே என்ற பொருளிலும் வரும் 'அந்து' என்ற சொல்லையும், இங்கே என்று பொருள்தரும் 'இந்து' என்ற சொல்லையும், கன்னடத்தில், தொடக்கத்தில் ஏழாம் வேற்றுமையுருபாகவும், இன்று மூன்றும்வேற்றுமை உருபாகவும் வழங்கும். ('இம்' என்ற வடிவில் பண்டு இருந்ததாக நம்மால் அறியப்பட்ட)

'இந்த' என்றசொல்லோடு ஒப்புநோக்கின், அவர் கொள்கை உறுதியாதல் காணப்படும். இம் முடிபு, ஓரளவு ஏற்றுக் கொள்ளத்தக்க முடிபாகத் தோன்றுகிறதெனினும், முன்னர்க் கூறிய முடிபை மேற்கொள்ளவே யான் விரும்புகின்றேன். அம்முடிபிற்கண்ட மூக்கினம்தோன்றல் முறைக்குத் தமிழில் நிறையச் சான்றுகள் உள்ளன. இது எனப் பொருள் தரும் 'இந்து' அல்லது 'உந்து' என்ற துளுமொழிச் சுட்டுச்சொல், இக்கொள்கையோடு ஒத்துப்போதல் காண்க. அச்சொற்கள், தமிழ் கன்னட மொழிகளில்வரும் 'இது' (அண்மை), 'உது' (இடைநிலை) என்ற சொற்கள், வேறு திரிபொன்றும் பெறுமல், மூக்கினம் தோன்றல் ஒன்றே பெற்றுப்பிறந்த சொற்களேயாம். அந்தநாள், இந்தநாள் எனப் பொருள்படும் 'அன்று', 'இன்று' என்ற சொற்களை, 'அது', 'இது' என்ற சொற்கள் ஒலிநயம்கருதித் திருந்தினமையால் வந்த சொற்களாகக் கோடல்கூடும். இச் சொற்களை 'அல்', இல் என்ற சுட்டுப் பெயரிடமாகத் தோன்றின என்று கொள்ளுதல், மொழிநூல் முறையோடு ஒத்துளதாகத் தோன்றும் என்றாலும், சுட்டுப்பெயர், 'அல்', 'இல்' என்ற வடிவிலும் வழங்கின என ஹேஷ்யப்படுவதல்லது, அவை யிருந்தனவாகக் காட்டும் நல்ல சான்று எதையும் காணமுடியவில்லை. எவ்வாருயினும், இச்சொற்களை, முறையே அங்கே, இங்கே, எங்கே எனப் பொருள்படும் 'அல்லி', 'இல்லி', 'எல்லி' என்ற கன்னடச் சொற்களோடு ஒப்பிட்டுக் காண்க. இக்கன்னடச் சொற்கள், ஒரு காலத்தே இருந்தனவாகக் கருதப்படும், சுட்டு வினப் பெயர்களாகிய 'அல்', 'இல்', 'எல்' என்பனவற்றின் அடியாகத் தோன்றின என்ருயினும், கன்னடத்தில் ஏழாம் வேற்றுமையுருபாகவரும் 'அல்லி' என்பதைப்போன்றே, தமிழில் அவ்வேழாம் வேற்றுமையுருபாக வரும் 'இல்' என்றசொல், முன்பின்னுக மாறிய வடிவாகிய 'லி' என்பது, மேற்கூறப்பட்ட சுட்டு, வினப்பெயர்களின் அடிகளாகிய 'அ', 'இ', 'எ' என்பனவற்ருேடு இணைவதால் பிறந்தன என்ருயினும் கொள்ளப்படும். தமிழில், 'ஒற்றை' என்ற சொல், 'ஓர்' அல்லது 'ஒற்' என்பதன் அடியாகத் தோன்றி

யதைப் போன்றே, இந்நாள் எனப் பொருள்படும் 'இன்று' என்பதின் பிறிதொருவடிவாகிய 'இற்றை' என்ற சொல்லும் 'இல்' அல்லது 'இற்' என்ற வேர்ச்சொல்லினின்றே தோன்றியதாதல் கூடும் என்ற கொள்கை, 'இன்று' என்ற சொல்லும் 'இல்' அல்லது 'இற்' என்பதன் அடியாகவே தோன்றி, யிருத்தல் கூடும் என்பதை உறுதிசெய்கிறது; (அந்நாள் எந்நாள் என முறையே பொருள்படும். 'அற்றை' 'எற்றை' என்பனவும் இம்முடிவையே கொள்ளும்.) இல்லை என்றும், அல்ல என்றும் பொருள்படும் தமிழ் எதிர்மறைச் சொற்களாய 'இன்று', 'அன்று' என்பன, எதிர்மறையடிகளாகிய 'இல்', 'அல்' என்பனவற்றினின்றே முறையாகத் தோன்றின என்ற உண்மையையும் ஈண்டு ஒப்பிட்டுக் காண்க.

(v) 'ப்'கரத்தின்முன், ஒலிநயம் கருதி, 'ம்'கரம் நுழைக்கப்படுதற்குப் பல சான்றுகள் காட்டுதல் கூடும் எனினும் கீழே குறிப்பிடப்பெறுபவையே சாலும். 'திரும்பு' என்ற தன்வினைச்சொல்லின் வேர்ச்சொல் 'திரு' என்பதே; அஃதேயஃதாதல், அச்சொல், தெலுங்கில் 'திருகு' எனவும், கன்னடத்தில் திருவு எனவும் வருதலான் தெளிவாம். அச்சொல், தமிழில் பிறவினைச்சொல்லாங்கால், 'திருப்பு' என்றே வரும். எறும்பைக் குறிக்கும் சொல், கன்னடத்தில் 'இருவெ' என வருவதை நோக்கின், பெயர்ச்சொல்லாக்கவுருபின் 'ப'கரத்திற்கு முன்னர், 'ம'கரம் நுழைந்ததற்குச் சான்றாக, 'எறும்பு என்ற அச்சொல்லைக் கொள்ளுதல் பொருந்துவதறிக. 'ந்து', 'ம்பு' என்ற சொல்லாக்கவுருபுகள், தமிழில் பெயர்ச்சொல்லாக்க வுருபுகளாகப் பயில வழங்கப்படும். ஒரு சில இடங்கள் நீங்க, இச்சொல்லாக்க வுருபுகள் வரும் எல்லா இடங்களிலும் அவை, அப்பெயர்களின் வேர்ச்சொற்களோடு இணைக்கப் பெற்ற ஒலிநய வடிவங்களேயாம் என்பது ஆராய்ச்சியாற் புலனும்.

2. ஒலிநயம் கருதி மூக்கெழுத்துக்களை நுழைப்பதன் இரண்டாம் வகை, தமிழ்மொழிக்கே உரியவொன்று. வினைப்பகுதிக்கும், இறந்தகால இடைநிலையாகிய 'த'கரத்

திற்கும் இடையில், 'ந'கரத்தை நுழைப்பதே அம்முறை. பழங்கன்னடத்திலும் இத்'த'காரமே இறந்த காலத்தைக் காட்ட வரும்; இதே முறை, தெலுங்கு மொழியிலும் வழங்குவதாகும்; ஆனால், அம்மொழிகளில், அத்'த'கரத்தின்முன், 'ந'கரமூக்கெழுத்து இணைக்கப்பெறுவதில்லை. தமிழ் இறந்தகால இடைநிலை ஒலிநயம் கருதி மூக்கினம் பெற்றமைக்குக் கீழ்வருவன எடுத்துக்காட்டுக்களாம். 'வாழ்' என்ற வேர்ச்சொல்லினின்றும், 'வாழ்தேன்' என்று வருதற்குப் பதிலாக 'வாழ்ந்தேன்' என்பது வந்துளது. தமிழ் 'வாழ்', கன்னடத்தில் 'பாள்' எனவரும். தமிழில் 'வாழ்ந்தேன்' எனவரும் இறந்தகால வினைச்சொல், பழங்கன்னடத்தில் 'பாள்தென்' எனவரும். 'விழு' அல்லது 'வீழ்' என்ற வேர்ச்சொல்லினின்றும், 'விழுது' என வருதற்குப் பதிலாக, 'விழுந்து' என வந்தவாறும் காண்க. செந்தமிழ் நடையில், இச்சொல் 'வீழ்ந்து' என வரும். இவற்றோடொத்த கன்னடச்சொல் 'பித்து' என்பது; இதன் மலையாள வடிவம் 'வீணு' என்பது. மூக்கினம், பல்லினத்தை விழுங்கிவிட்டமைக்கு இச்சொல் ஓர் எடுத்துக்காட்டு. சொற்களுக்கிடையில், ஒலிநயம் கருதி, மூக்கினம் நுழைத்தல், இலக்கணத்தமிழினும், பேச்சுத் தமிழிலேயே மிகுதியாக மேற்கொள்ளப்படும். இலக்கணத் தமிழில் 'செய்த' 'பெய்த' என வரும் சொற்கள், பேச்சுத் தமிழில், 'செய்ஞ்ச', 'பெய்ஞ்ச' என ஒலிக்கப்படுதல் காண்க.

3. தமிழ் வினைவேர்ச்சொற்கள் சிலவற்றின் ஈற்றில் வரும் 'ட'கரத்தின்முன், 'ண'கரத்தை நுழைப்பது மூன்றும் வகை. வல்லின 'ற'காரத்தையும், இடையின 'ர'கரத்தையும் ஈற்றில் கொண்டுவரும் வேர்ச்சொற்களுக்கும் இவ்விதி பொருந்தும். 'கரு' என்ற கன்னடச்சொல் தமிழில் 'கன்று' எனவும், 'மூரு' என்ற கன்னடச்சொல், தமிழில் 'மூன்று' எனவும் வரும். மூக்கினந்தோன்றும் முறை மூன்றனுள், முதலிரண்டுமுறைகள் திராவிடமொழிகட்கே உரியனவாம்; சிரியாநாட்டு அரேபிய முறையோடும், இந்தோ-ஐரோப்பிய முறையோடும் மாறுபடுவதைப்

போன்றே, சித்தியமுறையோடும் மாறுபடுவனவாம். அவ்வரேபிய மொழிகளுள் ஒன்றாய எப்ரூமொழியில், ஒலிநயம் குறித்துவரும் 'ன'கரம், சொற்களின் ஈற்றிலேயே வரும். அது, ஒலிநயம் குறித்து வருதலோடு, தேற்றப்பொருள் குறித்துவரும். துருக்கிமொழியில், 'ன'கரம், சமஸ்கிருத மொழியில் உள்ளவாறு, சொற்களின் மூலங்களுக்கும், அவற்றின் சொல்லாக்கங்களுக்கும் இடையில் நுழைக்கப்படும். வடஇந்தியமொழிகளில், மிகமெலிந்த 'ன'கர மூக்கெழுத்து, சொற்களின் ஈற்றெழுத்தாக மேற்கொள்ளப்படும். ஆனால், ஈண்டுக்கூறிய முறைகளுள் எதுவும், மூக்கினந் தோன்றல் முறைகளுள், திராவிடமொழிக்கே உரிய முதலிரண்டு முறைகளோடு ஒத்துளதாகத் தோன்றவில்லை. திராவிடமொழியில் காணப்படும் மூன்றாம்முறை, இந்தோ-ஐரோப்பிய முறைகளோடு பெரிதும்ஒத்துளது. சமஸ்கிருத மொழியில், அம்மொழி வினைவேர்ச்சொற்களின் வகையுள், ஏழாம்வகையைச் சேர்ந்த வினைவேர்ச்சொற்களின் ஈற்றில்வரும் பல்லெழுத்தோடு இணைந்து ஒலிக்குமாறு ஒருமெல்லெழுத்து நுழைக்கப்பெறும். இழிவாகப் பேசு எனப்பொருள்படும் 'நித்' என்ற சொல், அவன் இழிவாகப் பேசுகின்றான் எனப் பொருள்பட வந்துழி, 'நிந்தடி' என வரும். தண்ணீர் எனப்பொருள்பட வரும் 'உத' என்ற வேர்ச்சொல்லை, ஈரம்பட என்ற பொருளில் வரும் 'உந்த்' என்ற சொல்லோடு ஒப்பிடுக. இதுபோலும் மூக்கினந் தோன்றல் முறை, இலத்தீன், கிரீக் மொழிகளிலும் காணப்படும். இலத்தீன்மொழியில், மூக்கினம் கலவா வேர்ச்சொல், இறந்தகாலத்தும், மூக்கினம் கலந்த வேர்ச்சொல், நிகழ்காலத்தும் வரும். 'ஸ்சிதி' என்ற சொல்லை 'ஸ்சிந்தோ' என்ற சொல்லோடும், 'சுபுஇ' என்ற சொல்லை, 'சும்போ' என்ற சொல்லோடும், 'தெதிகி' என்ற சொல்லை, 'தங்கொ' என்ற சொல்லோடும், 'ப்ரெகி' என்ற சொல்லை, 'ப்ரங்கொ' என்ற சொல்லோடும் ஒப்பிட்டுணர்க. 'ஸெண்ட்ம்' என்ற இலத்தீன் மொழிச்சொல்லை, 'எஹ-கதொன்' என்ற கிரீக் மொழிச்சொல்லோடும் ஒப்பிடுக. கிரீக்மொழியில், படித்தல் என்ற பொருளில் வரும் 'மத்' என்ற வேர்ச்சொல்லை

யும், எடுத்தல் என்ற பொருளில் வரும் 'லப்' என்றவேர்ச் சொல்லையும் மூக்கினம் கலந்து, நிகழ்காலம் குறிக்கவரும் 'மன்த்-அனே' என்ற சொல்லோடும், 'லம்ப்-அனே' என்ற சொல்லோடும் முறையே ஒப்பிடுக. சமஸ்கிருதம், கிரீக், இலத்தீன் மொழிகளில் ஒலிநயம் கருதி மூக்கினம் தோன்றும் இம்முறைகள், திராவிடமொழி முறைகளோடு ஒத்திலவாயினும், அவற்றோடு பல்லாற்றானும் தொடர்புடையவாகத் தோன்றுகின்றன. மூக்கினந்தோன்றல், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில், ஒலிநயம் ஒன்றையே குறித்து வரும். ஆனால், தமிழில், அவை, இலக்கண அமைப்புக்களை யடிப்படையாகக் கொண்டுள்ளன. இஃது, அவ்விரு முறைகட்கும் உள்ள வேறுபாடாம். அஃறிணை வினைச் சொற்களில், தம்முன் மூக்கின 'ந'கரம் இணையவரும் மெய்யெழுத்து, அவ்வினை, பிறவினைப் பொருள்பட வந்துழி, அம்மூக்கின 'ந'கரத்தை இழப்பதோடு, தானும் இரட்டிக்கப்பெற்று, மேலும் வல்லொலி உடையதா ஆக்கப்பெறும்.

## எ. இடைவெளித் தடுப்பு அல்லது உடம்படுமெய்

ஈருயிர்கட்கிடையே உண்டாம் இடைவெளியைத் தடுக்க, உடம்படுமெய் நுழைக்கும் திராவிடமொழிமுறை பற்றிய ஆராய்ச்சி, இந்தோ-ஐரோப்பிய மொழிமுறையோடு, குறிப்பாக, கிரீக்மொழிமுறையோடு, அதுபெற்றிருக்கும் ஒப்புமை சிலவற்றை உணரவெளியிடும்.

எதிர்மறைப் பொருளையுணர்த்த, 'அ'கரவுயிரை மேற்கொள்ளும் இயல்பினவாய சமஸ்கிருதமொழியிலும், அவ்வின ஏனைய எல்லாமொழிகளிலும், அவ்'அ'கரவுயிரைத் தொடர்ந்து மற்றோர் உயிர்வரின், அவ்விரு உயிர்கட்கிடையே உண்டாம் இடைவெளியைத் தடுக்க, 'ன'கரம் நுழைக்கப்பெற்று, அவ்'அ'கரவுயிர், 'அன்', 'இன்' அல்லது 'உன்' என மாற்றப்படும். இலத்தீன் மொழியிலும், ஜெர்மானியமொழியிலும் இவ்வாறு வந்த 'ன'கரம், தொடக்கத்தில், ஒலிநயம் ஒன்றே கருதி மேற்கொள்ளப்

பட்டது என்றாலும், பின்னர், 'இன்', 'உன்' போலும் எதிர்மறையுருபுகளின் பிரிக்கமுடியா உறுப்பாக மாறி விட்டது. இந்தோ-ஐரோப்பிய மொழிகள் பலவற்றுள், ஒலிநயம் கருதிய 'ன'கர நுழைவால், தமக்கிடையே உண்டாம் இடைவெளி தடையுற இணையும் ஈருயிர் இணைவு, இவ்வாறு எதிர்மறை அகரமும், பிறிதோர் உயிரும் இணைய வந்த ஈருயிர் இணைவு ஒன்றில் மட்டுமே காணப்படும். சமஸ்கிருதமொழியிலும், பாலிமொழியிலும் பெயர் மூலச், சுட்டுமூலங்களின் ஈற்றில் வரும் உயிரெழுத்திற்கும், அவ்வுயிரெழுத்தோடு இணையவரும் வேற்றுமை யுருபுகட்கும் இடையில், அம்மூல ஈற்றுயிர், மறைந்தோ, அல்லது மாறியோ போகாது, நின்றாங்கு நின்று நிலைபெறற் பொருட்டு 'ன'கர உடம்படுமெய் மேற்கொள்ளப்படும். 'ன'காத்திற்குப் பதிலாக, ஒரோவழி, 'ம'கரம் மேற்கொள்ளப்படுதலும் உண்டு. ஈரான்நாட்டுப் பழம்பெரும் மொழியாகிய ஸெண்டுமொழி, ஜெர்மானிய நாட்டுத் தொன்மொழி ஆகிய இம்மொழிகளில், அம்மொழி மூலங்களில் வரும் உயிருக்கும், அதையடுத்து வரும் ஆறும் வேற்றுமைப் பன்மையுருபிற்கும் இடையில் 'ன'காத்தை நுழைப்பது ஒன்று தவிர, சமஸ்கிருத இனத்தைச் சேர்ந்த மொழியெதிலும், இவ்வழக்காறு காணப்பெறுதலில்லை. உடம்படுமெய்யாக, 'ன'கரம் நுழைக்கப்படுதல், கிரீக் மொழி ஒன்றில் தான் முழுவளர்ச்சி பெற்றுளது. சமஸ்கிருதமொழியில், இடைவெளியென்பது இன்னது என்பதே அறியவொண்ணுவாறு, தொடர்ந்துவரும் உயிர்கள், ஒன்று, இரண்டற இணைக்கப்பெறும்; அல்லது, ஒன்று பிறிதாக மாற்றப்பெறும். ஆனால், உயிர்கள் தம்முள் இணைவதோ, அல்லது ஒன்று பிறிதாக மாற்றப்பெறுவதோ ஆகாமல், நிலைத்து நின்றாங்குநிற்கும் கிரீக்மொழியில், தொடர்ந்துவரும் ஈருயிர்கட்கிடையே, இடைவெளித் தடுப்பாக, 'ன'கரம் நுழைக்கப்பெறும். இம்முறை, ஒரு சொல்லின்கண் வந்த ஈருயிர் இணைந்தழி மட்டுமேயல்லால், வேறுபட்ட சொற்களில் வரும் இரண்டு உயிர்கள் இணைந்தழியும் மேற்கொள்ளப்படும்.

திராவிடமொழிகளில் நிலவும் உடம்படுமெய் நுழைமுறை பற்றிய ஆராய்ச்சியினை மேற்கொள்ளும் நமக்குத் தொடக்கத்தில், இப்போது நாம்கண்ட முறைகளோடொத்த முறையொன்றும், அம்மொழிகளிற் புலப்படாது. தமிழிலும், கன்னடத்திலும் பொதுவாகத் திராவிட மொழிகள் எல்லாவற்றிலும், ஈருயிர்கட்கிடையேயுண்டாம் இடைவெளி, 'வ'கரம் அல்லது 'ய'கரவுடம்படுமெய் நுழைவால் தடுக்கப்பெறும். சமஸ்கிருதத்தினின்றும் கடன் வாங்கப்பெற்று, ஆண்டிருந்தவாறே வந்து வழங்கும் தொகைச் சொற்கள் சிலவற்றிலல்லது, பிறசொற்களில், சமஸ்கிருதத்தில் நிகழ்வதுபோல், உயிர்கள் இணைந்து விடுவதோ, ஒன்று பிறிதாகத்திரிந்து விடுவதோ, திராவிட மொழிகளில், நிகழ்வதில்லை. உயிரை முதலெழுத்தாக் கொண்ட வருமொழிகட்கு முன்னிற்கும், நிலைமொழியின் ஈற்றில்வரும் உயிர்களுள், ஒலித்துணை கருதிவரும் சில குற்றுயிர்கள் நீங்க, பிற ஈற்றுயிர்கள் நீக்கப்படுவதுமில்லை. தெலுங்கிலும் கன்னடத்திலும் சிறப்பிலாவுயிர்கள் சில மட்டும் நீக்கப்பெறும். பொதுவாக, எளிய ஒலிப்பு முறைக்காகவும், திராவிடத்தின் தனிப்பண்பாகிய ஒட்டுச் சொற்றன்மையை நிலைநிறுத்துதற்காகவும், எல்லாவுயிர்களும் உள்ளது உள்ளவாறே கொள்ளப்பெற்று, தனித்தனியாகவே ஒலிக்கப்பெறும். ஆயினும், ஈருயிர்கட்கிடையே தோன்றும் இடைவெளி மிகவும் வெறுக்கப்படுவதொன்றாகலின், நிலைமொழி யீற்றுயிர்க்கும், வருமொழி முதல் உயிர்க்கும் இடையே, 'வ'கரம் அல்லது 'ய'கரம், உடம்படுமெய்யாக நுழைக்கப்படுவதால், அடுத்தடுத்து உயிரெழுத்துக்களை யொலிப்பதால் தோன்றும் ஒலிச்சீர்கேடு, நீக்கப்படுகிறது. உடம்படுமெய் நுழைவு பற்றிய தமிழ் விதியாவது : 'அ', 'ஆ', 'உ', 'ஊ', 'ஒ', 'ஓ', 'ஔ' இவற்றின் பின் 'வ'கரமும், 'இ', 'ஈ', 'எ', 'ஏ', 'ஐ', இவற்றின் பின் 'ய'கரமும் கொள்ளப்படும் என்பதாம். இதுவே, கன்னடமொழியின் விதியுமாகும். 'வர' + 'இல்லை' = 'வர' + 'வ்' + 'இல்லை' = 'வரவில்லை' ; 'வழி' + 'அல்ல'; = 'வழி' + 'ய்' + 'அல்ல' = 'வழியல்ல.'

சில உயிர்கட்கு முன்னர் 'வ'கரத்தையும், சில உயிர் கட்கு முன்னர் 'ய'கரத்தையும் மேற்கோடல் மொழிச் சீர்திருத்தத்தின் விளைவால் வந்ததேயாம். தொடக்கத்தில் ஒரு மெய்யெழுத்தே மேற்கொள்ளப்பட்டது என்றும், அம்மெய்யெழுத்து, 'ம'கரமாகவும், 'ன'கரமாகவும், 'ய'கரமாகவும் மாறும் இயல்புடைய 'வ'கரமாம் என்றும் கருதுதல் தகும். பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் ஆராய்ந்து கண்டவாறு, மலையாளமொழியில் தனித்தியங்கும் 'அ'கரம் அரிதாதலின், அம்மொழி 'வ'கரத்தின் இடத்தைச் சிறிது சிறிதாக 'ய'கரம் பற்றிக்கொண்டுவிட்டது. 'அவன்', 'இவன்' என்ற தமிழ்சொற்கள், தெலுங்கில், 'வாண்டு', 'வீண்டு' என்றே மாறுவதாலும் 'வ'கரமே பழமையானது என்பது உறுதியாதல் காண்க. தெலுங்கிலும் 'ய'கரம், 'வ'கரத்திற்குப் பிற்பட்டதே என்பதை இச்சொற்கள் உறுதிசெய்வதாக எனக்குத் தோன்றுகிறது. இதைப் போலவே, தெலுங்கு 'ன'கரமும், 'ம'கரத்திற்குப் பிற்பட்டதாதல் கூடும். எது எவ்வாறாயினும், தெலுங்கு, துளு, கன்னடமொழிகளில் 'ம'கரமும், 'ன'கரமும், 'வ'கரமும் 'ய'கரமும் ஒன்று மற்றொன்றாக மாறுகின்றன. அவ்வாறே, தமிழிலும், 'ன'கரமும், 'ய'கரமும், 'வ'கரமும் தம்முள் மாறுகின்றன என்பதும் உறுதியாம். திராவிடமக்கள், ஒருவரோடொருவர் மேற்கொள்ளும் சொல்லாடல்களிலும், அவர்கள் எழுத்திலும், ஈருயிரொலிகட்கிடையே ஒலிநயம் குறித்த உடம்படுமெய் நுழைத்தல் இயல்பாக நிகழக் காணலாம். இவ்வியல்பு, அவ்வினத்தைச்சேர்ந்த திருந்தா மொழிகளிலும் காணப்படும் எழுத்துக் கலையினை மிகமிக அண்மைக் காலத்தே அறிந்த கூமொழியும், தமிழைப் போன்றே, ஒலிநயம் கருதி 'வ'கரத்தை மேற்கொள்கிறது. அவள் என்பதைக் குறிக்க, கூமொழியில், 'ஆஆலு' என்றும் கூறலாம்; 'ஆவாலு' என்றும் கூறலாம். இவ்வாறு, 'வ'கரம் அல்லது 'ய'கரத்தை நுழைத்தல், ஒரு சொல்லின் ஈற்றில் நிற்கும் உயிருக்கும், மற்றொரு சொல்லின் முதலில் நிற்கும் உயிருக்கும் இடையில் மட்டும் நிகழ்வதன்று; வேற்றுமையேற்க நிற்கும் சொல்லின் ஈற்றில்வரும் உயிர்க்

கும், அச்சொல்லோடு இணையவரும் வேற்றுமையுருபில் முன்னிற்கும் உயிர்க்குமிடையிலும் அது மேற்கொள்ளப் படும். 'புளி' + 'இல்' = 'புளி' + 'ய்' + 'இல்' = 'புளியில்'; 'பலா' + 'இல்' = 'பலா' + 'வ்' + 'இல்' = 'பலாவில்.' எதிர் மறைப்பொருட்பேறு குறித்து, எதிர்மறையுருபினை மேற் கொள்ளும்முறை, திராவிடமொழிகள் அறியாதவொன்று ஆதலின், உயிர் முதல் சொற்களின்முன், 'அ'கரத்திற்குப் பதிலாக, 'அன்' அல்லது, 'இன்' அல்லது 'உன்' போன்ற எதிர்மறையுருபுகளை மேற்கொள்ளும் இந்தோ-ஐரோப்பிய முறையெதுவும், திராவிடமொழியெதிலும் இடம் பெற வில்லை.

ஈருயிரிடை வெளித்தடுப்பு முறைக்கண் திராவிடம், கிரீக் ஆகிய இருமொழிகட்கும் இடையில் நிலவுவதாகக் காணப்படும் ஒரேவொற்றுமை, திராவிடம் 'வ'கரம் அல்லது 'ய'கரத்தை உடம்படு மெய்யாகக் கொள்வதில் காணப்படுகிறது. இடைவெளித் தடுப்பு அல்லது உடம் படுமெய்புணர்த்தல் பற்றிய ஆராய்ச்சியை மிகமிக நுணுக்க மாக மேற்கொள்ளுங்கால், குறிப்பிடத்தக்க, ஓர் உண்மை யான ஒற்றுமை அவ்விருமொழிகட்கும் இடையே நிலவு வது வெளியாகும். தமிழ், 'வ'கரவுடம்படுமெய்யினை மேற் கொள்ளுமிடங்கள் பலவற்றிலும், தெலுங்கும், துளுவும் கிரீக்மொழியைப் போலவே, 'ன'கரத்தை மேற்கொள்கின் றன. ஒலிநயம் குறித்து இருவகையாகப் பிரித்து வரிசை செய்யப்பெற்ற தெலுங்குச் சொற்களுள், ஒருவகையைச் சேர்ந்த சொற்களில், வருமொழி, உயிர் முதல்மொழியா யின், இடைவெளித்தடுப்பாக, 'ய'கரவுடம்படுமெய் மேற் கொள்ளப்படும். மிகப்பெரிதாய பிறிதொருவகைச் சொற் களில், கிரீக்மொழியைப் போலவே, 'ன'கரம் மேற்கொள் ளப்படும். பையச் சென்றது என்ற பொருள்தோன்ற வரும் சொல், தெலுங்கில் 'தின்னகா-ஏகெனு' என்று வருதற்குப்பதிலாகத் 'தின்னகானேகெனு' என்பதே வரும். தெலுங்கில், இவ்வாறு, 'ன'கரம் உடம்படு மெய்யாக மேற் கொள்ளப்படின், அது 'த்ருதவெழுத்து' எனப்பெயர்

பெறும்; ஒலிநயம் கருதி, 'ன'கரவுடம்படுமெய்பெற்ற தொகைச் சொற்கள், 'த்ருத இனச்சொற்கள்' என்றழைக்கப் பெறும். 'த்ருத' என்பதற்கு 'விரைந்தோடுதல்' என்பது பொருளாம். ஆதலின், த்ருத 'ன'கரம் என்பதற்கு மறைந்து போகும் 'ன'கரம் என்று பொருள் கொள்ளலாம். 'ன'காத்திற்குப் பதிலாக 'ய'கரத்தை மேற்கொள்ளும் மற்றொருவகைச் சொற்கள் 'கல இனச்சொற்கள்' எனப்படும். அவை, 'ன'காத்திற்குப் பதிலாக 'ய'கரத்தை மேற்கொள்கின்றன என்ற இம்முடிபை முதற்கண் அறிந்து வெளியிட்டவர் திருவாளர் பிரௌன் என்பாராவர். சொற்களை எண்ணுப் பொருளுடையவாக இணைக்க வருமிடத்தும், இரண்டு அல்லது ஏழாம் வேற்றுமை உருபாக வருமிடத்தும், 'ன'கரம் தனக்கென ஒருபொருள்பெற்று நிற்குமாதலின், அவ்விடங்களில், உடம்படுமெய்யாக 'ன'கரம் வருவது பொருந்துவதன்று. ஆகவே, அவ்விடங்களில் 'ய'கரமோ, அல்லது பிறசந்தியோ மேற்கொள்ளப்படும். மேற்கூறிய விடங்களிலும் 'ன'கரவுடம்படுமெய்யே மேற்கொள்ளப்பெறின், எந்த 'ன'கரம், அப்பொருள் குறிப்பது? எந்த 'ன'கரம், உடம்படுமெய்யாக வந்துளது என அறியமாட்டாது, ஒன்றை ஒன்றாகப் பிறழக்கொள்ளவும் கூடும். அதைத் தடுத்தற்பொருட்டே, அவ்விடங்களில் 'ன'கரத்திற்குப்பதிலாக, 'ய'கரவுடம்படுமெய் மேற்கொள்ளப்படுவதால், கொள்கையளவில் 'ன'கரத்திற்கும், 'ய'கரத்திற்குமிடையில் யாதொரு வேற்றுமையுமில்லை. ஆகவே, தமிழ் 'வ'கர, 'ய'கரங்களைப் போன்றே, இவ்விரு எழுத்துக்களும் பிறப்பாலும், பயனாலும் பண்டு ஒருதன்மையவே என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

ஒலிநயம் கருதிய தெலுங்குமொழிச் சிறப்பியல் பொன்றை ஈண்டுக் குறிப்பிடல் நன்று. 'ன'கரஉடம்படுமெய் மேற்கொள்ளும் 'த்ருத' இனச்சொற்களின் ஈற்றில் வரும் உயிரெழுத்திற்கும், வருமொழி முதற்கண் வரும் வல்லொலி வல்லின மெய்யெழுத்திற்குமிடையில், 'ன'கரத்திற்கு இனமான 'னி', அல்லது 'னு' ஒலிநயம் கருதி

நுழைக்கப்படும்; புணர்ந்துழி அவ்வல்லொலி வல்லினம், மெல்லொலி வல்லினமாக மாற்றப்படும். நிலைமொழி, த்ருத இனத்தைச் சேர்ந்த உயிரீற்றுச் சொல்லாயின், அச்சொல்லோடு புணரவரும் வருமொழிச்சொற்கள் எம் மெய்யெழுத்தை முதலாகக்கொண்டு வரினும், அவ்விரண் டிற்குமிடையேயும், 'னி' அல்லது 'னு' நுழைக்கப்படும். இத்தகைய இடங்களில் வரும் 'னி' அல்லது 'னு', தன்னைத் தொடர்ந்து வரும் மெய்யெழுத்தோடு இரண்டறக் கலந்து விடும் இயல்பினதான தெலுங்கு அனுஸ்வார வெழுத்தாகிய 'ம'கரமாகத் திரிந்து விடுதலும் உண்டு என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். தமிழில், 'வ'கரவுடம்படுமெய்யும், தெலுங்கில் 'ன'கரவுடம்படுமெய்யும் வரவேண்டிய இடங் களில், தெலுங்கு ஒரோவழி, 'ம'கரவுடம்படு மெய்யினை மேற்கோடலும் உண்டு.

தெலுங்கில், ஒலிநயம் கருதி வரும் உடம்படுமெய் களுள், 'ம'கரமே தொன்மை வடிவாமெனவும், பிறவுடம் படுமெய்களாகிய 'ன'கரமும், 'ய'கரமும், அம் 'ம'கரத்தின் மெல்லினத்திரிபாம் எனவும் கொள்ளப்படும். உடம்படு மெய்யாக, 'ன'கர 'வ'கரங்களுக்குப் பதிலாக 'ம'கரத்தை மேற்கொள்ளும் மிகப்பழைய வழக்காறு, கன்னடஇலக் கிய நடையில், இரண்டாம் வேற்றுமை ஒருமைப் பெயர்ச் சொற்கள் சிலவற்றில் இடம் பெற்றிருக்கக் காணலாம். ஆசிரியரை என்ற இரண்டாம் வேற்றுமைப்பொருளில் 'குருவம்' என்பதற்குப்பதிலாக, 'குருமம்' என்பது வழங் குதல் காண்க. துளுமொழியில், இம்முறைக்கு மாறாக, பழைய 'வ'கரம், 'ம'கரமாகவும், 'ம்ப்' எனும் ஒலியுடைய தாகவும் மாறிவழங்கக் காணலாம். இவள் என்ற தமிழ்ச் சொல், 'இமள்' என வருதற்குப் பதிலாக, 'மோள்' என் றும், இவர் என்பது, 'இமர்' என வருதற்குப்பதிலாக 'மேர்' என்றும், இவன் என்பது 'இம்பெ' என்றும் வருதல் காண்க. இச்சொற்களோடு, அவன் என்ற தமிழ்ச்சொற்கு ஈடாகவரும் 'ஆயெ' என்ற அம்மொழிச் சொல்லையும் ஒப்பிடுக. இச்சுட்டுப் பெயர்ச்சொற்களில், ஒலிநயம்

கருதிய உடம்படுமெய்யாக 'வ'கரமே பண்டு இருந்தது என்பதை உறுதி செய்ய, திராவிடமொழிகள் பலவும் அளிக்கும் சான்றுகள் அத்துணைச் சிறந்த ஆற்றல் வாய்ந்தன ஆதலின், துளுமொழியின் 'ம'கரவுடம்படுமெய்யினைப் பின்னர்த்தோன்றிய பிழை வடிவாம் என்றே நான் கருதுகின்றேன். தமிழலக்கியங்களிலும், திருந்திய நடைஎனப் பாராட்டப்பெறும் இன்றைய எழுத்தாளர் நடையிலும் 'வ'கரம் ஒன்றே இடம்பெற, பேச்சுத்தமிழில்,* அவ்விடங்களில் 'வ'கரத்திற்குப் பதிலாக மகரம் மேற்கொள்ளப் படுகிறது. 'என்னவோ' திருந்திய நடை; 'என்னமோ' பேச்சுநடை.

பிற்காலச் சமஸ்கிருத மொழியில், சொல்லீற்றில் வரும் உயிரெழுத்துக்களுக்கும், வேற்றுமை உருபுகட்கும் இடையில் உடம்படுமெய்யாக 'ன'கரம் வருமிடங்களில், வேதகாலச் சமஸ்கிருதமொழியில், 'ய'கரமேபெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாம். தெலுங்கில் ஒலிநயம் கருதி வரும் உடம்படு மெய்களுள், 'ம'கரமே தொன்மைவாய்ந்ததாம் எனவும், 'ன'கரமும், 'ய'கரமும், அம் 'ம'கரத்தின் மெல்லினத் திரிபாம் எனவும் நான் கருதுகின்றேன்.

'ன'கரமும், 'ய'கரமும் தெலுங்கில் உடம்படுமெய்களாக வருமிடங்களில், தமிழில் 'வ'கரமும், 'ய'கரமும் உடம்படுமெய்களாக வரும் என்பது முன்னரே அறிவிக்கப் பட்டுளது. தமிழ்ச்செய்யுள் நடையில் காணப்படும் சொல்லுருவங்களையும், சாரியைகளையும் நுணுகி ஆராயின், இதற்கு மேலும் ஒருபடி செல்லற்குரிய சான்றுகளை யாம் காணல் கூடும். 'வ'கரத்திற்குப் பதிலாக, 'ன'காத்தை மேற்கொள்ளும் முறை, பெரும்பாலான இடங்களில், சிறப்பாக இலக்கிய நடையில் வரும் வினைமுற்று விகுதிகளில், தமிழிலும் காணப்படும். தமிழ் அஃறிணைப் பன்மைச்சுட்டு 'அவை' என்பது; ஆகவே, அம்மொழி அஃறிணைப்பன்மை வினைமுற்று விகுதியாக 'அவை' அல்லது அதன் தொன்மை வடிவாகிய 'அவ' என்பதே வருதல்வேண்டும்; ஆனால்,

அதற்குப்பதிலாக, 'அன' என்பதே வரக்காண்கிறோம்; அதாவது, சுட்டுப்பொருள் குறித்துவரும் 'அ'கரத்திற்கும், அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதியாகிய 'அ'கரத்திற்கும் இடையே, 'வ'கரத்திற்குப் பதிலாக, 'ன'கரம் உடம்படுமெய்யாக வந்துளது; 'இருக்கின்றவ' என்பதற்குப் பதிலாக 'இருக்கின்றன' என்பதே காணப்படுகிறது; அதைப்போன்றே 'அவன்', 'அவர்' என்ற தனிநிலைச்சுட்டுப் பெயர்களில், ஈருயிரொலிகட்கிடையுண்டாம் இடைவெளி, 'வ'கரவுடம்படுமெய்யால் தடுக்கப்பட்டிருப்ப ('அ' + 'வ்' + 'அன்' = 'அவன்'; 'அ' + 'வ்' + 'அர்' = 'அவர்'), வினைமுற்று விகுதிகளாக, 'அவன்' என்பதற்குப் பதிலாக 'அனன்' என்பதும், 'அவர்' என்பதற்குப்பதிலாக, 'அனர்' என்பதும் இலக்கிய நடையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'இருந்தான்' என்றசொல்லின் இலக்கிய நடை 'இருந்தவன்' என வாராது, 'இருந்தனன்' என வருவது காண்க. அஃறிணைப் பன்மைக்குறிப்பு வினையாலணையும் பெயர்களிலும், இந்த 'ன'கரம் ஆளப் பெறுவது ஒரோவழி நிகழும். பொருளுடையவை எனப் பொருள்படும் 'பொருள' என்ற சொல்லிற்குப்பதிலாக, 'பொருளவை' என்பது வாராது, 'பொருளன' என்பதே வரும்; 'வருபவை' என்பதற்குப் பதிலாக, 'வருன' என்பது வருதலும் காண்க. இதே 'ன'கரம் பெரும்பான்மைய வாய இறந்தகால வினைமுற்றுக்களிலும், இறந்தகாலப் பெயரெச்சங்களிலும் மேற்கொள்ளப்படுகிறது; 'காட்டினேன்', 'காட்டின'; இச்சொற்களில், 'காட்டி' என்ற இறந்தகால வினையெச்சத்திற்கும், 'என்', 'அ' என்ற வினைமுற்று, பெயரெச்ச விகுதிகளுக்கும் இடையில் வந்த 'ன'கரம் ('காட்டி + 'ன்' + 'என்' = 'காட்டினேன்'; 'காட்டி' + 'ன்' + 'அ' = 'காட்டின') 'வ'கரவுடம்படுமெய்யேபோல், உடம்படுமெய்யாகவே நுழைக்கப்பட்டிருப்பது உணர்க. 'ன'கரம், இவ்வாறு, தெளிவும், எளிமையும் குறித்தவுடம்படுமெய்யாக வழங்கப் பெறும் என்பது, 'ன'கரம், இலக்கியத்தமிழ் நடையில், சிற்சில இடங்களில் 'ய'கரமாக மாறுவதாலும் உறுதிசெய்யப்படும். 'காட்டின' என்பதற்குப்

பதிலாகக் 'காட்டிய' என்பதும் வழங்கப் பெறுதல் காண்க. தமிழில், 'ன'கரம் உடம்படுமெய்யாக வரும் என்பது எண்ணுப்பெயர்களாலும் உறுதிசெய்யப்படும். பத்திற்கும், இருபதிற்கும் இடையில் வரும் தொடரெண்ணுப் பெயர்களனைத்தும், பத்து என்ற எண்ணைக் குறிக்கும் சொல்லோடு, ஒன்று முதலாக ஒன்பதுவரையுள்ள எண்களைக் குறிக்கும் சொற்கள் தனித்தனியேவந்து இணையத்தோன்றுகின்றன. இருபதிற்கு மேற்பட்ட தொடரெண்ணுப் பெயர்களில், 'பந்து' என்ற எண்ணைக்குறிக்க 'பது' என்பதும், பதினொன்று முதல் பதினெட்டுவரையுள்ள எண்களில், பத்து என்ற எண்ணைக் குறிக்க, தெலுங்குவடிவமாகிய 'பதி' என்பதும் வரும். 'பதி' என்ற இச்சொல்லிற்கும், இச்சொல்லோடு இணையவரும் உயிர்முதல் எண்ணுப் பெயர்களாகிய 'ஒன்று', 'இரண்டு', 'ஐந்து', 'ஆறு', 'ஏழு', 'எட்டு' என்ற சொற்களுக்கும் இடையே உடம்படுமெய்யாக 'ன'கரமே நுழைக்கப்பெறும். 'ன'கரவுடம்படுமெய் பெறும் தமிழ், கன்னட எண்ணுப் பெயர்களை, 'ன'கரத்திற்குப்பதிலாக 'ஹ'கரவுடம்படுமெய்பெறும் தெலுங்கு எண்ணுப் பெயர்களோடு ஒப்பிட்டு நோக்கின், 'ன'கரம், எளிமையும் தெளிவும் குறித்துவந்த உடம்படுமெய்யே என்பது உறுதி செய்யப்படும்.

| தமிழ் | கன்னடம் | தெலுங்கு |
|---|---|---|
| 'பதினைந்து' | 'பதினைது' | 'பதிஹேனு' |
| 'பதினாறு' | 'பதினாறு' | 'பதிஹாரு' |
| 'பதினேழு' | 'பதினேளு' | 'பதிஹேடு' |

'பதின்மூன்று' என்ற தமிழ்ச்சொல்லில், உடம்படுமெய்புணர்த்துத் தடுக்க வேண்டிய இடைவெளி யொன்று இல்லாதிருப்பவும், பிற எண்களில் மேற்கொள்ளப்பட்டிருப்பது போன்றே, இதிலும் 'ன'கரவுடம்படுமெய் மேற்கொள்ளப்பட்டுளது. இச்சொல், தெலுங்கில் 'பதமூடு' எனவும், கன்னடத்தில் 'ஹதிமூரு' எனவும் வரும். பதினொன்றுமுதல், பதினெட்டுவரையுள்ள எண்களுள்,

பதின்மூன்று நீங்கலாகவுள்ள தொடரெண்ணுப் பெயர்கள் எல்லாவற்றிலும், கன்னடம், தமிழைப்போன்றே, 'ன'கர வுடம்படுமெய்யை மேற்கொண்டு, பதின்மூன்று என்ற இச்சொல்லில் மட்டும் தமிழ்மொழிக்கு மாருக, 'ன'கரத் தைக் கைவிடுவது நோக்கின், 'பதின்மூன்று' என்ற தமிழ்ச் சொல்லில் வந்த 'ன'கரம், அவ்வெண்ணிற்கு முன்னும், பின்னும் நிற்கும் எண்களில் 'ன'கரம் இடம்பெற்றிருக்கும் ஆட்சியாற்றலாலும், எளிமையும் தெளிவும் நிறைந்த ஒலி யையே விரும்பும் தமிழ்மொழியின் இயற்கைப்பண்பு காரணமாகவும் நுழைந்ததுபோலும் என்றே நான் கருது கின்றேன். பதின்மூன்று என்ற சொல்லை, 'ன'கரவுடம்படு மெய்பெற்றுவந்த சொல்லாகக் கொள்ளத் தயங்குவர் பேராசிரியர் குண்டர்ட் அவர்கள். இவ்வெண்ணுப் பெயர் களில் வரும் 'இன்', வேற்றுமை உருபாம் எனக் கூறுவர் அவர். பதின்மூன்று என்பதைக் குறிக்கும் மலையாளச் சொல்லாகிய 'பதிம்-மூணு' என்பதை அவ்வாறு கோடற் குக் காட்டும் பொருந்திய எடுத்துக்காட்டாகக் கொள்வர். 'ஒம்பதின் ஆயிரம்', 'எண்பதின் கோடி' என்ற சொற்களை யும் அவ்வாறு வந்ததற்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவர். இதற்கு மாருக, இவ்வெண்ணுப் பெயர்களில், தெலுங்கு மொழி பெற்றிருக்கும் 'ஹ'கரம் வேற்றுமை உருபன்று; அது, உடம்படுமெய்யாகவே வந்துளது என்பது உறுதி; ஆகவே, ஏனைய மொழிகளில், அதே எண்ணுப்பெயர்களில் வரும் 'ன'கரமும், அவ்'ஹ'கரத்தைப் போன்றே, உடம்படு மெய்யாதல்வேண்டும் என உறுதி செய்யப்பெறும் என்று கூறவும் கூடும். தமிழ், மலையாளங்களில், ஏற்கும் இடங் களில், வேற்றுமையுருபேற்கும் 'இன்' சாரியை, உடம்படு மெய்யாக வரும் 'ன'கரத்திற்குப் பதிலாக வருதலும் இயல்பே. ஒலியொற்றுமை, ஒரோவழி, ஓர் ஒலியிருக்க வேண்டிய இடத்தில், மற்றோர் ஒலியை ஏற்பதும் உண்டு. கூர்க் மொழியில், தொடரெண்ணுப் பெயர்களில், பத்திற்கு மேற்பட்ட எல்லா எண்ணுப் பெயர்களிலும், பத்தைக் குறிக்கும் 'பது' என்ற சொல்லிற்குப்பின் 'ன'கரம் தோன்றுகிறது; 'பதுனன்ஜெ'=பதினைந்து; 'பதிநு'=

பதினாறு; 'பதனேளு' = பதினேழு; இஃதன்றியும், கூர்க் மொழிச் சாரியைகளில், னகரம் காணப்படுவதில்லை அதற்குப் பதிலாக 'ட'கரம் அல்லது 'ர'கரமே காணப்பெறும். இதைப்போன்றே ஆறும்வேற்றுமை உருபேற்கும் சாரியை 'அ', 'த' அல்லது 'த'வாகவும், ஏழாம்வேற்றுமைச் சாரியை 'ட' அல்லது 'ட', 'டு' அல்லது 'டு'வாகவும் இருக்கும் துளு மொழியிலும், தொடரெண்ணுப் பெயர்களில், பத்து என்பதைக் குறிக்கவரும் 'பத்' என்ற சொல்லிற்குப்பின், பதினொன்குமுதல், பத்தொன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்களில், 'ன'கரம் இணைக்கப்படுகிறது;' பத்ஞொர்ம்ப' = பத்தொன்பது. ஆகவே, இவ்வாறு வரும் 'ன'கரம், எளிமையும் தெளிவும் குறித்து வந்த உடம்படுமெய்யே என்பது உறுதி.

'ன'கரம், உடம்படு மெய்யாக மேற்கொள்ளப் பெறுவது தமிழிலும் உண்டு என்பதற்குரிய சான்றுகள், ஐகாரவீற்றுப் பண்படியாகப் பிறக்கும குறிப்பு வினைப் பெயர்களில் நிறைய உள்ளன. இளமைப் பொருளுணர்த்தும் 'இளை'யென்ற சொல்லோடு, உயர்திணை ஆண்பால் விகுதியாகிய 'அன்'இணையத் தோன்றிய குறிப்பு வினைப் பெயர் 'இளையன்' என வாராது, 'இளைஞன்' என்றுவது, 'இளைனன்' என்றுவது வருதல் காண்க. ஈண்டு வரும் 'ஞ'கரம், 'ன'கரம் மென்மைப்படுதலால் வந்த திரிபேயாம். இந்த 'ஞ'கரமே, மலையாளத்தன்மைப் பெயர்களனைத்திலும் 'ன'கரத்திற்குப் பதிலாக வரும். உயர்திணைப்பொதுப்பால் உணர்த்தும், எதிர்காலம் குறித்த செய்யுள் நடைச் சொல்லாகிய 'மனுர்' என்பது, 'ம + அர்' என்பதற்குப் பதிலாக வந்த சொல்லேயாம். என்று கூறுவர் என்னும் பொருளில் பொதுவாகப் பரவிய வழக்குடைய 'என்பர்' என்பதற்குப் பதிலாக 'என்மர்' என்பதுவர, அதற்கும் பதிலாகவே, 'என்மனுர்' என்பது வந்துளது.

ஆகவே, தெலுங்கைப்போன்றே, தமிழும் ஈருயிர் ஒலிகட்கிடையே உண்டாம் இடைவெளியைத் தடுக்க, 'ய'கரம், 'வ'கரம் போன்ற இடையின எழுத்துக்களையேயல்லாமல்,

'ன'கரம்போன்ற மூக்கெழுத்தையும், உடம்படு மெய்யாகப் பண்டு மேற்கொண்டிருந்தது என்று கோடற்குரிய சான்றுகளும் உள்ளன என்பது உறுதியாயிற்று, ஆனால், 'வ'கரமாகத்திரிதல், 'ன'கரத்திற்கு இல்லை என்ற தடையெழல் கூடும்; அதை யானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், உடம்படுமெய்யாய்வந்து ஈருயிரிடையுண்டாம் இடைவெளிப்போக்கும் பணியினைப் பண்டுமேற்கொண்ட மூக்கெழுத்து 'ம'கரமே; 'ன'கரமன்று என்றுகொள்ளின், எல்லாத்தடைகளும் நீங்கும். ஒருபக்கம் 'ன'கரமாகவும், மற்றொரு பக்கம் 'வ'கரமாகவும் மாறும் இயல்பு, 'ம'கரத்திற்கு உண்டு. தெலுங்கு 'ன'கரத்திற்குப் பதிலாக, மகரத்தைப்பண்டு மேற்கொண்டிருந்தது என்பது, சான்றுகளற்ற, இடத்திற்கேற்றவாறு நாமே கொண்டு கூறும் முடிபன்று; உடம்படுமெய்யாகவரும் 'ன'கரத்திற்கிணையான, 'னி' அல்லது 'னு', சிற்சில இடங்களில் அநுஸ்வார மகரத்திற்குப் பதிலாக வரும் என்பது முன்னரே காணப்பட்டது. எண்ணிடைச்சொல், காலம் கடந்த வினையிடைநிலை ஆக இரு இடங்களில், பழைய தமிழ் மகரத்திற்குப் பதிலாகத் தெலுங்கு 'ன'கரம் வருகிறது. ஈருயிர்கட்கிடையுண்டாம் இடைவெளியைத் தடுக்கச் சிற்சில இடங்களில், 'ன'கரத்திற்குப் பதிலாக, 'ம'கரமும் உடம்படுமெய்யாகவரும். சமஸ்கிருதத்திலும், வேற்றுமை யுருபேற்கிற்கும் சொற்களுக்கும், வேற்றுமையுருபுகட்கும் இடையில், பயின்ற வழக்குடைய 'ன'கரத்திற்குப் பதிலாக, மிகப் பழைய 'ம'கரம் நுழைக்கப்பெறும். தெலுங்கில், இரண்டாம் வேற்றுமை உருபின்முன் எளிமையும், தெளிவும் குறித்துவந்த சாரியையாக 'னி' அல்லது 'னு' வரும் இடங்களிலெல்லாம், பழங்கன்னட மொழியில் 'ம'கரம் வருவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம்.

துளுமொழியில், ஒரோவழி, 'ன'கரம், உடம்படு மெய்யாக வரும். உயிரெழுத்துக்களை முதலாகவுடைய சுட்டுப்பெயர்கள், பெயரெச்சங்களோடிணையத் தோன்றும் வினையாலணையும் பெயர்களில், அவ்விரு சொற்களுக்கும்

இடையே, தமிழும், கன்னடமும், தெளிவும், எளிமையும் குறித்து 'வ'கரத்தை நுழைக்குமெனின், துளு, அவ்விடங்களில், 'ன'கரத்தை நுழைக்கும். செய்கிறவன் எனப் பொருள் தரும் அம்மொழிச்சொல், 'மள்புனயே' ('மள்பு'+'ன்'+'ஆயே'). இகர ஈறுக முடியும் இறந்தகால வினையெச்சங்களுக்குப்பின், 'ன'கரத்தை மேற்கொள்வதில், தமிழும், துளுமொழியையொத்துளது. 'பண்ணினவன்' என்ற தமிழ்ச்சொல்லை, வந்தவன் எனப் பொருள்படும் 'பத்நினயெ' என்ற துளுமொழிச் சொல்லோடு ஒப்பிடுக. தமிழ், 'ய'கரத்தை மேற்கொள்ளும் இடங்கள் சிலவற்றில், துளு, 'ன'கரத்தை மேற்கொள்ளும். 'துரையவர்கள்' ('துரை+ய்+அவர்கள்') எனத் தமிழில் வருவது, துளு மொழியில், 'தொரெனாகுலு' ('தொரெ+ன்+ஆகுலு') என்றே வரும். அம்மொழியில், 'அம்மனாகுளு' என வருவது, தமிழில் 'அம்மை அவர்கள்' என உயிரிரண்டும் ஒருங்கு ஒலிக்கவே வரும். தொழில் நடந்த காலத்தை யுணர்த்தும் 'அக' என்ற வினையெச்ச உருபு, வினைவேர்ச் சொற்களோடு இணைக்கப் படுவுழி, ஈருயிர்கட்கிடையே 'ன'கரம் நுழைக்கப்பெறும். செய்தபோது எனப்பொருள் படும் துளுமொழிச்சொல், 'மள்புனக' ('மள்பு'+'ன்'+'அக') என்பதாகும். ஈண்டுக்கூறிய எடுத்துக்காட்டுக் களோடு தெலுங்கின் ந்ருந இனச்சொற்களில் வரும் 'ன'கரத்தையும் ஒப்பிடுக. துளுமொழியில் தேற்றேகாரம், தனக்குமுன்வரும் உயிரொழுத்திற்கேற்ப, தமிழில் உள்ளவாறு 'யே' அல்லது 'வே' என ஆவதேயல்லாமல், 'அ'கர உயிருக்குப்பின்னும், சிலஇடங்களில், 'எ'கரத்திற்குப் பின்னும் 'னே' என ஆதலும் உண்டு. அவனே எனப் பொருள் படும் அம்மொழிச்சொல், 'ஆயெனே' ('ஆயெ'+'ன்'+'ஏ') என்பதாம். 'ஆ', 'ஓ' என்ற வினாவிடைச்சொற்களின்முன், தமிழ் 'வ'கரத்தை நுழைப்பதேபோல், துளு அப் பொருளில் வரும், 'ஆ'கார, 'ஏ'கார, ஒகாரங்களின்முன், 'ன' கரத்தை நுழைக்கும்.

இப்பொழுது நாம் ஆராய்ந்துகண்ட உடம்படுமெய் யினை மேற்கொள்ளும் முறையில், திராவிட மொழிகள்,

சமஸ்கிருதமொழியோடு ஓரளவு ஒத்திருப்பினும், அவை கிரீக்மொழியோடே பெருமளவு ஒத்துள்ளன என்பதையும் தனித்தனிநின்ற இருசொற்கள் இணைய வந்துழிவந்த ஈருயிர்கட்கிடையே உடம்படுமெய் புணர்க்கும் முறை, கிரீக் மொழி முறையொன்றோடு மட்டுமே ஒத்துளது என்பதையும், இந்நூலைப் படிப்பார் அனைவரும் தவறாது காண்பர். திராவிடமொழியில், இவ்வழக்காறு பெற்றிருக்கும் அத்துணைச் சிறந்த இடத்தையும், அஃது ஆண்டுப் பெற்றிருக்கும் அத்துணை வளர்ச்சியையும், அது சமஸ்கிருதத்தில் பெறவில்லை யென்பதை நோக்கின், திராவிட மொழிகள், இவ்வழக்காற்றைச் சமஸ்கிருதத்தினின்றே பெற்றன எனக் கொள்வது பொருந்தாமை பெறப்படும்.

திராவிடமொழி ஒவ்வொன்றிலும், உடம்படுமெய்யாக ஒரோவழி, 'ர'கரமும் வரும் என்பது ஈண்டுக்குறிப்பிடத் தக்கதாம். காப்பாற்று எனப்பொருள்படும் முன்னிலை யொருமை யேவலாகிய 'கா' என்பதன் பன்மை, 'காவும்' என வாராது, 'காரும்' என்றே வரும். பெயர்ச்சொல்லிற்கும், வேற்றுமையுருபிற்கு மிடையில், கன்னடம் வழக்கமாக மேற்கொள்ளும் 'வ'கர, 'ன'கர, 'த'கரங்களுக்குப் பதிலாக, ஒரோவழி, 'ர' அல்லது 'அர்' என்பதை மேற்கொள்கிறது, கரியதனுடையது எனப் பொருள்படும் அம்மொழிச் சொல் 'கரிதர' ('கரித்'+'அர்'+'அ') என வருதல் காண்க. ஈண்டு வந்த 'அர்', 'அத்' என்பதன் பிறிதொரு வடிவே, தெலுங்கில், சில பெயர்ச்சொற்களுக்கும், பெண்பால் உணர்த்த வரும் 'ஆலு' என்ற விகுதிக்கும் இடையே, தெளிவும், எளிமையும் குறித்து, 'ர'காம் நுழைக்கப்பெறும். அழகிய பெண் எனப் பொருள்படும் அம்மொழிச்சொல் 'சுந்தரு ராலு' என்பதாம். இச்சொல்லை அப்பொருள் குறித்த 'சௌந்தரியவள்' என்ற தமிழ்ச்சொல்லோடு ஒப்பிடுக. இதில், இருசொற்களுக்கும் இடையில் வழக்கமாகவரும் 'வ'காமே வந்துளது காண்க. தெலுங்கில், பிற இடங்களி லும், எளிமையும் தெளிவும் குறித்து, 'ர'காம் நுழைக்கப் பெறும். இலவீடு எனப் பொருள்படும் அம்மொழிச்

சொல், 'பொதரில்லு' ('பொத'+'ர்'+'இல்லு') என்பதாகும்; 'பொத'=இலை; 'இல்லு'=வீடு.

கன்னடமொழியில், இறந்தகால வினையெச்ச விகுதியாகிய 'இ'காரத்திற்கும், வினைமுற்று விகுதிக்கும் இடையில்வரும் 'த'கரம், தோற்றத்தில், இறந்தகாலங் காட்டும் இடைநிலையேயாயினும், இப்போது, அது, எளிமையும், தெளிவும் குறித்த உடம்படுமெய்யாகவே நுழைக்கப் பெறுகிறது. 'மாடித' ('மாடி'+'த்'+'அ')=செய்தன; இத் 'த'கரம், தெலுங்கிலும், தமிழிலும் 'ன'கரமாக மாறும்; தமிழில், அது, மேலும் 'ய'காரமாக மெலிதலும் செய்யும். பண்பையும், அப் பண்புடைப் பொருளையும் குறிக்கவரும் இரு தெலுங்குச் சொற்கள் புணர்ந்துழி அவ்விரு சொற்களுக்கும் இடையே, இதே தொழில் குறித்து, சில இடங்களில் 'ட'கரம் வரும். கூரிய அம்பு எனப்பொருள்படும் அம்மொழிச்சொல் 'கறகு டம்மு' ('கறகு+ட்+அம்மு') என்பதாம். இதில்வரும் 'ட'கரம், 'டி' என்பதோடு ஒற்றுமையுடைத்து என்பதிலும், பண்டு, சாரியையாகவே வழங்கப்பட்டது என்பதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. 'வ'கரவுடம்படு மெய்யினைத் தமிழ் மேற்கொள்ளும் இடங்களில், தெலுங்கு, ஒரோவழி 'க'கரத்தினை மேற்கொள்ளும். அறுவர் என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் 'ஆருகுரு' என்றும் வரும்; 'ஆருவுரு' என்றும் வரும். 'கீ'கரமும், சிலஇடங்களில் அவ்வாறு வரும்; பதினொன்று என்பதைக் குறிக்கும் அம்மொழிச்சொல் 'பதகொண்டு' ('பத'+'க்'+'ஒண்டு') என வருதல் காண்க. அவன் எனப் பொருள்படும் 'வாடு' என்பதற்குப் பதிலாக, 'காடு' என்பதும், அவர் எனப் பொருள்படும் 'வாரு, என்பதற்குப் பதிலாக, 'காரு' என்பதும் வருவது தெலுங்கில் 'வ'காரத்திற்குப் பதில் 'க'கரம் வரும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாம்.

## அ. ஒலிநயம் குறித்து ஓரினப்பட்ட உயிர் வரிசை

பின்னிஷ், துருக்கி, மங்கோலிய, மஞ்சு போன்ற சித்தியமொழிகள் எல்லாவற்றிலும், ஒலிநயம் குறித்து உயிர் ஓரினப்படல் என்ற ஓர் ஒலிமுறை மேற்கொள்ளப் படுகிறது. ஒருசொல் அல்லது ஒரு வேர்ச்சொல்லின் ஓர் அசையில் வரும் ஓர் உயிர், அவ் அசையைத் தொடர்ந்து வரும் அசைகளிலும் தன்னோடொத்த, அதாவது தன் இனத்தைச்சேர்ந்த உயிர் (துருக்கிமொழி உயிர்கள் நால் வகைப்படும்) வருவதையே விரும்புவதோடு, அதற்கேற்ப அவ்வுயிர்களை மாற்றவும் செய்யும் என்பதே அவ்வொலி முறையாம். அவ்வொலிமுறை இன்றைய பர்ஷயமொழி யிலும் இருந்தது என்பதைக் காட்டும் சில அடிச்சுவடுகள் அம்மொழியில் உள்ளனவேனும், அது, சித்திய இன மொழிகள் எல்லாவற்றிலும் கலந்திருந்ததாகத் தோன்று வதோடு, அம்மொழிகள் அனைத்தும் ஒரு மூலத்தினின் றும் தோன்றினவே என்ற கொள்கையை நிலைநாட்டவல்ல நல்ல சான்ருகவும் கொள்ளப்படுகிறது.

ஒலிநயம் குறித்து உயிர் ஓரினப்படல் போன்ற ஒலி முறை, தெலுங்குமொழியிலும் இருக்கக்காணலாம். இதன் அடிச்சுவடு எல்லாத் திராவிடமொழிகளிலும் காணப்படி னும், சிறப்பாகத் துளுமொழியொன்றே, இம்முறையில் தெலுங்கோடு நெருங்கிய தொடர்பு கொண்டுளது. ஆனால், இம்முறை, தெலுங்குமொழி யொன்றிலேயே, தெளிவா கவும், முறையாகவும் இடம்பெற்றுளது. தெலுங்கில், இவ்வொலிமுறையின் ஆட்சி, 'இ', 'உ' என்ற இரு உயிர் களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுளது. முன்னிற்கும் உயிரெழுத்திற்கேற்ப, 'உ'கரம், 'இ'காமாகவும், 'இ'கரம், 'உ'காமாகவும் திரிவதில், தெலுங்கு ஒலிமுறை, சித்திய மொழிமுறையோடு முழுதும் ஒத்துளது. அம்முறைப் படி, 'இ', 'ஈ', 'ஐ' என்ற உயிர்களுக்குப் பின்வரும் எண் ணிடைச்சொல் 'னி' எனவும், 'உ'காத்திற்கும், ஏனைய உயிர்களுக்கும் பின்வரும் எண்ணிடைச்சொல் 'னு' என

வும் ஆம். அவ்வாறே நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு', 'இ'கர, 'ஈ'கார, 'ஐ'காரங்களுக்குப்பின் 'கி' என மாறும். மேலே கூறிய எடுத்துக்காட்டுகளில், இணைய வந்த உருபுகளில் வரும் உயிர்களே, அவ்வுருபுகள் எந்தச் சொற்களோடு இணைக்கப்பெறுகின்றனவோ, அச்சொற்களில் வரும் உயிர்களுக்கினமாக மாற்றப்பட்டுள்ளன. ஆனால், பெரும்பாலான சொற்களில், இணையவந்த வுருபுகள், தாங்கள் பெற்றுள்ள உயிரை மாற்றிவிடாமல், தாங்கள் எந்தச் சொற்களோடு இணைக்கப்பட்டுள்ளனவோ, அச்சொற்களில் வரும் உயிர்களையும், தங்களுக்குப் பின்னர், தங்களோடு இணைக்கப்பட்ட உருபுகளில் வரும் உயிர்களையும் தம் உயிருக்கு இனமாக மாற்றுகின்றன. தெலுங்கில் பன்மை குறிக்கும் விகுதி 'லு' என்பது. இது 'கத்தி' என்ற பெயர்ச்சொல்லோடிணைந்தவழி, அச்சொல் விதிப்படி 'கத்திலு' என வருதல் வேண்டும்; ஆனால், பன்மை குறிக்கும் அவ்விகுதியில் வந்த உயிர், அப்பெயர்ச் சொல்லில் வந்த உயிரினும் அழிக்கலாகா ஆற்றல் வாய்ந்ததாகலின், அப் பன்மைச்சொல் 'கத்துலு' என ஆகிறது. அவ்வாறே 'கி' என்ற நான்காம் வேற்றுமை உருபேற்ற 'கத்தி' என்ற ஒருமைப்பெயர்ச்சொல், 'கத்திகி' எனவரவும், அவ்வுருபேற்ற அச்சொல்லின் பன்மை, 'கத்திலகி' என வாராது, கத்துலகு' என்றே வரும். ஈண்டுப் பன்மை யுணர்த்த வந்த 'ல' என்பதற்கும் அம்மொழிப் பன்மை யுருபாகிய 'லு' என்பதன் ஆற்றலுண்டு ஆதலின், அது, 'கத்தி' என்பதைக் 'கத்து' எனமாற்றியதோடு, நான்காம் வேற்றுமை ஒருமை உருபாகிய 'கி' என்பதையும் 'கு' என மாற்றும் ஆற்றலுடைத்தாயிற்று.

தெலுங்கு வினைச்சொல்லுருபுகளுள், மிகச்சிறப்புடைய வுருபு, அவ்வினைக்குக் காலம் கற்பிக்கும் காலங் காட்டும் இடைநிலைகளாம். அவ்விடை நிலைகளின் வலிக்கும் ஆற்றலால், அவ்விடைநிலைகளோடு இணைக்கப்பெறும் திணைபால் உணர்த்தும் விகுதிகளில் வரும் உயிரெழுத்துக் களேயல்லாமல், அவ்வினைவேர்ச்சொல்லில் வரும் சிறப்

பில்லாவுயிரெழுத்துக்களும், அவ்விடைநிலைகளில் வரும் உயிரெழுத்திற்கினமாக மாற்றம் பெறும். தெலுங்கில், ஆற்றலுடையனுகு எனப் பொருள்படும் 'நலுகு' என்ற சொல்லும், வரையறையில்லா இறந்தகால இடைநிலை யாகிய 'து' என்பதும், நான் எனப்பொருள்படும் 'நேனு' என்ற சொல்லடியாகப் பிறந்த 'னு' என்ற தன்மை யொருமை விகுதியும் சேர்ந்து, நான் ஆற்றலுடையேன் எனும் பொருள்பட, 'நலுகுதனு' என்ற தன்மை யொருமை காலங்கடந்த இறந்தகால வினைமுற்று தோன் றும் இதற்குமாறாக, தன்மையொருமை இறந்தகால இடைநிலையாகிய 'தி' என்பதில் வரும் 'இ'கரவுயிரின் வலிக்கும் ஆற்றலால், தன்மை ஒருமை இறந்தகால வினை முற்றுக்களில் வரும் 'கலுகு' என்ற இறந்தகால வினை யெச்சம், 'கலுகி' என மாறுமல், 'கலிகி' எனமாறும். அதனால், தன்மையொருமை இறந்தகால வினைமுற்று, 'கலுகிதினு' என ஆகாது, 'கலிகிதினி' என்றே ஆகும். ஈண்டுக் 'கலு' என்ற வேர்ச்சொல், 'கலி' என்றாயிற்று. 'நேனு' என்பதன் அடியாகப் பிறந்த 'னு' என்பதும் 'னி' என்றாயிற்று. ஆக இவ்விருமாறுதல்களும், அம்மொழி யின் இறந்தகாலம் உணர்த்தும் மிகப் பழைய இடைநிலை யாகிய 'தி' என்பதற்கு இனமாகத் திரிந்துவிட்டன.

தெலுங்குமொழி ஒலிமுறையிற் காணப்படும் இச் சிறப்பியல்பு, சித்தியமொழிகளில் காணப்பெறும் ஒலிநயம் குறித்து உயிர் ஒரினப்படல் என்ற முறையோடு முழுதும் ஒத்தும், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் நிலவும் முறை யோடு பெரிதும் மாறுபட்டும் காணப்படுகிறது. தெலுங்கு வினைச்சொற்களில் வரும் வினைமுற்று விகுதிகள், அவ் வினை பெற்றிருக்கும் காலங்காட்டும் இடைநிலைக்கேற்ப மாறுபடுவது, கிரீக், இலத்தீன் மொழிகளில், அம்மொழி வினைமுற்று விகுதிகள், அவ்வினைச்சொற்களின் காலமாறு பாட்டிற்கேற்ப மாறுபடுவதோடு ஒப்பு காணப்பட்டது. ஆனால், அம்மொழிகளில் உண்டாம் அம்மாறுபாடு, தெளிவும், எளிமையும் ஒன்றே குறித்து எழுந்துள்ளன

வாகவும், திராவிடமொழிகளில் உண்டாகும் மாறுபாடு, இன்றும், அம்மொழியாட்சியில் காணப்படுவதாய, மாற்றப்படாத, ஒழுங்கான ஒலிமுறை பற்றி எழுந்தன வாகும்.

இவ்வொலி முறைக்கான எடுத்துக் காட்டுக்களை, அம் முறை முழுவளர்ச்சிபெற்றிருக்கும் தெலுங்குமொழிச் சொற்களினின்றே மேற்கொண்டேன் என்றாலும், அம் முறை, அவ்வினமொழி ஒவ்வொன்றிலும் உளது என்ப தற்குரிய அடிச்சுவடுகள் உள்ளன. கன்னடமொழி வினைச் சொற்களில், தமக்கு முன்வரும் உயிரெழுத்துக்களுக் கேற்ப, அவ்வினைமுற்று விகுதிகளில் வரும் உயிரெழுத்துக் கள், 'உ', 'எ', 'இ' என மாறிவரும். 'மாடுத்தேவ்-எ'= நாங்கள் செய்கிறோம்; 'மாடுத்தீர்-இ'=நீங்கள் செய் கிறீர்கள்; 'மாடிதெவ்-உ'=நாங்கள் செய்தோம். ஈருயிர்கட் கிடையே உண்டாம் இடைவெளியைத் தடுக்கும் முறை யில், திராவிடமொழிகள், இந்தோ-ஐரோப்பியமொழி களைப் பின்பற்றினவாகக் காணப்படினும், ஈண்டுக்கூறிய இவ்வொலிமுறையால், சித்தியமொழியாட்சி, திராவிட மொழிகளில் இடம்பெற்றிருப்பது தெளிவாகத் தோன் றும்.

## கூ. அசை பிரித்தல்

நனிமிக எளிமையும், மெய்யெழுதுஇணைவதை மறுப் பதும் திராவிட மொழிகள் மேற்கொள்ளும் அசைபிரிப்பு முறையின் சிறப்பியல்புகளாம். இச்சிறப்பியல்பு, அவ்வின மொழிகள் பலவற்றுள்ளும், திருந்திய மொழிப் பண்பாட் டினை மிகப் பழையகாலத்திலேயே பெற்றுவிளங்கும் தமிழ் மொழிக்கே மிக்க உரிமையுடையதாகவுளது. தெலுங்கு, கன்னட, மலையாளங்களில், சமஸ்கிருதமொழியினின்றும் மேற்கொள்ளப்படாதனவும், அம்மொழியாட்சியால் மாற் றப் படாதனவும் ஆகிய மிகப் பலவாய பழந் திராவிடச் சொற்களும், தமிழில், சமஸ்கிருதத்தினின்றும் வந்து வழங்கும் சொற்களும் அடங்க, உள்ள எல்லாச்சொற்களும்,

கீழ்க்குறிப்பிடும் முறைப்படியே அசை பிரிக்கப்படும். 'ஸ்ட்ரெங்த்' என்ற ஆங்கிலச் சொல்லில் 'ஸ்ட்ர்' என வருவதைப் போல், அசைமுதற்கண், இரண்டு அல்லது மூன்று மெய் யெழுத்துக்கள் இணைவது ஏற்புடைத் தன்று. ஒரு சொல்லில், முதற்கண் நிற்கும் அசையிலேயே யல்லாமல், அச் சொல்லில் தொடர்ந்துவரும் ஏனைய அசைகளிலும், அசை முதற்கண் தனிமெய்யே வருதல்வேண்டும். பல அசைகளைக் கொண்ட ஒரு சொல்லின் இடையில், ஓரசை மெய் யீறாக முடிய, அதை யடுத்து வரும் அசை மெய்ம்முதலா யின். அடுத்து அடுத்து வந்த அவ்விரு மெய்களும், ஒன்று, ஓரினப்பட்டு ஒன்றுதல் வேண்டும்; அல்லது, அவ்விரு மெய்கட்குமிடையே, உயிரொன்று நுழைக்கப் பெறல் வேண்டும். மொழி முதற்கண்ணே யல்லால், சொல்லின் ஈற்றிலும், 'ஸ்ட்ரெங்த்' என்ற ஆங்கிலச் சொல்லில் 'ங்த்' என வருவதைப்போல், மெய்யெழுத்துக்கள் இரண்டோ, மூன்றோ இணைந்து வாரா; தெலுங்கு, துளு, கன்னட மொழிகளில், ஒவ்வொரு சொல்லும் உயிரீறாகவே முடியும். தமிழில், உயிரெழுத்துக்கள், 'ல'கரம், 'ர'கரம் போன்ற தனி இடையின மெய்கள், 'ன'கரம், 'ம'கரம் போன்ற தனி மெல்லின மெய்கள் ஆக இவையே ஈறாக வரும். இம்முறை யில், மலையாளம், தமிழோடு பெரிதும் ஒத்துளது என்றா லும், உயிரீறாக முடிவதையே அது பெரிதும் விரும்பு கிறது. அசை பிரிவின் இம்முறை, சமஸ்கிருத முறை யோடு முற்றிலும் முரண்பட்டிருத்தல் தெளிவுறப் புலனாம்.

தமிழில், சொற்களுக்கிடையில், இடையே உயி ரெழுத்து வழங்கப்பெறாமல், இரண்டு மெய்யெழுத்துக்கள் இணைந்து நிற்கும் இடங்கள் இவைகளேயாம்: 'ங்', 'ஞ்', 'ண்', 'ந்,' 'ம்', என்ற மெல்லெழுத்துக்கள் ஐந்தும், தமக்கு இனமான வல்லெழுத்துக்கள் தம்மைத் தொடர, 'ங்க்', 'ஞ்ச்', 'ட்ண்', 'ந்த்'. 'ம்ப்', என வரும். 'ங்ங்', 'ஞ்ஞ்', 'ண்ண்', 'ந்ந்', 'ம்ம்,' 'ண்ம்', 'ந்ம்,' என்பனவும் வரும்; 'க்க்', 'ச்ச்', 'ட்ட்', 'த்த்', 'ப்ப்', ற்ற் என வல்லொலி வல்லெழுத்துக்கள்

இணைந்தும் வரும்; 'ள்ள்' என்பதும் வரும்; 'ட்க்', 'ட்ப்', 'ற்க்,' 'ற்ச்', 'ற்ப்' என்பனவும் வரும்; 'ன்ன்' என்பதும் வரும். 'ட்க்,' 'ட்ப்,' 'ற்க்,' 'ற்ச்,' 'ற்ப்,' என்பனவும் வரும்; 'வ்வ்' 'ல்ல்', 'ய்ய்' 'ன்ற்', என இவையும் இணைந்துவரும். தமிழில், 'ழ்ந்த்', 'ய்ந்த்', என மெல்லிய வொழுகலோசையுடைய இம் மூன்று மெய்யெழுத்துக்களே, மூன்றாக இணைந்து வரும். தமிழொலி முறை, ஈண்டுக் கூறிய மெய்யெழுத்துகளே, சொற்களுக்கு இடையில், இடையே உயிர் இடப்பெறாமல் இணைந்துவர இசைகிறது. இவையல்லாப் பிற மெய்யெழுத்துக்கள் இணையவரின், ஒன்று, அவற்றுள் முன்னிற்கும் மெய், பின் வரும் மெய்யாக மாற்றப்படும்; அல்லது, தமிழர் தம் ஒலிக்கரணங்கள், அவ்விரு மெய்களையும், தனித்தனியே பிரித்து நன்கு ஒலிப்பதற்கேற்ப, அவ்விரு மெய்கட்கு மிடையே, உயிர் இடப்பெறும். பிற திராவிட மொழி களில், சமஸ்கிருதமொழி யாட்சி ஆற்றலால், மூக்கெழுத் துக்கள், மெல்லொலி வல்லெழுத்துக்களோடே யல்லாமல், வல்லொலி வல்லெழுத்துக்களோடும் இணைகின்றன; அனுப்பு எனப் பொருள்படும் தெலுங்குச் சொல், 'பம்பு' எனவும், எட்டு என்ற பொருள் படவரும் கன்னடச் சொல் 'எண்டு' எனவும் வருதல் காண்க. இம்முறை, திராவிட முறையோடு முற்றிலும் முரண்பட்ட முறையாம் என்று கருதுமளவு, தமிழ்மொழி, இம்முறையைப் பெரிதும் வெறுக்கிறது. சமஸ்கிருதச் சொற்களைத் தமிழ்ப் படுத்து மிடத்துப் பெரிதும் ஆளப்படும் 'இ'கரவுயிரே, இணைந்து வாரா இரு மெய்யொலிகளைப் பிரித்து ஒலிக்கு மிடத்தும் இடையில் நுழைக்கும் எழுத்தாக வருகிறது. சில இடங் களில், 'இ'கரத்திதகுப் பதிலாக, 'உ'கரமும் மேற்கொள் ளப்படும். 'ப்ர' என்ற சமஸ்கிருத முன் இணை, தமிழில், 'இ'கர உயிரை இடையேபெற்று, 'பிர' எனவரும். 'க்ரிஷ்ண' என்ற சொல், 'கிருட்டினன்' எனவும் 'கிட்டினன்' எனவும் வரும். சமஸ்கிருதத்தில் வரும், 'த்ய', 'த்வ', 'க்ய' போன்ற மெல்லொலி மெய்யெழுத்துக்களின் இணைகளும், தமிழில், 'திய', 'திவ', 'கிய' எனப் பிரிக்கப்படும். இணைந்துவாரா இரு மெய்யெழுத்துக்களில், முதற்கண்வரும் மெய்

யெழுத்து, இடையில் உயிரிடப்பெற்று பிரிக்கப்பட்டுத் தனியசையுடையதாக ஆக்கப்படுமாயின், அவ்வாறு பிரிக்கப்படும் அம்முதல் மெய், இடையே உயிர் நுழைதற்கு முன்னர், இரட்டிக்கப்பெற்று வல்லொலி வல்லெழுத்தாக மாற்றப்பெறும். 'தத்வ' என்ற சமஸ்கிருதச் சொல் 'தத்துவம்' என ஆதலும், 'அப்ரயோஜன' என்ற சொல், 'அப்பிரயோஜனம்' என ஆதலும் காண்க.

தமிழில், அசைமுறையிற் காணப்படும் இவ்வியல்புகளின் விளைவாகவும், சொல்லுருபுகள் அனைத்தும் ஒட்டுத் தன்மையுடையவாய் இருப்பதன் விளைவாகவும், சமஸ்கிருத மொழியோடும், ஐரோப்பிய மொழிகளோடும் ஒப்பிட்டு நோக்குமிடத்து, தமிழ், ஒலிகளால் நிறைந்து, நீண்ட சொல்லுருவங்களை உடையதாகத் தோன்றுகிறது. என்றாலும், ஒவ்வொரு அசையும் எளிமையுடையதாகவும், பெரும்பாலான அசைகள் குறுகியன வாகவும் இருப்பதன் விளைவாற்றேன்றும் விரைந்துஒலிக்கும் தன்மை, நெருக்கமும், சுருக்கமும் இன்மையால் நேர்ந்த குறையை நிறைவாக்குகிறது.

பின்னிஷ், அங்கேரிய மொழிகளும், அவ்வினத்தைச் சேர்ந்த பிறமொழிகளும், அசையின் தொடக்கத்தே தனி மெய் வருதலையே ஏற்றுக்கொள்ளும். அங்கேரிய மொழி வழங்கும் மாகியர் இனத்தான் ஒருவன், இரு மெய்களை முதற்கண் பெற்றுவரும் பிறமொழிச் சொற்களை ஒலிக்க நேர்ந்தால், அவ்விருமெய்களுக்கிடையே, உயிரெழுத்தொன்றை நுழைத்துப் பிரித்தே ஒலிப்பன். 'க்ரால்' என்ற பிறமொழிச் சொல், அவன் வாயில், 'கிராலி' என்றே வரும். இணைந்து வரும் இருமெய்களில், முதல் மெய், இஸ்ஸொலி எழுத்தாயின், அது, ஓர் உயிரெழுத்தைத் தனக்கு முன்னே பெற்றுத் தனியசையாக ஆக்கப்பெறும். 'ஸ்கொல' என்ற சொல், 'இஸ்கோல' என்றாகும். தங்கள் மக்களை ஆங்கிலப் பள்ளிக்கு அனுப்பும் தமிழ் நாட்டுப் பெற்றேர்கள், "'இஸ்கூலுக்கு' அனுப்பினேம்" என்று ஒலிப்பதைக்கேட்கும், இங்நாட்டில்

வந்து வாழும் ஐரோப்பியர் ஒவ்வொருவரும், மேலே எடுத்துக்காட்டிய அங்கேரிய ஒலிப்புமுறை, தமிழ்முறையோடு எத்துணைப் பொருத்தம் உடைத்தாகவுளது என்பதை உணர்வர். பெகிஸ்டன் எனுமிடத்தே கண்டெடுத்த சித்திய மொழிக் கல்வெட்டுக்களிலும், இதே முறை நிலவுவது கண்டுபிடிக்கப்பட்டுளது. அக்கல்வெட்டில் கண்ட 'ஸ்பர்த' என்ற சொல்லைச் சித்திய மொழிப் படுத்துங்கால், அதன் மொழிபெயர்ப்பாளர், இன்றைய தமிழிலும், மாகியர் மொழியிலும் எவ்வாறு எழுதப்படுமோ அவ்வாறே, அச்சொல்லிற்கு முன் 'இ'கரவுயிர் இணைத்து 'இஸ்பர்த' என்றே எழுதியுள்ளார்

பேராசிரியர் மாக்ஸ்முல்லர் தம்முடைய "மொழியறிவு பற்றிய சொற்பொழிவுகளின் இரண்டாம் வரிசை" (Lectures on the Science of Language, Second Series.) என்ற நூலில், பிற இனங்களைச் சேர்ந்த பல்வேறு மொழிகளில் காணப்படும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பலவற்றை எடுத்துக் காட்டியுள்ளனர்: "இலத்தீன் மொழிச்சொற்கள் பலவும் 'ஸ்ஸ்', 'ஸ்த்', 'ஸ்ப்', என்ற ஒலிகளை மொழிமுதலாகக் கொண்டுள்ளன; கி.பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இலத்தீன் மொழிக் கல்வெட்டுக்களில் இச்சொற்கள், மொழிமுதற்கண், 'இ'கரவுயிர் கொண்டே ஒலிக்கப்பட்டன. 'ஸ்பிரிதுஸ்' என்பது, 'இஸ்பிரிதுஸ்' என்றே ஒலிக்கப்பெறும். கெல்ட்டிக் இனமக்கள், மெய்யெழுத்திற்கு முன்வரும் 'ஸ'கரத்தை, 'இ'கரவுயிர்த் துணையின்றி ஒலிக்கும் ஆற்றல் அற்றவராகவோ, அல்லது, அச்'ஸ'கரவொலியையே விரும்பாதவராகவோ காணப்படுகின்றனர். திருவாளர் பாட் என்பார் எடுத்துக் காட்டியவாறு, 'பிராட்டானிய நாட்டுச்சொல் எதுவும், மெய்யெழுத்தொன்று தன்னைப் பின்தொடர்ந்துவர வந்து நின்ற 'ஸ'கர எழுத்தை, அது தனக்கு முன்னே ஒலித்துணையாக, 'ய'கரத்தைப் பெற்ற வழியல்லது, மொழிமுதலாகக் கொள்வதில்லை. மெய்யெழுத்துத் தொடர நிற்கும் 'ஸ'கரத்தை முதலாகவுடைய பிறமொழிச்சொற்கள்

எவற்றையேனும் கடன் வாங்கினால், 'ஸ'கரத்தின் முன் 'ய'கரத்தை இணைப்பர் அம்மொழியாளர். இலத்தீன் மொழிச் சொற்களாய 'ஸ்'கொல, 'ஸ்பிரிதுஸ்' என்பன முறையே, 'ய்ஸ்கொல்' என்றும் 'ய்ஸ்ப்ர்யத்' என்றும் மாறி வழங்கும் என்று கூறுவர் திருவாளர் ரிச்சர்டு என்பார். தென் அமெரிக்காவைச் சேர்ந்த பெருநாட்டில் சென்று வாழும் ஸ்பெயின்நாட்டு மக்கள், இலத்தீன் மொழியை வழங்கும் பொழுது, 'ஸ்டுடியம்' என்பதை 'எஸ்டுடியம்' எனவும், 'ஸ்கொல' என்பதை 'எஸ்கொல' எனவும் மாற்றியே ஒலிக்கின்றனர். உரோமானிய இனத்தின் ஒரு கிளையாகிய கெல்டிக் மொழிவழங்கும் ஐரோப்பாவில், சொல்லின்முன் உயிர் இணைத்தல் பெரு வழக்காம் என்க. இலத்தீன் மொழிச் சொல்லாகிய 'ஸ்பெரரெ,' பிரெஞ்சுமொழியில், 'எஸ்பெரெர்'என வரும். நிலைநிறுத்துதல் எனப் பொருள்படும் 'ஸ்டபிலிரெ' என்ற சொல் 'எஸ்டப்லிர்' என மாறி, இறுதியில் 'எடப்லிர்'எனத்திரிந்து வழங்கும்." —பக்கம்: 195. "ஒன்றிற்கு மேற்பட்ட மெய்யெழுத்துக்களை முதற்கண் பெற்றுவரும் சொற்களே, பெரும்பாலும் ஒலிச் சிதைவுகட்கு உள்ளாகின்றன. உயிர்களின் இடையீடின்றி, சொல்லின் முதற்கண், இரண்டு அல்லது மூன்று மெய்யெழுத்துக்கள் வரின், அவற்றைத் தெளிவாக ஒலிக்கப் பெருமுயற்சி தேவைப்படுமாதலின், அம்மெய்யெழுத்துக்களில் ஒன்று, மெல்லெனத் தெளிவின்றி, மயங்க வொலிக்கப்பெற்று, இறுதியில் கைவிடவும் படும் என்பதை நாம் எளிதில் புரிந்துகொள்ளலாம். ஆனால், மொழிகளின் தொண்டு, ஒலிப்புமுறைக்குத் துணைபுரிவதேயாயின், இததகைய தொல்லை தரும் சொல்லுருவங்கள் தோன்றவும், அனுமதிக்கவும் பெற்றது யாங்ஙனம் என்ற வினவினை யெழுப்ப எவரும் தயங்கார். அவற்றுள் பெரும் பான்மையவான சொல்லுருவருங்கள், ஒலிச்சுருக்கத்தையே, தம் பிறவிக் காரணமாகக் கொண்டுள்ளன. அஃதாவது, ஈரசைகளை, ஓசையாக ஒலிக்க முயற்சித்து, காலத்தையும், காற்றையும் குறைத்தல்; இவ்வாறு அசைகளைக் குறைத்துச் சுருங்கிய வாய்பாட்டான் ஒலிக்கத் தொடங்

கிய அவர்கள், அதற்கு விலேயாக, மெய்யெழுத் தொலிகள் பல வழங்கவேண்டி வந்ததைக் கருத்துட் கொள்ளாராயினர்." —பக்கம்: 187. "ஒருயிராலாய அசைகளை உடையனவும், தனக்குமுன் ஒரு மெய்யெழுத்தே நிற்கவரும் உயிரெழுத்தாலாய அசைகளேக் கொண்டனவும், மொழியீருக, என்றும் மெய்யெழுத்தை மேற்கொள்ளாத அசைகளேக் கொண்டனவுமாய மொழிகள், இன்றும் வழக்காற்றில் உள்ளன. பசிபிக் கடலிடையே யுள்ள தீவுகளில் வாழும் மக்கள் வழங்கும் பொலினீஷியன் மொழிகளின் இயல்பு இஃதே. ஹவாஹியன் என்ற இனத்தார், இரு மெய்களை இணையாக ஒலிப்பது இயலாதென எண்ணுகின்றனர். சீன மொழியில் வரும் எல்லா அசைகளும், அங்காந்து பிறக்கும் ஒலிகளான் ஆம்; அல்லது, மூக்கொலிகளான் ஆம். பேராசிரியர் பிலீக் என்பாரால், 'பா-ன்டு' இனம் எனப் பெயரிட்டழைக்கப் பெறும் தென்னுபிரிக்க இனத்தைச் சேர்ந்த எல்லா மொழிகளும், எளிய அசைகளேயே கொண்டிருப்பதில் தம்முள் ஒத்துள்ளன. தென்னுபிரிக்க மொழிகளில் பிறிதோர் இனத்தைச் சேர்ந்த ஹோட்டென்டாட் மொழியில், மொழிமுதற்கண் வரும் இணைமெய்யெழுத்துக்கள், ஏனைய இனங்களில் உள்ளதுபோன்றே கைவிடப்படும். காபிர் மொழியில், பொன் எனப் பொருள்படும் 'கோல்ட்' என்ற சொல் 'இகொலிடெ' என ஒலிக்கப் பெறும். வடதுரானிய இனத்தைச் சேர்ந்த உராலிக், பின்னிஷ் மொழிகளை உற்று நோக்கின், மொழிமுதற்கண் இருமெய்கள் வருவதையும், மொழியீற்றில் எவ்வித மெய் வருவதையும் வெறுக்கும்பொதுவியல்பு நிலவுவது காணப்படும். பின்னிஷ் மொழிக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த சொற்கள் எவையும், இரு மெய்களை முதற்கண் கொள்வதில்லை. அம்மொழியில், திரிக்கப்பெற்று, மெல்லினப்பட்ட மெய்யெழுத்துக்கள், இரு மெய்கள் போல ஒலிக்கப்படினும், பண்டு, அவை ஓர் ஒலி உடையனவே. எஸ்தோனியர், இலாப்பியர், மோர்ட் வீனியன், ஒஸ்டியாக்கியர், அங்கேரியர் ஆகிய இவர்கள் வழங்கும் மொழிகள், சொற்களின் ஈற்றில் வரும். அழுந்தி ஒலிக்கப்பெறும் உயிர்களை நீக்கப்

பெறுவதால், தனிமெய்யும், இணைமெய்யும் ஈற்றில் கொண்ட பெரும்பாலான சொற்களையே பெற்றுள்ளன. ஆனால், உராலிக் இனம் எல்லாவற்றிலும், அம்மொழியின் சிறப்பியல்புகள் தோன்ற விளங்கும் இடம் எங்கு நோக்கினும், தனி உயிரையும் தனிமெய்யையுமே நாம் காண இயலும்.'' —பக்கம்: 190.

பிராகிருத மொழியிலும், இன்றைய வட இந்திய மொழிகளிலும், இணை மெய்கள் எவ்வாறு மேற்கொள்ளப் படுகின்றன என்பதைத் திருவாளர் பீம்ஸ் என்பார், 'ஒப்பிலக்கணம்' என்ற தம் நூலின் நான்காம் பகுதியில், நன்கு ஆராய்ந்து விளக்கியுள்ளார். இணையாக வரும் மெய்யெழுத்துக்களை மாற்றுவதில், பிராகிருத மொழி மேற்கொள்ளும் முறை, ஒரு சில பகுதியில் திராவிட முறையோடு ஒத்துளது. அதுவும் குறிப்பாக, 'க்த்,' 'த்ப்,' என்பன போல, இடையே உயிர் பெறுமல், வல்லொலி மெய்களே இணைவனவும், திருவாளர் பீம்ஸ் அவர்களால், ''வல்லினத் தொடர்'' என வழங்கப் பெறுவனவுமாய இவ்விணைவுகளிலேயே, அவ்வொற்றுமை காணப்படும். இத்தகைய இடங்களில், பிராகிருத மொழி முறை, தமிழ் முறையைப் போன்றே, முதல் மெய்யை, இரண்டாவது மெய்க்கு இனமாக, மாற்றுவதை மேற்கொள்கிறது. இத்தகைய இணைகளில், முதல் மெய் மறைந்து போக, இரண்டாவது மெய் இரட்டிக்கப் பெறும் என்று கூறுமுகத்தான், பிராகிருத மொழி முறையை ஒருவாறு வெளியிடுவர் வரருச்சியார்; 'க்த்,' என்பது போன்ற மெய்யிணைகள் தூய தமிழ்ச் சொற்களில் வருதல் இயலாது. ஆகலின், பிராகிருத முறையோடு ஒத்த தமிழ்முறை, தற்பவச் சொற்களில் மேற்கொள்ளும் முறையோடு மட்டுமே பொருந்தும்.

## ௧௦. மெய்ந்நிலை மாற்றம்

திராவிட மொழிகளில், விரைவு காரணமாகவும், ஒலித்தெளிவும், எளிமையும் காரணமாகவும், மெய்யெழுத்துக்கள், ஒரோவழி, இடம் மாறிவரக் காண்கிறோம்.

இம்முறை, பெரும்பாலும், மக்கள் வழங்கும் கொச்சை மொழியிலேயே காணப்படுகிறது என்றாலும், அது அதற்கு மட்டுமே உரிமை உடையதன்று.

தமிழில் வரும் 'நசை' என்ற சொல், இம் மெய்ந் நிலை மாற்றத்தின் விளைவால் வந்ததாம்; மெய்யெழுத்து இடம் மாறிய காரணத்தால், வல்லொலி வல்லெழுத்து, மெல்லொலி வல்லெழுத்தாக மாறி, 'சதை' என வந்தது; குதிரை என்ற சொல்லும், இவ்வாறே, கொச்சைத் தமிழில் 'குரிதை' எனப் பெரும்பாலும் ஒலிக்கவும் பெறும். இச் சொல், 'குதி' என்ற தமிழ்ச் சொல்லடியாகத் தோன்றி யிருத்தல் கூடும் என்ற ஒரு சார் முடிவு, இச் சொல்லின் தொன்மை வடிவம், 'குதிரை' என்பதே என எண்ணக் கொள்ளுமாறு செய்யினும், அப் பொருள் குறிக்கும் 'குர்-ரம்' என்ற தெலுங்குச்சொல்லில் வரும் வேர்ச் சொல்லை நோக்கின், 'குரிதை,' 'குதிரை' இவ்விரண்டனுள், உண்மையான திராவிடப்பழஞ்சொல் எது எனத் துணிந்து கூறுவது அரிதே. இம்மெய்ம்மாற்றம் நிகழ் வதன் விளைவாக, ஒரு பொருளையே குறிக்க வரும் சொல், தமிழில் ஒரு வடிவிலும், தெலுங்கு, கன்னடங்களில், அதனினும் மாறுபட்ட வேறு ஒரு வடிவிலும் வரக் காண் கிறோம். நாபி எனப் பொருள்படும் 'கொப்புள்' என்ற தமிழ்ச் சொல், தெலுங்கில் 'பொங்கிலி' எனவும், மலையா ளத்தில் 'பொக்குள்,' 'பொக்கிள்' எனவும் வரும். கொடி களின் தொழிலைக் குறிக்கும் 'படர்' என்ற தமிழ்ச் சொல், கன்னடத்தில், 'பரடு' என வரும். ஆகவே, பல்வேறு இனங்களைச் சேர்ந்த மொழிகளில் வழங்கும் சொற்களை ஒப்பு நோக்கி ஆராயும் பணிமேற்கொண்டார், மொழி களில் மிகுதியாக நிகழும் இந் நிலைமாற்றத்தை மனத்தில் இருத்துதல் வேண்டும்.

## கக. உயிர்நிலை மாற்றம்

மெய்ந்நிலை மாற்றங்களிலும் பெரிதும் வியப்பூட்டும் உயிர்நிலை மாற்றங்கள், தெலுங்கில் நிகழக் காணலாம். இந்

நிலை மாற்றம், பெரும்பாலும், மொழிமுதற்கண் உயி ரெழுத்துப் பெற்று, குறுகிய அசைகள் மூன்றுலாகிய சொற்களிலேயே நிகழும்; அவ்வாறு நிகழும்போது, இரண் டாவதாக நிற்கும் உயிர் மறைந்துபோக, மொழி முதல் உயிர், இரண்டாம் அசையில் சென்று தங்கி; மறைந்து போன உயிருக்கு ஈடாக, நீண்டு நெடிலாக்கப்படுவதைக் காண்கிறோம். ஆகவே, ஈண்டு, தெளிவும், எளிமையும் குறித்து உயிர்கள் நிலைமாறுவதோடு, ஒருயிர், பிறிதோருயி ரோடு இரண்டறக் கலத்தலையும் காணுதல் வேண் டும்: இந்நிலை மாற்றங்களை விளக்கும் எடுத்துக் காட்டுக் களாக, அண்மையில் உள்ளாரையும், சேய்மைக்கண் உள் ளாரையும் குறிக்கவரும் திராவிடச் சுட்டுப் பெயர்களை மேற்கொள்கிறேன்; அவற்றுள்ளும், ஒருமைச் சொல் விகுதிகாட்டும் வேற்றுமைகளால் பெறும் ஒரு சில தடை களையும் நீக்குதற்பொருட்டு, அச்சுட்டுக்களின் ஒருமை களை ஒழித்துப் பன்மைச் சொற்களையே மேற்கொள் கிறேன். தமிழில் வழங்கும் அச்சுட்டுக்கள், 'அவர்,' 'இவர்' என்பனவாம்; கன்னடம், இவற்றோடு 'உ'கரம் இணைத்து, 'அவரு,' 'இவரு' என வழங்கும்; ஓரினம் என்ற உறவுடைமையால், இச் சொற்களை தெலுங்கிலும் இருத் தல் வேண்டும் என்று எதிர்பார்த்தல் கூடும்; ஆனால், அம் மொழியை ஆராய்ந்து பார்ப்பின் 'அவரு' என்பதற்குப் பதிலாக 'வாரு' என்பதும், 'இவரு' என்பதற்குப் பதிலாக 'வீரு' என்பதும் இருக்கக் காண்கிறோம். தெலுங்கு அஃறிணைச் சுட்டுப் பெயர்கள், ஈரசைகளான் ஆகியிருப் பதால், எழுவாய்க்கண் வரும் அச்சொற்களில், இத்தகைய உயிர் நிலை மாற்றம் நிகழ்வதில்லை; அம்மொழிச் சுட்டுக் களாய 'அதி,' 'இதி, என்பன, 'அது,' 'இது' என்ற தமிழ்ச் சுட்டுக்களோடு ஒத்து நிற்றல் காண்க. ஆனால், அச் சுட்டுக்கள், 'னி' என்ற சாரியை இணைக்கப்பெற்று, மூவசைச் சொற்களாக ஆக்கப் பட்டுழி, மேலே கூறியது போன்ற நிலை மாற்றம், அவற்றிலும் நிகழக் காண்கிறோம். அதனுடைய என்ற பொருள் தோன்ற 'அதினி' என வரு தற்குப் பதிலாகத் 'தானி' என்பதும், இதனுடைய என்ற

பொருள் தோன்ற 'இதினி' என வருதற்குப் பதிலாகத் 'தீனி' என்பதும் வருதல் காண்க. சுட்டுப் பெயர்களே யல்லாமல், இயற்பெயர்களும், தெலுங்கில், இத்தகைய மாற்றத்தைப் பெறுகின்றன. 'உரல்' என எழுதப் பெற்றுப், பொதுவாக 'ஒரல்' என ஒலிக்கப் பெறும் தமிழ்ச் சொல், தெலுங்கில் 'ஒரலு' என வருதல் வேண்டும்; ஆனால், 'ஒரலு' என்பதற்குப் பதிலாக 'ரோலு' என்பதையே காண்கிறோம். ஈண்டுக் கூறிய எடுத்துக் காட்டுக்கள் எல்லாவற்றிலும், இரண்டாவது உயிரெழுத்தைப் போக்கி விட்டு, அதற்கு ஈடாக, மொழி முதற்கண் வந்த உயிர், அதன் இடத்தில் சென்று நீள்வதாய மாற்றமே நிகழக் கண்டோம். பேராசிரியர் குண்டர்ட் அவர்களால் "உயிரெழுத்துக்களின் நிலையற்ற தன்மை" எனப் பெயரிட்டழைக்கப் பெறும் இம்மாற்றம், 'ல'கரத்தையும், 'ர'கரத்தையும், இவைபோலும், பிற மெல்லிய வொழுகலோசை எழுத்துக்களையும் தெளிவுபெற ஒலித்தற்குறித்தே நிகழ்கின்றது.

உயிர் நிலை மாற்றம் என்ற இவ்வொலி முறை யறியப் பட்டமையால், முதற்கண் நோக்கியவழி, தமிழ், கன்னடச் சொற்களோடு முற்றிலும் மாறுபட்டனவாகத் தோன்றும் பெரும்பாலான தெலுங்குச் சொற்கள், உண்மையில், தமிழ், கன்னட மொழிகளில் காணப்படும் சொற்களே யாம், அல்லது, அவற்றினும் சிறிதே வேறுபட்டனவாம் என்பது புலப்படலாயிற்று. அவ்வாறிருக்காது அல்லது அதுவல்ல என்ற பொருளில் வரும் 'காது' என்ற தெலுங்குச் சொல், 'ஆகாது' என்ற தமிழ்ச்சொல்லேயாம் என்பதும், இல்லை எனப் பொருள்படும் 'லேது' என்ற சொல், 'இல்லது' அல்லது 'இலது' என்ற தமிழ்ச்சொல்லேயாம் என்பதும் விளங்கும். இவ்வொலி முறையை ஓரெழுத்தான் இயன்ற அசைகளுக்கும் கொண்டு நோக்கின், இதற்குள் எனப் பொருள்படும். 'லோ' என்ற தெலுங்குச் சொல், 'உள்' என்ற தமிழ்ச்சொல்லோடும், 'ஒள்' என்ற கன்னடச்சொல்லோடும் ஒற்றுமை யுடையதாதல் உணரப் படும். இதுபோன்ற நிலை மாற்றம், இதனினும் குறைந்த அளவில் துளு மொழியிலும் காணப்படுகிறது.

## கஉ. சிறப்புமெய்—விலக்கல்

சொற்களுக்கிடையில், ஒழுகலோசையுடைய இடையின மெய்கள் சிலவற்றை, அவை, சாரியை, சந்திகளைப் போன்று சொற்களின் சிறப்பில்லாச் சொல்லுருபுகளாக வாராது, வேர்ச் சொற் பகுதியாகவே வருவதையும் நோக்காது, மேலும் மெலிவுறச் செய்வது, அல்லது அறவே விலக்குவதாய ஒரு வழக்காற்றினைத் தெலுங்கு, கன்னட மொழிகள் மேற்கொண்டுள்ளன; தமிழ் 'நெருப்பு,' தெலுங்கில் 'நிப்பு' எனவும்; 'எலும்பு,' 'எம்மு' எனவும்; 'ஒடல்' எனவொலிக்கப்பெறும் 'உடல்', 'ஒள்ளு' எனவும்; 'பொழுது,' 'பொத்து' எனவும்; 'எருது,' 'எத்து' எனவும்; 'மருந்து,' 'மந்து' எனவும் மாற்றப்படும். இறுதியில் வந்த 'மருந்து,' துளுவில் 'மர்து' எனவும் கன்னடத்தில் 'மத்து' எனவும், பழங்கன்னடத்தில் 'மர்து' எனவும் ஆம். தமிழ் 'எழுபது,' கன்னடத்தில் 'எப்பத்து' எனவும், 'எழுப்பு' (இதன் வேர்ச்சொல் தமிழில் 'எழு;' கன்னடத்தில் 'எலு') கன்னடத்தில் 'எப்பிசு' எனவும், தமிழ் 'கொழுப்பு' கன்னடத்தில் 'கொப்பெ' எனவும், தமிழ் 'கொழுமை,' துளுவில் 'கொம்மெ' எனவும், தமிழ் 'எருமை,' துளுவில் 'எர்மெ எனவும், கன்னடத்தில் 'எம்மெ' எனவும் ஆம். இது போன்ற ஓர் இயல்பு, கொச்சைத் தமிழிலும் உண்டு; ஆனால், ஆண்டு, இது, அத்துணை முறையாக மேற்கொள்ளப் பெறுவதில்லை.

இதற்கு மாறாக, சில சொற்களில், ஒரோவழி தமிழ் இழந்துவிடும் சிறப்பெழுத்துக்களைத், தெலுங்கு இழக்காமல் பெற்றிருக்கக் காணலாம். உடனிகழ்ச்சிப் பொருளில் வரும் மூன்றும் வேற்றுமைத் தமிழ் உருபு 'ஒடு' என்பதாம்; தெலுங்கு மொழியை ஆராய்ந்து நோக்கின், அதில், இவ்வுருபு, 'தோட' என வருதல் காணப்படும்; தெலுங்கு 'ட'காரம், தமிழ் 'ழ'கரத்தோடு ஒத்தது என்பது முன்னரே விளக்கப்பட்டுளது; ஆகவே, தெலுங்கு 'தோட,' தமிழ் 'தோழ' என்ற சொல்லோடு ஒப்புடையதாகும்; 'தோழ' அல்லது 'தோழமை' என்ற சொல் நட்பு அல்லது உடனுறை

வோன் என்னும் பொருளில் தமிழில் வழங்குகிறது. இப்பொருள், தெலுங்குத் தொகைச் சொற்கள் பலவற்றிலும் காணப்படுகிறது. இவ்வாறு, தெலுங்கின் துணையால், 'ஓடு,' 'தோழ' என்ற தமிழ்ச்சொற்கள் இரண்டும் ஒரே சொல் அல்லவாயினும், நெருங்கிய உறவுடையனவாம் என்பதும், ஓடு என்ற அவ்வேற்றுமையுருபுணர்த்தும் பொருள், உடனிகழ்ச்சிப்பொருளில் வரத் தகுதியுடையதே என்பதும் பெறப்பட்டன; தன்னளவில் ஒரு பெயராக நின்று, தொடர்பு என்ற பொருள் தருவதும், கன்னடத்தில் 'ஒடனெ' என வருவதுமாய, 'உடன்' என்ற மூன்றும் வேற்றுமைத் தமிழ் உருபு, பின்பற்றிச் செல் என்ற பொருள் தருவதும், 'துடர்' எனவும் எழுதப்படுவதுமாய 'தொடர்' என வினை வேர்ச்சொல்லோடு உறவுடையதே என்பதும் பெறப்படும்.

மலையாளச் செய்யுட்களிலும், தமிழிலும், இன்றும் வழக்கத்திலுள்ள 'ஓடு' என்பதன் நீண்டவடிவமே 'ஓடு' என்பது எனப் பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் முடிவு கொள்வது முற்றிலும் பொருந்தும்; பழங்கன்னடம், 'ஒட,' 'ஒடம்' என்பனவற்றையும், கன்னடம் 'ஒடனெ' என்பதையும், 'துளு, 'ஒட்டுகு' என்பதையும் பெற்றுள்ளன. கன்னட 'ஒடனெ,' தமிழ் 'உடன்' என்பதனோடொக்கும்; ஆகவே, மலையாள 'ஓடு,' நட்பெனப்பொருள்படும் தெலுங்குத் 'தோடு,' தமிழ்த் 'தோழ' என்ற சொற்களினின்றே பிறந்தது என்பதற்கு விளக்கம் தேவையில்லை என்பர் அவர். 'தோழ' என்ற சொல்லின் மூலம் 'தொழு' என்பதே; இம் மூலம், கூட்டம் எனப் பொருள்படும் 'தொழுதி' என்ற சொல்லில், இதே பொருளில் வருவதும் காண்க. பின்பற்று எனப் பொருள்படும் 'தொடர்' என்ற சொல், 'தொடு' என்பதன் அடியாகப் பிறந்த ஒரு வினைப்பெயர் என்பதைத் தன்னளவிலேயே விளக்குகிறது. இம் மூன்று வேர்ச்சொற்களையும், ஒன்றோடொன்று தொடர்பில்லாத, தனித்தன்மை வாய்ந்தனவாகக் கொள்வர் அவர். ஆனால், அம் மூன்று வேர்ச்சொற்களையும் ஒருங்கு வைத்து ஒப்பு

நோக்கின், அவை மூன்றும், அடிப்படையில் ஒன்றே என்ற கொள்கையைக் கைவிட்டு விடுவது அரிதாகத் தோன்றும். வேர்ச்சொற்களில் வரும் உயிரெழுத்துக்களை, அவ்வேர்ச்சொற்கள், பிற சொல்லுருபுகளின் சேர்க்கையால் அடுத்துப்பெறும் வடிவில், நெட்டெழுத்தாக மாற்றுவது தமிழின் இயற்கையாம் என்பதுவும், அவ்வேர்ச்சொற்களின் குறுகிய வடிவங்களாகிய 'ஒடு,' 'நொடு,' 'தொழு' என்பனவற்றின் அடிப்படைப் பொருள் ஒன்றாகவே இருப்பதுவும், அம் மூன்றும், ஒரே மூலத்தினின்றும் கிளைத்த வேறு வேறு வடிவங்களே என்ற கொள்கையை உறுதி செய்கின்றன. 'ஒடு,' 'நொடு' இவ்விரு சொற்கள் அளிக்கும் அடிப்படைப் பொருள்களிடையே, இன்றியமையா வேறுபாடு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 'ஒட்டு' என்ற சொல் அளிக்கும் வினைப் பெயர்ப்பொருள், நெருங்கிப் பற்றிக் கொள்ளுமாறு தொடுதல் என்பதாம்; 'நொடு' என்பதன் பொருள், கொன்னே தொடுதல் என்பதாம். ஆகவே, 'ஒடு' என்ற வேர்ச்சொல்லிற்கும், நொடு' என்ற சொல்லிற்கும் இடையில், குறிப்பிடத்தக்க வேற்றுமையின்மை புலனாதல் அறிக. அவற்றின் வடிவம், பொருள் ஆகியவற்றிற்கிடையே காணப்படும் சிறுவேறுபாடு, பல சொற்களுக்கும் பொதுவான வேர்ச்சொல்லை, அப் பல்வேறு சொற்களுக்கும் தனித்தனியே உரியதாக்க மேற்கொள்ளும் சிறப்பியல்புகளான் வந்ததாகவே எனக்குப் புலனாகிறது; வேர்ச்சொற்களின் ஆட்சியைச் "சிறப்பளிக்கும் சொல்லுருபுகள்" என்ற தலைப்பின்கீழ்க் காண்க.

## கரு. எடுத்தலோசை

திராவிடமொழிகள் எடுத்தலோசை யற்றன என்றும், சொற்பொருளை வற்புறுத்தற் றன்மை, தேற்றேகார இணைப்பினாலேயே பெறப்படும் என்றும் பொதுவாகக் கூறப்படும்; திராவிடமொழிகளில், இந்தோ-கிரீக் மொழிகளில் காணப்படுவதுபோன்ற எடுத்தலோசை இல்லை என்றாலும், எடுத்தலோசையை ஆளும்முறை, அம்மொழிகள்

அறியாதவொன்றன்று; திராவிடமொழிகள் மேற்கொள்ளும் எடுத்தலோசை, மிக நுண்ணிய இயல்பினதாகலின், அஃது, அம்மொழிச் சொற்களின் ஒட்டுத்தன்மையோடு ஒன்றி விடுகிறது. எடுத்தலோசை, பெரும்பாலும், அம்மொழிச் சொற்களின் முதலசையிலேயே காணப்படும்; சந்திகளும், சாரியைகளும் வந்து இணைவதற்குமுன், சொல்லின் மூலமாகி, என்றும் எவ்வித மாறுதலும் பெறாது நிற்பது அம்முதலசையே. ஒவ்வொரு சொல்லிலும், அச்சொல்லின் முதலசையே, எடுத்தலோசையின் இயற்கையிடமாகக் கருதப்படும்; ஆனால், அச்சொல், வேறுபிற சொல்லுருபுகள் வந்து இணைவதால், தொகைச் சொல் ஆக்கப்பட்டுழி, இரண்டாவது எடுத்தலோசை ஒன்று, அத்தொகைச் சொல்லின் இரண்டாவது பகுதியில் வரும் முதல் அசைக்கண் நின்று, அவ்வசையினை வேறு பிரித்துக் காட்டும்.

ஏனைய மொழிகளில் உள்ளவாறே, திராவிடமொழிகளிலும், எடுத்தலோசை, எழுத்துக்களின் மாத்திரையினின்றும் பிரிந்தே காணப்படும். ஒலிக்கும்போது, எடுத்தலோசை நிற்கும் குற்றுயிர், அதுபெறாத நெடிலுயிரினும், வற்புறுத்தற்றன்மை வாய்ந்ததாகவே விளங்கும்; 'அடங்குகிறது' என்ற தன்வினைச் சொல்லின், இரண்டாவது அசையாகிய 'அங்க்' என்பது, இடத்தால் நீளமுடையதே என்றாலும், அஃதாவது, அளவால் பெரிதே யென்றாலும், அச்சொல்லில் இடம்பெறும் ஒரே எடுத்தலோசை, 'அங்க்' என்ற அவ்விரண்டாம் அசையினும் அளவாற் சிறியதும், ஆனால், அதனினும் வற்புறுத்தற்றன்மையுடையதுமாய 'அட்' என்ற முதலசையிலேயே நிற்கிறது. 'உடைந்த்-இருக்கிறது' என்ற தொகைச் சொல்லில், முதற்சொல்லின் இரண்டாம் அசை, இடம் இயல்பு ஆகிய இரண்டாலும், துணைச் சொல்லின் இரண்டாம் அசை, இடத்தாலும் நீளமுடையனவாக இருப்பவும், முதல் எடுத்தலோசை, முதற்சொல்லின் முதலசையும், அத்தொகைச் சொல்லின் வற்புறுத்தற்றன்மையைப் பெற்றிருப்பதுமாகிய 'உட்' என்ப

திலும், இரண்டாம் எடுத்தலோசை, துணைச்சொல்லின் முதலசையும், அச்சொல்லின் திரியாமூலமும் ஆகிய 'இர்' என்பதிலும் நிற்கின்றன; ஆகவே, அச்சொல், குறிப்பிட்ட, 'உட்', 'இர்' என்ற இரண்டு அசைகளும் நீங்கலாக வுள்ள ஏனைய அசைகள் எல்லாம் படுத்தும், விரைந்தும் ஒலிக்க, ஒலிக்கப்படும்.

எடுத்தலோசையைச், சொல்லின் வேரசை அல்லது முதலசையிற் கொள்ளும் திராவிட ஒலிமுறையில் ஒரு விதி விலக்குண்டு; தமிழ்ச் செய்யுள் நடையில், ஒரே சொல், படர்க்கை வினைமுற்றாகவும், படர்க்கை வினையாலணையும் பெயராகவும் வரும்; 'ஓதுவான்' என்பது உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, எதிர்கால வினைமுற்றாகவும் வரும் ; ஓதுகின்றவன் எனப் பொருள்பட்ட வழி, வினையாலணையும் பெயராகவும் வரும் ; பேச்சுத் தமிழிலும், அஃறிணை ஒன்றன்பால், எதிர்கால வினைமுற்றுக்கள், இவ்வாறு, இருபொருள் குறிக்கவரும். 'ஓதுவது' என்ற சொல், அதுபடிக்கும், படிக்குமது அல்லது படித்தல் என்ற இருபொருளும் தரும். இவ்வாறு, ஒரே சொல், இருபொருள்பட வழங்குவதைக் கண்ட தமிழிலக்கண ஆசிரியர்கள், பொருள்களிடையே தோன்றும் இவ் வேற்றுமையை, அச்சொல்லின் எடுத்தலோசை வேறுபாட்டினாலேயே வெளிப்படுத்தல்வேண்டும் என முடிவு செய்வர். அம்முறைப்படி, 'ஓதுவான்' எனும் சொல், வினைமுற்றுப் பொருளில் வந்தவழி, எடுத்தலோசை, அதன் இயற்கையிடமாகிய வேரசை அல்லது முதலசையில் நிற்கும்; அது, வினையாலணையும் பெயராக வந்தவழி, வினைமுற்று விகுதியே எடுத்து ஒலிக்கப்பெறும். அஃதாவது, அச்சொல்லின் விகுதியே எடுத்தலோசை நிற்குமிடமாகிறது.

"ஜெர்மானிய நாட்டின், கீழ்நாட்டுக் கலைக்கழகத்தின் 1869-ஆம் ஆண்டு வெளியீட்டில்" (Journal of the German Oriental Society for 1869) எழுதிய கட்டுரையொன்றில், பேராசிரியர் குண்டர்ட் அவர்கள், யான்

போதிய அளவு ஆராய்ந்து காணப் பொருள்களுள் ஒன்றாய "சமஸ்கிருதமொழிச் சொற்கள், திராவிடத் தன்மை பெறுவுழி, அச்சமஸ்கிருத ஒலிகள் பெறும் மாறுதல்கள்" என்ற பொருளில் தம் கருத்தைச் செலுத்தி யுள்ளார்கள். அவர், பழைய தற்பவச் சொற்களை வெறும் பிழை வடிவங்களாகக் கோடல் கூடாது எனக் கருதுவர். சமஸ்கிருதச் சொற்களைத் திராவிடமொழிகள் ஏற்றுக் கொள்வுழியுண்டாகும் மாறுதல்களில் ஒருசில, ஒலிமுறையோடு மாறுபட்டனவாகத் தோன்றினும், பெரும்பாலான மாறுதல்கள் ஒலிமுறைக்கு அடங்கியனவே யாம். சமஸ்கிருத 'வ்ரிஷப்ஹ', தெலுங்கு, கன்னட, துளுமொழிகளில் 'பஸவ' என்றும், தமிழில்' 'இடப' என்றும், மலையாளத்தில் 'எடவ' என்றும், காலமாறுபாட்டைக் குறிக்கும் 'பர்வ' என்ற சமஸ்கிருதச்சொல், தமிழில் 'பருவம்' என்றும், கன்னடத்தில் 'ஹறப்ப' என்றும், 'ப்ரஹ்ம' என்ற சமஸ்கிருதச் சொல், தெலுங்கில் 'பொம்ம' என்றும், தமிழில் 'பிரமன்' என்றும் வருதற்குரிய ஒலிமுறைகள் இவையெனக் குறிப்பிடல் எளிதே என்றும் அவர் கூறுவர். தற்பவச் சொற்களுள் மிகப் பழையவற்றைத் தோற்றுவிக்கும் ஒலிமுறைகள் சிலவற்றை எடுத்துக் காட்டுவதிலும் அவர் ஆர்வம் கொள்வர். அவ்வொலி முறைகளுள் ஒன்று, இஸ்ஸொலி போன்ற திராவிட ஒலிகள் அல்லாதனவற்றை அறவே நீக்கிவிடுதலாம். அதன்படி, 'ஸஹஸ்ரம்' என்ற சமஸ்கிருதச்சொல், கன்னடத்தில் 'சஸிர' எனவும், துளுவில் 'சார' எனவும், தமிழில் 'ஆயிரம்' எனவும் வரும்; தமிழ் 'ஆயிரம்', கீழ்க்கண்டவாறு வந்ததாகக் கருதுவர். 'ஸஹஸ்ரம்', முதலில் 'ஸஹஸிரம்' என்றாகிப் பின்னர், அச்சொல்லில் உள்ள ஸ, ஹ, ஸி என்பனவற்றில் உள்ள திராவிடத்திற்குப் புறம்பான மெய்யொலிகள் நீங்க, அ+அ+இ+ரம் என்றாகும்; பின்னர் இருகுறில் 'அ'கரங்கள் ஒன்றுகூடி, ஒருநெடில் 'ஆ'காரமாக மாற, அவ் 'ஆ'காரத்திற்கும், 'இ'கரத்திற்கும் இடையே, 'ய'கரவுடம்படுமெய் வந்துநிற்க, 'ஆயிரம்' என்றாகும் இலங்கையைக் குறிக்கும் பாலிமொழிச் சொல்லாகிய 'ஸிஹலம்' என்பதினின்றும்,

பழைய தமிழ்ச் சொல்லாகிய 'ஈளம்' அல்லது 'ஈழம்' வந்தது. 'மிருகசீர்ஷம்', 'ஸ்ராவணம்' என்ற உடுக்களின் பெயர்கள், மலையாளத்தில் 'மகயிரம்' எனவும், 'ஓணம்' எனவும் வரும். ஜைனமுனிவனைக் குறிக்கும் 'ஸ்ரமன' என்றசொல், தமிழில், 'சமணன்' எனவும், 'அமணன்' எனவும் வரும். 'ஸீஸம்' என்ற சொல், 'ஈயம்' என ஆம்.

சமஸ்கிருதச் சொற்களில் வரும் நெடிலுயிர்களைக் குறிலாக மாற்றும் மற்றோர் ஒலிமுறையும் உண்டு; அது பெரும்பாலும் கன்னடமொழிகளிலேயே காணப்படும். இம்முறைப்படி, 'குமாரீ', 'ஸ்ரேஷ்டி' என்ற சமஸ்கிருதச் சொற்கள். தமிழில், முறையே 'குமரி' எனவும், 'செட்டி' எனவும் வரும். இம்முறையாற்பெற்ற மிகச் சிறந்த எடுத்துக்காட்டு, 'ஸ்நேஹ' என்ற சமஸ்கிருதச்சொல், எல்லாத் திராவிடமொழிகளிலும், 'நெய்' என வருவதாகும். உயிர்களைப் பிளவுபடுத்தும் ஓர் ஒலிமுறையும் உளது. பழந்திராவிடச்சொல் எதுவும், 'ல'கரம் அல்லது 'ர'கரத்தை மொழிமுதலாகக் கொண்டுவாராது. ஆகவே, சமஸ்கிருத 'ராஜா', 'இராசா' எனவும், 'லோக', 'உலகம்' எனவும் திரிந்து வரும். குற்றுயிர்மேல்கொண்டே பற்றுள்ளம், இச்சொற்களில் மேலும் சில மாறுதலை உண்டாக்கியுளது; 'ராஜா', தமிழில், 'அரசன்', 'அரயன்' எனவும், 'லோக', 'உலகம்', 'உலகு' எனவும், ரேவதீ', 'இரவதி' எனவும் ஆம்.

# II. வேர்ச்சொற்கள்

திராவிடமொழிகளின் பகுதி, விகுதி, இடைநிலைகளாகிய இலக்கண வுருபுகளை ஆராய்ந்து ஒப்பு நோக்கத் தொடங்குவதன்முன், அத் திராவிட வேர்ச்சொற்களின் இயல்புகளையும், இலக்கண வுருபுகள், அவ்வேர்ச்சொற்களோடு இணைந்தவழி, அவ்வேர்ச்சொல் அடையும் மாறுபாட்டின் இயல்பையும் ஆராய்ந்து நோக்குதல் விரும்பத் தக்கதாம். ஒருமொழி தன்வேர்ச்சொற்களை ஆளும் அமைப்புமுறைகளே, அம்மொழியின் உண்மை நிலையினையும், சிறப்பியல்புகளையும் விளக்கும் சிறந்த வாயில்களாம். இவ்வாறு, வேர்ச்சொற்களை யாளும் அமைப்புமுறைக்கண் காணப்படும் வேற்றுமைகளை யடிப்படையாகக்கொண்டே, ஐரோப்பிய, ஆசியமொழிகள், பல்வேறு இனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அவ்வினங்களாவன : 1. எவ்விதத் திரிபுகளுக்கோ, அல்லது இணைப்புகளுக்கோ இடங்கொடா வேர்ச்சொற்களை உடையவும், எல்லா இலக்கணத்தொடர்புகளையும், துணைச்சொற்கள் அல்லது துணைச்சொற்றொடர்கள் மூலமாகவும், சொற்றொடர்களில் சொற்கள் பெற்றுநிற்கும் இடவேறுபாட்டின் மூலமாகவும் விளக்கும் இயல்புடையவுமான சீனமொழிகளைப் போன்ற, பிற அசைகளோடு கலந்து ஒன்றாகிவிடாது, தனித்து நிற்கும் ஓரசைச்சொற்களான் இயன்றமொழிகள். 2. ஈரசையான் இயன்ற வேர்ச்சொற்களில் வரும் உயிரெழுத்துக்கள், தம்முள்ளே பெறும் மாறுபாடுகளினாலேயே, இலக்கணத் தொடர்புகள் விளக்கப்பெறுவதாய, தம்முள் ஒன்றற்கொன்று உதவும் செமிடிக் இனமொழிகள். 3. வேர்ச்சொற்களோடு, சாரியை, சந்தி, இடைநிலைபோன்ற சொல்லுருபுகளை முன்னும் பின்னும் சேர்ப்பதாலும், இணைப்பதாலுமே இலக்கணத்தொடர்புகள் விளக்கப்படும் ஒட்டுநிலைமொழிகள். இவற்றுள், ஈற்றிற்கூறிய இனத்தில், இந்தோ-ஐரோப்பிய

மொழிகளையும், சித்தியமொழிகளையும் சேர்க்கின்றேன். சொல்லமைப்பு முறைகளாலல்லாமல், இலக்கணவமைப்பு முறைகளினாலும் அவ்விரு இனங்களும் பெரிதும் வேறுபடுகின்றன என்பது உண்மையேயென்றாலும், வேர்ச் சொற்களோடு, துணைச்சொற்களைப் பிரிக்கமுடியாவண்ணம் ஒட்டும் ஒட்டுநிலையால், இலக்கண அமைப்பின் இயல்புகளை வெளியிடுவதில், அவை ஒற்றுமையுடையபோலத் தோன்றுவதாலும், பண்டு ஒன்றுபட்டே யிருந்ததாலும், அவற்றை ஒரே இனத்தில் சேர்த்து வழங்கினேன். இவ்விரு இனங்கட்கிடையே யுளவாம் வேற்றுமை, அளவில் இருக்குமே ஒழிய, அடிப்படையில் இராது. பிறப்பால் ஒன்றுபட்டு, வளர்ச்சியால் பெரிதும் மாறுபட்டுள்ளன; இந்தோ-ஐரோப்பிய இனத்தைச் சார்ந்த மிகத்திருந்திய மொழிகளில், வேர்ச்சொற்களுக்குப் பின்வரும் சொல் இணைப்புக்கள், சிறிது சிறிதாக, வேர்ச்சொற்களின் ஒரு பகுதியேயாய்ப் பிரிக்க இயலாதவாறு இணைக்கப்பெற்று விட்டன. ஆனல், சிறிதே வளர்ந்து கொடுக்கும் இயல்பினவாய சித்திய இனமொழிகளில், ஒட்டுநிலை பற்றிய விதிகள் மிகவும் சிறப்பாகமேற்கொள்ளப்பட்டிருப்பதோடு, தொகைச்சொல் ஒவ்வொன்றிலும், அச்சொல்லின் ஒவ்வொரு பகுதியும், தாம் பண்டு மேற்கொண்டிருந்த தம் பழைய வடிவங்களையும், தனித்து நிற்கும் தம் இயல்புகளையும் விடாது மேற்கொண்டுள்ளன. இவ்வியல்புகளில், திராவிடமொழிகள், இந்தோ-ஐரோப்பிய மொழிகளினும், சித்தியமொழிகளையே, பொதுவாக ஒத்துள்ளன. ஆகவே, இவ்வினத்தைச்சேர்ந்த ஒவ்வொருமொழியிலும், பொருந்தக்கூறுவதாயின், ஒருவினைத்திரிபும், ஒருபெயர்த்திரிபுமே உள எனல்வேண்டும்.

ஈண்டு, மூவகையாகப் பிரிக்கப்பட்ட ஐரோப்பிய, ஆசியமொழிகள் அனைத்தும், என்றுமே மாற்றவொண்ணு, நிலைத்த வேறுபாடுகளினுல் பிரிக்கப்பட்டவையல்ல; அவையனைத்தும், ஒன்றற்கொன்று, ஓரளவு தொடர்புடையனவாக, ஒன்றில் ஒன்று கலந்தேயுள்ளன; எல்லா

மொழிகளுமே, தொடக்கத்தில், ஒன்றோடொன்று தொடர் பற்றுத் தனித்து நிற்கும் ஓரசைச் சொற்களான் இயன் றனவேயாம்; தனிநிலைமொழிகள், பின்னர் ஓரளவு ஒட்டு நிலை மொழிகளாக ஆயின; செமிடிக் மொழிகளின் சிறப் பியல்பான, வேர்ச்சொற்களின் உயிரெழுத்து மாற்றம், ஒட்டுநிலை மொழிகளுக்கு - சிறப்பாக, இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்குத் - தெரியாததொன்றன்று. மொழியிடை யுண்டாம், இதுபோலும் மாற்றங்கள், திராவிடமொழிகளி லும், ஒரோவழிக் காணப்படும்.

திராவிட வேர்ச்சொற்களின் அமைப்புமுறையின் சிறப்பியல்புகளையும், அவ்வேர்ச்சொற்கள், சாரியை, சந்தி, இடைநிலை போன்ற சொல்லுருபுகளின் சேர்க்கையால் எவ்வாறு மாறுபடுகின்றன என்பதையும் இனிக் குறிப் பிடத் தொடங்குகின்றேன்.

## க. திராவிட வேர்ச்சொற்களைப் பல்வேறு பிரிவுகளாக நிரல் செய்தல்

வேர்ச்சொற்களோடிணையும் பிறசொல்லுருபுகளை நீக்கிவிட்டு, அவ்வேர்ச்சொற்களை மட்டுமே கொண்டு நோக் குழி, திராவிட வேர்ச்சொற்களை இருவகையாகப் பிரிக்க லாம். 1. வேர்ச்சொற்களுள் பெரும்பிரிவைச் சேர்ந்தன வும், பெயர்ச் சொற்களாகவும் வழங்கப்பெறும் தகுதி யுடையனவுமாய வினை வேர்ச்சொற்கள்; 2. எவ்வாறு நோக்கினும் வினைத்தன்மை யென்பதையே காண இயலாத பெயர் வேர்ச்சொற்கள்.

*1.* வினை வேர்ச்சொற்கள் :—

பொதுவாகப் பிறசொல்லுருபு எதையும் சேர்க்காமல், மூல வேர்ச்சொற்களை மட்டுமே, முன்னிலையொருமை யேவலாக மேற்கொள்வதில், திராவிடமொழிகள், சமஸ் கிருத, கிரீக் மொழிகளோடு பெரிதும் மாறுபட்டு, சித்திய இனமொழிகளோடு ஒத்துள்ளன. இதுவே, இவ்வினமொழி களில் காணப்படும் பொதுவிதியாம். குறிப்பிடத்தக்க

மாறுதல் யாதேனும் இருப்பின், ஒன்று, அஃது பிழை வடிவுற்றதாகவோ, அல்லது ஒலித்தெளிவும், எளிமையும் குறித்ததாகவோ, அல்லது உயர்வுகருதி வந்ததாகவோ காணப்படும். தமிழிலும், தெலுங்கிலும், ஒரு சில இடங்களில், முன்னிலை யொருமையேவல், தன் இறுதிமெய் யெழுத்தை இழந்து காணப்படும்; அவ்வாறு இழந்து போகும், அவ்விறுதிமெய், பொதுவாக, மெல்லிய மிடற்றெழுத்தாகவோ, அல்லது, ஒழுகலோசையுடைய இடையினமாகவோ யிருக்கும். ஆனல், அவ்வாறு வரும், அவ்வொருசில முன்னிலையேவல்தாமும், குறைந்த வழக்காற்றையுடைய முன்னிலைப் பன்மை யேவலாகவும், எச்சமாகவும் வருவழி, அவ்விடங்களில் திருந்தாவினை மூலங்களே காணப்படும்.

பெரும்பாலான திராவிட வேர்ச்சொற்கள் எவ்விதச் சேர்க்கையோ, மாற்றமோ பெறுமலே, வினை வேர்ச்சொல்லாகவும், பெயர் வேர்ச்சொல்லாகவும் மேற்கொள்ளப் படுகின்றன. அவை, பெயர், வினையென்ற இரண்டனுள் எவ்வினத்துள் சேர்க்கப்படல் வேண்டுமென்பது, அவை வரும் இடத்தைப் பொறுத்தே முடிவு செய்யப்படும். எந்த வேர்ச்சொல்லும், பெயர்ப்பொருளாகக் கையாளப்படுவது, பொதுவாக, அவ் வேர்ச்சொல், வினைப்பொருளாக ஆளப்படுவதினின்றே தோன்றியதாதல் வேண்டும்; வேர்ச்சொல், வினைப்பொருளுடையதாக வருவதே, பண்டு நிலவிய முறையாம்; பெரும்பாலான சொற்களின் ஆட்சி, இவ்வினத்தைச் சேர்ந்ததே; ஆனல், அச்சொற்கள், பெயர்ப்பொருளவாக வருங்கால், அவை, எத்தகைய இணைப்புக்களையோ, சொல்லாக்க உருபுகளையோ பெறுமலும், பிறிதொன்றினின்றும் தோன்றியன என்பதைக் காட்டும் குறிகளே இல்லாமலும் வருவதால், அச்சொற்களை, வினையினின்றும் தோன்றியனவாகக் கருதுவது இயலாதாம். ஆனல், இலக்கண வடிவங்களை நோக்க, வினையையும், பெயரையும், ஒரு தாய்வயிற்றில், ஒரே காலத்தில் பிறந்த இரட்டைகளாகவோ, அல்லது வேறுபட்ட

இரண்டன்றி ஒன்றாகவோ கொள்ளுதல் வேண்டும்; ஒரே வேர்ச்சொல், இருபொருள் குறித்து வருதற்குக் கீழ்க் காணும் எடுத்துக்காட்டுக்களே சாலும்; 'சொல்': வினையாங்கால், முன்னிலையொருமை யேவற்பொருள் தரும்; பெயராங்கால், ஒருபதம் எனும் பொருள்படும். 'நறி'; வினையாங்கால், வெட்டு எனும் முன்னிலையொருமை ஏவற் பொருள்படும்; பெயராங்கால், நெய்யும் கருவி எனும் பொருள்படும்; 'முறி': வினையாங்கால், இரண்டாகப் பிள எனப் பொருள்படும்; பெயராங்கால், ஓலைத்துண்டில் எழுதி யனுப்பும் ஆவணம் எனப் பொருள்படும். ஈண்டுக்காட்டிய எடுத்துக்காட்டுக்களில், அச்சொல்லின் அடிப்படைப் பொருள் வரையறுக்கப்படாமல், வினைப்பொருளவாகவும், பெயர்ப்பொருளவாகவும் மாறும் உரிமைபெற்றிருப்பது விளங்குவது காண்க. இனி, திராவிடமொழிகளில் இடம் பெறும் பெயரடைகள், பெயர்ச்சொற்களின் வேறுபடாது, பொதுவாகப் பெயராகவே விளங்குவதால், ஒவ்வொரு வேர்ச்சொல்லும், பெயர், பெயரடை, வினை ஆக மூன்றாகப் பயன்படும் தன்மை வாய்ந்தனவாகும். 'கடு': எழுவாயாகவும், வேற்றுமையுருபேற்றும் வந்தழிப் பெயராம்; நஞ்சு அல்லது கடுமை என்பது பொருளாம். பிறிதொரு பெயர்ப் பொருளைச் சிறப்பிக்க, அப்பெயர் முன்வரின், பெயரடையாம்; ('கடுநடை'=விரைந்த நடை; 'கடுவாய்' =கொடியவாயையுடைய புலி,) தனித்துவரின், அல்லது அதன்முன், தோன்றியோ தோன்றாமலோ, ஒரு முன்னிலைப் பெயர்வரின் வினையாம்; கொடுமையுடையனாகு, அல்லது கூரிய அறிவுடையனாகு எனப் பொருள்படும். அதுவே, 'கு' என்ற சொல்லாக்கவுருபு இணைக்கப்பெறின், காரம் உடையது எனப் பொருள்படும் 'கடுகு' என்ற சொல்லாம். இவ்வேர்ச் சொல்லில் வரும், உயிர் நீண்டால், அதுவே, கொடுமை நிறைந்தது; திருத்தம்பெறாதது என்றெல்லாம் பொருள்படும் 'காடு' என்ற சொல்லாக மாறும்.

திராவிட இனத்தைச் சேர்ந்த எம்மொழியிலும், வேர்ச்சொல்லின் வினைவடிவங்களுக்கும், பெயர்வடிவங்

களுக்குமிடையே, தொடக்கத்தே, வேற்றுமையில்லை யென்பது தெளியப்படும். பின்னர், படிப்படியாக, அம் மொழிகள் வளம்பெறத் தொடங்கியதும், அச்சொற்களுக் கிடையே வேற்றுமை வேண்டுவது இன்றியமையாதது என்பது உணரத் தலைப்பட்டதும், அவ்வேர்ச்சொற்களுக் கிடையே, பிளவு இடம்பெறத் தொடங்கிற்று. ஒரு சொல்லைக் குறிப்பிட்ட ஒரு பொருளையே உணர்த்துமாறு வரையறுக்கவும், பிறபொருளை யுணர்த்துவதினின்றும் தடுக்கவும் விரும்பிய காலத்தே, அச்சொல்லின் மூலத் தோடு, சில சொல்லாக்கங்களை இணைத்துத் திருத்தியதால், இப்பிளவு இடம்பெறத் தொடங்கிற்று; செய்யுள் வழக்கில், பல இடங்களிலும், அவ்வேர்ச்சொல், தன் பண்டை வழக் காற்றை யொட்டி, எவ்வித வேற்றுமையும் இன்றி, பெயர், வினை ஆகிய இருபொருளிலும், இன்றும ஆளப்படுகிறது. ஆனல், உரைநடையில், பெரும்பாலும், ஒன்று, வினை யாகவோ, அல்லது பெயராகவோ மட்டுமே ஆளப்படு கிறது.

2. பெயர் வேர்ச்சொற்கள்:—

சமஸ்கிருத மொழியிலும், அவ்வினத்தைச் சேர்ந்த பிறமொழிகளிலும், ஒருசில இடப்பெயர்களும், இடைச் சொற்களும் நீங்கவுள்ள எல்லாச்சொற்களையும், வினை மூலத்தினின்றே தோற்றுவிப்பர், அம்மொழியிலக்கணப் பேராசிரியர்கள். திராவிடமொழிகளில், வினையியல்புடைய எனக் கருத இயலாத, வினையாம் எனக் கோடற்கியலாத பெயர்ச்சொற்கள் ஓரளவு உள்ளன என்றாலும், அச்சொற் களின் எண்ணிக்கை, அம்மொழி பெற்றிருக்கும் மொத்தச் சொற்களின் எண்ணிக்கையில், ஒருசிறு பகுதியேயாம். எந்த மூலத்தினின்றும் தோன்றியனவல்ல எனப் பொது வாகக் கருதப்படும் நிலையில் உள்ள, பல சொற்கள்தாமும், உண்மையில் வினைப்பெயராகவோ, அல்லது வினையினின் றும் தோன்றியனவாகவோ காணப்படும்.

திராவிட மொழிகளில் வரும் ஈரசைச் சொற்கள் பலவும், தொழிற் பெயர் விகுதியாகத் தமிழிலும், எச்ச

வுருபாகக் கன்னட, கோண்டுமொழிகளிலும் வரும் 'அல்' என்பதை, இரண்டாம் அசையாகக் கொண்டுள்ளன. இவ் வினச்சொற்கள் அனைத்தையும், வினைமூலத்தினின்றும் தோன்றியனவாக உறுதியாகக் கொள்ளலாம். அச்சொற் கள் பிறந்தது எந்த வினைமூலத்திலிருந்து என்பதை அறிதல், சில சொற்களில் இயலாது போயினும், பல சொற் களின் வேர்ச்சொற்கள் காணக்கூடியனவேயாம். பொது வாகப் பழஞ் சொற்கள் எனக் கருதப்படும் கீழ்வரும் தமிழ்ச்சொற்கள், இன்று வழக்கத்தில் உள்ள சில வேர்ச் சொற்களினின்றே தோன்றின என்பதில் சிறிதும் ஐய மில்லை. விரித்தலைச்செய் எனப் பொருள்படும் 'விரி' என்ற மூலத்திலிருந்து வந்த 'விரல்'; கடந்துசெல் எனப் பொருள் படும் 'கட' என்ற மூலத்திலிருந்து வந்த 'கடல்'; கூறுசெய் எனப் பொருள்படும் 'பகு' என்ற மூலத்திலிருந்து வந்த 'பகல்'; (இரவினின்றும் பிரித்துக்காணப்படுவது; உண்மை யில் நடுநாள்); குடைந்து பள்ளமாக்கு எனப் பொருள் படும் 'குடை' என்ற மூலத்திலிருந்துவந்த 'குடல்' முதலாம் சொற்களைக் காண்க.

இன்று வழக்கத்தில் உள்ளனவும், பொதுப் பொருட் டன்மை கொண்டனவுமாய வினைமூலங்களோடு பெரிதும் ஒத்து, சிறிதே மாறுபடுவனவும், பழம் பொருளைக் குறிப் பனவுமாய சொற்கள் பல, பிறமொழிகளில் இருப்பதைப் போன்றே, திராவிடமொழிகளிலும் உள்ளன. திராவிட மொழிகளில், அவ்வேர்ச்சொற்கள் அடையும் மாறுபாடு மிகமிகச் சிறிதாம் என்பதே ஈண்டுச்சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாம்; இப்பொருட்கு, இப்பெயர் இடப்பெற்றது, ஒரு சில ஆண்டுகட்குமுன்னர்த் தான் நிகழ்ந்தது என்றே எவ ரும் கருதக்கூடும். இவ்வியல்பின் விளைவால், அம்மொழி கள் நனிமிக இளமை வாய்ந்தனவாகக் காட்சி தரும் என் றாலும், அம்மொழிகள் பெற்றிருக்கும் உயர்தனிச் செம்மைப் பண்பின் விளைவாய்ப், பழம் பெருங்காலத்தி னின்றே, அவை எவ்வித மாற்றமும் பெறுமல் நிலைபெற்று வந்துள்ளன என்பது ஐயத்திற்கிடனின்றி உய்த்துணரப்

படும். அவை மேற்கொண்ட ஒரு சில மாற்றங்களும், அவற்றின் மூலங்களோடு, சொல்லாக்கவுருபு வந்து இணைந்ததாலும் அம்மூலங்களில் உள்ள உயிர்கள் நீண்டதாலுமே உற்றனவாம். எம்முறையாகக்கொள்ளினும், பொருள்களின் பெயர்கள், பண்புப் பெயர்த் தன்மை கொண்ட தொழிற்பெயர்களாகவே அமைந்துள்ளன; கீழ் வரும் எடுத்துக்காட்டுக்கள் தமிழினின்றும் மேற்கொள்ளப்பட்டன: 'நில்' என்பதன் அடியாக 'நிலம்'; 'நடு' (=செடி நடு) என்பதன் அடியாக 'நாடு' (=பயிரிடத்தக்க நிலம்); 'கடு' (=கரடு முரடானது) என்பதனடியாகக் 'காடு'; (கொடு வழியைக் குறிக்கும் 'கடம்' என்ற சொல்லையும் ஒப்பிடுக.) தெளிவாக்கு எனப்பொருள்படும் 'விள்' என்பதனடியாக 'விண்'; ஒளிவிடல் எனப்பொருள்படும் 'மின்' என்பதனடியாக 'மீன்'; வெண்மை எனப் பொருள்படும் 'வெள்' என்பதன் அடியாக 'வெள்ளி'; 'குதி' என்பதனடியாகக் 'குதிரை'; 'பல்' என்பதன் அடியாகப் 'பன்றி' (=பல்லை உடையது); ஆடுதல் எனப் பொருள்படும் 'ஆடு' என்பதனடியாக 'ஆடு'; (பேராசிரியர் குண்டர்ட், இச் சொல்லின் தோற்றத்தை வேறுவிதமாக்கொள்வர்; ஆனால், அம்முறையில் சிறு தவறு நேர்தலும் கூடும்; போர் செய்; உணவு ஆக்கு எனப் பொருள்படும் 'அடு' என்பதினின்றே 'ஆடு' வந்ததாக அவர் கூறுவர்; காரணம்; ஆடு, போர்க் குணம் படைத்தது; பிறர்க்கு உணவாகப்பயன் உறுவது ஆதலின்.) 'காண்'; என்பதனடியாகக் 'கண்'; 'முகர்' என்பதன் அடியாக 'மூக்கு'; (தெலுங்கில் 'முக்கு'; கன்னடத்தில் 'மூடு') 'நக்கு' என்பதனடியாக 'நாக்கு'; (இப்பொருள் தரும் பழஞ்சொல்லாகிய 'நா' என்பதை, நக்கும் உயிராகிய நாயைக்குறிக்கும் 'நாய்' என்ற சொல்லோடு ஒப்பிடுக. 'கை' என்ற சொல், 'செய்' (கன்னடத்தில் 'கேயு') என்பதோடு தொடர்புடையதாம். சமஸ்கிருதத்தில் கையைக் குறிக்கும் 'கர' என்றசொல், அம்மொழியில் காரியத்தைச் செய் எனப்பொருள்படும் 'கர்' என்பதோடு ஒத்துள்ளது. தெலுங்கில் கையைக் குறிக்கவரும் 'சே' என்றசொல், இதைச் செய் எனப் பொருள்படும் அம்மொழிச் சொல்

லாகிய 'சே' என்பதோடு ஒத்துளதும் காண்க. 'கை' என்பது, தெலுங்கிலும் ஒரோவழிவரும். திராவிடமொழிகளில் வரும் உயிர்ப் பொருள்களின் பெயர்கள், அவையெழுப்பும் ஒலிகளைக்கொண்டு அமையாமல், அவ்வுயிர்ப் பொருள்களின் குணங்களைக்கொண்டே அமைந்தனவாம் என்பதையும் ஈண்டு நினைப்பூட்ட விரும்புகின்றேன்.

திராவிடப் பெயர்ச்சொற்களுள், பெரும்பாலான பெயர்ச்சொற்கள், வினைமூலங்களினின்றும் தோன்றியனவே என்பது ஐயமறத் தெளியப்படினும், எம்மூலத்தினின்றும் தோன்றியன என்பதைக்,காணஇயலாப் பெயர்ச்சொற்கள் சிலவும் உள. இடப்பெயர்களும், வேற்றுமை உருபு, சாரியைபோன்ற இடைச்சொற்களும், 'கால்', 'கல்' போன்ற பொருட்பெயர்களும், 'கர்' (கருப்பு), 'வெள்' (வெண்மை), 'செ' (=செம்மை) போன்ற பண்புப் பெயர்களும் இவ்வகையுள் அடங்கும். இவ்வகைப் பெயர்ச்சொற்களுள்ளும், ஒரு சில தனிப்பெயர்கள், வழக்காறற்றுப்போன சில வினைமூலங்களினின்றே தோன்றியிருத்தலும் கூடுங்கொல் என்ற ஐயம் தோன்றவும் செய்யும். இடத்தொடர்பு குறிக்கும் 'முன்' என்ற இடைச்சொல், பிறி தொன்றினின்றும் தோன்றாமல், தானே தோன்றிய தனிநிலை உடையதாகக் காணப்படினும், அது, வரிசையில் முன்னிற்பது எனப் பொருள்படும் 'முதல்' என்ற சொல்லோடு தொடர்புடையதாகவே தோன்றுகிறது. 'முதல்' என்ற இச்சொல், 'தல்' என்ற தொழிற்பெயர் விகுதி புணர்ந்த, மறைந்துபோன 'மு' என்ற வினைமூலத்தினின்றும் பிறந்ததேயாம்; ஆக, 'முன்' என்பதும், இறுதியில், வினைமூலத்தினின்றும் பிறந்ததாகவே துணியப்படும். அவ்வாறே, 'மேல்' என்ற சொல்லும், மேலே எனப் பொருள்படும் தெலுங்கு, தமிழ்ச் சொல்லாகிய 'மீது' என்பதில் காணப்படுவதும், இன்று வழக்கற்றுப்போனதுமான 'மி' என்ற வினையினின்றும் தோன்றியதேயாம். 'மேல்' என்பது 'மி+ய்+அல்,' என்பதற்கு ஒப்பாம். 'கீழ்' என்பதையும், 'கிழக்கு' என்பதன் மூலமாகிய 'கிழ்' என்பதன் அடியாகத் தோன்றியதாகக்கோடல் கூடும்.

திராவிடமொழிச் சொற்களின் பின் இணைகளாகிய பெரும்பாலான இடைச்சொற்களும், வினையடைகளும், பெயர்களையும், வினைகளையும் உண்டாக்கும் சொல்லாக்க வுருபுகளும், குறிப்பிட்ட சில பயன்குறித்து வந்த பெயராகவோ, அல்லது வினையாகவோ காணப்படும். திராவிட மொழிகளில், வினையடைகளாகவும், முன்னிணைகளாகவும் வரும் ஒவ்வொருசொல்லும், எச்சவினையாகவோ, அல்லது முதல், நான்கு, ஏழு ஆகிய இவ்வேற்றுமைகளையேற்ற பெயராகவோ காணப்படும். திணை, பால், எண், இடம், காலம் உணர்த்தும் வினைச்சொற்களையும், வேற்றுமையுருபேற்கும் பெயர்ச் சொற்களையும், ஆக்கவரும் பெரும்பாலான சொல்லாக்கவுருபுகளாகிய இடைச்சொற்களையும், பெயர் அல்லது வினையிலிருந்தே பிறந்தனவாகக்கோடல் எளிதில் நிகழக் கூடியதே; தெலுங்குமொழியில் மூன்றும் வேற்றுமைத்துணைப்பொருளில் வரும் 'சே', 'சேத' என்ற உருபுகளிரண்டும், முதல் வேற்றுமையிலும், ஏழாம் வேற்றுமையிலும் கையெனப்பொருள்பட வந்த சொல்லேயாதல் காண்க. இதைப் போன்றே, இடத்தைக்குறிக்கவரும் பெயர்ச்சொல் எதையிணைத்தாலும், தமிழில் இடப்பொருளுணர்த்தும் ஏழாம் வேற்றுமை தோன்றுவதும், ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணர்த்த வருவனவும், இங்கே, அல்லது வீடு என, இடத்தின் பொருளைக்குறிக்க வருவனவுமாய 'இன்' அல்லது 'இல்' என்ற பெயர்ச்சொற்கள் சேர்க்கப்படுவதால், நீக்கப்படுபொருள் குறிக்கும் ஐந்தாம் வேற்றுமை தோன்றுவதும் காண்க.

அதே இடைச்சொல், காலம்காட்டா வினையடிகளோடிணைந்து, தமிழில், காரணவினையைத் தோற்றுவிக்கும்: 'வரின்', 'வரில்', வந்தால் என்பது பொருளாம்.

வேற்றுமையுருபுகளாக வரும் இடைச் சொற்களுள், சில மட்டும், தாம் பண்டுபெற்றிருந்த பொருளை, இன்றும் தெளிவுறப்பெற்றுக் காத்து வருகின்றன. ஆனால், ஒரு சிலவற்றுள், அவை சார்ந்து நிற்கும் இடங்கள் மூலமாகவே, அப்பொருள் தெளிவுறத் தோன்றுகிறது. ஆனால்,

நான்காம் வேற்றுமையுருபுகளாகவரும் 'கு', 'கி', 'கெ' என்ற இவை, பண்டுபெற்றிருந்த பொருள்யாது என்பதை விளக்கும் அடிச்சுவடு எதையேனும், பெற்றுளவா என்பது ஐயமே; இதனால், திராவிடமொழியில் வரும் நான்காம் வேற்றுமை, இலக்கண நடைக்கே உரிய வேற்றுமைத் தன்மையை அடைந்துவிட்டதெனக்கொள்ளப்படும். இவ்வியல்பால், திராவிடமொழிகள், இந்தோ-ஐரோப்பிய இலக்கண இயல்புகளோடு இயைபுடையவாக ஆகிவிட்டன.

## உ. திராவிட வேர்ச்சொற்கள் தொடக்கத்தில் ஓரசை யுடையனவே

ஆசிய அல்லது ஐரோப்பிய இனத்தைச்சேர்ந்த மொழிச்சொற்களனைத்திலும், பெரும்பாலான திராவிட மொழிச்சொற்கள் நீண்டனவே என்பதையும், ('இருக்கிறது' என்ற தமிழ்ச் சொல்லை, அதே பொருள்படும் 'எஸ்த்' என்ற இலத்தீன் மொழிச்சொல்லோடு ஒப்பிட்டுக் காண்க) மிகப்பல சொல்லுருபுகள் இணைந்த நீண்டசொற்களை வழங்கும் அமெரிக்க மொழிச்சொற்களுக்கே, அவை நீளத்தால் குறையுடையன என்பதையும் அறிந்த எவர்க்கும், திராவிட வேர்ச்சொற்கள், தொடக்கத்தில் ஓர் அசையே பெற்றிருந்தன என்ற உண்மை பொருந்துவதாகத் தோன்றாது.

திராவிடச்சொற்கள் பெருநீளமுடையவாதல், இணையவாரா இருமெய்களுக்கிடையே, ஒருயிரெழுத்தொன்றை, ஒலிநயம் குறித்து நுழைப்பதால் இணைகிறது என்பது ஓரளவு உண்மையேயெனினும், அது, பெரும்பாலும், வேர்ச்சொற்களோடு, சாரியை, சந்தி, இடைநிலைகளாகிய சொல்லாக்க உருபுகளையும், விகுதியையும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கி இணைப்பதாலேயே உண்டாகிறது. பெரும்பாலான திராவிட வினைமூலங்கள், சொல்லாக்கவுருபுகள் இணைவதற்குமுன், மூவசையுடையனவே. அவற்றுள், முதல் இருஅசைகளும், ஒலிநயம் கருதிவந்த உயிரெழுத்

தின் நுழைவு அல்லது இணைவாற்றோன்றிய ஓரசையின் இருகிளைகளேயாம். அவ்வினையடியின் ஈற்றசை, உண்மையில், பண்டு பிறப்பால் தொழிற்பெயர் விகுதியாயும், இன்று, தன்வினைச் சொல்லினின்றும், பிறவினைச் சொல்லைப் பிரித்துணர்த்தும் தொழிலை மேற்கொள்வனவுமாய, சொல்லாக்க இணைப்பேயாம். சில சொற்களில், வினையடியின் முதலசைக்கண், அச்சொல்லின் வேர்ப்பொருள் நிற்க, இரண்டாவது அசை, அவ்வேர்ப்பொருளை விரிவாக்கவோ, அல்லது பிறிதொன்றைக்குறிக்காவண்ணம் வரையறுக்கவோ அம்முதலசையோடு இணைக்கப்பட்டதாகக் காணப்படும். சொல்லாக்கம் இணைந்த அவ்வடிச் சொற்களோடு மேலும் வந்து இணைவன, வேற்றுமையுருபு, திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதி, காலம் காட்டும் இடைநிலை யாகியவற்றைக் குறிக்கவரும் அசைகளே யாம்.

ஆகவே, திராவிடச் சொற்கள், எத்துணை நீளமுடையவாகவும், சிக்கல் செறிந்தவாகவும் காணப்படினும், அச்சொற்களில் தொடர்ந்து இணைந்து நிற்கும் சொல்லுருபுகளை அறிந்து நீக்கிவிடின், இறுதியில், அச்சொற்கள் ஓரசையான் இயன்ற வேர்ச்சொல்லினின்றே தோன்றியவாதல் புலப்படும். அவ்வாறே, 'பெருகுகிறது' என்ற தமிழ்ச் சொல்லைப் பிரித்துக் காண்புழி, ஈற்றசையாகிய 'அது', அஃறிணை யொருமையைக் குறிக்கும் விகுதியாம் என்பதும், 'கிற்' என்பது, நிகழ்காலம் உணர்த்தும் இடைநிலையாம் என்பதும், 'பெருகு' என்பதே அவ்வினைச் சொல்லின் பகுதியாம் என்பதும் புலனும்; இப்பகுதியில் வரும் ஈற்றசையாகிய 'கு' என்பதும், அஃறிணைப் பொருளுணர்த்தும், தன்வினை குறிக்கவரும் சொல்லாக்கமேயாம். அதையும் நீக்கி நோக்கின், தனித்து வந்துழிப், பெருமையுடைய என்ற பொருளில், பெயரடையாகவும் வழங்கப் பெறும் 'பெரு' என்ற அவ்வினைச் சொல்லின் உண்மையான வினைமூலத்தைக் காணல் கூடும். ஈரசையுடைய, இப் 'பெரு' என்பதும், அவ்வினைமூலத்தின் உண்மை உருவமாகாது.

'பெரிய', 'பெரும்' என்ற பெயரடைகளில் காணப்படும் 'பேர்' என்பதன் ஒலிநய வடிவே, இப் 'பெரு' என்பது புலனும். இப்'பெர்' என்பதன், ஒலிநயம் கருதி நீண்ட, ஆனல், ஓரசையான் இயன்ற வடிவம் 'பேர்' என்பதாம். இவ்வாறு அடுத்து வரும் ஒட்டுநிலைகளால், ஆறு அசைகளான் ஆய ஒருசொல், ஓர் அசையினின்றே வளர்ந்துள்ளது என்பது காணப்பட்டது. இத்தகைய இணைப்புகளால், அச்சொல் பெறும் ஒவ்வொரு வடிவிலும் அச்சொல்லின் மூலப்பகுதிமட்டும் சிறிதும் மாற்றம் பெறுவதில்லை. ஒரோவழி மாற்றம் பெறினும், நூலறிவு சிறிதே வாய்க்கப்பெற்றாரும், பெருமுயற்சியின்றி எளிதில் காணக்கூடிய அளவில் சிறிதே மாற்றம் பெறும். தன்னைச் சூழப் பல சொல்லுருபுகள் துணையாக இணைக்கப் பெற்றுழியும், அச்சொல்லின் மூலப்பகுதி மட்டும் சிறிதும் குன்றாமலும், பிறிதொன்றாற் கவரப் படாமலும், தெளிவு பெறத்தோன்றித் தனித்தே நிற்கும். செமிடிக் மொழியிலும், இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் வரும் வேர்ச்சொற்கள் பலவும், பின்னர்ப் பிரித்துணர முடியாவாறு பெரிதும் மாற்றப் பட்டிருக்க, திராவிடமொழிச் சொல் ஒவ்வொன்றிலும், அச்சொல்லின் மூலப்பகுதி பெற்றிருக்கும் இத்தெளிவும், தனிப்பண்பும், துருக்கி, அங்கேரிபோலும் சித்திய இன மொழிகளின் குறிப்பிடத்தக்க தனிச்சிறப்புக்களாக அமைந்துள்ளன.

"திராவிட வேர்ச்சொற்கள், தொடக்கத்தில் ஓரசையான் ஆகி, இயற்கையாகவே இருவகையாகப் பிரிந்துள்ளன. ஒன்று, உயிரீறுன், பொதுவாக, நெடிலுயிரீறுன் இறுவன: 'ஆ' (=ஆகு); 'சா' (=இற); பே (=செல்) இரண்டாவது, குறிலுயிர் இணைந்த மெய்யீறுடையன: அட் (=அடங்கு); 'அண்' (=அணுகு); 'நில்', 'செல்'," இவ்வாறு கூறுவர் பேராசிரியர் குண்டர்ட் அவர்கள். ஓரசையான் இயன்ற இவ்வேர்ச்சொற்களோடிணைவன, சொல்லாக்கங்கள், பொருள் வேறுபடுத்துவன, ஒலித்துணையாவன என்ற இவைகளேயாம்.

தொடக்கத்தில் ஓரசையாய் இருந்த திராவிட மூலங்கள், உயிர் எழுத்துக்களின் நுழைவாலும், இணைவாலும், அல்லது, சொல்லாக்க உருபுகளின் சேர்க்கையாலும், அல்லது, இவ்விருவகையாலும், எவ்வாறு நீண்டன என்பதை விரிவாக ஆராய்வது ஈண்டு வேண்டுவதாகும்.

## ௫. வேர்ச்சொற்களின் ஒலிநய நீட்சி

திராவிட வேர்ச்சொற்களின் திருந்தா மூலங்கள், சில இடங்களில், ஒலிநய உயிரெழுத்திணைவால் நீளமாக்கப் படுகின்றன. தெலுங்கு, கன்னட இலக்கணங்களில், மெய்யீறாக வரும் எல்லாச் சொற்களின் ஈற்றிலும், அவை பெற்றிருக்கும் அசைகள் எத்தனை யெனினும், அம்மெய்யெழுத்தை யடுத்து, இவ்வாறு ஒலிநய உயிர் இணைப்பது தவறாது மேற்கொள்ளப்படுகிறது. இரண்டு அல்லது அதற்கு மேலும் உள்ள அசைகளைக்கொண்ட வேர்ச்சொற்களில், உயிரிணைப்பது, ஒலித்துணை யொன்றையே கருதியதாகத் தோன்றுகிறது. ஆனால், ஓரசை வேர்ச்சொற்களோடு உயிரிணைவதை நோக்கின், அவ்விணைப்பு, ஒலிநயம் கருதியதாகத் தோன்றுவதல்லது ஒலித்துணை கருதியதாகத் தோன்றவில்லை.

ஈற்று மெய்யெழுத்திற்கு ஒலித்துணை தேவை எனக் கருதப்பட்டுழி, 'உ' என்ற உயிரே பொதுவாக மேற்கொள்ளப்படும்; இவ்வுகரத்தைத் தொடர்ந்து பிறிதோர் உயிர்வரின், இவ்வுகரவுயிர் தவறாது கைவிடப்படும். ஓரசையான் இயன்ற வேர்ச்சொற்களோடு, பெரும்பாலும், 'உ'கரவுயிரே இணைக்கப்பெறும் என்றாலும், அவ்வாறு இணைக்கப் பெறும் உயிர், 'உ'கரம் ஒன்று மட்டுமன்று ; இவ்வாறு வரும் 'உ'கரம், சிற்சில இடங்களில், பின்னர்ப் பிரிக்க இயலாவாறு, வேர்ச்சொற்களோடு, இரண்டறக் கலந்து விடுவதும் உண்டு. இவ் 'உ'கரத்தை யடுத்து, 'இ'காரமும், அதையடுத்து 'அ'காரமும், அதன் பின்னர் 'எ'கரம் அல்லது 'ஐ'காரமும், அவ்வம்மொழிகளின் இயல்புகளுக்கேற்ப

இணைக்கப்பெறும். சமஸ்கிருதத்தினின்றும் வந்து வழங்கும் மெய்யீற்று வினைமூலங்களுக்கிற்றில், பொதுவாக, 'இ'காரத்தையே, எல்லாத் திராவிடமொழிகளும் இணைக்கின்றன. அவ் 'இ'காரத்தையும் அடுத்து 'ன்சு' என்ற சொல்லாக்கத்தைத் தெலுங்கும், 'சு' என்ற சொல்லாக்கத்தைக் கன்னடமும் இணைக்கும். சாபம் கொடு எனப் பொருள்படும் 'ஸப்' என்ற சமஸ்கிருதச் சொல் 'சபி' எனத் தமிழிலும், 'சபின்சு' எனத் தெலுங்கிலும், 'சபிசு' எனக் கன்னடத்திலும் வரும். திராவிடமொழிகளனைத்தையும் ஒப்புநோக்கின், ஒலித்துணை கருதி வரும் இத்துணை உயிர்களனைத்தும், ஒன்று பிறிதாக மாறும் இயல்பின என்பது உணரவரும். நினைவற்றுப்போ என்ற பொருளில் 'அ'கரவீறாக வரும் 'மற' என்ற தமிழ்வினை, கன்னடத்தில் 'மரெ' எனவும், 'இ'கரவீறாகவரும் 'கடி' என்ற தமிழ்வினை, தெலுங்கில் 'கரசு' என்றும், 'கெலி' என்பது கன்னடத்தில் 'கில்லு' எனவும், 'முளை' என்ற 'ஐ'காரவீற்றுத் தமிழ் வினை, தெலுங்கில் 'மொலுசு' எனவும் வருதல் காண்க. இவ்வீற்று உயிர்கள், இவ்வாறு மாறும் இயல்புடையவாதலை நோக்கின், இவ்வுயிர்கள், ஒலித்துணை யொன்றே கருதி வந்தன; வேர்ச்சொற்களின் இன்றியமையா உருபுகளாகா; அவை இணைவதால், வேர்ச்சொற்பொருள் எத்துணையும் மாறுவதில்லையென்ற இம் முடிவுகளே எனக்குப் புலனாகின்றன.

## ௩. வேர்ச்சொற்களோடிணையும் சொல்லாக்கவுருபுகள்

சொல்லாக்கவுருபுகள், வினைமூலங்களோடிணைக்கப் பெறுதலைப்போன்றே, பெயர் மூலங்களோடும் இணைக்கப் பெறுகின்றன; வினையடியாகப் பிறந்தவற்றோடேயல்லாமல், தொன்மையுடையவாகத் தோன்றும் பெயர்ச் சொற்களோடும் இணைக்கப்பெறுகின்றன. என்றாலும், பெரும்பாலும் வினைமூலங்களோடே அவை இணைக்கப் பெறும். அவ்வாறு இணைக்கப்பெறுங்கால், அவை, சாரியைகள்

இணைதற்கிடமாக, அவ்வினையடியின் ஈற்றசையாக, பொதுவாக அச்சொல்லின் மூன்றாவதசையாக வரும். இச்சொல்லாக்க உருபுகள், பண்டு, தொழிற்பெயர் விகுதிகளாகவே வழங்கியனவாகத் தோன்றுகின்றன. அவை தோன்றியகாலத்தே, அவற்றின் இயல்பு யாதேயாயினும், அவை, தன்வினைச்சொற்களினின்றும், பிறவினைச்சொற்களைப் பிரித்துணரவும், தனித்து வருவனவும், எழுவாய் வேற்றுமையில் வருவனவுமாய பெயர்ச்சொற்களினின்றும், பெயரடையாகவரும் பெயர்ச்சொற்களைப் பிரித்துணரவும், இன்று துணைபுரிகின்றன. அச் சொல்லாக்கவுருபுகள் முழுவளர்ச்சி பெற்றுவிளங்கும் மொழியும், அவற்றை மிகப்பலவாக மேற்கொள்ளும் மொழியும்ஆய தமிழ் மொழியில், அவை, வினையின் அஃறிணைத்தன்மை அல்லது வினையின் தன்வினைத் தன்மையையும், வினையைக் கொண்டு முடிவனவும், வினையால் முடிக்கப்படுவனவுமாகிய பெயர்ச்சொற்களையும் குறிக்க வந்துழி, அவற்றின் மொழி முதல்மெய், தனிமெய்யாம்; பிறவினை அல்லது செய்வினைகளையும், பெயரடையாகவரும் பெயர்ச்சொற்களையும், அதாவது, வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வந்த இரு பெயர்ச்சொற்களுள், முதற்கண் நிற்கும் பெயர்ச்சொல்லையும், குறிக்க வந்துழி, அச் சொல்லாக்க வுருபுகளின் மொழி முதல்மெய், இரட்டிக்கப்பெறுவதோடு, மெல்லொலி வல்லெழுத்து, வல்லொலி வல்லெழுத்தாக மாற்றவும் பெறும். தன்வினைச் சொற்களை ஆக்கவரும் அச் சொல்லாக்க வுருபுகளின் மொழி முதற்றனிமெய், தான் சேர்ந்துள்ள சொல்லின் பொருளையோ மதிப்பையோ சிறிதும் மாற்றாமலே, தனக்குமுன், தன் இனமெல்லெழுத தொன்று பெற்று ஒலிநயம் உடையதாகும். அச்சொல்லாக்க வுருபுகளின் தமிழ் வடிவங்களாவன: 1. 'கு', அல்லது 'ங்கு'; அதன் பிறவினை: 'க்கு'; இதற்கினத் தெலுங்கு உருபு: 'சு' அல்லது 'ஞ்சு'. 2 'சு'; அதன் பிறவினை: 'ச்சு'; 3. 'து'; 'ந்து'; அதன் பிறவினை: 'த்து'; இவற்றிற்கு நிகரான 'டு', அல்லது 'ண்டு'; அதன் பிறவினை: 'ட்டு'; 4. 'பு' அல்லது 'ம்பு'; அதன் பிறவினை: 'ப்பு'.

இனி, இச் சொல்லாக்க வுருபுகளின் ஆற்றல், ஆட்சி களை ஏற்ற எடுத்துக்காட்டுக்களோடு விளங்க ஆராயத் தொடங்குகின்றேன்.

1. 'கு' என வொலிக்கப்படும் 'கு'; அதன் ஒலிநய வடிவம் 'ங்கு'; அதன் பிறவினை 'க்கு':—இவற்றிற்கான தமிழ் எடுத்துக்காட்டுக்கள்: 'பெருகு' தன்வினை. 'பெருக்கு', பிறவினை. 'அடங்கு', தன்வினை; அடக்கு, பிறவினை. அவ் வாறு வந்த ஈரசைச்சொற்கள்: 'ஆகு', தன்வினை; 'ஆக்கு', பிறவினை; 'நீங்கு', தன்வினை; 'நீக்கு', பிறவினை; இச் சொல் லாக்கங்களை யேற்று வரும் பெயர்ச் சொற்கள், குறிப்பாக, மூவசையான் வந்த சொற்கள், எண்ணற்றன உள்ளன. இவ்வாறு வருவனவற்றுள், தனிநிலைப் பெயர் வடிவிற்கும், பெயரடைப் பெயர் வடிவிற்கும் இடையே, யாதொரு வேற்றுமையும் இல்லை. 'கு', 'ங்கு', 'க்கு' என்ற இவ்வுருபு களுள் எதுவரினும், அது, எல்லாவடிவிலும், தன்னியல்பிற் சிறிதும் வேறுபடாமலே வரும்; 'படகு': 'கிழங்கு', 'கருக்கு' என்ற சொற்களைக் காண்க. இவ் வெடுத்துக்காட்டுக்களை யொப்பு நோக்கின், 'ங்க்' என்பது, 'க்' என்பதன் ஒலிநய வடிவேயாய், அதனோடு ஒப்புடையதே யென்பது, 'க்' என்பதைப்போன்றே 'ங்க்' என்பதும், பிறவினையாங்கால் 'க்க்' என ஆகும் என்பதனாற் புலப்படும். பிறவினையுருபாக வரும் 'க்கு', கொச்சைத்தமிழில், ஒரோவழி, முன்னர் அறிந்த, ஒன்று பிறிதாக மாறும் ஒலிமுறைப்படி, 'ச்சு', என மாறுகிறது. வெப்பம் ஆகு என்ற பொருளில் வரும் 'காய்' என்ற மூலத்தினின்றும் தோன்றிய சொல், 'காய்க்கு' எனவருதற்குப் பதிலாகக், 'காய்ச்சு' என்றே எழுதவும், ஒலிக்கவும் படுகிறது. தமிழில், அதன் ஒலிமுறையோடு மாறுபட்டுப் புறனடையாக வந்து வழங்கும், பிறவினைச் சொல்லாக்க வுருபின் திரிந்த இவ் வடிவே, தெலுங்கில், அதன் ஒலிமுறையோடொட்டிய வடிவாக மேற்கொள்ளப் படும். தெலுங்கில் 'க்கு' என்பதன் இடத்தைச் 'ச்சு' என் பது தவறாது மேற்கொள்வது காண்க.

தன்வினைச் சொல்லாக்கவுருபாகிய ‘கு’, தமிழில், ‘ங்கு’ என ஒலிநயமுடையதாக மாறுவதைப் போன்று, தெலுங்கில் மாறுவதில்லை; ‘கு’ என்ற அவ்வுருபின் முன், அரையனுஸ்வாரம் என்ற தெளிவில்லா ஒலி கொண்ட மூக்கெழுத்தொன்று வந்து, மூக்கினமாக்கும் இயல்பு இருமொழியிலும் நிலவுகிறது என்ற உண்மையை நிலைநாட்டும். பெரும்பாலும் அஃறிணைச் சொல்லாக்க வுருபை மூக்கினமாக்கிப் பிறவினைச் சொல்லாக்க உருபை மூக்கினமாக்க மறுப்பதைத், தமிழ், தன் ஒலிமுறையாகக் கொண்டிருக்க, தெலுங்கு, பெரும்பாலான இடங்களில், அப் பிறவினைச் சொல்லாக்க உருபினை மூக்கினமாக்கி, அஃறிணைச் சொல்லாக்க உருபினை, அதன் தொன்மை வடிவாய, மூக்கினம் பெறுவடிவிலேயே வழங்குவதைத் தன் ஒலிமுறையாகக் கொண்டுளது என்ற உண்மை ஈண்டுக் குறிப்பிடத் தக்கதாம். தெலுங்கில், சொல்மூலம் ‘இ’கர ஈறுக முடியும் வழி, அம் மூலத்தொடிணைய வரும் ‘ச்சு’ என்ற சொல்லாக்க வுருபு, ‘ன்சு’ என மாற்றப்பெறும். ஆனால், இதுபோலும் இடங்களிலாயினும், வேறு பிற இடங்களிலாயினும், ‘க்கு’ என்ற தமிழ் உருபு, ‘ங்க்கு’ என என்றும் மாறுவதில்லை. இரண்டு எனப் பொருள்படும் ‘இரட்டி’ என்ற சொல், ‘இரட்டிக்க’ எனவரும். ஆனால், அது, தெலுங்கில், ‘ரெட்டின்ச’ என்றே வரும். அவ்வாறே, மன்னிக்க’ என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில், ‘மன்னின்ச’ என்றே வரும். சில இடங்களில் ‘சு’ என்ற சொல்லாக்க உருபின்முன், மூக்கெழுத்திணைதல், தெலுங்கில் ‘இ’கர வீற்றுச் சொற்களிடத்தே மட்டுமல்லாமல், பிறஉயிரீற்றுச் சொற்களின் பின்னரும் மேற்கொள்ளப்பெறும். தமிழிலும், தெலுங்கிலும் தன்வினை குறிக்கும் வடிவம், ‘பெருகு’ என்றே வரவும், அச்சொல்லின் பிறவினை வடிவம் தமிழில் ‘பெருக்கு’ எனவருவதே போல், தெலுங்கில் ‘பெருசு’ என வாராது, பென்சு’ என்றே வரும். இப் ‘பென்சு’ என்பது, ‘பெர்-ன்சு’ என்பதன் திரிபேயாம். மேலும், ‘பகுக்கு’ என்ற தமிழ்ச்சொல்லோ டொத்த ‘பக்-ன்சு’ என்பதன் திரிந்த வடிவாகிய ‘பன்சு’ என்பதே காணப்படுகிறது.

'கூ' என்பதற்குப் பதிலாக, ஒரோவழி, 'வு' என்பதும் மேற்கொள்ளப்படும் தெலுங்கு வழக்காற்றினால் தமிழ்க் 'க'கரமும், தெலுங்குச் 'ச'கரமும் ஒப்புடையவே என்பது தெளிவாம். 'க'கரம் அல்லது 'க'கரம், தெலுங்கில் மட்டுமல்லாமல், பேச்சுத் தமிழிலும், பெரும்பாலும் 'வ'கரமாக மாறுவதும், அவ் 'வ'கரமும், 'ப'கர 'ப'கரங்களும் ஒன்று பிறிதாக மாறுவதும் இயல்பாகவும், 'ச'கரம், 'வ'கரமாகவோ, 'ப'கரமாகவோ, அல்லது 'ப'கரமாகவோ மாறுவது என்றும் இயல்பன்று ஆகலின், 'சூ' என்பதோடொப்ப, 'வு' என்பதும் மேற்கொள்ளப்படும் இந்நிகழ்ச்சி, தமிழைப் போன்றே, தெலுங்கிலும், 'கு' என்பதே, ஒரு காலத்தில் சொல்லாக்க உருபாக இருந்தது என்பதை நினைவூட்டுவதாகும். ஆகவே, திராவிடமொழிகளில் வரும் இச்சொல்லாக்க உருபின் தொன்மைவடிவம் 'கு' என்பதே யென்றும், பிறவினைப் பொருள்படவரும் இதன் வல்லொலி வடிவமாகிய 'க்கு', தெலுங்கில் 'சூ' என்றும், கன்னடத்தில் 'சு' என்றும் மென்மையதாக்கப்பட்டது என்றும் யான் முடிவு செய்கிறேன்.

2. 'சு'; அதன் பிறவினைவடிவம் 'ச்சு':—இச்சொல்லாக்கவுருபு தமிழில் அருகியே இடம்பெறும். 'சு', 'ச்சு' என்ற இவ்வுருபுகள், 'க'கரம், 'ச'கரமாகவும், 'க்க்' எனவரும் இரட்டைக்ககரம், 'ச்ச்' எனவரும் இரட்டைச் சகரமாகவும் திரியும் இயல்பையொட்டி, 'கு', 'க்கு' என்ற தொன்மை வடிவங்களினின்றே முறையே தோற்றுவிக்கப்பட்டனவாதலின், தெலுங்கில், இச் சொல்லாக்கவுருபு இடம்பெறும் எடுத்துக்காட்டுக்கள், மிகப் பலவாகக் காணப்படினும், அவையெல்லாம் ஏற்புடைய எடுத்துக்காட்டுக்களாகா. இவ்வுருபு வந்த தமிழ் எடுத்துக்காட்டு, அரண் அமைந்த இடம்சேர் எனப்பொருள்படும் 'அடைசு' என்பதாம்; இதன் பிறவினைவடிவம், சுற்றிவேலிஅமை எனப் பொருள்படும் 'அடைச்சு' என்பதாம்.

3. 'து' அல்லது 'ந்து'; அதன் பிறவினைவடிவம் த்து:—இவ்வுருபிற்கும், 'கு', 'சு', 'பு' என்ற பிற உருபுகளுக்கும்

இடையே, பொருள்நெறியாலோ, அல்லது இலக்கண அமைப்பாலோ வேறுபாடில்லை. 'கு' என்ற சொல்லாக்கம், தன்வினையாங்கால், 'ங்கு' என ஒலிநயமுடைத்தாதலைப் போன்றே, 'து' என்ற சொல்லாக்கமும், 'ந்து' என ஆகும். 'த்' என்பதும், அதற்கினமான 'ந்த்' என்பதும் இரட்டித்து வருங்கால், விதிப்படி, 'த்த்' என மாற்றப்படும். 'து' என்பது, ஒலிநயம் கருதி, 'ந்து' என மாறுவது, மிகப் பெருமளவில் நிகழ்வதால், இவ்வகை வினைச்சொல்லாக்க வுருபுகளில், 'து' என்பதற்குப் பதிலாக, 'ந்து' என்பதே எங்கும் இடம்பெறுவதாயிற்று. மிகப் பழைய வடிவாகியது 'து', பெயர்ச்சொல்லாக்க வுருபுகளில் மட்டும், அதுவும் ஒருசில இடங்களில் மட்டுமே, மறைந்துபோகாமல் வழங்கக்காண்கிறோம். பெயர்ச்சொல்லாக்கவுருபாகிய 'து', பெயரடைக்கண், திரிதலின்றியே வந்து வழங்கும். ஆனல், பெயரடைக்கண் வந்த 'து', பிறவினைச் சொற்களில் திரிந்து வருதலைப் போன்றே, 'த்து' எனத்திரிந்து விடுகிறது. 'திருந்து', தன்வினை; 'திருத்து', பிறவினை; 'மருந்து', பெயர்; 'மருத்து' பெயரடை. ('மருத்துப் பை'). மூக்கினம் பெறுத்தொன்மை வடிவாய 'து' என்பதும், அதன் பெயரடை வடிவாய 'த்து' என்பதும், 'எருது' (=பெயர்), 'எருத்துப் பூட்டு' (=பெயரடை) என்ற சொற்களில் இடம் பெற்றுள்ளன. 'து' அல்லது 'ந்து' என்ற சொல்லாக்க வுருபேற்கும் வினைச்சொற்களெல்லாம் பெரும்பாலும் மூவசையான் இயன்றனவே. தமிழில் வழங்கும், ஈரசையானியன்ற, இவ்வினச்சொற்கள் சிலவற்றுள் 'நீந்து' என்பதே குறிப்பிடத்தக்கதாம். இச்சொல்லினின்றும் பிறந்த 'நீத்தல்' என்ற தொழிற்பெயர், மூக்கெழுத்தின்றியே காணப்படுதலாலும், இவ்வினையைக் குறிக்கும் தெலுங்கு வினைச்சொல், விதிப்படி, 'ஈந்து' என வருதற்குப் பதிலாக, 'ஈது' என்றே வருதலாலும், துளு, 'ஒந்த' என்பதையும், கன்னடம் 'ஈசு' அல்லது 'ஈஜு' என்பதையும் பெற்றுள்ளன ஆதலாலும், 'நீந்து' என்பது, 'நீது' என்பதினின்றும் ஒலிநயம்பெற்றுப் பிறந்ததேயாம் என்றும், 'நீந்து' என்ற சொல்லின்மூலம், 'நீ' என்பதேயாம் என்

றும் யான் கொள்கின்றேன். மேற்காட்டிய சொற்களில் வரும் 'து', 'ந்து', 'ஜ_ு' என்பன சொல்லாக்கவுருபுகளே யென்பதில் ஐயமில்லை. இவற்றுள், தமிழ்ச் சொல்லுருபின் முதலெழுத்தாக வரும் 'ந'கரம், மூக்கொலிகள்பால் தமிழ் மொழிக்குள்ள விழைவு காரணமாக வந்த பிழைபட்ட எழுத்தாக, 'ஈ' அல்லது 'ஈது' என்பதே, அச்சொல்லின் தொன்மை வடிவாம் எனக்கொள்வதா? அல்லது, தெலுங்கு, கன்னடங்களும், அவ்வுருபுகளின் மொழி முதற்கண் 'ந'கரத்தைப் பண்டுபெற்றிருந்து, காலவெள் ளத்தால், பின்னர் இழந்துவிட்டன எனக்கொள்வதா என் பன ஆராய்தற்குரித்தாம். எல்லாத் திராவிடமொழிகளி லும், தண்ணீரைக் குறிக்கவரும் 'நீர்' என்ற சொல்லோடு, தமிழ்ச் சொல்லாக்கவுருபினை ஒப்பிட்டு நோக்கியவழி, 'நீ' என்பதே, தொன்மை வாய்ந்த உண்மை மூலமாம் என் பது புலனும். இச்சொல், கிரீக்மொழியின் 'நெ-ஒ' என்ப தோடும, இலத்தீன் மொழியின் 'நொ', 'நதோ' என்பனவற் றோடும், சமஸ்கிருதத்தின் 'நௌ' என்பதோடும் ஒப்புடைத் தாத் தோன்றுகிறது. சிறுபடகு எனப் பொருள்படும் 'நௌ' என்ற சொல்லின் மூலத்தை, அச் சமஸ்கிருத மொழிக்கண் அறிதல் இயலாது.

சொல்லாக்கவுருபுகளைப்பெற்ற வினையினின்றும் பிறக் கும் தொழிற்பெயரனைத்தும், தமக்குரிய சொல்லாக்க வுருபாக, பிறவினைப்பொருள்பட வருவனவும், இரட்டித்து வல்லொலியவாக்கப்பெற்ற மொழிமுதல் எழுத்துக்களைக் கொண்டனவுமாய உருபுகளையே மேற்கொள்ளும்: 'திருந்து' என்பதினின்றும் 'திருத்தம்' என்பதும், 'தூங்கு' என்பதி னின்றும் 'தூக்கம்' என்பதும் தோன்றுவது காண்க. சில சொற்களில், உயிரிணை, உயிர்நீட்டம் எதுவும்பெறுமல், தோன்றியது தோன்றியவாறேயுள்ள சொல்மூலம், தன் வினையையுணர்த்த, அச்சொல்லின் பிறவினை, அம்மூலத் தோடு 'த்து' என்பது இணைவதால் தோன்றும். 'படு', தன்வினை; 'படுத்து', பிறவினை; 'தாழ்', தன்வினை; 'தாழ்த்து.' பிறவினை, 'கில்' (தெலுங்கில் 'கிலு'), தன்வினை; 'கிறுத்து',

பிறவினை, இதுபோலும் இடங்களில், கன்னடம், 'த்து' என்ற தமிழ்ச் சொல்லாக்கத்திற்குப் பதிலாக, 'து' என்பதை மேற்கொள்ளும். 'தாழ்த்து' என்ற சொல், அம் மொழியில் 'தாள்து' என வரும். பிறவினைச்சொல்லாக்க வுருபாக வரும் இது, சில இடங்களில், பிறவினை ஏவற் பொருள் குறிக்கவும் வரும். ஆனால், 'இ' என்பதொன்றே, திராவிடமொழியின், உண்மையான பிறவினை ஏவலாம் என்பது "வினை" என்ற தலைப்பின்கீழ் விளக்கப்படும். பிறவினைச்சொல்லாக்கவுருபாகத், தமிழ், 'த்து' என்பதை மேற்கொள்ளும் என ஈண்டுக்காட்டிய எல்லா இடங்களி லும், தெலுங்கு 'சு' அல்லது 'பு' என்பதையே மேற் கொள்ளும்.

'த்', 'ந்த்', 'த்த்' என்பன எப்பொருள் குறித்து எவ் வெவ்வாறு வழங்கப்பெறுமோ, அப்பொருளே குறித்து, அவ்வவ்வாறே வழங்கப்பெறும் 'ட்', 'ண்ட்', 'ட்ட்' முதலாய தலைவளியெழுத்துக்களைக்கொண்ட சொல்லாக்கவுருபுகள் வந்த எல்லாச் சொற்களையும், இவ்வினச் சொற்களிலேயே சேர்க்கின்றேன். 'குருடு', பெயர்; 'குருட்டு', பெயரடை; 'இரண்டு', பெயர்; 'இரட்டு', பெயரடை. இத்தகைய பெயர்ச் சொற்களில், தெலுங்கு, ஈற்றுமெய்யை வல்லொலியதாக மாற்றுகிறது; ஆனால் இரட்டுவதில்லை. 'ஓடு' என்பதினின் றும் பிறந்த, ஓட்டையுள்ள எனப் பொருள்படும் சொல் 'ஒட்டி' என வாராது, 'ஓடி' என்றே வரும். ஈற்றுமெய் யாக வரும் வல்லின 'ற'கரம், தமிழில், சிற்சில இடங்களில், 'டு' அல்லது 'து' என்பனவற்றோடொப்ப, இரட்டிக்கப் பெறும்: 'கிணறு'; 'கிணற்று'.

4. 'பு' அல்லது 'ம்பு'; அதன் பிறவினைவடிவாம் 'ப்பு' :—இத் தன்வினைச்சொல்லாக்கவுருபின் மிகப்பழைய வடிவாய 'பு', கன்னடத்தில் 'வு' என மாறும். தமிழில், அது, 'ம்பு' எனத் தவறாது ஒலிநயமுடையதாம். தமிழில் 'ம்பு' எனவரும் இச்சொல்லாக்கம், தெலுங்குப் பெயர்ச் சொற்கள் சிலவற்றில், 'மு' எனமெலிந்து திரியும். தமிழ் வினைச்சொற்களில் வரும் 'பு' அல்லது 'ம்பு' என்ற சொல்

லாக்கங்களின் இடத்தைத், தெலுங்கில் 'வு' அல்லது 'கு' என்ற சொல்லாக்கம் மேற்கொண்டுவிட்டது. 'ப்பு' என்ற தமிழ்ப் பிறவினைச் சொல்லாக்கத்திற்கீடாகத் தெலுங்கில், 'பு', 'ம்பு' என்பனவே வரும்; 'ப்பு' என்பது அருகி வரும். வினைச்சொல்லொன்று, இச்சொல்லாக்கவுருபு பெற்ற மைக்கு எடுத்துக்காட்டு: 'நிரம்பு', தன்வினை; 'நிரப்பு', பிறவினை. இச்சொற்களில் வரும் 'நிர்' என்ற திருந்தா மூலம், 'நிர', 'நிரவு', 'நிரை', 'நிறை' என்ற பொருட் டொடர்புடைய சொற்களில் வந்துளது காண்க. 'நிரம்பு' என்ற தமிழ்ச் சொல்லிற்குப் பதிலாகத், தெலுங்கில், 'நிண்டு' என்ற சொல் வரும். ஆனால், அம்மொழிப் பிற வினைச் சொல்லாகிய 'நிம்பு', 'நிரப்பு' என்ற தமிழ்ச்சொல் லோடு நெருங்கிய தொடர்புடைத்தாதல் காண்க. 'ம்பு', 'ப்பு' என்ற சொல்லாக்கங்களைப் பெற்ற பெயர்ச் சொல் லிற்கு எடுத்துக்காட்டு: 'இரும்பு', பெயர்; 'இருப்பு', பெயரடை; ('இருப்புக் கோல்'). 'இரும்பு', தெலுங்கில் 'இனுமு' என மெலியும். இச்சொல்லின், அம்மொழிப் பெய ரடை வடிவம் 'இனுப' என்பதாம். இச்சொல்லாக்கவுரு பின் தொன்மை வடிவினைக், கன்னடம் விடாமற் பெற் றுளது; அது, 'ப'காரத்தை, 'வ'கரமாக மாற்றி, மூக்கினம் இணைக்காமலே மேற்கொள்கிறது. பாம்பைக் குறிக்கும் சொல் கன்னடத்தில் 'ஹாவு' என்பதாம்; உண்மையில், இது 'பாவு' என்பதே, 'பாபு' என்பதன், மூக்கினம் பெற்றுவந்த வடிவே, 'பாம்பு' என்ற தமிழ்ச்சொல். இச்சொல் பெய ரடையாக வருங்கால் 'பாப்பு' என வருதல் காண்க; ('பாப்புக் கொடி' = அரவக் கொடி.) தெலுங்கு இச்சொல்லை மேலும் திரித்துளது. இப்பொருள் குறிக்கும் அம்மொழிச் சொல் 'பாமு' என்பதாம். காட்டிய இவ்வெடுத்துக் காட்டுக்கள், ஈண்டு நம் ஆராய்ச்சிக்குட்பட்ட சொல்லாக்க வுருபு, படிப்படியாக எவ்வாறு ஒலிநயமுடையதாக மாற்றப் பட்டது என்பதை நன்கு விளக்குகின்றன.

பிறவினைச் சொல்லாக்கவுருபாக, தமிழ், 'ப்பு' என் பதை மேற்கொள்ளுமிடங்களிலெல்லாம், தெலுங்கு, 'பு'

அல்லது 'ம்பு' என்பதை மேற்கொள்ளும் என்பது முன்னரே கூறப்பட்டுளது; அவ்விதியோடு, தமிழ், 'க்கு,' 'த்து' என்ற ஏனைய சொல்லாக்கவுருபுகளை மேற்கொள்ளுமிடங்களிலும், தெலுங்கு, 'பு' என்பதையே மேற்கொள்ளுமென்பதையும் கூறிக்கொள்ளுதல் வேண்டும். கீழேவரும் தமிழ், தெலுங்கு வினையெச்சங்களை ஒப்பிடுக. தமிழ் 'மேய்க்க', தெலுங்கில் 'மேப' எனவும், தமிழ் 'திருந்த', தெலுங்கில் 'திலுப' எனவும் ஆம். தமிழில் 'க்கு' எனவும், தெலுங்கில் 'பு' எனவும் வரும் இச்சொல்லாக்கத்தின் முன், 'இ'கரவுயிர் இணையின், இச்சொல்லாக்கம், தெலுங்கில் 'ம்பு' அல்லது 'ன்சு' என மாறும் 'ஒப்புவிக்க' என்ற தமிழ்ச்சொல், தெலுங்கில் 'ஒப்பகி-ம்ப' அல்லது 'ஒப்பகி-ன்ச' என வரும்.

ஈண்டுக்கூறிய விளக்கங்கள் பலவற்றாலும், பிறவினைப் பொருள்படவரும் வினைச்சொற்களுக்கும், பெயரடையாக வரும் பெயர்ச்சொற்களுக்குமிடையே, பொதுவான சில பண்புகள் இருப்பனவாகவே பண்டைத்தமிழர் எண்ணியிருத்தல் வேண்டும் என்பது உணரலாகும். அவை பெற்றிருக்கும் அப் பொதுப்பண்பாவது நிலைபெயர்ப்பண்பேயாம். பெயர்ச்சொற்கள், பெயரடைகளாக ஆளப்பட்டுழி, பெயரடையாக வந்த அப்பெயர்ச்சொல்லின் பண்பும், தொழிலும் நிலைபெயர்ந்து, அப்பெயர்ச்சொல்லின் பின் வரும், அதுகொண்டுமுடியும் பெயர்ச்சொற்கண் சென்றடைதல் காண்க. இவ்வியல்பு, பிறவினைச்சொல்லின் தொழில், நிலைபெயர்ந்து அப்பிறவினைச்சொல்லைக்கொண்டு முடிய வரும் இரண்டாம் வேற்றுமையேற்ற பெயர்ச்சொற்கண் சென்றடைதலோடு ஒத்திருத்தல் காண்க.

சொல்லாக்கங்களாக வரும் உருபுகள் பலவும், பொருள் நெறியாலோ, மேற்கொள்ளப்படும் காரணத்தாலோ, இணையும் இயல்பாலோ, இரட்டித்து வல்லொலியவாக்கப்பெறும் முறையாலோ மாறுபடுவதில்லை யென்பது தெளிவாம். குறிப்பிட்ட ஒரு பெயர் அல்லது வினைச்சொல்லின்பின், சொல்லாக்கவுருபாக, 'க்', 'ச்', 'ட்', 'த்', 'ப்' என்ற இம்மெல்லொலி வல்லினமெய்களுள், எதை

இணைப்பது என்பதை, ஒலிநயம் ஒன்றே முடிவு செய்கிறது எனத் தோன்றுகிறது. தன்வினைச்சொல்லினின்றும் மாறுபட்ட, பிறவினை அல்லது செயப்படுபொருள் குன்றுவினைச்சொற்பொருளின் ஆற்றலை எடுத்துக் காட்டுவதற்காக, அச்சொல்லாக்கவுருபுகளின் மொழிமுதல் மெய்யெழுத்து இரட்டித்து வல்லொலியதாக மாறும் அவ்வியல்பு ஒன்றில் மட்டுமே, இலக்கணமுறை நிலவுவதாகத் தோன்றுகிறது.

மேலே கூறிய முடிபுகளாலும், எடுத்துக்காட்டுக்களாலும், திராவிடப் பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும், மேற்கூறிய அசைகளுள், யாதேனும் ஒன்றை ஈற்றசையாக் கொண்டு முடிந்தவழி, அச்சொல்லின் முற் பகுதியிலேயே, அச் சொல்லின் மூலம் உளது போலும் என்று கோடற்குரிய காரணங்கள் உள என முடிவு செய்தல் கூடும். 'கு', 'ங்கு', 'க்கு'; 'சு', 'ச்சு'; 'டு' 'ண்டு', 'ட்டு'; 'து', 'ந்து', 'த்து'; 'பு', 'ம்பு', 'பு', 'ப்பு'; 'மு', 'வு' என்ற இவ் வீற்று அசைகளை, வெறும் சொல்லாக்க இணைகள் என நீக்கி விடுதல் கூடும். ஆராய்ந்து காணின், வேர்ச்சொற்களோடிணையும் சொல்லாக்கவுருபுகள் குறித்த இம்முடிபுகள், தொன்மை வாய்ந்தன - தனிப்பிறப்புடையன - என இன்றுவரை கருதப்பட்ட பெரும்பாலான பெயர்ச்சொற்களின் பிறப்பும், இயல்பும் குறித்து, எதிர்பாரா விளக்கங்களை வெளியிடுகின்றன. தொன்மை வாய்ந்தன - தனிச்சிறப்புடையன - என்று கருதப்பட்ட பெரும்பாலான அப் பெயர்ச்சொற்கள், மேற்கூறிய ஈற்றசைகளை நீக்கி நோக்கியவழி, இன்றும் வழக்கத்தில் உள்ள, ஒரு சில வினைமூலங்களினின்றே தோன்றியனவாகவோ, அல்லது, அவற்றோடு தொடர்புடையவாகவோ காணப்படும். இம் முடிவிற்கு எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் தமிழ்ச் சொற்களை மேற்கொள்கின்றேன்: 'கொம்பு'; 'வேம்பு'; 'வம்பு'; 'பாம்பு'. இச்சொற்களின் ஈற்றில் வரும் 'ம்பு' என்ற அச் சொல்லாக்க வுருபை நீக்கியவழி, அவை, எந்த வினைச்சொற்களினின்றும் தோன்றினவோ, அந்த வினைச்சொற்கள் தெள்ளெனத்

தெளிவாகும்: 'கொம்பு', 'கொய்' (=கொய்தல்) என்பதி னின்றும், 'வேம்பு', 'வேய்' (=நிழல் செய்தல்: வேம்பின் நிழல் சிறந்து பாராட்டப் பெறுவதும் உண்டு) என்பதி னின்றும், 'வம்பு' 'வை' அல்லது 'வய்' (=திட்டுதல், 'பய்ய' என்ற கன்னடச் சொல்லோடொத்தது) என்பதி னின்றும், 'பாம்பு', 'பாய்' (=பாய்தல்) என்பதினின்றும் தோன்றின என்பது புலனும். ஈண்டுப்பெற்ற இவ் வினை மூலங்கள், 'ய'கர ஈறாக முடிந்துளது. இந்த 'ய'கரமும் மூலத்தைச் சேர்ந்ததன்று; ஒலிநயம் கருதி வந்ததே; அம் மூலங்களோடிணைய வரும் சொல்லாக்க அசைகளின் மொழி முதல் மெய்களின் முன், அது மறைந்தே போம். பிற சொல்லாக்க அசைகளைக்கொண்டு முடியும் பெயர்ச்சொற் கள் குறித்துக்கொண்ட முடிபுகளும், இதுபோன்றே, சில உண்மைகளை வெளியிட வல்லவாம், 'மருந்து' என்ற சொல், மணம் வீசு எனப் பொருள்படும் 'மரு' என்ற வினையிலிருந்தும், 'கிழங்கு' என்ற சொல், கீழ்ப்படுத்து எனப் பொருள்படும் 'கீழ்' என்ற வினையிலிருந்தும் தோன்றியவாதல் காண்க. 'கீழ்' என்ற தமிழ்ச் சொல்லில், 'இ'கரம் நெடிலாக இருப்பினும், அப்பொருள் குறிக்கும் 'கிந்த' என்ற தெலுங்குச் சொல்லில், குறிலாகவே உளது.

## ரு. வேர்ச்சொல்லின் ஈற்றுமெய் இரட்டல்

மெய்யெழுத்துக்களை இரட்டிக்கும் முறையிலும், நோக்கத்திலும் திராவிட மொழிகளுக்கும், இந்தோ-ஐரோப்பிய மொழிகளுக்கும் இடையே வேற்றுமையிருப் பினும், இலக்கண முடிவுகளை வெளிப்படுத்தும் வாயிலாக, மெய்யெழுத்துக்களை யிரட்டிக்கும் முறையினை, இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் போன்றே, திராவிட மொழி களும் ஏற்றுக்கொள்கின்றன. இவ்வாறு, இரட்டிக்கப் படுதல், தமிழ்மொழியிலேயே மிகமிகத் தெளிவாக இடம் பெற்றுளது. தமிழில், மெய்யெழுத்து இரட்டிக்கப் பெறின், மெல்லொலி வல்லெழுத்து, வல்லொலி வல்லெழுத் தாக மாறும் என்பதையும் ஈண்டு நினைவில் வைத்தல்

வேண்டும். தமிழ்வேர்ச்சொற்களின் ஈற்றுமெய், கீழ் வரும் காரணங்களுக்காக இரட்டிக்கப்பெறும்: 1. ஒரு பெயரைப் பெயரடையாக மாற்ற-அதாவது, ஒருபெயரைப் பிறிதொரு பெயரைச் சிறப்பிக்கவரும் பெயராக மாற்ற; ஒரு பெயரை, ஆறும் வேற்றுமைப் பொருளேற்ற பெயராக ஆக்க; 'மாடு' என்பதினின்றும், 'மாட்டு' என்பது பிறத்தல் காண்க: 'மாட்டுத் தோல்', 2. தன்வினைச் சொற்களைப் பிற வினைச் சொல்லாக மாற்ற: 'ஓடு' - 'ஓட்டு'. 3. இறந்த காலம் காட்ட; 'தகு' - 'தக்க'. 4. வினைமூலங்களினின்றும், தொழிற் பெயர்களைத் தோற்றுவிக்க 'எழுது' - 'எழுத்து', ("பெயர்", "வினை" என்ற தலைப்புக்களின் கீழ், இவை, மேலும் பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்பட்டுள்ளன; ஆண்டுக் காண்க.) இந்தோ - ஐரோப்பிய மொழிகள், இறந்த காலத்தைக் குறிக்க, சொல்லின் முதலசையை இரட்டிக்கும் என்றால், திராவிட மொழிகளில், அது, சொல் லின் ஈற்றெழுத்தை இரட்டிப்பதனாலேயே பெறப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாம். மேலும், திபேத்தியர்கள், ஈற்று மெய்யெழுத்தை இரட்டிப்பதால், ஒரு பெயர்ச் சொல்லை, வினைச்சொல்லாக மாற்றுவர் என்றால், திராவிட மொழிகள், அவ்வாறு, ஈற்றுமெய்யெழுத்தை இரட்டிப்ப தால், வினையைப் பெயராக மாற்றுகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாம். செயலாலும், பயனாலும், பொருள் நிலைமாற்றத்தை வெளியிட இதுவே இயற்கை வழியாம் என்பதே திராவிட இரட்டிப்பின் காரணமாகத் தோன்று கிறது. எப்படி மொழியிலும், மெய்யெழுத்திரட்டுதல், காரணம் கருதியதாகவும், விரும்பி மேற்கொண்டதாகவும் உளது.

இதுகாறும் கூறியவாற்றால், பல அசைகளான் இயன்ற திராவிட வேர்ச்சொற்களெல்லாம், ஓரசையான் இயன் றனவே என்பதும், அவை ஒலிநயம் குறித்து வந்த இணைப்புகளாலும், சொல்லாக்கவுருபுகளின் சேர்க்கை யாலுமே நீளமுடையவாக்கப்பட்டன என்பதும் தெளிவா யின. ஈரசையான் இயன்ற மிகச்சிறப்பான வேர்ச்சொற்

கள் சிலவும் உள. அவற்றின் இரண்டாம் அசையின் பிறப்பியல்பு யாதாயினும், அவை, வேர்ச்சொல்லோடு, பிரிக்க இயலாவாறு இணைந்து, பொருள் வேறுபடுத்தும் இயல்பினவாம். அவற்றின் இயல்பும், பயனும் குறித்து, இனி ஆராய்வாம்.

## சா. சிறப்பளிக்கும் சொல்லுருபுகள்

ஈண்டு நாம் ஆராய எடுத்துக்கொண்ட அடிச் சொற்களின் இனத்தைச் சேர்ந்த பெயரும் வினையும், பொதுப் பொருளுணர்த்தும் ஓரசையாலாய மூலம் அல்லது பகுதி ஒன்றையும், அம் மூலம் உணர்த்தும் பொதுப்பொருளை, ஒரு வகையான் வேறுபடுத்துவதும், தொடக்கத்தே சொல்லாக்கவுருபாக வழங்கியதும், மறைந்து வழக்கற்றுப்போன ஒரு மூலம் அல்லது இடைச்சொல்லின் ஒரு பகுதியாம் எனக் கருதப்படுவதுமாகிய இரண்டாமசை யொன்றையும் பெற்றுள்ளன. அவ்விரண்டாம் அசை, சில இடங்களில், அச்சொல்லைத் தன் பொருளோடு, வேறு பொருள்களையும் குறிக்குமாறு விரிவாக்குவதும், சில இடங்களில், அச் சொல், பிறவற்றைக் குறிக்காமல், ஒரு பொருளையே குறிக்குமாறு வரையறுப்பதுமாய இரு தொழில்களை மேற்கொளக் காண்கிறோம். ஆனால், சில இடங்களில், அச் சொற்கு இனமான பொருளுணர்த்தும் பிற சொற்கள் இன்மையால், இவ்விரண்டாம் அசையின் ஆற்றலை யுணர்தல், இப்போது இயலுவதில்லை. இவ்வாறு அவ்விரண்டாம் அசை, அச் சொற்பொருளை வேறுபடுத்த அதாவது, சிறப்பிக்க வருதலால், அவ்விசையினைச் "சிறப்பளிக்கும் சொல்லுருபு" என அழைக்கின்றேன். சிறப்பளிக்கும் இச் சொல்லுருபுகள், ஒரு சில இடங்களில், என், பெரும்பாலான இடங்களிலும், தொடக்கத்தில், தொழிற்பெயர் விகுதிகளாகவே வழங்கின என்பது உறுதியாம். இக் கட்டுரையின் ஈற்றில் காட்டியுள்ள, ஈற்றுவிகுதி என்ற வரிசையில் வந்துள்ள, பெயர்ச்சொற்களையும், வினைச் சொற்களையும் ஒப்புநோக்கின், இவ்வுண்மை புலப்படும்.

பொருட் சிறப்பளிக்கும் இவ்வுருபுகளை மேற்கொள்வதற்குரிய விதியும், முறையும், செமிடிக் மொழியின் சிறப்பியல்புகளோடு, ஓரளவு ஒத்துள்ளன. ஆகவே, அவ்வியல்பினை ஈண்டு அறிதலும் நன்றும். செமிடிக் இனமொழிகள் தனித்திருந்த காலம் தொடங்கி வழங்கிவரும் அம்மொழிச் சொற்களை ஆராயின், அவற்றின் ஒவ்வொரு சொல்மூலமும், மூன்றுமெய்களான் இயன்ற, இரண்டசைகளைக் கொண்டிருப்பது புலனும். செமிடிக் மொழியில் காணப்படும் ஈரெழுத்தானியன்ற வேர்ச்சொற்களை, இந்தோ-ஐரோப்பிய மொழியிற் காணப்படும், அவற்றோடு தொடர்புடைய வேர்ச்சொற்களோடு, குறிப்பாக, சமஸ்கிருத மொழியிற் காணப்படும் அவ்வின வேர்ச்சொற்களோடு ஒப்பிட்டு நோக்கின், நனிமிகப் பழமையும், எளிமையும் நிறைந்த வேர்ச்சொல்லமைப்பு முறையொன்று வெளியாகும். ஹீப்ரு மொழிவேர்ச்சொற்களின் முதலசை, சமஸ்கிருதமொழி முதலசையோடொத்திருப்ப, அவற்றின் இரண்டாமசை, இந்தோ - ஐரோப்பிய இனத்தைச் சேர்ந்த மொழிகளுள், எந்த மொழியின் வேர்ச்சொல்லின் இரண்டாமசையோடும், ஒத்திருப்பதில்லை என்பது ஐயமற உறுதி செய்யப்பட்டுளது. இரண்டாமசை, முதலசையோடு, இன்றியமையாச் சிறப்புத் தொடர்பு எதையும் கொண்டிருக்கவில்லை யென்பதும், முதலசை ஒவ்வொன்றும், ஒத்த இயல்புடையவாகவும், அவற்றின் இரண்டாமசைகள், சிறிதும் ஒப்புடையவாகாது, தொடர்ந்து வேறுபடும் இயல்புடைய பல்வேறு வகையான வேர்ச்சொற்கள் உள என்பதும் உணரப்படும். ஆகவே,இவ்வாறு வருவனவற்றுள், இரண்டு மெய்களையும், ஒலிநயம் கருதிவந்த ஒருயிரையும் கொண்ட முதலசையே, அச் சொல்லின், பொதுப்பொருட்டன்மை குறிக்கும் உண்மை மூலமாம் என்பதும், வழக்கிறந்துபோன துணைவினை ஒன்றின் ஒரு பகுதியாகிய இரண்டாமசை, அச்சொற்கு முதலசை அளிக்கும் பொதுப்பொருட்டன்மையை நீக்கிச், சிறப்பளிக்கும் தனிப்பொருள் அளிக்க, அம்முதலசையோடு சேர்க்கப்பட்டு, பின்னர், பிரிக்க

இயலாவாறு, இரண்டற இணைக்கப்பட்டு விட்டது என்பதும் உய்த்துணரப்படும். பொதுவாக, இதுவே உண்மையாம் எனக் கருதப்பட்ட இக்கருத்துப்படி, ஹீப்ரூ மொழி வேர்ச்சொற்களைத் தனித்தியங்கும் அணுக்களைப்போன்று, தனித்தனியாக அமைந்தனவாகக் கொள்ளாது, பொதுவாக ஒன்றேபோல் தோன்றும் தோற்றத்தினையும், குறிப்பிடத்தக்க சிறந்த வேறுபாட்டினையும் காட்டும் வகையில் கூட்டம் கூட்டமாகக், குவியல் குவியல்களாக அமைந்தனவாகவே கொள்ளுதல் வேண்டும். அவ் வேர்ச்சொற்களுக்கிடையே நிலவும் இனஒற்றுமை, சொல்லின் உண்மை மூலமாகிய முதலசையின்கண்ணும், தனித்தன்மை அல்லது சிறப்புப் பொருட்டன்மை, பொருட் சிறப்பளிக்கும் இரண்டாமசையின்கண்ணும் நிற்கும்.

சில இடங்களில், செமிடிக் மொழியின் இரண்டாம் அசையும், முதல் அசையைப்போன்றே, தன்னொடொப்புடைய பகுதிகளை, இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் பெற்றுளது என்பது உண்மையே. ஆனால், முற்கூறிய அச்சிறப்பு விதியே, ஹீப்ரூ மொழியின் உரிமைப் பண்பாம் என்று கூறுமளவு, அது, அம்மொழி வேர்ச்சொற்களிடையே மிகப் பயின்ற இடம் பெற்றுளது. பொதுவாகப், பங்கிடு, பிளந்திடு, வேறுபடுத்து என்ற பொருள் தரும் ஹீப்ரூமொழியின் வேர்ச்சொற் கூட்டம் ஒன்று உளது. அவற்றுள் சில: 'பாலாஹ்', 'பாலஹ்', 'பாலக்', 'பாலா', பாலல்; மொழிகளுக்கிடையே, 'ல'கரம், 'ர'கரமாக மாறும் என்பதைக் கொண்டு நோக்கின், 'பாரஷ்', 'பாரஸ்', 'பெரஸ்' என்பனவும் அடங்கும். ஈண்டுக்காட்டிய எல்லாச் சொற்களுள்ளும் முதலசையாகிய 'பால்' அல்லது 'பர்' என்பதோ, அல்லது, இவற்றிற் காணப்படும் உயிர், வேர்ச்சொல்லைச்சார்ந்ததாகாமல், இலக்கண அமைதிக்காகவே வந்துளது ஆதலின், அதை நீக்கினல் பெறலாகும் 'ப்-ல்' அல்லது 'ப்-ர்' என்பதோ, பிரிவு, பிரித்தல் என்ற பொதுப்பொருளையே உணர்த்துகிறது என்பதிலும், சில இடங்களில் ஈரெழுத்தானியன்ற, அம் முதலசையின் ஈற்றெழுத்து இரட்டிப்பதால் வருவதாய

அச் சொல்லின் இரண்டாமசை, அப்பிரிவு எவ்வெவ் வகையில் இடம் பெறலாயிற்று என்பதைக் குறிக்க வருகிறது என்பதிலும் ஐயம் எழல் இல்லை. இரண்டாமசை, இவ்வாறு, குறிப்பிட்ட ஒரு பொருளே குறித்து வருவதாதலின், இவ்வினமொழி எல்லாவற்றிலும் ஒரு தன்மையவாகக் காணப்படும் முதலசையையே, பிற இனமொழிகளில் காணப்படும், தன்னோடொத்தனவற்றோடு வைத்து ஒப்புநோக்கத் தக்கதாம். இவ்வகையில், 'ப-ர்', 'ப-ல்' என்ற ஹீப்ரு மொழி வேர்ச்சொற்கள், பங்கீடுசெய் எனப் பொருள்படுவனவாய 'பொர்-ஓ' என்ற கிரீக் வேர்ச்சொல்லோடும், 'பர்-ஸ்' அல்லது, 'பர்-திஸ்' என்ற இலத்தீன் வேர்ச்சொல்லோடும், 'ப்ஹல்' என்ற சமஸ்கிருத வேர்ச்சொல்லோடும் ஒத்திருப்பதை மட்டுமேயல்லால், திராவிடமொழி வேர்ச்சொற்கள் சிலவற்றோடு ஒத்திருப்பதையும் காணல்கூடும். 'ப-ர்', 'ப-ல்' என்ற ஹீப்ரு சொற்களைப் பங்கிடு எனப் பொருள்படும் 'பிரி', ஒன்றன்பகுதி எனப் பொருள்படும் 'பால்', இரண்டாக்கு எனப் பொருள்படும் 'பிள' அல்லது 'போழ்', பங்கிடு எனப் பொருள்படும் 'பகு', 'பகிர்' என்ற தமிழ்ச் சொற்களோடு ஒப்பிடுக. ("சொல்லின வொற்றுமை" என்ற பகுதியைக் காண்க.)

திராவிடமொழி வேர்ச்சொல்லமைப்பின்கண் நம் கருத்தைச் செலுத்தியவழி, அது, மேலே விளக்கிய செமிடிக்மொழி வேர்ச்சொல்லமைப்போடு கொண்டுள்ள ஒப்புமைகள், நமக்கு நன்கு புலப்படும். ஒன்றற்கொன்று நெருங்கிய உறவுடைய வேர்ச்சொற்களின் கூட்டம் பலவற்றை இம்மொழிகள் பெற்றிருப்பதைக் காணலாம். அவ்வேர்ச்சொற்களில் வரும் எல்லா முதலசைகளும், முழுதும், அல்லது அவற்றின் பெரும்பகுதி, ஓரியல்பேயுடையவாக, அவற்றின் இரண்டாம் அசைகள் ஒவ்வொன்றும் வேறுபட்டுநிற்க, அவ்வேறுபாட்டின் விளைவாகவே, அவ்வினச்சொற்களின் பொருள் வேறுபாடு, பெரிதும் விளங்கித்தோன்றும். ஹீப்ருமொழியில் காணப்படுவதைப் போன்றே, பொதுப்பொருட்டன்மை வாய்ந்த மூல அசை

யும், பொருள்வேறுபடுக்கும் சிறப்பசையும், பிரித்துக் காண இயலாத - பிரிவினையற்ற - ஒருசொல் என்றுகருது மளவு ஒன்றுசேர்க்கப்பட்டிருத்தலையும் காணலாம். தொடக்கத்தில், மூலத்தோடிணையவந்த சொல்லாக்க விகுதி அல்லது பின் இணைவாம் தகுதிவாய்ந்த அச்சிறப் பசைகள், படிப்படியாக, அம்மூலத்தின் இன்றியமையா உறுப்பாக மாறிவிட்டன. இவ்விரண்டும் இணைய எழுந்த மூலங்களே, சொற்களின் உண்மை வேர்ச்சொற்களாக, உண்மையான சொல்லாக்கவுருபுகளும், சாரியை, சந்தி போலும் பிறசொல்லுருபுகளும், அவற்றோடு வந்து இணையலாயின.

இவ் வேர்ச்சொல்லமைப்புமுறை, திராவிட இன மொழிகள் அனைத்திலும் இடம்பெற்றுளது என்றாலும், அதன் இயல்பும், தன்மையும், தமிழ்மொழி ஒன்றிலேயே, சிறந்து காணப்படுகின்றன. தமிழில் காணப்படும் இத் தகைய தொடர்புடைய வேர்ச்சொற்களின் கூட்டங்கள் பலவற்றுள், உயிரெழுத்து வரிசையில் முதற்கண் நிற்கும் அகரத்தை மொழிமுதலாகக்கொண்டு வரும் இரண்டு குழுவினைச்சேர்ந்த சொற்களை மட்டும், விளக்கத்திற்காக ஈண்டு மேற்கொண்டேன்.

1. 'அட்' என்ற முதலசையினின்றும் எழுந்த வேர்ச் சொற்கள் :—

| | |
|---|---|
| 'அடு' | = அருகில்வா ; சோறாக்கு ; கொல்; ஒன்றுபடு; உரிமையாக்கு. |
| 'அடங்கு' | = (தன்வினை) ஒன்றன் உள்ளே சேர்ந்திரு. |
| 'அடக்கு' | = (பிறவினை) உள்ளே சேர்த்து வை. |
| 'அடி' | = உள்ளே செலுத்து; பொதுவாக அடி கொடு; பெயராக வந்த பெயரடை; ஒரு பொருளின் கீழ்ப்பாகம்; அடிச் சுவடு; செருப்பின் அடிப்பகுதி. |
| 'அடை' | = பெறு; உள்ளே கொண்டுசேர்; சுற்றி வேலியிடு. |

'அடைசு' =நெருக்கமாக அடை; திணி.

'அடர்' =நெருக்கமாக ஒன்று சேர்; நெருக்கமாகு; போரிற்சேர்.

'அடுக்கு' =ஒன்றின்மேல் ஒன்றாக வை; குவித்து வை; இவ்வினைச் சொல்லும், 'அடக்கு' என்பதும் உண்மையில், 'அடுக்', 'அடக்' என்பனவே; ஈற்றில் வரும் 'க்'கரமெய், தமிழில் 'உ'யிர்த் துணை பெற்றே ஒலிக்கும். அதைப் பெறுவதோடு, அவ்வுயிரைப் பெறுதற்கு முன்னர், அக்'க'கரம் இரட்டிக் கவும்பெறும். அதனாலேயே, 'அடுக்கு', 'அடக்கு' என்றாயின.

'அண்டு' =(தெலுங்கில் 'அண்டு') நெருங்கிநில். இது, இவ்வரிசையில் முதற்கண் வந்த 'அடு' என்பதோடு ஒற்றுமை உடையதாய், இடையில் வந்த மெல்லினத்தால் ஒலிநயமுடையதாக்கப் பெற்றது. இதோடு தொடர்புடைய 'அண்' என்ற வினைச்சொல்லையும் ஒப்பிட்டுக் காண்க.

இவ் வேர்ச்சொற்கள் அனைத்தும், ஒருவகை இன வொற்றுமையால் மூடப்பெற்றுள்ளன என்பது தெளிவாம். இவை ஒவ்வொன்றும், பொருள் வேறுபடுக்கும் சிறப்பசை யாகிய இரண்டாம் அசையின் துணையால், குறிப்பிட்ட ஓரளவான அண்மைப் பொருளையே உணர்த்துவனவாக, முதல் அல்லது மூல அசையான், அண்மை எனும் பொதுப் பொருளைத் தெளிவாகப் பெற்றிருத்தல் அறிக.

2. 'அண்' என்ற முதலசையினின்றும் எழுந்த வேர்ச் சொற்கள் :—

'அணு', 'அணுகு' =கிட்டே நெருங்கு; தொடு.

'அணி' =மேலே போட்டுக்கொள்; அணிந்துகொள்.

| | |
|---|---|
| 'அணை' | = தொடர்புபடுத்து; தழுவு; பெயர் :—அணைக்கட்டு. |
| 'அணவு' | = ஒட்டிக்கொள். |
| 'அண்ணு' | = பலமுறை அணுகு; ஒன்றைச் சார்ந்துநில். ஆதாரவாளன் அல்லது முன் பிறந்தோன் எனப் பொருள்படும் 'அண்ணல்' அல்லது 'அண்ணன்' என்பது, இவ் வினையினின்றே தோன்றியதாம். இத்தோற்றம் செய்யுள் வழக்காம் என்ற பெருமை இதற்குண்டு. இச்சொல்லின் நேரான தெலுங்கு வினை 'அனுத'. |
| 'அண்மு' | = அருகில் இரு. |

'அண்' என்ற இம் முதலசை யுணர்த்தும் பொதுப் பொருள், உண்மையில் தொடர்பு என்பதேயாம். அடுத்தடுத்திருத்தல் அல்லது அண்மை நிலைகளினின்றும் உண்மையான தொடர்பு வேறுபாடுடையதே ஆதலின், ஈண்டுக் காட்டப்பெற்ற இக்குழுவைச் சார்ந்த சொற்கள், முன்னர்க்காட்டிய குழுவைச் சார்ந்த சொற்களினின்றும் வேறுபாடுடையனவேயாம். 'ஆணி' என்ற சொல், இவ் வகைச் சொல்லினின்றே தோன்றியிருத்தல் வேண்டும். அச்சில் கோக்கப்படும் கடையாணி எனப் பொருள்படும் சமஸ்கிருதச் சொல்லாகிய 'அணி' அல்லது 'ஆணி' என்ற சொல்லின் பிறப்பிடம் இதுவேயாம் என்பதும் பொருந்தும்.

ஈண்டு எடுத்துக்காட்டிய வினைச்சொற்களின் இரண்டாமசைகள், வெறும் ஒலிநயம் ஒன்றே கருதி இணைக்கப் பட்டன அல்ல என்பதையும், அச்சொற்களின் பொருளை ஓரளவு விரிவுபடுத்தவோ, அல்லது குறிப்பிட்ட ஒரு பொருளையே குறிக்குமாறு வரையறுக்கவோ, அல்லது,

யாதோ ஒருவகையில் சிறப்புடையதாக மாற்றவோ, ஈற்றில் இணைக்கப்பட்டுள்ளன என்பதையும் மேலே கூறிய விளக்கங்கள் உறுதி செய்கின்றன. ‘அ’, ‘இ’, ‘உ’, ‘எ’, ‘ஐ’ என்ற உயிரெழுத்துக்கள், ஓரசைச் சொற்களின் ஈற்றில், சில இடங்களில், ஒலிநயம் கருதி இணைக்கப் பெறும் என்பது, இவ்வதிகாரத்தின் முற்பகுதியொன்றில், காட்டப்பட்டுளது. என்றாலும், இவ்வொரு பயனுக்காக மட்டுமே, அவ்வுயிரெழுத்துக்கள் இணைக்கப்பெறுதல் இல்லை என்பது எவரும் அறிந்த உண்மையாம். அவை, ஒலிநயம் ஒன்றே கருதி வரும் இடங்களில், வேறு உயிரெழுத்துக்களாக மாறுகின்றன என்பதும், அவை, பொருள் வேறுபடுக்கும் சிறப்புத் தொழில் கருதி வருமிடங்களில், அவ்வாறு மாறுதலின்றித், தனித்தியங்க வல்ல, தம் இயல்பினை மிகவும் உறுதியாகப் பெற்றுள்ளன என்பதும் அறிந்துகொள்ளவேண்டியது மிகவும் இன்றியமையாததாம். இன்று ஒருசில இடங்களில் பெற்று, ஒருசில இடங்களில் இழந்துபோன, பொருள்வேறுபடுக்கும் சிறப்பியல்பினை, அவை அனைத்தும் தொடக்கத்தே பெரும்பாலும் பெற்றே இருந்தன.

பொருள் வேறுபடுக்கும் சிறப்புருபுகளாக, உயிரெழுத்துக்கள் ஆளப்படுவதை விளக்க, இதுகாறும் எடுத்துக் காட்டிய சான்றுகளே சாலும். மெய்யெழுத்துக்களைச், சிறப்பாக, ‘ல’கர, ‘ர’கரங்களை ஈறாகக்கொண்டு வரும் அசைகளும், இப்பயன் குறித்துப் பெரிதும் ஆளப்படும். இவ்வகையைச் சேர்ந்த உருபுகள் ஆளப்படுவதை விளக்க, சில எடுத்துக் காட்டுக்கள் தருதல் நலமாம். “வேர்ச்சொற்களோடிணையும் சொல்லாக்கவுருபுகள்” என்ற அதிகாரத்திற்கண்டவாறு, இவ்வசைகளனைத்தும், தொடக்கத்தில், பொருள் வேறுபடுக்கும் சிறப்பியல்போடு கூடிய, தொழிற்பெயர்ச் சொல்லாக்க உருபுகளாகவே காணப்படுகின்றன. இவ்வாறு ஆக்கப்பட்ட தொழிற்பெயர்கள் பலவும், மறுவலும் வினைச்சொல்லடிகளாக மாறிவிடுகின்றன. ‘ல’கர, ‘ர’கரங்கள் ஈற்றெழுத்துக்களாக வரும் கீழ்க்காணும்

எடுத்துக்காட்டுக்கள் எல்லாம், தமிழினின்றும் பெறப் பட்டனவாம். இவ்வினத்தைச் சேர்ந்த பிறமொழிகள், இவ்வீற்று மெய்களையடுத்து, 'உ'கரவுயிரை இணைக்கின்றன. இவ்வாறு, ஒலிநயம் கருதி உகரவுயிர் இணைவதை, வல்லின 'ற'கர ஈற்றுச் சொற்களிடத்தும், அவ்வல்லின 'ற'கரம் ஒழிந்த ஏனைய வல்லெழுத்துக்களே யல்லாமல், மெல்லின, இடையின மெய்களுள்ளும் யாதேனும் ஒரு மெய்யெழுத்தை ஈறாகக்கொண்ட சொற்களிடத்தும், தமிழ் மேற்கொள்கிறது.

ஒவ்வொரு சொல்லும், இடத்திற்கேற்ப, வினைச் சொல்லாகவும், பெயர்ச் சொல்லாகவும் கொள்ளப்படுமாதலின், வினைகளையும், பெயர்களையும் வேறுவேறாகவே காட்டியுள்ளேன். கீழேவரும் சொற்களுள், வினையாக ஆளப் பட்டிருக்கும் சில, பெரும்பாலும் பெயராகவும் ஆளப்படும். அவ்வாறே, பெயராக ஆளப்பட்டிருக்கும் சில, பெரும் பாலும் வினையாகவும் ஆளப்படும். மற்றும் சில, பெயர் ஒன்றையே குறிப்பனவாகவும், சில, வினையொன்றையே குறிப்பனவாகவும் ஆளப்படும்.

| விகுதிகள் | வினைச்சொற்கள் | பெயர்ச்சொற்கள் |
|---|---|---|
| 'அர்' | 'வளர்' | 'சுடர்' |
| 'இர்' | 'துளிர்' | 'உதிர்' |
| 'உர்' | | 'றுதுரு' (தெலுங்கு) |
| 'அழ்' | 'புகழ்' | 'இதழ்' |
| 'இழ்' | 'மகிழ்' | 'அவிழ்' (உணவு) |
| 'அறு' | 'இடறு' | 'கிணறு' |
| 'இறு' | | 'ஞாயிறு' |
| 'அல்' | 'சுழல்' | 'ஈரல்' |
| 'இல்' | 'குயில்' (=ஒலிசெய்) | 'வெயில்' |
| 'உல்' | 'பகுலு' (தெலுங்கு) | |
| 'அள்' | 'துவள்' | 'திங்கள்' |
| 'இள்' | | 'மதிள்' |
| 'உள்' | 'உருள்' | 'இருள்' |

உதாரணம்மூலம் ஈண்டுக் காட்டப்பெற்ற, மெய்யீற்றுச் சிறப்பளிக்கும் சொல்லுருபுகள் பதின்மூன்றனுள், ஓர் உருபு மட்டுமே, உயிரிணைவிற்குப் பதிலாக, ஒரோவழி, ஆளப்படுவதாகத் தோன்றுகிறது. 'ஐ' என்பதற்குப் பதிலாக, 'அர்' என்பது வரக் காண்கிறோம். உட்கார் என்ற பொருள்தரும் தமிழ்ச் சொற்களாகிய 'அமர்', 'அமை' என்பன இரண்டும் ஓரியல்புடையவேயாம். தோன்றி வளர்தல் எனப் பொருள்படும் வினைச்சொல், தமிழில், 'வளர்' என்றும், கன்னடத்தில் 'பளெ' என்றும் வரும். தமிழில், இது 'வளை' என ஆம்.

சொல்லாக்க விகுதிகளாக, அல்லது, சிறப்பளிக்கும் சொல்லுருபுகளாக வரும் சொல்லுருபுகளுள், பெரும்பாலனவற்றின் உண்மைப் பொருள் யாது என்பதைக் காணல் இப்போது இயலவில்லை. ஆனால், இதன்பொருள் இதுவே என ஏறக்குறையத் துணிந்துகொள்ளத்தக்க சொல்லுருபுகள் இரண்டுள. ஒன்று, 'இல்.' இது பெயராக நின்று, இங்கே அல்லது வீடு எனும் பொருள்தரும். தமிழ், மலையாளங்களில், இடப்பொருளுணர்த்தும் வேற்றுமை உருபாகவும் வரும். பிறிதொன்று, 'உள்'. இது, வினையாகவும், பெயராகவும், இன்றும் வழங்கப்பெறும்; இது, பெயராயின், உள்ளிடம் என்றும், வினையாயின், இருத்தல், உள்ளேயிருத்தல் என்றும் பொருள்படும். இச் சொல்லுருபுகளின் ஆற்றலும், அவை இடவேற்றுமைப் பொருள் உணர்த்துவதும் கீழ்வரும் சொற்களான் புலனும். 'வாய்' என்ற மூலத்தினின்றும் தோன்றிய 'வாயில்' எனும் சொல், வழி அல்லது வீட்டினுள்நுழையும்வழி எனப் பொருள்படுதலும், வெப்பமாகு எனப் பொருள்படும் 'வெய்' என்ற மூலத்தினின்றும் தோன்றிய 'வெயில்' என்ற சொல், ஞாயிற்றின் வெப்பம், அல்லது வெப்பம்தங்கும்-இடம் எனப் பொருள்படுதலும் காண்க. ஒன்றுபடு எனப் பொருள்படும் 'பொரு' என்பதினின்றும் தோன்றி, செல்வம் என்ற பொருள் தரும் 'பொருள்' என்ற சொல்லையும், கிடைத்தற்கரிது அல்லது சிறந்தது எனப் பொருள்படும்

'அரு' என்பதினின்றும் தோன்றிய 'அருள்' என்ற சொல்லையும், இரவு எனப் பொருள்படும் 'இரா' என்ற சொல்லின் மூலமும், இருளாக்கு எனப் பொருள்படுவதுமாய 'இர்' என்பதினின்றும் தோன்றிய 'இருள்' என்ற சொல்லையும் இவ் வகையின்பால் சார்த்திக் கூறுவர் பேராசிரியர் குண்டர்ட்.

ஈண்டுக் கூறிய முறையினின்றும் முற்றிலும் வேறுபட்ட ஒருமுறையாற் பிறந்தனவும், திராவிடமொழிகளில் காணப்படுவனவும், காண்பதற்குக் கவர்ச்சியும், புதுமையும் நிறைந்தனவும் ஆகிய மற்றொருவகை வேர்ச்சொற் கூட்டத்தையும் ஈண்டு எடுத்துக்காட்ட விரும்புகின்றேன். குறிப்பிட்ட வேர்ச்சொற்கள், தனக்கு முன்னும் பின்னும், ஒவ்வோர் உயிரெழுத்தைப்பெற்ற தனி மெய்யெழுத்தைக் கொண்ட ஈரசையான் இயன்றன ஆகும். இவற்றில் வரும் மெய்யெழுத்தே, அச் சொல்லின் மூலாதார அடியாக, முன்னும் பின்னும்வரும் உயிரெழுத்துக்கள், சொல் உணர்த்த விரும்பும் பொருள் வேறுபாட்டிற்கேற்ப, மாறுபடும் இயல்புடையவாகக் காணப்படும். அழுத்து அல்லது பிழி என்ற பொருள்தரும் 'இடு' என்ற சொல்லையும், நெருக்கு என்ற பொருள் தரும் 'ஒடு' என்ற சொல்லையும், நொறுக்கித்தள்ளு என்ற பொருள் தரும் 'இடி' என்ற சொல்லையும், உள்ளே செலுத்து என்ற பொருள் தரும் 'அடி' என்ற சொல்லையும், இரு துண்டாக்கு என்ற பொருள் தரும், 'ஒடி' என்ற சொல்லையும், பல சிறு துண்டுகளாக்கு என்ற பொருள் தருவதும், 'ஒடை' என ஒலிக்கப்படுவதுமாய 'உடை' என்ற சொல்லையும் ஒருங்குவைத்து ஒப்பு நோக்கினல், முதல் நான்கு வேர்ச்சொற்களும், ஒன்றோடொன்று உறவுடைய ஒரே குழு அல்லது இனத்தைச் சேர்ந்தனவாம் என்றும், இறுதியிற்கூறிய இரண்டும், அவ்வாறே ஒன்றற்கொன்று உறவுடைய என்றும், இடையில் வரும் 'ட்'கர மெய்யெழுத்தை அடிப்படை மூலமாகக் கொண்டு, பொதுவாக ஒரே பொருள் உணர்த்தும் பொதுவியல்புடைத்தாதலை நோக்கின், கூறிய எல்லாச் சொற்

களுமே, அறிவிற்குப் புலனாகா, யாதோ ஒருவகை யுறவுடையவே என்றும் முடிவு கொள்வதைத் தள்ளமுடியாது.

மேலே குறிப்பிட்டவாறு, வகைவகையான வேர்ச்சொற்களின் கூட்டங்கள் வழங்குவது திராவிடமொழிகளில் மட்டும் காணக்கூடிய சிறப்பியல்பன்று. "ஒரே பொதுப்பொருள் உணர்த்துவனவும், (முதலிலோ, அல்லது ஈற்றிலோ, ஒன்று அல்லது இரண்டு எழுத்துக்களை) இணைப்பது ஒன்றினாலேயே தம்முள் வேறுபடுவனவுமாகிய, வகைவகையான வேர்ச்சொற்களின் கூட்டங்களைச் சமஸ்கிருதத்திலும், ஏனைய எலலா ஆரியமொழிகளிலும் நாம் காண்கிறோம்" என்று மாக்ஸ்மூலர் கூறுவர்: (சொற்பொழிவு: ii; பக்கம்: 313.) இதை விளக்க, "போ என்பதைக் குறிக்க, 'சர்' என்பதும், நகர்ந்துபோ என்பதைக் குறிக்க 'சர்ப்' என்பதையும், கூவி அழை என்பதைக் குறிக்க 'நத்' என்பதையும், மகிழ்ந்து ஆர்ப்பரி என்பதைக் குறிக்க 'நந்த்' என்பதையும், ஒன்றுசேர் என்பதைக் குறிக்க, 'யு' அல்லது 'யுஜ்' என்பதையும், பகைவிட்டு ஒன்றுபடுத்து என்பதை யுணர்த்த 'யௌட்' என்பதையும் அம்மொழிகளில் காண்கிறோம்," என்றும் கூறுவர். பிறிதோரிடத்தில், (சொற்பொழிவு, i; பக்கம்: 274), "சில வேர்ச்சொற்களில் வரும் மெய்யெழுத்துக்களில் ஒன்று, (ஆரிய மொழிகளில், பெரும்பாலும், இது, ஈற்றுமெய்யாகும்) மாறுதல் அடைதல் இயல்பு என்பதைப் பொதுவாக உணரலாம்; அவ்வேர்ச்சொல், தான் உணர்த்தும் பொதுப்பொருளை நிலையாகப் பெற்றிருக்க, ஈற்றுமெய்யெழுத்துக்கள் அடையும் மாறுபாட்டிற்கேற்ப, அப்பொருள் சிறிதே மாற்றி வழங்கப்பெறும்" என்றும் அவர் கூறுவர். "செமிடிக் மொழியின், மூவெழுத்தான் இயன்ற வேர்ச்சொற்கள், ஈரெழுத்தானாய தம் மூல வேர்ச்சொற்களோடு எவ்வகை உறவுடையவாகக் காணப்படுகின்றனவோ, அவ்வகை உறவையே, இவ்வாரிய வேர்ச்சொற்களும், தம் மூலவேர்ச்சொற்களோடு கொண்டுள்ளன" என அவர் கூறுவதையும் காண்க. திராவிடமொழிகளில், ஈண்டு எடுத்து விளக்கப்படும் இம்

மாறுதல், வேர்ச்சொற்களில் வரும் மெய்யெழுத்துக்களில் பயில மேற்கொள்ளப் பெறுவதைப் போன்றே, அவ் வேர்ச்சொற்களில் வரும் உயிரெழுத்துக்களிடையேயும் பயில மேற்கொள்ளப் பெறும். ஈற்று உயிர்பெறும் மாறுபாட்டினும், மொழிமுதல் உயிரே மிகுதியாக மாறுபடுகிறது எனக் கருதுவது பொருந்தாது.

## எ. மூலவுயிரிடை உளவாம் மாற்றம்

திராவிட வேர்ச்சொற்களில் இடம்பெறும் உயிரெழுத்துக்கள், அவ் வேர்ச்சொற்களில் வரும் மெய்யெழுத்துக்களைப் போன்றே, அச் சொல்லின் மூலத்தோடு இன்றியமையாத் தொடர்புடையவாகும் என்பது அம்மொழிப் பொது விதியாம்; அவ்வுயிரெழுத்துக்கள், செமிடிக் மொழிகளில் உள்ளவாறு, இலக்கண த தொடர்புகளை யுணர்த்த மேற்கொள்ளும் முறையோடு தொடர்பு கோடல், அரிதின் நிகழ்வதாம்; மேலும், அவ்வுயிரெழுத்துக்கள், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் உள்ளவாறு, சாரியை, சந்திகளைப் போன்ற இடைநிலைகளின் இணைவாலும், பிறவற்றின் கலப்பாலும் மாறுதல் அடைதல் அதனினும் அரிதாம்.

செமிடிக் மொழிகளில், மூலவேர், உயிரெழுத்தற்று, அக்காரணத்தினாலேயே, ஒலிக்கும் ஆற்றலையும் இழந்துளது. அம்மூலவேரிடையே, உயிரெழுத்துக்களை நுழைத்தல், அவ் வேர்ச்சொல்லில் வரும் மெய்யெழுத்துக்களை ஒலிக்கச் செய்வதுமட்டுமல்லாமல், அவ்வாறு நுழைக்கப்படும் அவ்வுயிர் வேறுபாட்டிற்கேற்ப, வேறு வேறு பொருள் கொண்ட வினையாகவும், பெயராகவும், அவ் வேர்ச்சொல்லை மாற்றவும் செய்கிறது. இந்தோ - ஐரோப்பிய மொழிகளில், இலக்கண மாறுபாடுகளெல்லாம், பொதுவாக, வேர்ச்சொற்களோடு பிற சொல்லுருபுகளைச் சேர்ப்பதாலேயே தோற்றுவிககப்படுகின்றன. இந்தோ-ஐரோப்பிய மொழிசளின் பண்டைய நிலைமையை நன்கு விளக்கிக் காட்டும் நல்ல பிரதிநிதிகளாகிய சமஸ்கிருதம், கிரீக், இலத்தீன், ஜெர்மனி முதலிய மொழிகளை ஆராய்ந்து நோக்குழி, அம்மொழியைச் சேர்ந்த பெரும்பாலான

சொற்களின் மூலவுயிரெழுத்துக்கள், வேற்றுமையுருபு, காலம் காட்டும் இடைநிலைகள் இவற்றின் சேர்க்கையால் மாற்றப்பட்டுள்ளன என்பதும், குறிப்பாக, இறந்தகாலம் காட்டுதற்பொருட்டுப் பொதுவாக மேற்கொள்ளும் முறையாகிய வேர்ச்சொல்லை இரட்டிப்பது, வேர்ச்சொல்லில் வரும் உயிரெழுத்தின் அளவை மாற்றவும், ஓருயிரெழுத்தைப் பிறிதோருயிரெழுத்தாகத் திரிக்கவும், அல்லது அவ்வுயிரெழுத்தை அறவே அழிக்கவுமே பயில ஆளப்படுகிறது என்பதும் அறியக்கிடக்கின்றன ஆதலின், அம்மொழி தோன்றி வளரத்தொடங்கிய அம்மிகப் பழைய காலத்தில், அம்மொழி வேர்ச்சொற்கள் - பொதுவாக ஓரசையான் இயன்ற அம்மொழி வேர்ச்சொற்கள் - பிறவற்றின் இணைவாலும், கலப்பாலும் சிறிதும் மாறுதலின்றியே இருந்தன என்று கொள்ளப்பட்டாலும், அவ்வுறுதிப்பாடு, இக்காலத்திய நேரிய சான்றுகளால் சிறிதும் நிலைநாட்டப் பெறவில்லை.

சித்திய இனமொழிகளில், உயிரெழுத்து, வேர்ச்சொல்லின் இன்றியமையா உறுப்பாக அமைவதோடு, பொதுவாக, எவ்வித மாற்றமும் பெறுமல் வழங்கப்பெறுதலும் உண்டு. வேர்ச்சொல்லோடு, பிரிக்க இயலாவாறு இரண்டற இழைக்கப்படுதலின்றி, ஒன்றன்பின் ஒன்ருக, அடுக்கிச்சேர்க்கப்படுவனவாய திணை, பால், எண், இடம், வேற்றுமை, காலம் ஆகியவற்றை உணர்த்தும் சொல்லுருபுகள், வேர்ச்சொல்லோடு இணைக்கப்படுவதால், அவ்வேருயிர், எவ்வித மாற்றமோ, திரிபோ அடைதல் மிகவும் அரிது. இவ்வுறுதிப்பாடு அல்லது நிலைகலங்காத் தன்மை, திராவிடமொழி வேர்ச்சொற்களில் வரும் உயிரெழுத்துக்களுக்கும் இயல்பாகும். பொதுவாக, திராவிட வேர்ச்சொற்களோடிணைக்கப் பெறும் சொல்லுருபுகள், அளவாலும், ஆற்றலாலும் எத்துணைப் பெரியவாயினும், அல்லது, அவ் வேர்ச்சொல் தனித்தோ, அல்லது, சொல்லாக்க நிலையில் பிறவற்றோடு கலந்தோ நிற்பதாயினும், அது, எழுவாய் வேற்றுமைக்கண் வந்துழி, எவ்வளவு தெளிவாகவும், உறுதியாகவும் நிலைத்து நிற்குமோ, அவ்வாறே ஏனைய

வேற்றுமை விகற்பங்களிலும் நிலைத்து நிற்கும்; நிகழ் காலம் அல்லது ஏவல் வினையில் எவ்வாறு நிலைத்து நிற்குமோ, அவ்வாறே இறந்தகாலத்திலும், எதிர்காலத்தி லும் நிலைத்து நிற்கும். இம்முறையொடு முரண்படும் விதி விலக்குகள் சிலவற்றை ஈண்டு எடுத்துக்காட்டத் தொடங்கு கின்றேன்.

விதிவிலக்குகள் :—வேர்ச்சொற்களின் உள்திரிபு:—

1. அம்மாற்றங்களுள் ஒருவகை, முழுதும் ஒலிநயம் ஒன்றே குறித்து வரும் மாற்றம். இதற்கு இலக்கண அமைப்பு முறையோடு எவ்விதத் தொடர்பும் கிடையாது என்றாலும், எடுத்தபொருள்பற்றிய முழு விளக்கமும் கொடுத்தற்பொருட்டு, அது குறித்தும் ஆராய்தல் ஈண்டுத் தேவையாகும். ஒலி என்ற அதிகாரத்தில் குறிப்பிடப் பெற்ற, ஓரின மொழிகளுக்கிடையே காணப்படும் சிறப் பியல்புகளோடு, இது தொடர்புடைத்தாம். ஈரசையா னியன்ற வேர்ச்சொற்களிலும், தொழிற்பெயர்களிலும், இடையில் வரும் மெய்யெழுத்தை, ஒரோவழி மென்மை ஆக்குவதோ, அல்லது முழுதும் இழப்பதோ செய்வதோடு, அம் மெய்யெழுத்தின் முன்னும் பின்னும் வரும் இரு உயிரெழுத்துக்களையும் இரண்டற ஒன்றுபடுத்துவதே அம் முறையாம். 'க'கரம், 'வ'கரமாக மெலிந்து, மீண்டும் முற்றிலும் மறைந்து போதலும் உண்டு என்பதும், அதைப் போன்றே, 'ச'கரம், சில இடங்களில், 'ய'கரமாகமாறி, மீண்டும் மறைந்துபோதலும் உண்டு என்பதும் முன்னரே கூறப்பட்டன. இவ்விரு மெய்களுள் ஒன்று, இடையெழுத் தாய வழி, அது, அம்முறைப்படியே மெலிவுற்றுத் தள்ளப் படும் என்பது முறையாகும். தோல் எனப் பொருள்படும் 'தொகலு' என்ற கன்னடச்சொல், தமிழில் 'தோல்' என்றா கும். 'பெஸர்' என்ற கன்னடச்சொல், தமிழில், முதற்கண் 'பெயர்' என்றும், மீண்டும் 'பேர்' என்றும் ஆம். பல பொருட் கூட்டம் என்று பொருள்படும் 'தொகுப்பு' என்ற சொல், பல மரங்கள் சேர்ந்த இடம் என்ற பொருளில் 'தோப்பு' என மெலிந்துளது. இவ்வாறே, 'அவன்' என்ற

உயர்திணைப் பெயர்ச்சொல், இடை 'வ'கரம் மறைய, அதற்கு முன்னும் பின்னும் வந்த இரு உயிர்கள் ஒன்று சேர்ந்து 'ஆன்', 'ஒன்' என்ற வினைமுற்று விகுதிகளாக ஆயின. இதைப்போலவே, 'அ', 'இ' என்ற சேய்மை, அண்மைப் படர்க்கை இடப்பெயர்களின் மாத்திரையளவு, ஒலிநயம் கருதி, பல்வேறு மொழிகளிலும் வேறுபடுவதோடு, ஒரு மொழியின் பல்வேறு இடங்களிலும் வேறுபடுகின்றது.

2. இப்பத்தியிலும், அடுத்துவரும் பத்தியிலும் கூறப்படும் விதிவிலக்குகள் ஒலிநயம் மட்டும் கருதியன அல்ல; உண்மையானவையுமாகும்; அவை இலக்கண அமைப்போடு பொருந்தியனவுமாம். பெரும்பாலான திராவிட மொழிகளில், ஒருமை, பன்மை ஆகிய இரு எண்களையும் குறித்த, தன்மை முன்னிலை இடப்பெயர்களில் வரும் வேர்ச்சொற்களின் உயிரெழுத்துக்கள், எழுவாயல்லாத ஏனைய வேற்றுமைகளில், குற்றெழுத்துக்களாம்; எழுவாய் வேற்றுமைக்கண் நெட்டெழுத்துக்களாம; 'நான்', 'நாம்', 'நீ' 'நீர்' என்பன காண்க. ஆனால், தமிழ், கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளில், அவ்விடப்பெயர்கள், எழுவாயல்லாப் பிறவேற்றுமையுருபுகளை ஏற்க வந்துழி, அவற்றோடு அவ்வேற்றுமையுருபுகள் இணைக்கப்படுதற்கு முன்னர், அவற்றிடைவரும் உயிரெழுத்துக்கள், தம் அளவிற் குறைந்துவிடும். கன்னடத்தில், எனக்கு எனப் பொருள்படும் சொல், 'நானகெ' என வாராது, 'நனகெ' என வருவதும், உனக்கு எனப் பொருள்படும் சொல், 'நீனகெ' என வாராது, 'நினகெ' என வருவதும் அறிக. தெலுங்கு, கோண்டு, கூமொழிகள், பொதுவாக, எழுவாய்க்கண் வந்த உயிர் அளவை, மாற்றமலே கொண்டுள்ளன. தெலுங்கில், எழுவாய், 'நீ' என வருதலைப் போன்றே, நான்காம் வேற்றுமையிலும் 'நீகு' என்றே வரும். ஆனல், இரண்டாம் வேற்றுமையில், 'நினு' அல்லது 'நின்னு' என அவ்வுயிரளவு குறைந்துவிடும். இப்பெயர்களின், இக்குறில் வடிவே அவற்றின் இயற்கை வடிவாம்;

நெடில் வடிவு, திரிந்தவடிவே என்று கொள்வதற்கேற்ற சான்றுகள் ஏராளமாக உள்ளன. இடப்பெயர் குறித்த ஆராய்ச்சியின்கண், இக்கருத்தையே, நான் மேற்கொள்கிறேன் என்பது தெளிவாம். வேர்ச்சொல் உயிரெழுத்துக்களின் பொதுவான உறுதிப்பாட்டினின்றும் மாறுபடும் இவ் விதிவிலக்கு, திராவிடமொழிக்கு உரித்தாதலைப் போன்றே, சித்தியமொழிக்கும் உரித்தாம். பெகிஸ்டன் என்ற இடத்திய செப்பேடுகளிற்கண்ட சித்தியமொழியின், முன்னிலையொருமை யெழுவாய் வேற்றுமைப்பெயர், திராவிடமொழியில் உள்ளவாறே, 'நீ' என்றிருக்க, ஆறும் வேற்றுமை 'நி' எனவும், இரண்டாம் வேற்றுமை 'நின்' எனவும் வந்து, அவ்வகைத் திராவிடச் சொற்களின் மாத்திரை யளவையே பெற்றுளது: தெலுங்கு 'நினு' (=உன்னை), துளு, 'நின' (உன்னுடைய), 'நினன்' (=உன்னை), செந்தமிழ், 'நின்', 'நின்னை' என்பனவற்றைக் காண்க.

3. ஒரு வினைவேர்ச்சொல், வேறு எத்தகைய இணைப்பும் பெறாமல், இயல்பாகவே, பெயராக மாறுங்கால், அவ் வேர்ச்சொல்லின் உயிரெழுத்து நீட்டப்படுதல் மற்றொரு விதிவிலக்காம். இவ்வாறு, வேர்ச்சொல் உயிரெழுத்து நீளல், அவ் வேர்ச்சொல்லோடு எவ்விதச் சொல்லாக்கவுருபுகளும் இணைவதற்கு முன்னரேயாம். வினைவேர்ச்சொல்லைப் பெயராக மாற்ற, அவ்வேர்ச்சொல்லோடு, யாதேனும், ஒரு சொல்லாக்கவுருபு இணைக்கப்பெறின், அந்நிலைக்கண், அவ் வேர்ச்சொற்கண் வரும் உயிர், எவ்வித மாறுதலும் பெறாமல் இயல்பாகவே நிற்கும். ஈண்டுக் கூறப்படும் வேர்ச்சொல்லுயிர்நீட்டம், அவ் வினை வேர்ச்சொல்தானே பெயராக ஆளப்படும் இடத்தில் மட்டுமே நிகழும். 'கெடு' என்ற வினையடி, 'தி' என்ற சொல்லாக்கம் இணைவதால், 'கெடுதி' என்ற தொழிற்பெயராக மாறும். ஈண்டு வேர்ச்சொல்லின்உயிர், மாற்றம் பெறவில்லை. ஆனால், 'கெடு' என்ற வினையடி, வேர்ச்சொல் உயிரை நீட்டுவது ஒன்றினாலேயே, 'கேடு' எனத் தொழிற்பெயராம்.

குறிலுயிர் ஐந்தும் மாற்றம் பெறுவதை விளக்கவரும் கீழ்க்காணும் தமிழ் உதாரணங்களே, இம்மாற்றத்தை விளக்கும் போதிய சான்றுகளும் ஆம்: 'படு' என்ற வினையிலிருந்து, 'பாடு' என்ற பெயரும், 'மின்' என்ற வினையிலிருந்து, 'மீன்' என்ற பெயரும், 'சுடு' என்ற வினையிலிருந்து, 'சூடு' என்ற பெயரும், 'பெறு' என்ற வினையிலிருந்து, 'பேறு' என்ற பெயரும், 'கொள்' என்ற வினையிலிருந்து, 'கோள்' என்ற பெயரும் வருவது காண்க.

சித்திய இனமொழிகள் எதிலும், இத்தகைய ஒழுங்கு முறை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், சமஸ்கிருதத்தில், இம்முறை பயில வழங்குவதாம். சொல்லாட எனப் பொருள்படும் வினை, 'வச்' என்பதாயின், சொல் எனப் பொருள்படும் பெயர் 'வாச்' என வருவதும், இறக்க எனப் பொருள்படும் வினை, 'மர்' என்பதாயின், இறப்பு எனப் பொருள்படும் பெயர், 'மார' என வருவதும் காண்க. என்றாலும், தங்களிடையே மிகப்பெரும் அளவில் வழக்காற்றில் இருப்பதும், தங்களுக்கே உரிய இயற்கை முறையாம் என்பதற்கான சிறப்பியல்புகளை நிறையக்கொண்டுள்ளதுமாய இவ்வொழுங்கு முறையினைத், திராவிட மொழிகள், சமஸ்கிருதத்தினின்றும பெற்றனவாதலும் கூடும் என யான் என்றும் எண்ணியதில்லை. இம்முறை, சமஸ்கிருதமொழியில் தோன்றிவளர்தற்குக் காரணமாய, அதே, நா, மன இயல்புகளை அடிப்படையாகக்கொண்டே, திராவிடமொழிகளிலும் தோன்றி, தனித்தே வளர்ந்தது எனக் கொள்வது இயலாதாயின், இம்மொழிகளில் பெருமளவில் காணப்படும், சமஸ்கிருதத்திற்கு முந்தியமொழிப் பண்பின் அடிச்சுவடுகளில் இதுவும் ஒன்று எனக் கோடல் வேண்டும். ஒருவகையில், திராவிடமுறை, சமஸ்கிருத முறையோடு மாறுபடுகிறது சமஸ்கிருதத்தில், வேர்ச்சொற்கண் வந்த உயிர், நெடிலாக்கப்படுதல் மட்டுமன்று; குறிப்பிட்ட ஒருசில முறைப்படி, பிறிதோர் உயிராக மாற்றவும்படுகிறது. அறிந்துகொள் எனப் பொருள்படும் 'வித்' என்ற வினையினின்றும், 'வேத' என்ற பெயர் பிறந்துளது. ஆனால், திராவிடமொழியில், வேர்ச்சொற்கண் வந்த உயிர்

நெடிலாக மட்டுமே மாறும். விடுதலைசெய் எனப்பொருள் படும் 'விடு' என்ற வினையினின்றும், 'வீடு' (= விடுதலை; வரி இல்லா உறைவிடம்) என்ற பெயர் பிறப்பதுணர்க.

அகலப்படுத்து எனப் பொருள்படும், 'விரி' என்ற வினைச்சொல்லின் மூலவேராகிய 'விர்' ('விரல்' என்ற சொல்லை ஒப்பிடுக) என்பதினின்றும் 'வேர்' என்ற பெயர் பிறந்ததாகக் கொள்வர் பேராசிரியர் குண்டர்ட். நான் ஒப்புக்கொள்வதைப் போன்றே, இப்பிறப்புமுறை, சரி யென ஒப்புக்கொள்ளப்படுமாயின், மேலே கூறிய சமஸ்கிருத ஒழுங்குமுறை, திராவிடமொழிகளிலும் இடம் பெற்றுளது என்பதற்குச் சான்று காட்டியது போலாம். இதைவிடப் பொருத்தமுடைய சொற்பிறப்பு முறையாக, சமனுக்கு எனப் பொருள்படும் 'நிர' என்பதினின்றும் 'நேர்' என்ற சொல் பிறப்பதை, நான் கொள்கின்றேன். இவற்றின் இயல்பு யாதாயினும், இவ்வாறு அருகித் தோன்றும் ஒருசில விதிவிலக்குகள், மேலே கூறிய திராவிடச் சொற் பிறப்பு முறையைத் தவறுடையதாக மாற்றிவிடா.

மேற்கூறிய முறையிற்றோன்றிப் பெரிதும் பெயரடை யாக ஆளப்பெறும் தொழிற்பெயர் சிலவற்றை, ஈண்டுக் குறிப்பிடல் வேண்டும். இலக்கண விதிப்படி நோக்கினுல், திராவிடப் பெயரடைகளெல்லாம், பெயர்ச் சொற்களாகவே கருதப்படும். ஆனுல், சிலமட்டும், எவ்வித வேறு பாடுமின்றிப் பெயராகவும், பெயரடையாகவும் ஒப்ப ஆளப்படும். மற்றும் சில, ஒன்றோடொன்று கலப்பற்ற முறையில், ஒன்று பெயரடையாகவோ, அன்றிப் பெயரா கவோ மட்டுமே ஆளப்படும். பெரிய எனப் பொருள்படும் 'பேர்', கரிய எனப்பொருள்படும் 'கார், அரிய எனப் பொருள்படும் 'ஆர்' என்ற இம்மூன்று பெயரடைகளும், மேற்கூறிய வகையைச்சேர்ந்த தொழிற்பெயர்களை விளக் கும் நல்ல சான்றுகளாம். 'பேர்', 'ஆர்' இரண்டும் பெய ரடையாக மட்டுமே வரும்; 'கார்', பெயராகவும் வரும்; பெயரடையாகவும் வரும். பெயரடையாயின், கரிய எனப் பொருள்படும்: பெயராயின் கருமைநிறம், கார்முகில், கார்

காலம் என்ற பொருளெல்லாம் தரும். அச்சொற்கள் முறையே, பெருமை, கருமை, அருமைகளை உடையவாகு என்ற பொருளில் 'பெரு', 'கரு', 'அரு' என வருவன வாம். இவற்றின்கண் வரும் ஈற்றுகரம், ஒலித்துணையாம் ஆகவே, அச்சொற்களின் மூலங்கள், 'பெர்', 'கர்', 'அர்' என்பனவே ஆம். திராவிட வேர்சசொல்லொன்று, குறில் உயிர் பெற்ற வடிவம், நெடிலுயிர் பெற்ற வடிவம் ஆக இரு வடிவங்களில் வழங்கப்பெறின், அவற்றுள், குறிலுயிர் பெற்ற வடிவே, அவ்வேர்ச்சொல்லின் மூலமாம் எனப் பொதுவாகக் கருதப்படும்; பெரும்பாலான இடங்களில், அவ்வாறே, உறுதி செய்யவும்படும். ஈண்டுக் குறிப்பிட்ட மூன்று சொற்களைப் போன்றே, ஒரு சொல்லின் இருவடி வங்களும் வழங்கப்பெறின், நெடிலுயிர் பெற்றவடிவே, ஏற்புடைய நாகரிக வடிவாகக் கருதப்பட்டு, உயிர் முதற் சொற்களின்முன், பெரும்பாலும் பயில ஆளப்பெறும். அவற்றுள், மிகப் பழைய வடிவமாகிய குறிலுயிர்பெற்ற வடிவங்களின் பின்னரே, 'நெஸ்' என முடியும் ஆங்கிலப் பெயர்ச் சொற்களில் உள்ளவாறு, 'மை' என்ற பண்புப் பொருள் விகுதி இணைக்கப்படும்: உ-ம் :-'அருமை'. வேர்ச் சொற்கண் வரும் உயிரிடையே நிகழும் இம்மாற்றம், சில எண்ணுப் பெயரிடையேயும் நிகழ்கிறது. ஒன்று, இரண்டு, என்ற தமிழ் எண்ணுப் பெயர்களின் மூலங்கள், 'ஒர்', 'இர்' என்பனவே. இவ்வெண்ணுப் பெயர்கள் பெயராக வாராது, பெயரடையாக வருவுழி, இவற்றின் உயிர் நெடி லாக்கப்பட்டு, 'ஓர்', 'ஈர்' என வரும். மூன்று, ஆறு, ஏழு என்ற இவ்வெண்ணுப் பெயர் ஒவ்வொன்றிற்கும், இரண்டு வடிவங்கள் உள்ளன : 'மு', 'மூ'; 'அறு', 'ஆறு'; 'எழு', 'ஏழு'. இவற்றுள் குறில் வடிவே, பெரும்பாலும், பெய ரடையாக ஆளப்படும். இக் குறில் வடிவங்கள் தனித்து வழங்கப்பெறு; பெயரடைகளாக மட்டுமே வரும் ஆனல், நெடில் வடிவங்கள், எண்ணுப் பெயராகத், தனித்தும் ஆளப்படும். வேர்ச்சொற்கண் வரும் உயிரெழுத்தை நெடி லாக்குவதால், தொழிற் பெயர்களைத் தோற்றுவிக்கும் இம் முறை, இத்தலைப்பின் முற்பகுதியிற் கண்டவாறு, எழு

வாயாக மட்டுமே வரும் சில பெயர்ச்சொற்கள் பற்றிய வழக்கின்கண், அம்முறை, துணைபுரிதலைப் போன்றே, பெயரடையாகவும், பண்புப் பெயராகவும் வழங்கப்பெறும் சில சொற்களின் பொருள்களை விளக்கவும் துணைபுரியும். ஆண்டால் கிழமாகு எனப் பொருள்படும் 'பழு' என்ற சொல்லினின்றே, 'பாழ்' என்ற தொழிற்பெயர் தோன்றுவது காண்க. 'பழு' என்ற அவ்வேர்ச்சொல் அளிக்கும் மற்றொரு பொருள் பண்படு (அல்லது) பழமாகு என்பதாம். இப்பொருளளிக்கும் அம்மூலத்தினின்றே, 'பழம்' என்ற பிறிதொரு சொல்லும் பிறக்கும். பெயரடையாக வழங்கப்பெறும், இதன் மற்றொரு வடிவம் 'பழ' என்பதாம். இவ்வடிவினின்றும் பெறலாம் பிறிதொருசொல் 'பழகு' என்பதாம்.

மூலவேரின் ஈற்றுமெய், இவ்வினத்தைச் சேர்ந்த கடினவொலி எழுத்துக்களுள் ஒன்றாயின், அதற்குமுன் வரும் உயிர், குறிலேயாயினும், அல்லது நெடிலேயாயினும், ஒலிநய 'உ'கரவுயிரொன்றைத் தனக்குப் பின்னர்ப் பெற்றல்லது, அம்மெய்யெழுத்து, திராவிட ஒலிக்கரணங்களால் ஒலிக்கப்பெறுதல் இயலாது. பச்சென்றாகு எனப் பொருள்படும் 'பசு' என்ற தமிழ்ச் சொல், நெடிலாக்கப்படின், 'பேர்', 'நார்' என்பனபோல், 'பாச்' என ஆகாது, 'பாசு' என்றே ஆம. ஒரு பெயர் மூலம், அல்லது ஒருவினை மூலம், பெயரடையாக மாறுங்கால், அம்மூலத்தின்கண் வரும் குறிலுயிர், தனக்கு இனமல்லாத வேறொரு நெடிலுயிராக மாறுவதும், அம்மூலத்தின்கண் வரும் அவ்வுயிர், இயல்பாகவே நெடிலாயின், அது, ஈருயிர் இணையொலியெழுத்தாக மாறுவதுமாகிய சமஸ்கிருதமுறையோடொத்ததாகக் கருதப்படும் ஒருமுறை, மேற்கூறிய திராவிட வேர்ச்சொல்லிடையே வரும் உயிரெழுத்துக்கண்ணும், ஒரோவழி, நிகழ்கிறது. 'பசு' என்ற சொல்லின், மற்றொரு வடிவாகிய 'பசும்' என்பது, சில இடங்களில் 'பைம்' எனமாறும். உ-ம் :—'பைம் பொன்.' இம்மாற்றத்தின் இயல்பு எதுவேயாயினும், இது, ஒலிநயம் ஒன்றே

பொருளாக வருவதாம். 'ச'கரம், சொல்லிடை யெழுத்தாக வருமிடங்களில், முதற்கண், 'ய'கரமாக மாறிப், பின்னர், மறைந்தே போகும் என்பதும், அந்நிலையில், அம்மெய்யெழுத்தின் முன்னும் பின்னும் வரும் உயிரெழுத்துக்கள் இரண்டும், ஒன்றுகலந்துவிடும் என்பதும் முன்னரே கூறப்பட்டுள்ளன. இவ்வியல்பின் விளைவாய்ப் 'பசும்' என்பது முதற்கண் 'பயும்' எனமாறி, மீண்டும், ஒலித்தற்கண், கிட்டத்தட்டப் புலப்படாது போகும் 'ய'கரம் முற்றிலும் மறைந்துபோக 'பைம்' என ஆம். இதுபோன்ற மாறுதல், 'கசப்பு' என்ற வேறு சொல்லிடையேயும் நிகழக் காணலாம். 'கசப்பு' என்ற சொல்லிற்குப் பதிலாகச் சில இடங்களில், 'கைப்பு' என்பது, எழுதவும் ஒலிக்கவும்படும். 'கசப்பு' முதற்கண், 'கயுப்பு' என்றாகிப், பின்னர்க் 'கைப்பு' என ஆம். 'பைம்' என்ற சொல், 'பசும்' என்ற சொல்லை அறவே அழித்துவிட்டு, அதன் இடத்தில் வருவதில்லை என்பதையும் ஈண்டு அறிதல்வேண்டும்; 'பைம்' வருமிடத்தில், 'பசும்' வரும்; 'பசும்' வருமிடத்தில், 'பைம்' வரும். ஆகவே, இலக்கணப்படி, இருவடிவங்களும் ஒற்றுமையுடையவே என்பது உறுதி செய்யப்படும். ஈண்டும், இதுபோலும் பிற இடங்களிலும், 'ச'கரத்தைவிட, 'ய'கரமே பழமையானது என்பதை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இம்முடிவுப்படி, இச்சொற் பிறப்புமுறை, பின் முன்னாய் மாறும். 'பை' அல்லது 'பயு' என்பதே, 'பசு' என ஆம். ஆனால், இம் மாறுபாட்டினால் பெறலாம் முடிவும் ஒன்றேயாம்; அதாவது, வேர்ச்சொல்லில் வரும் ஒரு மெய்யெழுத்திற்குப் பதிலாக, ஒலிநயம் கருதி, வேறொரு மெய்யெழுத்தை மேற்கொள்வதன் விளைவாகவே, அவ்வேர்ச்சொல்லிடையே வரும் உயிர் திரியும் என்பதாம்.

பண்புப்பெயரின் சொல்லாக்க விகுதி 'மை' என்பதே; 'ஐ' என்பதன்று ஆதலாலும், அவ்விகுதியில், 'ம'கர மெய்யே சிறப்புடை யுறுப்பாம் ஆதலாலும், 'பசுமை' என்ற சொல்லின் ஈற்று 'ஐ'காரம் நீங்குவதினாலேயே,

'பசும்' என்ற சொல் பிறக்கும் என அந்நாட்டு இலக்கண ஆசிரியர்கள் கொள்வதைப் போன்றே, பெச்சிப்-பேராசிரியர் அவர்களும் கொள்வது பொருந்தாது என்பதையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேன். 'பச்' என்ற திருந்தா மூலத்துடன், 'உம்' என்ற காலங்கடந்த எதிர்காலப் பெயரெச்ச விகுதியை இணைப்பதினாலேயே, 'பசும்' என்ற சொல் தோற்றுவிக்கப்படும். இவ்வாறு பிறப்பதினாலேயே, அச்சொல், திராவிடமொழிகள், பெயரடைகளாகப் பெரிதும் விரும்பி மேற்கொள்ளும் பெயரெச்சங்களுள் ஒன்றாகிய, காலங்கடந்த பெயரெச்சமாக மாறுகிறது.

4. இறந்தகால வினைச்சொற்களிடையே வரும் வேர்ச்சொல்லின் உயிர் மாத்திரையைத், தமிழ், குறைத்து விடுதற்கண் மற்றொரு வகை மாறுதல் நிகழக்காணலாம். இவ்வாறு குறைத்தல், கன்னடமொழியிலும் நிகழுமென்றாலும், காட்டிய உதாரணங்கள், தமிழினின்றே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எரி எனப் பொருள்படும் 'வே' என்ற வினையின் இறந்தகால வினையெச்சம், 'வேந்து' என ஆகாது; 'வெந்து' என்றே ஆம். அவ்வாறே, 'நோ' என்பது 'நோந்து' என ஆகாது, 'நொந்து' என்றே ஆம்; 'காண்' என்பது, 'காண்டு' என ஆகாது, 'கண்டு' என்றே ஆம். 'சா' என்பதும், 'சாந்து' என ஆகாமல், செந்து' என ஆதலும் அவ்வினத்தைச் சேர்ந்ததே. மலையாளத்திலும், கன்னடத்திலும் வரும், இச்சொல்லின், இறந்தகால வடிவாகிய 'சத்து' அல்லது 'சத்து' என்பது, மூலவுயிரெழுத்தைத், தமிழ்ச் சொல்லைப்போல் இழந்து விடாது, உறுதியாக மேற்கொண்டுளது. வினைமூலத்தில் வரும் நெடிலுயிரைச் சில இடங்களில், கன்னடம் குறிலுயிராகக் குறைக்க, தமிழ் அவ்வாறு குறைக்காது, நெடிலாகவே பெற்றுளது. கொடு எனப் பொருள்படும் 'ஈ' என்பதன் இறந்தகால வினையெச்சம், தமிழில், 'ஈந்து' என வரும்; கன்னடத்தில், அது 'இத்து' என்றே வரும்.

ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் கூற இயலா இயல்புகளையுடைய 'வா', 'தா' என்ற இருவினைச்சொற்கள்

தமிழில் வழங்குகின்றன. அவை ஒவ்வொன்றும், இறந்த காலம் முன்னிலையேவல் ஆக இவையல்லாப் பிற இடங்களில், முறையே 'வர்', 'தர்' என்ற மூலங்களினின்றும் தோன்றியன போன்று வழங்குகின்றன. 'வருகிறேன்', 'தருகிறேன்' என்ற சொற்களைக் காண்க. முன்னிலையேவல் ஒருமைக்கண், அவை, ஒவ்வொன்றும், 'ர'கரமெய் ஒழிந்த, நீண்ட உயிரோடு கூடிய வேர்ச்சொற்களை மேற்கொள்கின்றன. முன்னிலையேவற்பன்மைக்கண், அவற்றின் ஒருமை வடிவிற்கும், அவ்வடிவுடன் இணையவரும், முன்னிலை ஏவற்பன்மை உருபிற்கும் இடையில், 'ர'கரமெய்யை நுழைக்கின்றன. 'வா', 'தா', ஒருமை; 'வாரும்' 'தாரும்' பன்மை. இறந்தகாலம் காட்டவருவுழி, முன்பத்தியிற் கூறியவாறு, 'வா', 'தா' என்ற மூலங்களினின்றும் தோற்றுவிப்பதைப் போன்றே, மூலத்தின் 'ர'கரத்தை ஒழித்து, உயிரைக் குறைக்கின்றன. 'நோ' என்ற மூலத்திலிருந்து, 'நொந்தேன்' என்ற இறந்தகாலம் தோன்றுவதைப் போன்றே, 'வா', 'தா' என்பவற்றினின்றும், முறையே, 'வந்தேன்', 'தந்தேன்' என்பன தோன்றின. "தமிழ்ச் சிறுநூல்" (Tamil Hand - Book) என்ற தம் நூலில், பக்கம் 52-ல், இவ்வினைச்சொற்களில்வரும் 'ர'கரமெய், ஈருயிரிடை வரும் உடம்படுமெய்யாக நுழைக்கப்பெற்றதேயென்றும், அவ்வினையுணர்த்தும் காலமெல்லாம், 'வா', 'தா' என்ற மூலங்களினின்றே தோன்றின என்றும்கூறுவர் பேராசிரியர் போப் அவர்கள். இடைவெளித்தடுப்பு, அல்லது உடம்படுமெய் என்ற தலைப்பின்கீழ், ஏற்கெனவே, யான் காட்டிய அவ்வொருசொல் தவிர, தமிழில், 'ர'கரவுடம்படுமெய் வருதற்கு உதாரணமாக யான் அறிந்த ஒரேவொரு வேறு சொல்லாகிய, 'கா' என்ற மூலத்தினின்றும் தோன்றிய 'காரும்' என்ற இவ்வொரு சொல்லில் மட்டுமே, 'ர'காம் இடம் பெறுகிறது என்பதாயின், போப் அவர்கள் கொள்கையை ஏற்றுக்கொள்வதில் எனக்கு எவ்விதத் தடையும் இராது. ஆனால், அதற்குமாறாக, 'வர்', 'தர்' என்ற மூலங்கள், இறந்தகாலம், முன்னிலையேவல் ஒருமை ஆய இவ்விரண்டு ஒழிந்த, ஏனைய எல்லா வினையிலும்,

தொழிற்பெயரனைத்திலும் ('வரல்', 'வாந்து', 'வருந்து', 'வருதல்', 'வரவு', 'வருகை') இடம் பெறுவதை நோக்கின், 'வா', 'தா' என்பவற்றோடு, 'வர்', 'தர்' என்பன மாறுபடு தற்காம் காரணம் யாதாயினும், அவ் 'வர்', 'தர்' என்ற இரண்டும், தமிழ்மொழிக்கண், வினைமூலங்களாகவே மதிக்கப்பட்டுள்ளன என்ற முடிவிற்கே நம்மைக் கொண்டு சென்று விடுகிறது. 'ர'கரம், அவ்வினைமூலத்தின் ஓர் உறுப்பன்றாயின், அதுபோலும் மூலமாகிய, 'நோ' என்பதினின்றும் தோன்றும் எச்சம், தொழிற்பெயர், எதிர்மறைகள் 'நோக', 'நோவு', 'நோதல்', 'நோகா' என வருதலைப் போன்றே, இம்மூலத்தினின்றும் தோன்றும் நிகழ்காலம், எதிர்காலம், எச்சம், எதிர்மறை, தொழிற்பெயர் முதலாயினவும், 'வா', 'தா' என்பனவற்றோடு, சொல்லாக்கவுருபுகளாகிய 'க'கரம் அல்லது 'வ'கரம் இணைவதாற் றோன்றும் சொல்லுருவங்களையே எதிர்பார்த்தல்வேண்டும். கன்னடமூலங்கள் 'பர்', 'தர்' என்பனவாம். தெலுங்கின் முன்னிலையேவல் ஒருமை, 'வா'; ஏவற்பன்மை, 'ரம்மு'. இந்நிகழ்ச்சி, மூலத்தின் இன்றியமையா ஓர் உறுப்பே 'ர'கரம் என்பதை உறுதி செய்கிறது. தெலுங்கில் வரும் இந்த 'ர'கரம், தமிழில் ஒலிநயம் குறித்து வந்ததாகச் சிலரால் கருதப்படும் 'ர'கரத்திற்குப் பதிலாகவே வந்ததாகக்கொள்ளப்பெறின், மூலத்தின் ஓர் உறுப்பாக வரும் அவ்'வ'கரமெய், தன் இடத்திற்கு ஒரு பிரதிநிதியைப் பெறாமலே மறைந்ததாகும். மேலும், தமிழ் 'வ'கரம், தெலுங்கில் 'ர'கரமாக ஆம் என்பது வழக்கன்று ஆதலின் அவ்வாறு கோடலும் பொருந்துவதாகத் தோன்றவில்லை. தமிழ் 'இலது' என்பதை 'லேது' என்றும், 'இரா' (இரவு) என்பதை, 'ரே' என்றும் திரித்துவழங்குதற்குக் காரணமாம் வழக்காற்றோடு, இது, பெரிதும் ஒத்துளதாகவே தோன்றுகிறது. ("உயிர் நிலைமாற்றம்" என்ற தலைப்பைக் காண்க.) என்றாலும், வினைச்சொற்களை உருவாக்குவதில், 'வா', 'தா' என்பன இடம் பெறுதல், வழு காரணமாக வந்ததாக முடிவு செய்வதையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. 'வந்தேன்', 'தந்தேன்' என்ற இறந்தகாலச்சொற்கள்

தோன்றுதற்குக் காரணமாய் இருந்தமூலங்கள், 'வர்', 'தர்' என்பன அல்ல; 'வா', 'தா' என்பனவே என்பது உறுதி. அவ் 'வா', 'தா' இரண்டும், முன்னிலை ஏவற்கண், திரிபின்றித் தெளிவாகவே உள்ளன. ஆகவே, 'வா' என்பதன் இடத்தில் 'வர்' என்பதும், 'வர்' என்பதன் இடத்தில், 'வா' என்பதும் அவ்வாறே, 'தா' என்பதன் இடத்தில் 'தர்' என்பதும், 'தர்' என்பதன் இடத்தில் 'தா' என்பதும் வரும் தகுதியுடைய ஒன்றிற்கொன்று இனமான மூலங்களாம் என்ற பேராசிரியர் குண்டர்ட் அவர்கள் கருத்தினை ஏற்றுக்கொள்ள வேண்டியவராகிறோம். அவற்றை, ஒரே மூலத்தினின்றும் கிளைத்த இருவேறு வடிவங்களாம் என்று கொள்வது நனி மிகப் பொருந்தும். 'தா' என்ற திராவிடமூலம், 'தா' என்ற இந்தோ-ஐரோப்பிய மூலத்தோடு ஒப்புடையதாம் எனல் கூடியதே எனக் கொள்வதினால், மேலே கண்ட முடிவு கைவிடப்படவேண்டுவதின்று. 'தர்' என்ற திராவிட வேர், கிரீக்மொழி 'தோரோன்', ஈப்ருமொழி 'தன்' என்ற சொற்களில் இன்றும் காணப்படும், இஃதோடு தொடர்புடைய, இதே பொருள்தரும் ஒரு மூலத்தினின்றும் தோன்றியிருததலும் கூடும். இறந்தகாலச் சொற்களிடத்தே, மூலவுயிரெழுத்தின் மாத்திரையில் தோன்றும் மாறுதல், இலக்கண வழக்கொடு ஒட்டியதேயென்றாலும், தெலுங்கில், 'ரா' என்பதியிருந்து 'ரம்மு' (உயர்வு குறிக்கும் ஒருமைப் பன்மை.) என்பதும், தமிழில், 'வா' என்பதிலிருந்து 'வம்மின்' என்பதும் தோன்றுழியுண்டாம் மூலவுயிரெழுத்தின் மாத்திரைக்கண் தோன்றும் மாறுதல், வெறும் ஒலிநயம் கருதியதாகவே தோன்றுகிறது என்பதையும் ஈண்டுக் குறிப்பிட விரும்புகின்றேன்.

மேலே காட்டிய விதிவிலக்குவகைகளுள், ஒருவகையைச் சேர்ந்த விதிவிலக்குகள், ஒரு வினைச்சொல், பெயர்ச்சொல்லாக மாறுங்கால், அவ்வினைமூலத்தின் உயிர் நீட்டப்படுவதை விளக்குஞ்சான்றுகளாக, ஏனைய வகைகளைச் சார்ந்த விதிவிலக்குகள், வினைமூலங்களோடு, இடைநிலை போன்ற சொல்லாக்கவுருபுகள் வந்துஇணைவுழி, அவ்

வினைவால் தோன்றும் மாத்திரைப்பெருக்கத்தைக் குறைப்பதற்காகவும், அவ் வினைகொள்ளும் காலவேறுபாடு களை உணர்த்துவதற்காகவும், வினைமூலத்திற்கும், சொல் லாக்கவுருபிற்கும் இடையே வரும் உயிரெழுத்தின் மாத் திரையைக் குறைப்பதை விளக்கும் சான்றுகளாக வரு கின்றன ஆதலின், திராவிடமூலங்களின் உயிரெழுத்துக் கள் மாரு இயல்பின என்பதற்கு மாருக, இவ்வதிகாரத் தில் விளக்கிய விதிவிலக்கு வகைகள நான்கனுள், ஈற்றிற் கூறிய மூன்று வகை விதிவிலக்குகளில், எடுத்துக்காட்டிய திராவிட வேர்ச்சொற்களின் உயிர்மாற்றம், இந்தோ-ஐரோப்பியமொழிகளில் வழங்கும் உயிர் மாற்றங்களோடு, உண்மையாகவே ஒத்துளது. என்ருலும், வேர்ச்சொல் உயிர்மாற்றத்தைப் பொறுத்த வரையில், சித்தியமொழி கள், இந்தோ-ஐரோப்பிய மொழிகளோடு, அடிப்படை யிலேயே, முற்றிலுமே மாறுபடுகின்றன எனக்கொள்வது தவறு. சித்தியமொழிகளில், திராவிடத்தில் உள்ளவாறே, உயிரின் நிலைபெயராத் தன்மையே பொது விதியாம்; மாறு தல், விதிவிலக்கே; ஆனல், விதிவிலக்குகள், ஆண்டும் உள. ('ஒல்' என்ற மூலத்தினின்றும் தோன்றி, இருக்கிறேன் எனப் பொருள்படும் 'ஒலென்' என்ற பின்னிஷ்மொழிச் சொல்லை, நான் இருந்தால் எனப் பொருள்படும் 'விஎனென்' என்ற அம்மொழிச் சொல்லோடும், அங்கேரி மொழியில், அதே மூலத்தினின்றும் தோன்றி, இருக்கை எனப் பொருள்படும் 'லெவென்' என்ற சொல்லைப், பண்டு இருந்த எனப் பொருள்படும் 'வொல்த்' என்ற சொல் லோடும், இருக்கும் எனப் பொருள்படும் 'லென்னி' என்ற சொல்லோடும் ஒப்பிட்டுணர்க.) இத்தகைய விதிவிலக்கு கள் அம்மொழியிலும் இருப்பதின் காரணமாக, இவ்விரு இனமொழி களுக்கிடையே ஒவ்வொரு இயல்பின்கண், மாற்றமுடியா மிகப்பெரிய வேற்றுமைகள் உளவாக நிலை நாட்டிக் காணலும் இயலாது; இவ்வொன்றை அடிப்படை யாகக் கொண்டே, திராவிட மொழிச் சொற்களைச், சித்தியத் தொடர்பினின்றும் பிரித்து, இந்தோ - ஐரோப் பியக் குழுவில் இணைத்தலும் தகாது.

# கழக வெளியீடு

தமிழ் மொழியின் தொன்மையும் தனிச்சிறப்பும் பயனும், தமிழர்தம் தனி நாகரிகமும் விளக்கக்கூடிய நூல்கள் மேலும் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

## இந்நூலில்

ஆரியர் வருமுன்னரே திராவிட நாகரிகம் தனித்தியங்கி வந்ததென்பதும், திராவிடமொழிகள் என்று ஒரு மொழியினமாக வகுக்கப்பெறும் மொழிகளுள் தமிழ்மொழியே பண்டைநாள் தொட்டுத் திருத்தமுற்றுச் செவ்வியமுறையில் வளர்ச்சி பெற்று வந்துள்ளதென்பதும், வடமொழி கலவாமலே தமிழ் தனித்தியங்க வல்லதென்பதும் பிறவும் தெளிவாக விளக்கப் பெற்றிருக்கின்றன.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை-1.

அப்பர் அச்சகம், சென்னை-1.—C. 1050.